நற்றமிழ் மாலை

ஒன்பதாம் வகுப்பு



சாலாட்சி புதிப்பகம்
சென்னை

நற்றமிழ் மாலை

ஒன்பதாம் வகுப்பு

(IX Standard)

தொகுப்பாசிரியர்
வித்துவான் சா. சுந்தரனார்,
திருப்பவுல் உயர்நிலைப்பள்ளி
வேப்பேரி, சென்னை

விசாலாட்சி பதிப்பகம்
7, இராமசாமி நாயுடு கார்டன் தெரு, புதுப்பாக்கம்
இராயப்பேட்டை : : சென்னை-14

பதிப்புரிமை] 1965 [விலை ரூ. 2-50

முதற் பதிப்பு: 1965

[10·9 கி. கிராம் டபுள் கிரௌன் வெள்ளைத்தாளில்
அச்சிடப்பட்டது]

The Progressive Printers, Madras-1.

முன்னுரை

ஒன்பதாம் வகுப்புக்கெனத் தொகுக்கப்பட்டிருக்கும் இத்தமிழ் நூல் அரசினரின் புதிய பாடத்திட்டத்தை யொட்டி அமைந்ததாகும்.

பாடத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதற்கேற்ற வகையில் மாணவர்கள் விரும்பிக் கற்கக் கூடியனவும், அதே நேரத்தில் அவர்கள் உள்ளத்தில் இலக்கியத்தின் அடிப்படைத்தன்மைகளை உணர்த்துவனவுமாகிய செய்யுட் பகுதிகள் பாடத்திட்ட வரையறைக்கிணங்க இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

உரைநடைப் பகுதியில் புலவர், புரவலர், கலைஞர் ஆகியோர் வரலாறுகளும், பிறநாட்டுச் செய்திகளும், சிறந்த இலக்கியம், செய்யுள் ஆகியவற்றின் மாண்பு விளக்கும் கட்டுரைகளும் தரப்பட்டுள்ளன. சிலப்பதிகாரப் பகுதியில் பெரும்பாலும் அறியப்படாத பிற்பகுதிக் கதை நாடக வடிவில் இறுதிப் பாடமாக இடம் பெற்றுள்ளது. ஒன்பதாம் வகுப்பின் இறுதி நிலையாதலின் நாடகம் சிறிது நடைத் தரத்தில் உயர்ந்ததாக எழுதப்பட்டுள்ளது.

அரசியலார் எதிர்பார்ப்பது போன்று சேமிப்புத் திட்டம், ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சி பற்றிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

தத்தம் செய்யுள், கட்டுரை ஆகியவற்றை இந்நூலில் சேர்த்துக் கொள்ள அன்பு கூர்ந்து இசைவு தந்த ஆசிரியர் கட்கும் பதிப்பாளர்களுக்கும் என் நன்றி.

இந்நூல் தொகுப்புக்கு உசாத் துணையாக விருந்து கருத்துரைத்த உடன் தமிழாசிரியர் புலவர் வெ. மு. குருசாமி அவர்கட்கும், குறிப்புரை எழுதி உதவிய உடன் தமிழா சிரியர் ஞா. சிவப்பிரகாசனார்க்கும் என் அன்பார்ந்த நன்றி உரியது.

—தொகுப்பாசிரியன்.

உள்ளுறை

செய்யுட் பகுதி

மனப்பாடத்திற்குரிய செய்யுட் பகுதியின் அளவு 100 வரிகளாகும். ஆறு சீருக்கு மேற்பட்ட அடிகள் இரண்டு வரியாகக் கணக்கிடப்படல் வேண்டும்.

உரைநடைப் பகுதி

தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல ஜமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்

2. மொழி வாழ்த்து

எங்கள் தமிழ்

1. தமிழெங்கள் உயிருடலாமே என்றும்
தலைதாழ்த்திக் கைகூப்பி வணங்குவம் நாமே
அமிழ்தின் இனிய சுவை தமிழெனில் பொய்யோ?
அழிவை நினைக்கவுயிர் ஒடுங்குதே அய்யோ!

2. அடிமை மலைபிளக்கும் உளி எங்கள் தமிழே;
ஆண்மைக்கும் வலிமைக்கும உரமெங்கள் தமிழே;
மடமை இருள்கிழிக்கும் மதிஎங்கள் தமிழே;
வற்றாத தேனூற்றாம் அறிவிற்குத் தமிழே.

—வாணிதாசனார்

3. நாட்டு வாழ்த்து

1. கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க!

2. படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!

—நாமக்கல் கவிஞர்

II. அறவுரை

1. திருக்குறள்

கடவுள் வாழ்த்து

1. *வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்(கு)*
யாண்டு மிடும்பை யில.

வான் சிறப்பு

2. *விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றுங்கே*
பசும்புற் றலைகாண் பரிது

நீத்தார் பெருமை

3. *இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்*
பெருமை பிறங்கிற் றுலகு

அறன் வலியுறுத்தல்

4. *ஒல்லும் வகையா னறவினை யோவாதே*
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

இல்வாழ்க்கை

5. *அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்*
போஒய்ப் பெறுவ தெவன்.

வாழ்க்கைத் துணைநலம்

6. *பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்*
திண்மையுண் டாகப் பெறின்.

7. *சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்*
நிறைகாக்குங் காப்பே தலை.

புதல்வரைப் பெறுதல்

8. *தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து*
மன்னுயிர்க் கெல்லா மினிது.

அன்புடைமை

9. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

விருந்தோம்பல்

10. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

நடுவு நிலைமை

11. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின்.

பொறையுடைமை

12. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

அழுக்காறாமை

13. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து.

வெஃகாமை

14. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

ஒப்புரவறிதல்

15. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

ஈகை

16. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

17. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

புகழ்

18. ஒன்ற வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப தொன்றில்.

19. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

புலான் மறுத்தல்

20. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளு 'மருள்.

தவம்

21. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

கூடாவொழுக்கம்

22. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

வாய்மை

23. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

இன்னா செய்யாமை

24. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டுபவர்

நிலையாமை

25. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

மெய்யுணர்தல்

26. காமம் வெகுளி மயக்க மிவை மூன்றன்
நாமம் கெடக்கெடு நோய்.

ஊழ்

27\. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

இறைமாட்சி

28\. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறும் மன்ன னிலம்.

அறிவுடைமை

29\. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

பெரியாரைத் துணைக்கோடல்

30\. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

தெரிந்து செயல்வகை

31\. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

வலியறிதல்

32\. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

காலமறிதல்

33\. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

இடனறிதல்

34\. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்.

தெரிந்து வினையாடல்

35. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

சுற்றந் தழால்

36. பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

பொச்சாவாமை

37. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

செங்கோன்மை

38. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

வெருவந்த செய்யாமை

39. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

கண்ணோட்டம்

40. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

ஊக்கமுடைமை

41. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

வினைத்தூய்மை

42. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

வினைத்திட்பம்

43. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற.

நட்பாராய்தல்

44. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

பழைமை

45. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

மானம்

46. புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

சான்றாண்மை

47. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

நல்குரவு

48. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

இரவச்சம்

49. இரவுள்ள வுள்ள முருகும் கரவுள்ள
வுள்ள தூஉ மின்றிக் கெடும்.

கயமை

50. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

—திருவள்ளுவர்

2. ஏலாதி

கல்வி அழகே அழகு

1. இடைவனப்புந் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு.

உலகிற் சிறந்தவன்

2. களியான்கள் உண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான் - எளியாரை
எள்ளான்ஈத் துண்பானேல் ஏதமில் மண்ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.

அன்பர்க்குரிய ஆறு குணங்கள்

3. சாதல் பொருள் கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவிற் கவறலே - ஓதலின்
அன்புடையார்க்குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

தூதர்க்கு வேண்டுவன

4. மாண்டமைந் தாராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்-பூண்டமைந்த
காலமறிதல் கருதுங்காற் றூதுவர்க்கு
ஞாலமறிந்த புகழ்.

விண்ணோரால் விரும்பப்படுவன

5. சிதையுரையான் செற்றம் உரையான் சீறில்லான்
இயல்புரையான் ஈனம் உரையான் - நசையவர்க்குக்
கூடுவதீவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய் !
நாடுவர் விண்ணோர் நயந்து.

—கணிமேதையார்

3. சிறுபஞ்ச மூலம்

வனப்புத் தருவன

1. கண்வனப்புக் கண்ணேட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையாம் என்றுரைத்தல்-பண்வனப்புக்
கேட்டார் நன்றென்றல் கிளர்வேந்தன் தன்னுடு
வர்ட்டான்நன் றென்றல் வனப்பு.

அறிவுடையார் செயல்கள்

2. நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்(து)
ஒல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி-ஒல்லுமேல்
மாயம்பிறர் பொருட்கண் மாற்றிமா மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு.

அழிவு தருவன

3. சிலம்பிக்குத் தன்சினை கூற்றம் நீள்கோடு
விலங்கிற்குக் கூற்றம் மயிர்தான்—வலம்படா
மானிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

எல்லாம் அறிந்தவன் இல்லை

4. ஒருவ னறிவானுமெல்லாம்யா தொன்றும்
ஒருவ னறியாதவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமில்லானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

—காரியாசான்

4. நான்மணிக்கடிகை

இதனால் இது காண்க

1. பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியான்
போற்றாதார் போற்றப் படும்.

யாதும் தம்மூராவார் சிலர்

2. நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செவ்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

குற்றத்திற்குரியன சில

3. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றந்
தமரல்லார் கையகத் தூண்.

இதனால் இது ஆகும்

4. வைததனால் ஆகும் வசையே வணக்கமது
செய்ததனால் ஆகும் செழுங்கிளை செய்த
பொருளினால் ஆகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினால் ஆகு மறம்.

—விளம்பி நாகனார்

III. தொடர்நிலைச் செய்யுள்

1. மணிமேகலை

விழாவறை காதை

மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டும்
ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி

ஏற்றுரி போர்த்த இடியுறு முழக்கின்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை
முரசுகடிப் பிடூஉம் முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி,
வான மும்மாரி பொழிக ! மன்னவன்

கோள் நிலை திரியாக் கோலோ னாகுக !
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
ஆயிரங் கண்ணோன் தன்னோ டாங்குள
நால்வேறு தேவரும் இப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவன் நீங்கியநாள்

இந்நகர் போல்வதோர் இயல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின்
தோரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்

பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின் !
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூங்கொடி வல்லியுங் கரும்பும் நடுமின் !
பத்தி வேதிகைப் பசும்பொற் றூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின் !

விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின் ! புதுமணற் பரப்புமின் !
கதலிகைக் கொடியுங் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமின் !
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின் !
தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின் !
ஒட்டியசமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின் !
பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின் !
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுந்
தண்மணல் துருத்தியுந் தாழ்பூந் துறைகளும்
தேவரு மக்களும் ஒத்துடன் றிரிதரு
நாலேழ் நாளினும் நன்கறிந் தீரென
ஒளிறுவாள் மறவருந் தேரும் மாவும்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்.

—சீத்தலைச் சாத்தனார்

2. பெருங்கதை

பந்தடி கண்டது

(இராசனை)

கொடிபுரை நுண்ணிடைக் கொவ்வைச் செவ்வாய்
மதுநாறு தெரியன் மகதவன் றங்கை
பதுமா பதிதன் பணியெதிர் விரும்பி
விராய்மலர்க் கோதை யிராசனை யென்போள்

கணங்குழை முகத்தியை வணங்கினள் புகுந்து
மணங்கமழ் கூந்தலும் பிறவுந் திருந்தி
அணங்கெனக் குலாஅ யறிவோர் புனைந்த

(பந்துகள்)

கிடையும் பூளையு மிடைவரி யுலண்டும்
அடையப் பிடித்தவை யமைதியிற் றிரட்டிப்
பீலியு மயிரும் வாலிதின் வலந்து
நூலினுங் கயிற்றினு நுண்ணிதிற் சுற்றிக்
கோல மாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் றோலும் பீலிக் கண்ணும்
பூம்புன னுரையும் புரையக் குத்திப்
பற்றிய நொய்மையிற் பல்வினைப் பந்துகள்
வேறுவே றியற்கைய கூறுகூ றமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையு முடையன
தண்வளி யெறியினுந் தாமெழுந் தாடுவ
கண்கவ ரழகொடு நெஞ்சக லாதன
ஒண்பந் தோரேழ் கொண்டன ளாகி
ஒன்றொன் றேற்றி யுயரச் சென்றது
பின்பின் பந்தொடு வந்துதலை சிறப்பக்

(இராசனை பந்தடித்தல்)

கண்ணிமை யாம லெண்ணுமி னென்று
வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கான்மிசைப் பரிந்தவை விடுத்தும்
சூடக முன்கையிற் சுழன்றுமா றடித்தும்
அடித்த பந்துக ளங்கையி னடக்கியும்
மறித்துத் தட்டியுந் தனித்தனி போக்கியும்
பாயிர மின்றிப் பல்கல னொலிப்ப
ஆயிரங் கைநனி யடித்தவ ளகல,

(காஞ்சன மாலையின் பந்தடி)

அன்ன மென்னடை யவந்திகை யுவந்தவள்
கண்மணி யனைய வொண்ணுதற் பாவை
காஞ்சன மாலை வாங்குபு கொண்டு
பிடித்த பூப்பந் தடித்தவிசும் பெற்றியும்

அடித்த பந்தால் விடுத்தவை யோட்டியும்
குழன்மேல் வந்தவை குவிவிரற் கொளுத்தியும்
நிழன் மணி மேகலை நேர்முகத் தடித்தும்
கண்ணியிற் சார்த்தியுங் கைக்குட் போக்கியும்
உண்ணின்று திருத்தியும் விண்ணுறச் செலுத்தியும்
வேயிருந் தடந்தோள் வெள்வளை யார்ப்ப
ஆயிரத் தைந்நூ றடித்தன ளகலச்

(அயிராபதியின் பந்தடி)

செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதியெனு அம்பணைத் தோளி
மானேர் நோக்கிற் கூனி மற்றவள்
தானேர் வாங்கித் தனித்தனி போக்கி
நாற்றிசைப் பக்கமு நான்கு கோணமும்
காற்றினுங் கடிதாக் கலந்தன ளாகி
அடித்தகைத் தட்டியுங் குதித்துமுன் புரியா
அகங்கை யொட்டியும் புறங்கையிற் புகுத்தியும்
தோண்மேற் பாய்ச்சியு மேன்மேற் சுழன்றும்
வாக்குறப் பாடியு மேற்படக் கிடத்தியும்
நோக்குநர் மகிழப் பூக்குழன் முடித்தும்
பட்ட நெற்றியிற் பொட்டிடை யேற்றும்
மற்றது புறங்கையிற் றட்டினெ ளெற்றியும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரங்
கைந்நனி யடித்துக் கையவள் விடலும்

(விச்சுவலேகையின் பந்தடி)

பேசிய முறைமையி னேசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோ ளனைய
அச்சமில் காரிகை விச்சுவ லேகையென்
றுற்ற நாமப் பொற்றொடிக் குறளி
யானிவ ணிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலா தென்றவள் சேலந் திருத்திக்
கருவிக் கோனனி கைப்பற் றினளாய்
முரியுங் காலைத் தெரிய மற்றதிற்

றட்டின ளொன்றென் றுற்றன ளெழுப்பிப்
பத்தியிற் குதித்துப் பறப்பன ளாகியும்
வாங்குபு கொண்டு வானவிற் போல
நீங்கிப் புருவ நெரிவுட னேற்றியும்
முடக்குவிர லெற்றியும் பரப்புவிரற் பாய்ச்சியும்
தனித்துவிரற் றரித்து மறித்தெதி ரடித்தும்
குருவிக் கவர்ச்சியி னதிரப் போக்கியும்
அருவிப் பரப்பின் முரியத் தாழ்த்தியும்
ஒருபாற் பந்தி னொருபாற் பந்துற
இருபாற் றிசையு மியைவன ளாகிப்
பாம்பொழுக் காக வோங்கின வோட்டியும்
காம்பிலை வீழ்ச்சியி னுங்கிழித் திட்டும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரத்
தைந்நூ றடித்துப் பின்னவள் விடலும்

(ஆரியையின் பந்தடி)

சீரியல் பதுமைதன் சிந்தைக் கொப்பெனும்
காரிகை மயிலன வாரிகை புகுதா
நுணங்குகொடி மருங்கு நோவ வசைஇ
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தும்
சூடக மேற்றியும் பாடகந் திருத்தியும்
நாடக மகளிரி னன்கன முலாவியும்
இருகையு மடிப்ப விசும்பொடு நிலத்திடை
திரிபுவீழ் புட்போ லொருவயி னில்லா
தெழுந்துவீழ் பந்தோ டெழுந்துசெல் வனள்போற்
கருதரு முரிவொடு புருவமுங் கண்ணும்
வரிவளைக் கையு மனமு மோட
அரியார் மேகலை யார்ப்பொடு துளங்கவும்
அரிமலர்க் கோதையொ டணிகலஞ் சிதறவும்
இருந்தன ணின்றன ளென்பதை யறியார்
பரந்த பஃறோள் வடிவின ளாகித்
திரிந்தன ளடித்துக் திறத்துளி மறித்தும்

முரியுந் தொழிலொடு மூவாயி ரங்கை
முறையி னேற்றிப் பந்துநிலத் திடலும்

(வாசவதத்தை தன்தோழியரை நோக்கல்)

வரிநெடும் பந்து வந் தெதிர் கொள்ளுநர்
ஒருவரு மின்றி நின்றுழிப் பொருவரும்
வாளேர் தடங்கண் வாசவ தத்தை
கோளேர் மதிமுகங் கோட்டி நோக்க......

3. வில்லி பாரதம்

கன்ன பருவம்

கண்ணன் கன்னனிடம் வகுதல்

அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போய்
    ஆதவன் சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
    முதற்கொழுந் தாகிய முதல்வன்
சித்திரச் சிலைக்கை விசயனைச் “செருநீ
    யொழி”யெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய னாகி
    வெயிலவன் புதல்வனை யடைந்தான். 1

இயைந்ததொன்று அளிக்க வேண்டுதல்

“தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
    தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்
    மேருவி னிடைத்தவம் பூண்டேன்
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்
    இயைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
    சுடர்தரத் தோன்றிய தோன்றால்!” 2

கன்னன்பாற் கண்ணன் விரும்பிய பொருள்

என்றுகொண் டந்த அந்தண னுரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையால்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் 'தரத்தகு பொருணீ
நவில்'கென நான்மறை யவனும்,
'ஒன்றிய படிநின் புண்ணிய மனைத்தும்
உதவு'கென் றலுமுள மகிழ்ந்தான். 3

கன்னன் கூறுதல்

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ வறியேன்!
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்!
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன்; கொள்கநீ; உனக்குப்
பூவில்வா ழயனு நிகரல னென்றாற்
புண்ணிய மிதனினும் பெரிதோ!" 4

கன்னன் தன்னிதய இரத்தங்கொண்டு தானம் அளித்தல்

என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச,
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு னோக்கிக்
"கைப்புன லுடன்றரு கெ"ன்ன,
அன்னவ னிதயத் தம்பின்வா யம்பால்
அளித்தலு மங்கையா லேற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீ ரேற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன். 5

வரங்கேட்குமாறு கண்ணன் கன்னனுக்குக் கூறுதலும் கன்னன் கேட்டலும்

மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து, " நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக ; உனக்குத் தருதும்", என்றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான் :
" அல்லல்வெவ் வினையா லின்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயநீ யளித்தருள்," என்றான். 6

கண்ணன் வரம் அளித்தல்

மைத்துன னுரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி,
' எத்தனை பிறவி யெடுக்கினு மவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவில்'என் றுரைத்தான்
மூவரு மொருவனு மூர்த்தி. 7

கண்ணன் அளித்த தரிசனம்

போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்மு னன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன். 8

கன்னன் அடைந்த மகிழ்ச்சி

அமரரா னவரு மமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனு முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கொடு பணிந்தார் ;

"சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் வீடவுஞ் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன் !"
என்றுதன் னகமிக மகிழ்ந்தான். 9

கன்னன் கூறுதல்

'அருந்தழன்மா மகம்புரிந்துங் கடவுட் கங்கை
ஆதியாம் புனல்படிந்து மனில யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்தும்
எங்குமா கியவுன்னை யிதயத் துள்ளே
திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாஞ்
சிறுகியனைத் துயிருக்குஞ் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கள் மிகப்பயின்றும், பெறுதற் கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற்றேனே! 10

'நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீருங் காயாவு நிகர்க்கு மிந்தக்
கோலமும்வெங் கதைவாளஞ் சங்கு நேமி
கோதண்ட மெனும்படையுங் குழைந்த வாச
மாலைநறுந் துழாய்மார்புந் திரண்ட தோளும்
மணிக்கழுத்துஞ் செவ்விதழும் வாரி சாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமும் சோதிக்
கதிர்முடியு மிம்மையிலே கண்ணுற் றேனே !' 11

'தருமன்மகன் முதலான வரிய காதல்
தம்பியரோ டமர்மலைந்து தறுக ணுண்மைச்
செருவிலென துயிரனைய தோழற்காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் றேவர் கோவுக்(கு)
உரைபெறுநற் கவசமுங்குண் டலமு மீந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன் ;
மருதிடைமுன் றவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே !
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே !' 12

'வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன் ;
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன் ,
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்புந்
திருப்புயமுந் தைவந்து தீண்டப் பெற்றேன் ;

ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடனின் றிருநாம முரைக்கப் பெற்றேன் ;
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னை யன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் ருரே !' 13

கண்ணன் சில உண்மைகளைத் தெரிவித்தல்

என்றுமகிழ் வுறவணங்கு மெல்லி மைந்தன்
இன்புறவண் புறவினிலா னிரையின் பின்போய்க்
கன்றுகொடு விளவெறிந்த கண்ணன் றானுங்
கன்னனுக்குக் கட்டுரைப்பான்: "கடவு ளுதன்
அன்றுனது கவசமுங்குண் டலமும் வாங்க
அழைத்தேனுங் குந்தியைக்கொண் டரவ வாளி
ஒன்றொழியத் தொடாதவரங் கொள்வித் தேனும்
உற்பவத்தி னுண்மையுனக் குணர்வித் தேனும், 14

'தக்ககன் றன் மகவான வுரக வாளி
தனஞ்சயனைச் சதியாமற் சாய்வித் தேனும்
மெய்க்கருணை நின்பொருட்டால் யானே,' என்று
மீண்டும்போய்த் தேர்வலவன் விசயற் கானுன்
எக்கடலு மெக்கிரியு மெல்லா மண்ணும்
இமையோரு மானுடரு மெல்லா மாகி
மைக்கணிளங் கோவியர்நுண் டுகிலு நாணும்
வரிவளையு மடநெஞ்சும் வாங்கு மாலே. 15

அருச்சுனன் ஏவிய அம்பால் கன்னன் உயிர் துறத்தல்

'பகலவன்றன் மதலையைநீ பகலோன் மேற்பாற்
பவ்வத்திற் படுவதன்முன் படுத்தி,' என்ன,
இகல்விசய னுறுதியுற அஞ்ச ரீகம்
எனுமம்பா லவனிதய மிலக்க மாக
அகலுலகில் வீரரெலா மதிக்க வெய்தான்
அந்தவா சுகமுருவி யப்பா லோடித்
தகலுடையார் மொழிபோலத் தரணி யூடு
தப்பாமற் குளித்ததவன் றானும் வீழ்ந்தான். 16

4. பெரிய புராணம்

அப்பூதியடிகள் புராணம்

அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் பல அறங்கள் செய்தல்

தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா ரெல்லையி றவத்தின் மிக்கார்
ஆண்டசீ ரரசின் பாத மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தவன் பினரா யுள்ளார் 1

களவுபொய் காமங் கோபம் முதலிய குற்றங் காய்ந்தார்;
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினர் மனைப்பா லுள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலா மரசின் நாமஞ் சாற்றுமவ் வொழுக்கலாற்றூர் 2

வடிவுதாங் காணு ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானு ரருளுங்கேட் டவர்நா மத்தாற்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழு நாளில் 3

திங்களூருக்கு வந்த அப்பர் எங்கும்தம் பெயரையே காணுதல்

அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார். 4

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும் பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார் 5

திருநாவுக்கரசர் வினவுதல்

இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யார் என்றூர்க்
கப்பந்தர் அறிந்தார்கள் ஆண்ட அரசெனும் பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலைகுளம் காவென்றூர். 6

என்றுரைக்க அரசு கேட்(டு) இதற்கென்னே கருத்தென்று
நின்றவரை நோக்கி யவர் எவ்விடத்தார் எனவினவத்
துன்றியநூல் மார்பருமித் தொல்பதியார் மனையின்கண்
சென்றனரிப் பொழுததுவும் சேய்த்தன்று நணித்தென்றார். 7

அப்பூதியடிகள் மகிழ்தல்

அங்ககன்று முனிவரும்போய் அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமரொருவர் எனக்கேட்டு நண்ணினார். 8

கடிதணைந்து வாகீசர் கழல் பணிய மற்றவர்தம்
அடிபணியா முன் பணியும் அரசினெதிர் அந்தணனார்
முடிவில் தவம் செய்தேன்கொல் முன்பொழியும் கருணைபுரி
வடிவுடையீர் என்மனையில் வந்தருளிற் றென்னென்றார். 9

'வேறொருவர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் வைக்கக் காரணம் என்? என்று திருநாவுக்கரசர் வினவ, அப்பூதியடிகள் மறுமொழி கூறுதல்

" ஆறணியுஞ் சடைமுடியா ரடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணமென் கொல்
கூறு" மென வெதிர் மொழிந்தார் கோதில் மொழிக்
கொற்றவனார். 10

நின்றமறை யோர்கேளா நிலையழிந்த சிந்தையராய்
" நன்றருளிச் செய்திலீர்; நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன் சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறொரு பேர்?"
எனவெகுள்வார், 11

" நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென வென்போல்வா ருந்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயரெழுத
வெம்மை மொழி யான்கேட்க விளம்பினீ" ரெனவிளம்பி. 12

"பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தி லறியாதார் யாருளரே?
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர்? நீர்தாம்யா ரியம்பு" மென வியம்பினுர். 13

திருநாவுக்கரசர் தம்மை வெளிப்படுத்தல்

திருமறையோ ரதுமொழியத் திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார்; "பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினு லாட்கொள்ள வடைந்துய்த்த
தெருளு முணர் வில்லாத சிறுமையேன்யா" னென்றுர். 14

அப்பூதியடிகளின் செயல்

அரசறிய வுரைசெய்ய வப்பூதி யடிகள்தாங்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி யுடம்பெல்லா முரோமபுள கம் பொலியத்
தரையின் மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார். 15

மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
அற்றவர்க ளருநிதியம் பெற்றுர்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ வோடினுர் பாடினுர். 16

அரசு திருவமுதுண்ண இசைதல்

ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசம் நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பஞ் செய அவரும் அது நேர்ந்தார். 17

மூத்த திருநாவுக்கரசை அரவு தீண்டுதல்

தூயநற் கறிகளான அறுவகைச் சுவையால் ஆக்கி
ஆயஇன் அமுதும் ஆக்கி அமுது செய்தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக்கரசை "வாழை
மேயபொற் குருத்துக் கொண்டுவா" என விரைந்து
விட்டார். 18

"நல்லதாய் தந்தையேவ நானிது செயப்பெற்றே" னென்(று)
ஒல்லேயில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாளரா வொன்(று)
அல்லலுற் றழுங்கிச் சோர வங்கையிற் றீண்டிற்றன்றே. 19

கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்துகின்ற
பையரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன், "பாந்தள்பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தாலெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று கொடுப்ப"
னென்றோடி வந்தான். 20

பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேகம் முந்த
வருந்தியே யணையும்போழ்து "மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவரமுது செய்யத் தாழ்க்கையா னறையே" னென்று
திருந்திய கருத்திஞேடுஞ் செழுமனே சென்று புக்கான். 21

எரிவிடம் முறையே யேறித் தலேக்கொண்ட வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு மேனியுங் கருகித் தீய்ந்து
விரிவுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்.
பரிகலக் குருத்தைத் தாயர் பால்வைத்துப் படிமேல்
வீழ்ந்தான். 22

அப்பூதியடிகள் மகன் இறந்ததை மறைத்துத் திருநாவுக்கரசரை அமுதுசெய்ய அழைத்தல்

தளர்ந்துவீழ் மகனேக் கண்டு தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி யுதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியுங் கண்டு "விடத்தினல் வீந்தா" னென்று
துளங்குதலின்றித் தொண்ட ரமுதுசெய் வதற்குச் சூழ்வார் 23

பெறலரும் புதல்வன் தன்னேப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனே முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே
"அறவிது தெரியா வண்ண மமுது செய்விப்போ" மென்று
விறலுடைத் தொண்டனூர்பால் விருப்பொடு விரைந்து
வந்தார். 24

அரசு வினுதலும் அப்பூதியடிகள் மகற்கு உற்றது உரைத்தலும்

அருந்தவர் எழுந்து செய்ய அடியினை விளக்கி வேரூேர்
திருந்துமா சனத்தி லேறிப் பரிகலந் திருத்துமுன்னர்
இருந்து வெண்ணீறு சாத்தி இயல்புடை இருவருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும்
போழ்தில், 25

ஆதிநான்மறை நூல் வாய்மைஅப் பூதியாரை நோக்கிக்
"காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டுமுன்னே
மேதகு பூதி சாத்த " என்றலும் விளைந்த தன்மை
யாதுமொன் றுரையார் " இப்போதிங்கவன் உதவான்"
என்றூர் 26

அவ்வுரை கேட்டபோதே அங்கணர் அருளால் அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேரநோக்கி
இவ்வுரை பொருதென் உள்ளம் என்செய்தான்
இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையு மென்ன விளம்புவார் விதிர்ப்புற்றஞ்சி, 27

பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க என்னே
வருவதென் றுரையாரேனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டும் சீலத்தால் சிந்தைநொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தா ரன்றே. 28

திருநாவுக்கரசர் பதிகம் பாடிப் பிள்ளையை உயிர்ப்பித்தல்

நாவினுக் கரசர் கேளா " நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வா ," ரென்றுமுன் னெழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி யண்ணலாரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார். 29

தீவிடம் நீங்க வுய்ந்த திருமறை யவர்தஞ்சேயும்
மேவிய வுறக்கம் நீக்கி விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக்கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனித நீறளித்தா ரன்றே, 30

புகழ்ந்தகோ மயத்துநீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய் வலம்பெற மரபின்
வைத்தார். 31

திருநாவுக்கரசர் அமுது செய்தல்

மைந்தரும் மறையோர்தாமும் மருங்கிருந் தமுதுசெய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனுரடியா ரோடும்
அந்தமி ழாளியாரங் கமுதுசெய் தருளினுரே. 32

திருநாவுக்கரசர் அப்பூதி யடிகளின் தொண்டைச் சிறப்பித்துத் திருப்பழனத்தில் பதிகம் பாடுதல்

மாதவ மறையோர் செல்வ மனையிடை யமுதுசெய்து
காதனண் பளித்துப் பன்னுள் கலந்துட னிருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழனமூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார். 33

அப்பூதியடிக ளார்த மடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை விரும்பு சொன்மாலை வேய்ந்த
இப்பூதிபெற்ற நல்லோ ரெல்லையி லன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார் திருநாவுக்கரசர் பாதம். 34

5. பாஞ்சாலி சபதம்

தருமபுத்திரர் நடத்திய இராசசூய யாகத்தைக் கண்டு பொருமை கொண்ட துரியோதனன் சகுனியிடங் கூறுதல்

1. உலகு தொடங்கிய நாள்முதலாக நம்
   சாதியில்—புகழ்
   ஓங்கி நின்முரித் தருமனைப் போலெவர்
   மாமனே!

இலகு புகழ் மனுவாதி முதுவர்க்கும்
மாமனே !—பொருள்
ஏற்றமும் மாட்சியும் இப்படியுண்டுகொல் ?
மாமனே !
கலைக ளுணர்ந்தநல் வேதியப் பாவலர்
செய்தவாம் பழங்
கற்பனைக் காவியம் பற்பல கற்றனை
மாமனே !
பலகடல் நாட்டையும் இப்படி வென்றதை
எங்கணும்— சொல்லப்
பார்த்த துண்டோ? கதைகேட்ட துண்டோ? புகல்
மாமனே !

2. எதனை யுலகில் மறப்பினும் யானினி,
மாமனே !—இவர்
யாகத்தை என்றும் மறந்திட லென்பதொன்
றேது காண் ?
விதமுறச் சொன்ன பொருட் குவையும் பெரி
தில்லை காண் ;—அந்த
வேள்வியில் என்னை வெதுப்பின வேறு
பலவுண்டே ;
இதனையெலாமவ் விழியற்ற தந்தையின்
பாற்சென்றே—சொல்லி
இங்கிவர் மீதவனும்பகை எய்திடச்
செய்குவாய்,
மிதமிகு மன்பவர் மீதுகொண் டானவன்
கேட்கவே,—அந்த
வேள்விகண் டென்னுயிர் புண்படுஞ்செய்தி
விளம்புவாய்.

3. விப்பிர ராதிய நால்வரு ணத்தவர்
துய்ப்பவே—நல்
விருந்து செயலில் அளவற்ற பொன்செல
விட்டதும்,
‘இப்பிறவிக்கு ளிவையொத்த வேள்வி

விருந்துகள்—புவி
எங்கணும் நாம்கண் டதில்லை' எனத் தொனி
பட்டதும்,
தப்பின்றி யேநல் விருந்தினர் யார்க்குந்
தகுதிகள்—கண்டு
தக்கசன் மானம் அளித்து வரிசைகள்
இட்டதும்,
செப்புக நீயவ் விழியற்ற தந்தைக்கு ;
" நின்மகன்—இந்தச்
செல்வம் பெருவிடில் செத்திடுவான் " என்றும்
செப்புவாய்.

4. அண்ணன் மைந்தன் அவனிக் குரியவன்
யானன்றோ ?—அவர்
அடியவ ராகி யெமைப்பற்றி நிற்றல்
விதியன் றோ !
பண்ணும் வேள்வியில் யார்க்கு முதன்மை
அவர் தந்தார் ?—அந்தப்
பாண்ட வர்நமைப் புல்லென எண்ணுதல்
பார்த்தை யோ ?
கண்ணனுக்கு முதல்உப சாரங்கள்
காட்டினார் ;—சென்று
கண்ணி லாத்தந்தைக் கிச்செயலின் பொருள்
காட்டுவாய் ;
மண்ணில் வேந்தருள் கண்ணன் எவ்வாறு
முதற்பட்டான் ?—என்றன்
மாமனே அவன் நம்மில் உயர்ந்த
வகை சொல் வாய்.

(வேறு)

5. மஞ்சன நீர்தவ வேத
வியாசன் பொழிந்ததும்,—பல
வைதிகர் கூடிநன் மந்திர
வாழ்த்து மொழிந்ததும்

குஞ்சரச் சாத்தகி வெண்குடை
தாங்கிட, வீமனும்—இளங்
கொற்றவ னும்பொற் சிவிறிகள்
வீச, இரட்டையர்
அஞ்சுவர் போலங்கு நின்று
கவரி இரட்டவே,—கடல்
ஆளு மொருவன் கொடுத்ததொர்
தெய்விகச் சங்கினில்
வஞ்சகன் கண்ணன் புனித முறுங்
கங்கை நீர்கொண்டு—திரு
மஞ்சன மாட்டும்அப் போதில்
எவரும் மகிழ்ந்ததும்.

6. மூச்சை யடைத்த தடா! சபை
தன்னில் விழுந்துநான்—அங்கு
மூர்ச்சை யடைந்தது கண்டனையே!
என்றன் மாமனே!
ஏச்சையும் அங்கவர் கொண்ட
நகைப்பையும் எண்ணுவாய்;—அந்த
ஏந்திழையாளும் எனைச்சிரித்
தாளிதை யெண்ணுவாய்;
பேச்சை வளர்த்துப் பயனொன்று
மில்லை, என்மாமனே!—அவர்
பேற்றை அழிக்க உபாயஞ் சொல்வாய்
என்றன் மாமனே!
தீச்செயல் நற்செயல் ஏதெனினும்
ஒன்று செய்து, நாம்—அவர்
செல்வங் கவர்ந்த வரைவிட
வேண்டும் தெருவிலே!

—சி. சுப்பிரமணிய பாரதியார்

IV. பல்சுவை

1. வருணனை

1. அந்தி வானம்

பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன ! ஓகோ !
என்னடீ இந்த வண்ணத் தியல்புகள் !
எத்தனை வடிவம் ! எத்தனை கலவை !

தீயின் குழம்புகள்—செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள் !—வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள் !—பாரடீ !
நீலப் பொய்கைகள் !—அடடா, நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடீ !

எத்தனை செம்மை ! பசுமையுங் கருமையும்
எத்தனை !—கரிய பெரும்பெரும் பூதம் !
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் ! சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிக ரங்கள் !—காண்டி, ஆங்கு ;

தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்.
இருட்கடல் !—ஆஹா—எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள் ! ஒளித்திரள் ! வன்னக் களஞ்சியம்.

2. அந்திப் பொழுது

1. காவென்று கத்திடுங் காக்கை—என்றன்
கண்ணுக்கினிய கருநிறக் காக்கை
மேவிப் பலகிளை மீதில்—இங்கு
விண்ணிடை அந்திப் பொழுதினைக் கண்டே
கூவித் திரியும் சிலவே ;—சில
கூட்டங்கள் கூடித் திசைதொறும் போகும்.
தேவி பராசக்தி யன்னை—விண்ணிற்
செவ்வொளி காட்டிப் பிறைதலைக் கொண்டாள்.

2. தென்னை மரக்கிளை மீதில்—அங்கொர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்.
சின்னஞ் சிறிய குருவி—அது
'ஜிவ்'வென்று விண்ணிடை யூசலிட்டேகும்.
மன்னப் பருந்தொ ரிரண்டு—மெல்ல
வட்ட மிட்டுப்பின் நெடுந்தொலை போகும்.
பின்னர் தெருவிலொர் சேவல்—அதன்.
பேச்சினிலே ' சக்திவேல் ' என்று கூவும்.

2. சீட்டுக் கவிகள்

1. ' ராஜமகா ராஜேந்த்ர ராஜகுல
சேகரன் ஸ்ரீ ராஜ ராஜன்
தேசமெலாம் புகழ்விளங்கும் இளசைவெங்க
டேசுரெட்ட சிங்கன் காண்க.
வாசமிகு துழாய்த் தாரான் கண்ணனடி
மறவாத மனத்தான் சக்தி
தாசனெனப் புகழ்வளரும் சுப்ரமண்ய
பாரதிதான் சமைத்த தூக்கு.

2. மன்னவனே ! தமிழ் நாட்டில் தமிழறிந்த
மன்னரிலை யென்று மாந்தர்
இன்னலுறப் புகன்றவசை நீமகுடம்
புனைந்தபொழு திரிந்த தன்றே !
சொன்னலமும் பொருணலமும் சுவைகண்டு
சுவைகண்டு, துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள் போல்
தமிழ்ச்சுவைநீ களித்தா யன்றே !

3. புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்த
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசை யென்னாற் கழிந்த தன்றே !
"சுவைபுதிது, பொருள்புதிது, வளம் புதிது,
சொற்புதிது, சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை" என்று நன்கு,

4. பிரான் ஸென்னும் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
விராவுபுக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்துகூறிப்
பராவி யென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்ருர் ; பாரோ ரேத்துந்
தராதிபனே ! இளசை வெங்கடேசு ரெட்டா !
நின்பாலத் தமிழ் கொணர்ந்தேன்.

வேறு

5. வியப்புமிகும் புத்திசையில் வியத்தகுமென் கவிதைகளை
வேந்தனே ! நின்
நயப்படுசந் நிதிதனிலே நான்பாட நீகேட்டு
நன்கு போற்றி,
ஐயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள்
ஐதிபல் லக்கு, [பொற்பைகள்
வயப்பரிவா ரங்கள்முதற் பரிசளித்துப் பல்லூழி
வாழ்க நீயே !

—சி. சுப்பிரமணிய பாரதியார்

3. சிலேடைக் கவிகள்

வைக்கோலும் யானையும்

1. வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

பாம்பும் எள்ளும்

2. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றிற் பரபரென்னும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

பாம்பும் வாழைப்பழமும்

3. நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

கதவும் ஆடும்

4. செய்யுட் கிடைமறிக்குஞ் சேர்பலகை யிட்டுமுட்டும்
ஐயமற மேற்று ளடர்க்குமே—துய்யநிலை
தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்
ஆடுங் கதவுநிக ராம்.

—காளமேகப் புலவர்

4. சிற்றிலக்கியம்

1. அழகரந்தாதி

1. மொழித்தத்தை கொஞ்சு மலையலங் காரன்முன்
ஹுாற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் கரசளித் தோனடி
நாட்டொடர்ந்தென்
உழித்தத்தைச் செய்தன்றிப் போகா வினையை யொரு
நொடியில்
கழித்தத்தை யென்சொல்லு கேன்தனக் காட்பட்ட
காலத்திலே.

2. கால மலைக்கும் புவனங் களைக்கரந் தாயுதிரங்
கால மலைக்குமைத் தாயழ காகம லத்துப் பஞ்சார்
கால மலைக்கும் புவிக்குமன் பாவுயிர் காயம் விடுங்
கால மலைக்குங் கடுங்கூற்றைக் காய்ந்தென்னைக்
காத்தருளே.

—பிள்ளைப்பெருமாளையங்கார்

2. மீனாட்சியம்மை குறம்

பொதியமலையின் சிறப்பு

1. திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் ணம்மைதிரு வருள்சுரந்து பொலிவ
தெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே.

2. கன்ன மதம்பெய் துறங்குகொலைக்
களிறுகிடந்து பிளிறுமலை
தென்னந் தமிழும் பசுங்குழவித்
தென்றற் கொழுந்துந் திளைக்குமலை
அன்னம் பயிலும் பொழிற்கூடல்
அறலங் கூந்தற் பிடியாண்ட
பொன்னங் குடுமித் தடஞ்சாரற்
பொதிய மலையென் மலையம்மே.

—குமரகுருபரர்

5. வழிபாட்டுப் பாடல்கள்

1. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

2. உயர்வுற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறி சுடரடி தொழுதெழல் மனனே.

—நம்மாழ்வார்

3. அறிவிலே தெளிவு நெஞ்சிலே யுறுதி
யகத்திலே யன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியரசாணை
பொழுதெலா நினது பேரருளின்
நெறியிலே நாட்டம் கரும யோகத்தில்
நிலைத்திட லென்றிவை யருளாய்
குறிகுண மேனத்து-முள்ளதா யிலதாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே.

—சி. சுப்பிரமணிய பாரதியார்

(ஒரு நாளைக்கு ஒருதரம்)

பல்லவி

4. ஒரு நாளைக் கொருதரம்
ஒரு நொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்த வனை
எண்ணிச் சுகித்த துண்டோ—மனமே (ஒரு)

துணைப் பல்லவி

திருநாளும் தேரும் என்று
தேடி அலைந்த தல்லால்
சிந்தனை அலை யாமல்
தியானத்தில் நிறுத்தியே (ஒரு)

சரணம்

விடியுமுன் விழித் தனை
வெளுக்குமுன் வீட்டை விட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு
வெளவால்போல் ஓட்ட மிட்டாய்
உடலும் மனமும் சேர்ந்து
ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதும் கூட
எண்ணம் நினைப்ப தில்லை. (ஒரு)

அரைக் காசுக் காளுலும்
ஒருநாள் முழுதும் காப்பாய்
ஆயிரம் பேரை யேனும்
அலுப்பின்றிப் போய்ப் பார்ப்பாய்.
உரைப்பார் உரைகட் கெல்லாம்
உயர்ந்திடும் செல்வனை
உன்னுள் இருப் பவனை
எண்ணிட நேர மில்லை. (ஒரு)

—நாமக்கல் கவிஞர்

உரைநடைப் பகுதி

1. நல்ல நூல்

டாக்டர் மு. வரதராசனுர், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

புகைவண்டி நிலையத்தில் இருவர் பேசிப் பழகுகின்றனர். சிறிது நேரத்தில் வண்டி வருகின்றது. இருவரும் அதில் ஏறி ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு தொடர்ந்து பேசுகின்றனர். வண்டி நகர்கின்றது. ஐம்பது அறுபது மைல் கடந்து ஒரு நிலையத்தில் நிற்கும்போது அவர்களுள் ஒருவர் தம் பெட்டியை எடுத்துக்கொண்டு இறங்குகின்ருர். சிறிதும் வருத்தம் இல்லாமல், "நான் போய் வரட்டுமா?", என்று அந்த நண்பரை விடை கேட்கின்ருர். "சரி போய்விட்டு வா'ங்கள், இங்கேதாஞ உங்கள் ஊர்?", என்று வண்டியில் இருக்கும் நண்பரும் கவலையில்லாமல் விடை கொடுக்கிருர். வண்டி புறப்படுகிறது. இருவரும் பிரிந்து வேறு வேறு இடங்களை நாடிச் செல்லுகின்றனர். 'பிரிந்தோமே' என்ற துயரம் ஒருவர் உள்ளத்திலும் இல்லை. சில நாழிகைக்குள் ஒருவர் ஒருவரைப்பற்றி நினைப்பதில்லை. அடியோடு மறந்து போகின்றனர். இதுவும் நட்புத்தான்.

நட்பில் இன்னெரு வகை உண்டு. நாள்தோறும் குறித்த நேரத்தில் பெரும்பாலும் மாலை வேளையில் நண்பர் கூடிப் பேசுவர். தம் தம் குறைகளையும் இடர்களையும் குறித்துப் பேசாமல் பெரும்பாலும் மற்றவர்களின் குற்றங்களை எடுத்துப் பேசி எள்ளி நகையாடிப் பொழுது போக்குவார்கள். இத்தகைய பேச்சால் ஒருவரை ஒருவர் திருத்தவோ, உயர்த்தவோ முடியாது. ஆனலும் அந்த வேளைக்குச் சிரித்துச் சிரித்துக்

காலத்தைக் கழிக்க முயல்வார்கள். சில நாட்களில் இருவருக்குமே சோர்வு ஏற்பட்டுவிடுமானல், இருவரும் சேர்ந்து வேருென்றன் துணையை நாடுவார்கள். அவ்வாறு துணையாக நாடுகின்ற பொருள் பெரும் பாலும் தூண்டுதல் செய்யும் பொருளாகவோ, மயக்கம் தரும் பொருளாகவோ இருக்கும். இவர்க ளிடத்தில் முகத்தளவில் சிரிக்கும் சிரிப்பும், வாழ்க்கையை மறக்கும் முயற்சியும் காணப்படுமே தவிரச் சீர்ப்படுத்தும் முயற்சி காணப்படாது. இவர்கள் ஒருவரோடொருவர் பழகும் பழக்கம் பெரும் பாலும் நீடிப்பதில்லை; நீடித்தாலும் உள்ளம் கலப்ப தில்லை ; உள்ளன்பு வளர்வதில்லை.

அறிவுடையவர்களாய் நெறியோடு வாழ்கின்ற வர்கள் தேடிக் கொள்ளும் நட்பு வேறு வகையானது. அவர்கள் கூடிப் பேசும்போதும், தனித்து எண்ணும் போதும் ஒருவர் மற்ருெருவரின் நன்மையையே நாடு வார்கள் ; ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ்வதி லேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். சிறிது நேரம் வேடிக்கையாகப் பொழுது போக்குவது அவர்க ளுக்குக் குறிக்கோளாக இருப்பதில்லை. நாளைக் கடமை, எதிர்காலக் கடமை, இன்றுள்ள இடர்ப்பாட்டை வெல்லும் முயற்சி—இவற்றைப் பேசித் துன்பத்தைப் பங்கிட்டுக் கொள்வதிலேயே அவர்கள் முந்தி நிற்பார்கள். உண்மையான இன்பம் வாய்த்தபோது ஆரவாரம் இல்லாமல்—பகட்டு இல்லாமல் மகிழ்ச்சி கொண்டு கலந்துகொள்வார்கள். அந்த மகிழ்ச்சி உண்மை மகிழ்ச்சி ஆகையால் உள்ளத்தில் ஊறி நிற்கும். சிறிதளவே புறத்தில் புலனகும். ஒருவர் தவறும் நிலைமை நேர்ந்தால் மற்றவர் தயங்காமல் தடுத்துத் திருத்த முனைவதும் இத்தகைய நண்பர் இயல்பாகும். அதனல் நண்பருடைய மகிழ்ச்சி குறையுமே என்றும், மனம் புண்படுமே என்றும் கவலைப்படாமல் கடிந்துரைப்பது வழக்கமாகும்.

இத்தகைய நண்பர்கள் உதவி செய்யும்போது விரைவதுபோலவே திருத்தும்போதும் விரைவார்கள்.

"முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"
"நகுதற் பொருட்டன்று நட்டல்: மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்று திருவள்ளுவர் இச்சிறந்த நட்பைப் பற்றித் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

நட்பைப்பற்றி மேலும் கூறும்போது, கற்கக் கற்க நயம் பயக்கும் நூல்போல், பழகப் பழக இனிய நன்மை மிக விளைப்பதே சிறந்த நட்பு என்று கூறியுள்ளார்.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

இவ்வாறு நூலையும் நட்பையும் தொடர்புபடுத்தி விளக்கினமையால், சிறந்த நட்பைப்போல் உயர்ந்த நூல் இன்னது என்பதையும் ஆராய்ந்து அறியலாம்.

சில நூல்களை ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் வைத்திருந்து ஒரு பகுதியைப் படித்து முடித்த பிறகு கவலை இல்லாமல் மறந்துவிடலாம். அவைகள் புகைவண்டியில் பயணம் செய்து நட்புக் கொள்ளப் படுகின்றவர்களைப் போன்றவைகள்.

சில நூல்கள் கற்போரைத் திருத்த முடியாது; எண்ணச் செய்யவும் முடியாது. படிக்கும் நேரத்தில் இன்பம் பயக்கும். தொடர்ந்து படித்தால் மிகுதியான பயன் காண முடியாது. அதற்கு மாறுகக் கடமையை மறக்கச் செய்து, மனச்சான்றையும் அடங்கச் செய்து பொழுதைப் போக்குமாறு தூண்டும்.

இன்னும் சில நூல்கள் முதல் முறையாகப் படிக்கும்போது தொல்லையாகவும் இருக்கும்; தொடர்ந்து

படிக்கப் படிக்க, இன்பம் பயக்கும். வாழ்நாளில் மறக்க முடியாத துணையாக இருக்கும்; வழிகாட்டியாக நிற்கும்; மனச்சான்றைப் பண்படுத்தும்; வழுக்கிவிழும் போதெல்லாம் காப்பாற்ற முன்வரும்; நெறி தவறும் போதெல்லாம் இடித்துரைத்துத் திருத்தும். வாழ் நாளில் உயிரின் உணர்வு போல் கலந்துவிடும் ஆற்றல் அத்தகைய நூல்களுக்கு உண்டு.

இரஸ்கின் என்னும் ஆங்கில ஆசிரியர் நூல்களைப் பற்றி வகைப்படுத்திச் சீர்தூக்கும் சொற் பொழிவு ஒன்றில் அழகான பாகுபாடு செய்துள்ளார். அந்த மணி நேரத்துக்கு உரிய நூல் என்றும், எந்தக் காலத்துக்கும் உரிய நூல் என்றும், இருவகையாகப் பகுத்துரைக்கின்றார். திருவள்ளுவர் நூலை அவ்வாறு பாகுபாடு செய்யாவிட்டாலும், நட்பைப் பாகுபடுத்தி உரைப்பதன் வாயிலாக இந்தக் கருத்தைப் புலப் படுத்தியுள்ளார்; முகம் நகப் பழகும் நட்பு, அகம் நகப் பழகும் நட்பு என்று நட்பை இருவகை ஆக்கிக் கூறி யுள்ளார். அதைக் கொண்டு பொழுது போக்குக்குரிய நூல் என்றும், வாழ்க்கைக்குரிய நூல் என்றும் நூலைப் பகுத்து உணரலாம். அவ்வாறு உணரும்போது இரஸ்கின் என்னும் ஆங்கில ஆசிரியரின் கருத்தைக் காண முடிகின்றது. நல்ல நூல் எது என்பதைத் தேர்ந் தெடுக்கவும் முடிகின்றது. இந்தச் சிறந்த அடிப்படை யைக் கொண்டே கல்வி என்னும் அதிகாரத்தில் கற்கும் முறையைக் கூறும்போதும் திருவள்ளுவர் கற்கத் தகுந்த நூல்களைக் கசடறக் கற்க வேண்டும் என்று கூறியுள்ளார். எல்லா நூல்களையும் கற்பதால் பயனில்லை என்று விலக்கி, கற்பதற்குரிய நல்ல நூல் களையே தேர்ந்து கற்க வேண்டும் என்று அறிவுறுத்தி யுள்ளார். கண்டவரோடு எல்லாம், பழகாமல் பண்புடை யாளரிடம் மட்டும் நட்புக் கொள்ள வேண்டும் என்ற திருவள்ளுவர், நூல்களிலும் கண்டவற்றை எல்லாம் கற்கலாகாது என்றே அறிவுறுத்துகின்றார்.

பண்புடையாளரின் தொடர்பைவிட, உயர்ந்த நூற்பயிற்சி மிக்க நன்மை தருவதாகும். பண்புடையாளர் உலகில் கிடைத்தற்கு அரியர். கிடைத்தாலும் இடமும் காலமும் பிரிக்கும் பிரிவுக்கு உட்பட வேண்டி நேர்கின்றது. அதனுல் ஒருங்கே வாழ்ந்து பழகும் வாய்ப்பு அரிதாக உள்ளது. நல்ல நூலின் தொடர்பு என்றும் நிலேயாக உள்ளது. காலமும் இடமும் நம்மிடமிருந்து அதைப் பிரித்திட முடியாது. மறப்பே பிரிவு என்னுமாறு, நல்ல நூல் உள்ளத்தில் ஊறி நிற்பது; பயின்ற பிறகு எளிதில் மறக்கமுடியாது; வேண்டும் போது உள்ளத்தே ஊற்ருய்த் தோன்றி உறுதுணே செய்யவல்லது. பண்புடையாளரை இவ்வாறு நம்மை விட்டுப் பிரியாதவாறு பிணித்து வைக்க முடியாது. வாழ்க்கை அத்தகைய சிறுமையுடையதாக இருப்பதால்தான், "கல்வியி னூங்கில்லே சிற்றுயிர்க் குற்ற துணே," என்ருர் குமரகுருபரர்.

விஞ்ஞான வளர்ச்சியின் பயனுக, இடத்தினுல் விளேயும் பிரிவை இல்லேயாக்கி, தொலேநாடுகளில் உள்ள நண்பரோடும் பழக முயலலாம்; ஆயின் சில ஆண்டுகளுக்கு முன்னரோ, சில நூற்ருண்டுகளுக்கு முன்னரோ, வாழ்ந்து காலத்தால் பிரிக்கப்பட்ட சான்ருேருடன் பழகுதற்கு வழியில்லே. நட்புலகத்தில் உள்ள இந்தக் குறையை நூலுலகம் தீர்த்து விடுகின்றது. திருவள்ளுவர், இளங்கோ முதலானவர்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு காலம் நம்மைப் பிரித்து வைத்த போதிலும் அவர்களின் நூல்கள் அந்த அரிய தொடர்பை ஏற்படுத்தித் தருகின்றன. திருக்குறளேயும் சிலப்பதிகாரத்தையும் பயின்றவர்கள், வேண்டும் இடத்தில், வேண்டும் காலத்தில் அந்தப் பெருமக்களின் திருவுள்ளங்களோடு தொடர்புகொள்ள முடிகின்றது. இரஸ்கின் என்னும் ஆங்கில அறிஞர் கூறுமாறு, அரசர், அமைச்சர் முதலானவர்களேக் காண்பதற்கு நாம் காத்திருக்கும் நிலேபோல் இல்லாமல்

நாம் எளிதில் கண்டு மகிழுமாறு நமக்காக அந்தப் புலவர் பெருமக்கள் என்றும் எங்கும் கருணைகொண்டு நூல் வடிவில் காத்திருக்கின்றனர். ஆகவே, நல்ல நூல் என்பது எழுத்துச் சொற்பொருள்களால் ஆன ஏடுகள் அடங்கிய ஒன்று அன்று; நமக்குக் காட்சி அளித்துக் கருணை பொழிய என்றும் எங்கும் நமக்காகக் காத்திருக்கின்ற பெருந்தகையின் திருவுருவம் என்னலாம்.

2. திருவள்ளுவரும் திருக்குறளும்

திரு. வி. கலியாணசுந்தரனார்

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்னை? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற்குரிய கருவியுமாகும்.

திருக்குறளை ஆராய்ந்தால் அதன்கண் உலகமிருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதினர். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கென்றே பயின்றார்; உலகுக்கென்றே வாழ்ந்தார். அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகமாயினர்; உலகம் அவராயிற்று. இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவையூட்டும்? அஃது உலக நினைவை யூட்டுதல் இயல்பே. ஆகவே திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது, உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பொன்று மில்லையென்க.

உலகம்

உலகம் எது? இவ்வினாவிற்குச் செவ்வனிறை இறுத்தல் அரிது. உலகம் இதுவே என்று அறுதியிட்டுக் கூறல் இயலாது. உலகம் பலவிதம். ஒவ்வொருவர்க்கும் ஒவ்வோர் உலகம் உண்டு. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருபோது ஒவ்வோர் உலகம் உண்டு என்று கூறல் மிகப் பொருத்தம்.

எண்ணமே உடலும் உலகுமாம். அடிப்படை எண்ணம்; எண்ணத்தின்படியே எல்லாம் உருக் கொள்ளும். எண்ணம் நுண்மை; உரு பருமை.

நாடு

உலகைப் பற்றிப் பலர் பலவாறு கூறுவர். அவர் தம் கூற்றுக்களை எடுத்த பொருளுக்கேற்ப முக்கூறு படுத்திக் கொள்கிறேன். ஒன்று, உலகம் பூதங்களால் ஆக்கப்பட்டதென்பது; இன்னொன்று, உலகம் நாடுகளால் ஆக்கப்பட்டதென்பது; வேறொன்று, உலகம் கலைகளால் ஆக்கப்பட்டதென்பது. இம்மூன்றனுள் சிங்க நோக்காக நிற்பது நாடு. நாடு ஒரு வகையில் முன்னையதிலும் ஒரு வகையில் பின்னையதிலும் ஒன்றும். நாட்டை வெறும் பௌதிகமாகப் பார்ப்பது ஒருவகை; அதைக் கலையாக நோக்குவது இன்னொரு வகை.

நாடு என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமன்று. அது கல்வி, தொழில், அரசு, நாகரிகம், வாழ்வு முதலிய வற்றையுங் கொண்டது. நிலப்பரப்பு பூத காரியம். கல்வி, நாகரிகம், வாழ்வு முதலியன கலையின் பாகுபாடுகள். இவ்விரண்டையும் கொண்ட ஒன்றே நாடு என்பது.

தமிழ் நாடு

உலகில் பல நாடுகளிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு பெயருண்டு. நாட்டுப் பெயர்கள் பெரிதும் அவ்வந் நாட்டு மொழியினின்றும் அரும்பியன.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தமிழ் மொழியில் நூல் செய்தவர். அவர் நினைவு தோன்றும் போது தமிழ் நாட்டின் நினைவன்றோ தோன்றுதல் வேண்டும்? உலக நினைவு தோன்றுவதென்னை?

ஈண்டுத் தமிழ் நாடென்றது இப்போதுள்ள தமிழ் நாட்டைக் குறிப்பதன்று. அது பைந்தமிழ் நாட்டைக் குறிப்பது. நாட்டுக்கு அடிகோலி அதை ஆக்கிய பேரறிஞர் பரந்த நோக்குடையவர். அவர் உலகியலை

நன்குணர்ந்தவர். உலகியலில் இருவிதச் சிறப்புக் களுண்டு. ஒன்று சிறியது. மற்றொன்று பெரியது. உலகியல், சாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலிய வற்றில் கலந்தும், இவற்றைக் கடந்தும் விளங்குவது. சாதி, மதம், மொழி, நிறம், நாடு முதலியன கலந்த நிலை சிறியது; இவற்றைக் கடந்த நிலை பெரியது. சிறிய நிலை பன்மை; பெரிய நிலை ஒருமை. பன்மையில் ஒருமை காண முயல்வது அறிவுடைமை. பன்மை யைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாக்குவது அறியாமை.

பழந்தமிழர்

பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையிற் படிய வில்லை. அவர்தம் நோக்கு பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை; ஒற்றுமையே அவர்க்குப்புலனாகியது. அவர் நடாத்திய வாழ்வு அத்தகையது.

பழந்தமிழர் மொழியில் ஈண்டு ஒன்று நினைவிற்கு வருகின்றது. அது வருமாறு:—

'யாதும் ஊரே யாவரும் கேளிர்''

பழந்தமிழரது பரந்த நோக்கு என்னே! என்னே! அப்பழந் தமிழர் நாடு எங்கே? தமிழ் நாடே! உலகாக விளங்கிய தமிழ் நாடே! நீ யாண்டுச் சென்றனை? மீண்டும் எழுவையோ? பழந்தமிழே! உன் நாடு சிறு மண்ணாய்க் கிடக்கிறது; பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாகிறது. அஃது உலகாக மீண்டும் விளங் குதல் வேண்டும்; திருவள்ளுவர் நாடாதல் வேண்டும்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உனது உள்ளுறையன்றோ இந்நாளில் 'சமதர்மம்,' 'சமதர்மம்' என்று விரித்துப் பேசப்படுகிறது? பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னரே நீ சமதர்மம் பேசினை; சமதர்மத்தில் நின்றனை; வாழ்ந்தனை. இந்நாளில் உன்னிலை இரங்கத்

தக்கதா யிருக்கின்றது. உனது பழமையைக் குறிக் கோளர்கக் கொண்டு இக்காலத்தவர் வாழ்வு நடாத்து வாராக.

திருவள்ளுவர்

திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கை பிறந்த பெருந்தமிழ்க் குடியில் தோன்றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய சிறுமைக் கட்டுக்களில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகமே படிந்து கிடந்தது. அது திருக்குறள் என்னும் நூலாக உருக்கொண்டது. இத்தகைய ஒரு நூல் ஓர் இனத் துக்குரியதாகுமா? உலகுக்குரியதாகுமா? இப்பெரு நூலை அருளிய ஒருவர் ஓர் இனத்துக்குரியவராவரா? எனவே, திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும் போது உலகமும் உடன் தோன்றுதல் இயல்பே. இதில் வியப்பொன்றுமில்லை.

மொழியும் பொருளும்

திருவள்ளுவர் தமிழ் நாட்டிற் பிறந்தவர். அவர் தம் தாய்மொழி தமிழ். அவர் தமிழில் நூல் செய்தனர். நூலின் மொழி தமிழ்; பொருளோ உலகுக்குரிய ஒன்று. இது வெள்ளிடை மலை. இவ்வாறு நூல் செய்தோர் அரியர்; செய்வோரும் அரியர். இது பற்றியே தமிழ் நாட்டுச் சமதர்மப் புலவராய் இற்றைஞான்று நமது நடுவண் வாழ்ந்த பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று வீறுகொண்டு மகிழ்ச்சியுடன் ஓதினர்.

வரலாறு

உலகுக்கு ஒரு நூலை அருளிய திருவள்ளுவரது உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. இப்போது

வழங்கிவரும் அவரது வரலாறு பின்னே புனையப்பட்டது. பல தமிழாசிரியருடைய வரலாறுகள் சரித்திர முறையில் நமக்குக் கிடைக்கவில்லை. இது நாடு செய்த பாவம். 'சரிதம்' என்னும் பெயரால் புனைந்துரைகளே பெரிதும் நாட்டில் உலவுகின்றன. அவரவர் அருளிய நூலைக்கொண்டே அவரவர் நிலையை ஊகித்து உணரவேண்டுவது அறிஞர் கடமை.

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் என்னும் தமிழ்ப் பொது நிலையம் எல்லார்க்குங் காட்சி வழங்குகின்றது. அந்நிலையத்தைப் பார்ப்போம்; அதனுள் புக முயல்வோம்; முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்துபட்டாரில்லை. அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார். உலகீர்! அவரைக் காண எழுக; எழுக.

3. பழந்தமிழ் வேந்தர்

செந்தமிழ்க் காவலர், டாக்டர் அ. சிதம்பரநாதனர்

பழங்காலத் தமிழகத்தில் வாழ்ந்த அரசர்கள் செங்கோல் அரசர்களாக இருந்தார்கள் என்பதற்கும், செங்கோல் செலுத்துபவராகவே இருக்க விழைந்தார்கள் என்பதற்கும் உரிய சான்றுகள் பல கிடைக்கின்றன. சபதம் கூறிய மன்னர்கள் சிலர் தமது சபதம் தவறினுல், தம்மைக் குடிமக்கள் கொடுங்கோல் வேந்தர் எனக் கூறி இகழ்வாராக என உரைத்துள்ளார்கள். பொதுவாக, சபதம் தவறினுல் இன்னது ஆக எனக் கூறுவதிலிருந்து ஒருவருடைய குறிக்கோளும், ஒருவரால் மேலானதாக மதிக்கப்படுவதும் அறியப்படும்.

உதயணன் கதையில் யூகியாகிய யௌகந்தராயணன் தன் சபதம் தவறினுல், தனது சிகையை அரிந்துவிடுவதாகக் கூறினன். இதுகொண்டு அவன் சிகையினிடத்து வைத்த பற்று அறியப்படும். அதைப் போலவே, ஒருவர் இதனைச் செய்யாதுபோனுல் நமக்கு வேருெரு பெயர் இட்டு அழைக்க எனக் கூறும்போது, அவர் தமது தாய் தந்தையர் இட்ட பெயரினிடத்து வைத்த அன்பு அறியப்படும். ஒருவர் மகன்மேல் ஆணையிடுகிறேன் என்ருல் அவர் பெறற்கரும் தமது மகனிடத்து வைத்த பேரன்பு அறியப்படும். எனவே, ஒருவன் சபதம் தவறினுல் இன்னது ஆவேன் எனக் கூறுவதிலிருந்து, அவன் வாழ்க்கையில் விரும்புகின்றனவும், வெறுக்கின்றனவும் இன்ன என்பதை நாம் எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடும்.

பூதப் பண்டியவன் என்ற அரசன் கூறிய சபதம் ஒன்றில், “என்னுடைய பகைவரை ஆரமரில் அலறும்படி தாக்கித் தேரோடும் அவர்களைப் புறங் கொடுத்து ஓடும்படி நான் செய்யாவிட்டால், நியாயங்

கெட்டு மெலிகோல் செய்தேன் ஆகுக,'' என உரைத்தான். இதிலிருந்து, அவன் செங்கோல் வேந்தனுக இருக்க விரும்பினுன் என்பதும், செங்கோலினின்று சிறிதுகூட நழுவ விருப்பமில்லாதவனுய் இருந்தான் என்பதும் அறியப்படும். 'கொடுங்கோலன் என்று இகழப்படுவேனுக' என்று கூறிக் கொடுங்கோலனிடத்துத் தனது வெறுப்பை மாத்திரம் அவன் காட்டினுன் அல்லன்; செங்கோலினின்று சிறிதும் வழுவ விரும்பாத காரணத்தால் 'மெலிகோல் செய்தவனுக இகழப்படுக' எனக் கூறினுன். இதிலிருந்து அவனுடைய உயரிய குறிக்கோள் இனிது விளங்கும்.

அவ்வாறே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன், "என் பகையரசர்களைப் போரிற் சிதையும்படி தாக்கி அவருடைய முரசுகளோடு ஒருங்கே அகப்படுத்திச் சிறை செய்யாது போனுல் என் மக்கள், 'எங்கள் அரசன் கொடியவன்' என என்னை இகழட்டும்,'' என வஞ்சினம் உரைத்தான் எனப் புறநானூற்றுப் பாடல் இன்னெென்ருல் அறிகிருேம்.

> "என்னிழல் வாழ்நர் செல்நிழல் காணுது
> கொடியன் எம்இறையெனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக.''
>
> (புறநானூறு-72)

என்னும் அடிகளால், அவன் குடிமக்கள் கண்ணீர் வடித்துத் தன்னை இகழக்கூடாது எனக் கருதினுன் என்பது புலப்படும். குடிமக்கள் அரசனுடைய கொடுங்கோலால் துன்பமடைந்து அதைப் பொறுக்க முடியாது அழுதால், அந்தக் கண்ணீரே அரசனுடைய செல்வத்தை அழித்துவிடும் என்பது ஆன்ருேர் கருத்து. இதனைத்தான் திருவள்ளுவர்,

> "அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
> செல்வத்தைத் தேய்க்கும் படை''

எனக் கூறினர். எனவே, தான் கூறியதைச் செய்து முடிக்காது போனல், தன் குடிமக்கள் கண்ணீர் வடித்துத் தன்னைக் கொடியவன் எனக் கூறட்டும் எனப் பாண்டியன் சொல்லியதிலிருந்து, அவன் செங்கோலினனுக ஆட்சி செய்து மேன்மேலும் தனது செல்வம் பெருக வேண்டும் என விரும்பினன் என்பது ஊகித்து அறிந்து கொள்ளப்படும்.

கவிஞர்கள் செங்கோல் மன்னரைப் பாராட்டியும், கொடுங்கோல் வேந்தரை இகழ்ந்தும் தத்தம் நூலின் கண் உரைத்தனர். உதாரணமாக, பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற கவிஞர், தாம் பாடிய கலிப்பாட்டு ஒன்றில் பாலைவன மணல் சூரிய வெப்பத் தால் கடுகிக் காய்ந்து கிடப்பதற்கு உவமையாகக் கொடுங்கோல் மன்னனுடைய கொடுமையால் வாடிக் கிடந்த மக்களைக் குறிப்பிட்டார்.

> "கொடியது ஓர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
> கடுகுபு கதிர்முட்டிக் காய்சினம் தெறுதலின்"

என்ற பாலைக்கலி (செ. 8) அடிகளில் இதனைக் காணலாம்.

பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனர் கரிகால் வளவனது கூரிய வேல்போன்று காடு கடுமையாக இருந்தது என்றும், அவனுடைய செங்கோல்போன்று தலைவியின் தோள்கள் தண்ணி யனவாக இருந்தன என்றும் குறிப்பிட்டார்.

> "திருமா வளவன் தெவ்வர்க்கு ஒக்கிய
> வேலினும் வெய்ய கானம்; அவன்
> கோலினும் தண்ணிய தடமென் தோளே"

என்பன அவ்வடிகள். எனவே, உவமைகளில் வைத்து ஆளும் வகையான் கவிஞர்கள் செங்கோலைச் சிறப் பித்தனர் என்பது பெறப்படும். மக்களும் கொடுங் கோல் மன்னர் வாழும் நாட்டைவிடக் கடும்புலி வாழும்

காடு நல்லது என மதித்தனர். புலவர்கள் அரசரை நோக்கி, " குழந்தைகளைப் பாதுகாக்கும் தாய்மாரைப் போல நும் குடிமக்களை நீவிர் பாதுகாக்க வேண்டும்," என வற்புறுத்தினர். குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலிப்பதால் தீமையேயன்றி நன்மை விளையாது எனப் பகர்ந்தனர்.

சேரன் செங்குட்டுவன் மக்களை ஆட்சி செய்வதென்பது துன்பமேயன்றி இன்பம் எனக் கொள்ளுதற்கு இல்லையெனக் கருதினன். மக்கள் யாதானும் ஒரு காரணத்தால் வருத்தமுறின் வேந்தன் வருந்த வேண்டும். மழை பெய்வது குறைந்தால் அரசன் அஞ்சவேண்டும். ஆதலால், உயிர்களைப் பாதுகாக்கும் கடமையையுடைய மேலான குடியிற் பிறத்தல் என்பது துன்பமே அல்லாமல் தொழத்தகும் தன்மையதன்று எனக் கருதினன். அதனல் ஒரு நாள்,

" மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதகவு இல் "

எனச் சாத்தனுர் என்னும் புலவரிடம் கூறினன். மழை வளங் குறைந்தால் அரசனுடைய ஆட்சி தவறிற்று எனக் கூறுவது அக்கால மரபு. அதனல்தான் வெள்ளைக் குடிநாகனுர் என்னும் புலவர் கிள்ளிவளவன் என்னும் சோழனைப் பற்றிப் பாடியதொரு பாட்டில், மழை பெய்யவேண்டிய காலத்திற் பெய்யாது பொய்த்தாலும், நாட்டிலே விளையவேண்டிய பொருள்கள் விளையாது குறைந்தாலும் அரசாட்சியையே இவ்வுலக மக்கள் பழிப்பர் என எடுத்துக்காட்டி, உழவர்களைப் பாதுகாக்கவேண்டிய கடமையை வற்புறுத்தினுர். புறநானூற்றிற் காணப்படும் அப்பாட்டில் (செ. 35),

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்"

என வரும் அடிகள் சேரன் செங்குட்டுவன் கூறிய வற்ருேடு ஒப்பு நோக்கிப் படிக்கத் தக்கன.

எனவே, செங்குட்டுவன் செங்கோலினனுக இருக்கவேண்டும் என்னும் பெருவிருப்பமுடையவன் என்பது அறியப்படும். இதனை வற்புறுத்துதற்கு உரிய பிறிதொரு சான்றும் உண்டு. 'தமிழனை இகழ்ந்த வடவரை வெற்றி கொண்டு அவர்தம் முடித் தலையில் கண்ணகி வடிவம் எழுதுதற்குரிய கல்லினைத் தான் கொண்டுவரத் தவறினுல் தன் குடிமக்களை நடுங்க வைக்கும் கொடுங்கோலன் என மக்கள் தன்னை இகழ்க' என வஞ்சினம் உரைத்தான் என்பதால் இது பெறப்படுகிறது. தன்னுடைய ஆற்றலைத் தன் பகைவரிடங் காட்டி அவர்களை நடுங்க வைக்க விரும்பினுனேயன்றி, தன் குடிமக்களை நடுங்கும்படி செய்யும் எண்ணம் சிறிதும் உடையன் அல்லன் என்பது அவன் சொற்களினுலேயே பெறப்படுகிறது.

"வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகின்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுங்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலேன் ஆகுக"

என்ற சிலப்பதிகார அடிகளால் (கால்கோள் அடி 13-18.) இது விளங்குகிறது.

இச்சான்றுகளால் பழந்தமிழ் வேந்தர்கள் செங்கோல் வேந்தராக இருக்க விழைந்தமை நன்கு அறியப்படும்.

4. கம்ப ராமாயணச் சிறப்பு

இராவ்சாகிப்பு வெ. ப. சுப்பிரமணிய முதலியார்,
பி.ஏ., பி.எல்., ஜி.பி.வி.ஸி.

கம்ப ராமாயணத்தின் பெருமையை அறியாத தமிழர் இல்லை. அதனில் அடங்கியுள்ள மிக்க அருமையும் இனிமையும் வாய்ந்த கருத்துக்களை அறிந்து ஆனந்திக்கும் பயன் பெறவே, தமிழரல்லாதாரும் தமிழைக் கற்க வேண்டுமென்பது மிகையாகாது.

இவ்வாறு, அந்நிய பாஷையில் உள்ள இலக்கியங்கள் தம் பாஷையிலே மொழி பெயர்க்கப்பட்டவற்றைப் படித்த மட்டிலே திருப்தி அடையாமல், அவ்விலக்கியங்களை நேராக அறிந்து ஆனந்திக்க விரும்பி, அவைகள் எழுதப்பட்டுள்ள மூல மொழிகளைக் கற்றுத் தேறிய அருங்கலை விநோதர் அநேகர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உளர். நாகரிகமடைந்த மற்றைத் தேசங்களிலும் அத்தகையர் சிலர் இருக்கின்றனர்.

இவ்வுலகத்துச் செல்வமெல்லாவற்றையும் ஒருங்கே அடைந்து சகல போகங்களையும் ஆசை தீர அநுபவிக்கும் இராச பதவியே யன்றி, எல்லா வகையிலும் அந்த இராச பதவியினும் ஏற்றமான இந்திர பதவியுமே கம்ப ராமாயணம் போலக் கற்றோருக்கு மனக் களிப்பைத் தரமாட்டாது என்னும் கருத்துப்பட,

"இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்குநீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக் கதையில்
கம்பநாடன் கவிதையிற் போற்
கற்றோர்க் கிதயம் களியாதே"

என்று கற்றூர் ஒருவர் மனம் கனிந்து கூறியது உபசார மன்று; உண்மையேயாம் எனக் கற்றூரனைவரும் ஒப்புக் கொள்வர்.

யாதாயினுமொரு காவியத்திலே பற்றுடையோர், அக் காவியத்தின் சிறப்பைப் புலப்படுத்த, அதை வேறு காவியங்களோடு ஒப்பிடாமல், கம்ப ராமாயணத்தோடு ஒப்பிட்டு அது கம்ப ராமாயணத்தினும் சிறந்ததெனப் பாராட்டி முடிவு கட்டுவது வழக்கம். ஒரு பெண்ணின் அழகைச் சிறப்பாகக் கூறுவோன், அப்பெண் இலக்குமியினும் சிறந்த அழகுடையாளென்பதனுல், இலக்குமியே அழகிற் சிறந்தாளென்னும் உண்மை பாதிக்கப்படாததுபோல, கம்ப ராமாயணம் அதனேடொப்பிடப்பட்டு உயர்த்திக் கூறப்பட்ட எல்லாக் காவியங்களினும் உயர்ந்ததென்பது உண்மையில் மறுக்கப்படவில்லையென்பது சொல்ல வேண்டியதில்லை.

மலையாள ஜில்லாவில் கோவில்களில் கம்ப ராமாயணத்தைப் பிரசங்கித்தற்கு, மானியங்கள் ஏற்பட்டுத் திருவிழாக் காலங்களில் அயல் மொழியினரான மலையாளிகள் கம்ப ராமாயணப் பாட்டுப் பாடிப் பொருள் கூறும் திருப்பணி செய்து வருகின்றூர்கள். இந்தப் பெருமை வேறெந்தத் தமிழ் நூலுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வழக்கம், மலையாளத்தில் சில நூற்றுண்டுகட்கு முன் தமிழே தாய் மொழியாயிருந்த காலத்தில் ஏற்பட்டு, வெகு பிரபலமாய் இருந்திருக்க வேண்டுமென்பதும், அந்தப் பிரபலத்தின் ஆற்றல் அவ்வழக்கத்தைத் தமிழராயிருந்த மலையாளிகளின் தாய்மொழி மலையாளமாக மாறிய பின்னும், நிலைத்திருக்கச் செய்திருக்கின்றது என்பதும் ஊகித்தற்பாலனவாயுள்ளன.

தெலுங்கு ஜில்லாக்களில் கம்ப ராமாயணத்திலுள்ள சுந்தர காண்டம் தெலுங்கெழுத்தில் எழுதப்பட்டுப் பாராயணம் செய்யப்பட்டு வருவதும் கம்ப ராமாயணச் சிறப்பை வலியுறுத்தும்.

கம்ப ராமாயணப் பிரசங்கமே தங்கள் ஆயுள் முயற்சியாகக்கொண்டு கம்ப ராமாயணப் பிரசங்கிக ளென்ற பெயர் வகித்த புலவர் பெருமக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் பலர் பல இடங்களில் இருந்து வந்திருப்பது, வேறெந்த நூலுக்குமில்லாத தனிச் சிறப்புடையது கம்ப ராமாயணமென்பதை இறுதியா கவும், உறுதியாகவும் நிலைநாட்டுகின்றது.

உலகத்துப் பல பிரபல மொழிகளில் உள்ள மிகச் சிறந்த காவியங்களுள் ஒன்று வான்மீக இராமாயண மென்பர். வான்மீகி முனிவரது உரையின்படி நான் தமிழ்ப்பாவினுல் உணர்த்தியதென்று கம்பர் வான்மீ கத்தின் வழிநூலாக இயற்றிய இராமாயணம், அழகி லேயன்றி அளவிலும் வான்மீகத்தினும் சிறந்து விளங்குகின்றதென்று இரண்டு நூல்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்தோர் சிலர் கூறுவர். இதனை வட மொழி தென்மொழி இரண்டிலும் வல்லார் எல்லாரும் ஒப்புக் கொள்ளினும் வான்மீகத்துக்கு இழுக்கன்று; பெருமையேயாம். தந்தையினும் மகன் சிறப்புடைய னுதல், தந்தையின் சிறப்பைக் குறையாது, (அத் தகைய புத்திரனுக்குப் பிதாவாம் பெருமையால்) அதிகப்படுத்துவதாமாதலால், தந்தையின்றேல் மகன் இன்மை போல, வான்மீகமின்றேல் கம்பராமா யணமும் இன்ரும். தக்கவன் ஒருவன் அடைந்த பிதிராச்சிதச் சொத்து, அவனுற் கழித்தற்பாலன கழிக்கப்பட்டும், சீர்திருத்தற்குரியன சீர்திருத்தப் பெற்றும், நூதனமாகச் சேர்க்கத்தக்கன சேர்ப்புண்டும், எல்லா வகைகளிலும் மேன்மையுற்று விளங்குவது போல, முதல் நூலாகிய வான்மீகத்தினும் வழி நூலாகிய கம்பராமாயணம் சிறந்து விளங்குகின்றது. இவ்வாறு கூட்டவும் குறைக்கவும் மாற்றவும் பெற்ற பகுதிகளிலே, பல நூலினிமையை அதிகப்படுத்து வனவாம்; வேறு பல, வான்மீகர் கால நாகரிகத்துக்கு இசைய அவர் கூறியவைகள், கம்பர் கால நாகரிகத்

துக்கு ஏலாதனவானதால் பிந்திய காலத்திற்குப் பொருத்தமாக மாற்றப் பெற்றனவாம்.

தமிழிலே கம்ப ராமாயணம்போல, ஆங்கிலத்திலே சிறந்த பாரகாவியமாகிய சுவர்க்க நீக்கத்தை இயற்றிய மிலிட்டனுரது சரித்திரத்தை எழுதிய ஓர் ஆங்கில ஆசிரியர், உலக இலக்கியக் காட்சிச்சாலை ஒன்று நியமித்து அச்சாலையில் ஒவ்வொரு மொழியாளரும் தம்தம் மொழியில் இரண்டு இலக்கியப் புத்தகங்களை கொண்டுவந்து வைக்கலாமென நிபந்தனை ஏற்படுத்தினுல், ஆங்கிலேயர்கள் அங்கே ஷேக்ஸ்பியரது புத்தகத்தையும் மிலிட்டனுரது புத்தகத்தையுமே காட்சிப் பொருளாக வைப்பரென்று கூறியுள்ளார். அப்படிப்பட்ட காட்சிச்சாலையில், தமிழ் மக்கள் கொண்டு வைத்தற்குரிய இரண்டு நூல்கள் குறளும், கம்ப ராமாயணமுமே யென்பது தெளிவாம்.

கங்கையாறு தோன்றியபின் வேறுள்ள ஆறெல்லாம் மேம்பாடிழந்ததுபோல, சீதை தோன்றியபின் ஏனை அழகிய மாதரனைவரும் அழகிழந்தார்கள் என்று கம்பர் கூறியவாறு, கம்ப ராமாயணம் பாடப்பெற்ற பின் மற்றெல்லா. நூல்களும் சிறப்பற்றனவாயின என்னலாம்.

அவர், 'ஒவ்வோருறுப்புச் சிறந்த அழகுடையதாகப் பெற்றவர் மற்றைய வனப்பு மிக்க மாதர்; அவயவம் அனைத்தும் உத்தம அழகு ஒருங்கு நிரம்பப் பெற்றவள் சீதையொருத்தியே' என்றவாறு ஏனைய நூல்களெல்லாவற்றிலும் சில சில பகுதிகளே சிறந்தனவாயிருக்க, எல்லாப் பகுதிகளும் ஏற்றமுடையனவாகவுள்ளது கம்ப ராமாயண மொன்றே யென்று கூறலும் ஆம்.

எந்தக் காவியம், தன்னைப் படித்து இன்புறப் பெருராய்த் தான் தோன்றுமுன் இறந்த காவிய ரசிகரைக் காட்டிலும் தன்னை அறிந்து ஆனந்திப்

பாராய்த் தான்தோன்றிய பின் வாழப்பெற்ற காவிய ரசிகர் பாக்கியசாலிகள் என்னும்படி எல்லா வகை வனப்புக்களும் மலிந்து சிறந்து விளங்குகின்றதோ, அந்தக் காவியம் கம்ப ராமாயணமேயாம்.

கம்பர், ஏகம்பவாண முதலியாரது புகழை வருணிக்குமிடத்து, 'வாணன் புகழ்க் கெல்லை வாழ்த்து வோர் நாளல்லை' என்றபடி, அவர் பாடிய இராமாயணச் சிறப்புக்கு எல்லை, அதனை எடுத்துரைப்போர் சொல் வன்மையின் எல்லையே. அச்சிறப்பை உரைப்பவர் எத்துணைச் சொல்லாற்றலுடையராயினும் அவர் அதனை உரைக்க உரைக்க, அது வளராநின்று, அவர் 'உரை குறுக நிமிர்'கின்ற இயல்புடையதாய் ஒருவராலும் முற்றக்கூற முடியாததாயுள்ளது. உலகத் துப் பெருமலைகளெல்லாவற்றிலும் பெரிதாய், உயர்ந்த தாய்ப், பொன்மயமா யொளி மிகுந்ததென்று சிறப் பித்துக் கூறப்பட்ட மேருமலை போலப் பெருங் காவியங்க ளெல்லாவற்றிலும் பெரிதாய், இரசமயமாய், இனிமை மிகுந்தது கம்ப ராமாயணமேயாம். அதன் சிறப்பு இவ்வாறிருத்தலானன்றே 'கம்பர் கவிச்சக்கரவர்த்தி' என்றும், 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்றும் ஆன்றோர் நன்காராய்ந்து துணிந்து கூறினர்.

அவர், வானர சேனைப் பெருமையை விளக்கக் கூறிய 'கடல் கண் டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்'? என்றதையே நாமும் அவர் நூலின் பெருமையைப் புலப்படுத்தக் கூறுதலன்றி வேறு கூறு தற்கு யாதும் இல்லை.

கடவுள் சிருட்டியாகிய பிரபஞ்சம் போலக் கம்பர் சிருட்டியாகிய கம்ப ராமாயணமும் நுணுகி நுணுகி நோக்குந்தோறும் நூதன நூதனமான வனப்புக்களும் உண்மைகளும் புலப்படுத்தி மேலும் மேலும் விளங்குவ தாய் வியப்பும் நயப்பும் விளைப்பதாயுள்ளது.

---

5. சங்க கால மதுரைமா நகரம்*

டாக்டர் மா. இராசமாணிக்கனுர், எம்.ஏ. எல்.டி., எம்.ஓ.எல்.

வையையாறு

நான்மாடக்கூடல் என்னும் மறுபெயர் பெற்ற மதுரை பாண்டியர் கோநகரமாகும். அது நிலமகளின் முகத்தைப்போலப் பொலிவு பெற்றிருக்கும். அப்பெரு நகரத்தை வையையாறு அழகு செய்கின்றது. அவ் வாற்றங்கரையில் உள்ள வானளாவி உயர்ந்து நெருங்கிய மரக் கிளைகளில் மந்திகள் தாவித்தாவி விளையாடும்; மயில்கள் அகவும். ஆங்காங்கு மணற் குன்றுகள் காணப்படும். நீராடும் கரைகளில் மரங்கள் உதிர்த்த மலர்கள் வையையாற்றில் மிதந்து செல்லும். அந்த ஆற்றின் துறைதோறும் பாணர் குடியிருப்புக் காணப்படும.

அகழி—மதில்—வாயில்

நகரத்தைச் சூழ்ந்த அகழி ஆழமுடையது. கோட்டை மதில்கள் பேரரசராலும் தாக்க முடியாதவை; பகையரசர் புறங்காட்டி ஓடுதற்கு ஏதுவானவை; சுரங்க வழியுடையவை; வானுற ஓங்கி வளம் பெற நிமிர்ந்தவை. கோட்டை வாயில் நெய் பூசுதலால் கருமை எய்திய நெடிய நிலைகளையும், திண்ணிய கதவினையும் உடையது. அதன்மீது கட்டப்பட்டுள்ள மாடங்கள் முகில்கள் உலாவும் மலை போல உயர்ந்திருக்கும். மக்களும் விலங்குகளும் இடையருது போதலும் வருதலும் செய்தலின், கோட்டை வாயில் இடையருது நீரோட்டமுடைய வையை யாற்றை ஒத்திருக்கும்.

---

* *பத்துப் பாட்டுள் ஒன்ருகிய மதுரைக் காஞ்சியை அடியொற்றிய உரை நடையாக்கம்.*

கோட்டைக்குள் நகர அமைப்பு

கோட்டைக்குள் அகன்ற தெருக்கள் இருக்கும். தெருக்களின் இரு புறங்களிலும் சாளரங்கள் பல அமைந்த வீடுகள் உயர்ந்து தோன்றும். தெரு வையையாற்றையும், இரு புறத்து வீடுகள் வையை யாற்றின் கரைகளையும் ஒத்திருக்கும். கடைத்தெருவில் பல மொழி பேசும் மக்களின் பேச்சொலி எழும். நகரத்தில் விழாவைப் பறையறைந்து தெரிவிக்கும் ஓசை காற்றால் அலைப்புண்ட கடல் ஒலி போல் முழங்கும். கோவில்களிலிருந்து பலவகை இன்னியங் களின் ஒலி எழும். அவ்வொலியைக் கேட்ட மக்கள் தெருக்களிற் கூடி ஆரவாரம் செய்து மகிழ்வர். விழாக்களுக்காகக் கட்டப்பட்ட கொடிகளும், படைகள் பெற்ற வெற்றியை அறிவித்தற்கென்று கட்டப்பட்ட வெற்றிக் கொடிகளும், கடைகளில் கட்டப்பட்ட அடை யாளக் கொடிகளும் கட்டடங்களின் உச்சியில் அசைந்து கொண்டிருக்கும்.

நகரத்தில் நால்வகைப் படைகள்

காற்றால் நிலை தளர்ந்து சுழலும் கப்பல்போல அரசனது யானைப் படை சினம் மிகுந்து சுழன்று குத்துக் கோற்காரரைக் கொன்று, பாகரைத் தூக்கி எறியும்; காலிற் சங்கிலியைப் பிணித்திருக்கும் கட்டுத் தறியை முறிக்கும்; மதம் பெருக நிற்கும். காற்றைப் பிளந்து ஞாயிற்றை அடைய விரும்பிப் பறக்கும் அன்னச் சேவலை ஒத்த வெண்ணிறக் குதிரைகள் பூட்டப் பெற்ற தேர்ப் படை வலி மிக்கது. குதிரைப் படை விரைவான செலவினை யுடையது. வட்டமாகவும் நேராகவும் விரைந்து செல்ல வல்லது. காலாட்படை வில்—வாள்—ஈட்டி வீரர்களைக் கொண்டது.

இந்நால்வகைப் படைகளும் நகர வீதிகளிற் செல்லும் பொழுது, இனிய உணவுப் பண்டங்களை

விற்பவரும், பூவினைத் தட்டுக்களில் ஏந்தி விற்பவரும், வெற்றிலை—பாக்கு—சுண்ணும்பு இவற்றை விற்பவரும் ஒதுங்கியிருப்பர். படைகள் அகன்ற பின்னர்த் தெருக்களிற் போந்து பண்டங்களை விலை கூறுவர். மேகங்கள் கடல் நீரை முகக்கினும் ஆறுகள் கடலிற் கலப்பதால் கடல் நீரில் கூடுதல்—குறைதல் ஏற்படுவதில்லை. அது போலப் பண்டங்கள் வந்து சேர்ந்த வண்ணம் இருப்பதால், கடைத் தெருவில் பண்டங்களுக்குக் குறைவில்லை.

செல்வரும் மகளிரும்

செல்வர் மாலையில் பூத்தொழிலுடைய பட்டாடைகளை உடுப்பர்; அரையில் உடைவாளைச் செருகியிருப்பர்; தோளில் மேலாடைகளைத் தரித்திருப்பர்; வேப்ப மாலையும், மாணிக்க மாலையும் அணிவர்; மாலையில் குதிரைகள் பூட்டிய தேரில் காலாட்கள் சூழ்ந்து வரத் தெருக்களிற் செல்வர். பூத்தொழில் அமைந்த கைவளையல்களையும் பிற பொன்னணிகளையும் சிலம்பையும் அணிந்த மகளிர் மாடங்கள் தோறும் நிலா முற்றத்தில் நின்று விழாக் காண்பர். மாடங்களிற் கட்டியுள்ள கொடிகள் அவர்கள் முகங்களை மறைத்துக்கொள்ளும். காற்றடிக்கும்பொழுது அக்கொடிகள் அசைந்து இடம் தருவதால், அம்மகளிர் முகங்கள் மேகங்கட்கு இடையில் தோன்றும் திங்களைப் போல் காணப்படும்.

மாலைக்கால வழிபாடு

சிவபெருமான் முதலாகவுள்ள கடவுளர்க்குப் பலி கொடுத்தற்காக அந்திக் காலத்திற்குச் சிறிது முன்பு தொடங்கிய விழாவில் பல்லியங்கள் ஒலிக்கும். பௌத்த சமயத்தைச் சார்ந்த பேரிளம் பெண்டிர் தாமரைப் பூவைப் பிடித்தாற் போலச் சிறு பிள்ளைகளை எடுத்துக்கொண்டு, தம் கணவருடன் வழிபாட்டுக்கு

வேண்டும் மலர்களையும் தூபங்களையும் ஏந்திக் கொண்டு பௌத்தப் பள்ளிகட்குச் செல்வர். வேதங்களை ஓதி வேள்வி முதலியவற்றைச் செய்து வீட்டின் பத்தை இவ்வுலகத்திலேயே அடைகின்ற பிரம வித்துக்கள் இருக்கின்ற மடங்களில் சிலர் அறநெறி கேட்பர். மற்றுஞ் சிலர் முக்காலமும் மூவுலகச் செய்திகளும் உணர்கின்ற சமண முனிவர் உறையும் அமணப் பள்ளிகளில் அறவுரை கேட்பர்.

அறங்கூறவையம் முதலியன

மேற் சொல்லப்பட்ட கோவில்கட்கும் பள்ளிகட்கும் அப்பால் துலாக்கோல் போல நடுநிலையுடைய அறத்தைக் கூறும் அறங்கூறவையம் தோன்றும். காவிதிப்பட்டம் பெற்றுத் தலைப்பாகை தாங்கி அரசனை அறநெறியிலிருந்து வழுவாமற் காத்து வரும் அறிவுடை அமைச்சர் இருக்கைகள் இருக்கக் காணலாம். அவற்றுக்கப்பால் வானளாவியனவும், பிற நாடுகளிலிருந்து வந்து வாணிகத்தால் செல்வம் திரட்டிய வணிகர் வாழ்வனவும் ஆகிய வளமனைகள் தோன்றும். புரோகிதர், ஒற்றர், தூதுவர், சேனைத் தலைவர் முதலியோர் வாழிடங்களும் அடுத்தடுத்துக் காணப்படும்.

அந்திக் கடை

சங்கைக் கொண்டு வளையல் முதலியவற்றைச் செய்பவரும், மணிகளைத் துளையிடுபவரும், பொற் கொல்லரும், பொன் வணிகரும், ஆடை விற்பவரும், மலர்களையும் சாந்தினையும் விற்பவரும், நெய்தற்றொழில் செய்பவரும், ஓவியக்காரரும், பிறரும் கூடி அந்திக் கடையில் வாணிகம் செய்வர். அவர்களால் எழுப்பப் படும் ஆரவாரம், சேரனது அவையில் அறிஞர் கூடித் தருக்கங்களைக் கூறும் ஆரவாரம் போல் இருக்கும்.

அறக்கூழ்ச் சாலை

பாண்டியன் கோநகரில் அறக்கூழ்ச் சாலை உண்டு. அதனில் பலா, வாழை, முந்திரிகைப் பழங் களையும், பாகற்காய், வாழைக்காய், வழுதுணங் காய் முதலிய காய்களையும், இலைக் கறிகளையும், இறைச்சி கலந்த சோற்றையும், கிழங்கு வகைகளையும் பால் முதலியவற்றையும் பரிமாறுவோர் கொண்டு வந்து வறியவர்க்கு வழங்குவர்.

இரவு நிகழ்ச்சிகள்

திருமால் பிறந்த ஓண நாளில் விழா நடைபெறும். போரிற் சிறந்த மறவர் கள்ளுண்டு ஒருவரோடொருவர் போரிட்டு நெற்றியில் வடுப்பெற்றுத் தோன்றுவர். போர்ப் பயிற்சி பெறும் யானை பாகரைவிட்டு ஓடுதலால் பரிக்கோற்காரர் அதனை விரட்டிப் பிடிப்பர். குழந் தையைப் பெற்ற மகளிர் தெய்வத்தின் அருளால் துன்பமற்றுக் குளத்து நீரில் நீராடுவர். அவ்வமயம் முதற் சூல் கொண்ட மகளிர் தாமும் எவ்விதத் துன்பமும் இன்றி மக்களைப் பெற வேண்டும் என்று கடவுளை வேண்டுவர். பின்னர்ப் பூசைக்கு வேண்டும் பலவகைப் பொருள்களைச் சேர்ப்பர் ; சுற்றத் தினரை வரவழைப்பர் ; தேவராட்டி தெய்வமேற்று நற்சொல் கூறுவாள். அப்பொழுது யாழிற் செவ் வழிப்பண் வாசிக்கப்படும் ; பல வாத்தியங்கள் ஒலி செய்யும் : சூல் கொண்ட மகளிர் மயில்போல மெத் தென நடந்து பாற்சோறு முதலியவற்றை உண்பர். மாரிக் காலத்துப் பூத்த குறிஞ்சிப் பூவைத் தலையிற் சூடிய மகளிர் கடப்பமாலையைச் சூடுகின்ற முருகனை உள்ளத்தில் நிறுத்தி வழிபடுவர் ; பிறகு ஒருவரோடு ஒருவர் கைகோத்து மன்றுகள் தோறும் குரவைக் கூத்தாடுவர். இவை இரவில் முதற் சாம நிகழ்ச்சிகள் ஆகும். நள்ளிரவில் நகரில் தெய்வங்கள் உலாவும். சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலியின்றிக் கிடக்கும்.

மடப்பத்தையும் களிப்பையும் பல்வேறு அணிகலன்களையும் உடைய மகளிர் இனிதே துயில்வர். அப்பங்களைச் சுடும் அப்ப வாணிகர் கண்ணயர்வர். விழாவிற் கூத்தாடும் கூத்தர் கூத்தை முடித்த பிறகு உறங்குவர்.

நகரத்தார் அனைவரும் கண்ணுறங்கும் நடுயாமத்தில் நகரக் காவலர் கண்ணுறங்கார். அவர் புலிபோலும் வீரமுடையர்; அஞ்சா நெஞ்சினர்; கள்வரின் தந்திரங்களை நன்குணர்ந்தவர்; எய்யும் குறி தப்பாத அம்பினர்; மழையால் தெருவில் நீர்ப் பெருக்கம் மிகினும், காரிருள் கவிந்திருப்பினும் காவலில் தப்பாத கடமையுணர்ச்சியுடையவர். அவர்கள் கரிய நிறத்தினர்; கரிய உடையினர்; வாளேந்திய கையினர்; மெல்லிய நூலேணி சுற்றிய அரையினர்; காற்றினும் கடிதிற் செல்லும் கள்வரையும் கட்டிப் பிடிக்கும் ஆற்றல் உடையவர். இத்தகைய சிறந்த வீரர்களாற் காக்கப்படும் மதுரை மாநகரில் கள்வர் பயம் ஏற்படுதல் அரிதாகும்.

காலை நிகழ்ச்சிகள்

வேதத்தை முற்றவுணர்ந்த அந்தணர் வைகறையில் துதிகளைப் பாடுவர். பாகர் யானைகட்குச் சோற்றுக் கவளம் ஊட்டுவர். தேரிற் பூட்டப்பெறும் குதிரைகள் பந்தியில் நின்று புல்லைக் கடிக்கும். பண்டங்களை விற்பவர் தம் கடைகளை மெழுகுவர். கள் விற்பவர் கள்விலை கூறித் திரிவர். உறுதியான வீட்டுக் கதவுகள் மூடுவதாலும் திறப்பதாலும் ஓசை செய்யும். காலையிற் கள்ளுண்டு மயங்கியவர் மது மயக்கத்தால் குழந்தைகள்போல மழலை பேசுவர். அரசனை நின்று ஏத்துவோர் நின்று வாழ்த்துவர். பள்ளியெழுச்சி பாடுவோராகிய வைதாளிகர் அரசன் எழுதற்குரிய பாடல்களைப் பாடுவர். நாழிகைக் கணக்கர் நேரத்தைக் கூறக் காலை

முரசம் ஒலிசெய்யும். கோழிச் சேவல் விடியற் காலத்தை அறிவிக்கக் கூவும். ஆண் பறவைகள் தத்தம் பெடைகளுடன் கூடி இனிய குரல் எழுப்பும். *கூட்டில் அடைத்து வளர்க்கப்படும் கரடி, புலி முதலிய விலங்குகள் முழக்கமிடும். பிடியோடு கூடிய களிறு பிளிறும். பகைப்புலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட பசுத்திரளும், தோற்ற வேந்தர் திறையாகக் கொண்டு வந்த அணிகளும், பிறவும் அரண்மனைக்குக் கொண்டு செல்லப்படும்.

---

*1800 ஆண்டுகட்கு முன்பு மதுரையில் உயிர்க் காட்சிச்சாலை இருந்தது என்பதை இக்குறிப்பினால் அறியலாம். (க. ஆ.)

6. காவிரியும் இலக்கியமும்

'மூவர்'

(சென்னை இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்)

சோழர்தம் குலக்கொடி

காவிரியாறு பிறந்தது குடகு நாட்டில்; குதித்தும் தவழ்ந்தும் ஓடி விளையாடி மகிழ்ந்தது மைசூர் நாட்டிலும் கொங்கு நாட்டிலும்; தன் வளமெல்லாம் வழங்கி, மக்களை வாழ்வித்துக் குரைகடலில் குளிப்பது சோழ நாட்டில். தெய்வக் காவிரியாறு இத்துணை நாடுகள் வழியாகப் பாய்ந்து பல வளங்களையும் கொழித்துக்கொண்டு வருகிறது; எனினும் சோழ நாட்டுக்குள் புகும்போதுதான் எண்ணற்ற தன் அன்புக் கரங்களாம் கிளைநதிகளை உண்டாக்கி, எங்கு நோக்கினும் ஆறுகள், வாய்க்கால்கள், நீர் நிலைகள் என்று கூறுமாறு அந்நாட்டையே நீர் நாடாக்கி யுள்ளது. இக்காரணத்தினலேயே காவிரியாறு, பல நாடுகளின் வழியே பாய்ந்து வந்தாலும், சோழ நாட்டுக்கே தனி உரிமையுடையதாய்ப் புலவர் பலராலும் போற்றப்பட்டு வருகிறது. மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனுர், "பாடல்சால் சிறப்பில் பரதத்து ஓங்கிய, கோடாச் செங்கோல் 'சோழர்தம் குலக்கொடி' என்றும், சிலப்பதிகார ஆசிரியர், இளங்கோவடிகள், 'சோழர்தம் தெய்வக் காவிரி' என்றும் இதனைச் சோழர் களுக்குரிய ஆறெனவே கூறியிருத்தல் அறியத் தக்கது.

காவிரியும் சோழநாட்டு மக்களும்

காவிரிக்கும் சோழ நாட்டு மக்களுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொடர்பு போன்றதாம். காவிரியால் சோழ நாட்டு மக்களுக்கே

பயன் அதிகம். சோழ நாட்டில் பாயும்போது காவிரி தன்னிடமிருந்து தானே பல கிளை நதிகளை உண்டாக்கிக்கொண்டு பாய்கின்றது; தன் உரு மெலிந்து, வடி விழந்து, பற்பல இடங்களிலும் பரவிச் சென்று பாடு பட்டுத் தன் அருமை மக்களை ஊட்டி வளர்க்கின்றது; வேளை அறிந்து தாய் அமுதூட்டி மக்களை மகிழ்விப்பது போலக் காவிரியும் பயிர் விளையும் காலம் அறிந்து, தன் வளம் சுரந்து காக்கின்றது. காவிரி இவ்விதம் சோழ நாட்டு மக்களைத் தாய்போல் காக்கும் காரணத்தால் தான் சிலப்பதிகார ஆசிரியர்,

> *'வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி*
> *ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் காவேரி !'*

என்று ஊழிக்காலம் வரை காவிரியாறு சோழநாட்டிற்குத் தன் வற்றாத வளஞ்சுரக்கும் ஈகையினைக் கற்பவர் மனம் களிக்குமாறு அழகுற எடுத்து மொழிந்துள்ளார். இங்ஙனம் காவிரியாறு சோழ நாட்டுக்கு உரிய ஆறாக விளங்குகின்ற காரணத்தால் காவிரியின் பெருமை சோழ நாட்டின் பெருமையோடும், சோழ மன்னர்களின் பெருமையோடும் இரண்டறக் கலந்து திகழ்கிறது. சோழ நாட்டையும் சோழ மன்னரையும் பாராட்டும் புலவர்கள் 'காவிரி நாடு' என்றும், 'காவிரி நாடன்' என்றும் புகழ்ந்து கூறியுள்ளமை இதனை வலியுறுத்தும்.

வற்கடத்தும் வளம் குன்றாமை

பொருநராற்றுப்படை என்ற நூலில் காவிரியின் வற்றாத வளம் பின்வருமாறு பாராட்டப்படுகிறது; 'கோடை வெம்மையால் மரம் செடி கொடிகள் யாவும் கருகினாலும், மேகம் கடலின் நீரை முகக்க மறந்தாலும், மழை வளம் சுருங்கிப் பெரிய பஞ்சமே ஏற்பட்டாலும் காவிரி வளம் சுரத்தலில் தவறாது. அவ்வாறு காவிரி வளம் சுரத்தலால் சோழநாட்டில் வயல் வளம் சிறந்து திகழ்கிறது. உழவர்கள் பயிர் விளைவேற்றி,

அறுவடை செய்து, நெல்லை மலையெனக் குவிக்கின்றனர். அவர்களுடைய வீடுகளில் உள்ள நெற்குதிர்களில் எல்லாம் இடமே இல்லாதபடி நெல் நிரம்பிக் கிடக்கிறது. இங்ஙனம் சோழநாட்டில் காவிரித் தாயின் கருணையால் ஒரு வேலி ஆயிரம் கலமாக விளைகிறது. அத்தகைய வளம் மிகுந்த 'காவிரி சூழ் நாடு,' என்று காவிரியின் செல்வச் சிறப்பை உள்ளது உள்ளவாறே சித்திரித்துக் காட்டுகிறது அந்நூல்.

மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும், மேகங்கள் நிலை மாறியமையால் மழை பொழியாது கோடைக் காலம் மக்களை மிகுதியாக வருத்தும்போதும் காவிரி தன் நிலை மாறாமல், பெருக்கெடுத்து ஓடி வளங்கொழிக்கும் வள்ளன்மையை,

" கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை "

என்று புகழ்ந்துள்ளார். அவர் காவிரியைத் '**தண்டமிழ்ப் பாவை**,' என்று குறித்தமை நினைவில் கொள்ளத் தக்கது. தமிழ் நாட்டின் வளத்துக்கு—பெருமைக்கு—நாகரிகத்துக்குக் காரணமாக இருந்ததனாலேயே அவர் காவிரியை அப்பெயரால் குறித்தனர். காவிரியாறு சோழ நாட்டில் பாய்ந்து வளஞ் செய்தாலும் அவ்வளம் தமிழ்நாடு முழுவதற்கும் சொந்தமானது என்பதும் அதனால் விளங்குகின்றதன்றோ ?

சிலப்பதிகாரச் சித்திரம்

இனி, காவிரித் தாய் அளிக்கும் வளங்களைக் காண்போம் : 'காவிரியில் புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடுவதால் உழவர்கள் ஆரவாரத்துடன் பற்பல தொழில்களில் ஈடுபடுகின்றனர். மதகுகளின் வழியே நீர் சலசல எனப் பண்ணிசைத்துப் பாய்ந்தோடுகிறது. நீர்ப்பெருக்கைத் தாங்காமல் கரைகள் உடைந்தமையால் காவிரிநீர் பேரிரைச்சலோடு பெருகியோடுகிறது

ஒருபுறம். ஆடவரும் மகளிரும் புதுப்புனலாடிப் பொங்கும் இன்ப வெள்ளத்தில் மூழ்கி ஆரவாரிக்கின்றனர் மற்ருெரு புறம். இங்ஙனம் பல்வேறு பட்ட ஒலிகளும் ஒருங்கு கலந்தார்ப்பக் காவிரித்தாய் கை வீசி நடந்து வருகிருள்,' என்று காவிரி தரும் வளத்தைச் சித்திரித்துக் காட்டுகிருர் இளங்கோவடிகள்,

"உழவர் ஓதை ; மதகு ஓதை ;
உடைநீர் ஓதை ; தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி"

என்பது அவர் காட்டும் அழகிய ஓவியமாம்.

காவிரி நாட்டின் நெல் வளம்

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், 'காவிரி நாடு செங்நெல், கரும்பு, கமுகு முதலியன விளைந்து கடத்தற்கரிய வழியினை உடையதாக விளங்குகிறது,' என்று கூறும் முகத்தால் அவற்றிற்குக் காரணமான காவிரியின் சிறப்பைக் குறிப்பாகப் பாராட்டுகிருர். 'காய்த்த செங்நெலின் காடுசூழ் காவிரிநாடு," எனப் போற்றுகிருர் சேக்கிழார். 'காவேரியால் விளை சோழ மண்டலம்,' என்று சிறப்பிக்கிருர் அருணகிரியார். மற்றும், 'சோழவள நாடு சோறுடைத்து,' என்று ஔவையார் கூறிய அழகிய வாக்கும், 'சோற்ருல் மடையடைக்கும் சோணுடு,' எனும் தொடரும் சோழ நாட்டின் சோற்றுப் பெருமையை மட்டுமா விளக்குகின்றன ? அச் சோற்றுக்குக் காரணமான காவிரியின் கருணைப் பெருக்கினையன்ருே விளக்குகின்றன அத் தொடர்கள் !

பொன் கொழிக்கும் பொன்னி

காவிரி அளிக்கும் இத்தகைய வளத்தினைப் பாராட்டி இதற்குப் 'பொன்னி' என்ற பொருட்

சிறப்பினையுடைய அழகிய பெயரைச் சூட்டிமகிழ்ந்தனர் நம் பண்டைச் சான்றோர். காவிரியின் நீரில் பொன் அணுக்கள் கலந்திருப்பதால் அப்பெயர் வழங்கியது என்றும், காவிரி நீர் பொன்னைக் கொழிப்பதால் அப் பெயர் பெற்றதென்றும் அறிஞர் கூறுகின்றனர். காவிரி பொன்னைக் கொழிக்கின்றதோ இல்லையோ, அதன் நீர்வளத்தால் அது தோன்றும் இடத்திலிருந்து கடலுடன் கலக்கும் இடம் வரையிலும் சிறப்பாகச் சோழ நாட்டிலும் செல்வம் கொழிப்பது உண்மையே யன்றோ! செல்வத்தைப் பொன்னென்பது மரபு. அவ்வாறு பொன்னைக் கொழிக்கும் காரணத்தால் காவிரிக்குப் 'பொன்னி' எனப் பெயர் அமைந்தது என்பதும் சாலப் பொருத்தமானது அன்றோ?

•

தண்ணீரும் காவிரியே!

இங்ஙனம் வளஞ்செய்யும் காரணத்தால் 'ஆறு' என்ற பெயர் காவிரியையே குறிக்கும் சிறப்புப் பெயராக அமைந்தது. அதுமட்டுமா! அக்காவிரி பாய்ந்து செல்வம் செழிக்கும் சோழ நாடுதான் 'நாடு' என்னும் சிறப்பைப் பெற்றது. அத்தகைய காவிரி நாட்டை ஆள்கின்ற அரசனாகிய சோழன்தான் 'வேந்தன்' என்ற சிறப்பைப் பெற்றான்.

> 'தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே;
> மண்ணாவதும் சோழ மண்டலமே'

என்ற தனிப் பாடல் செய்யுள் இக்கருத்தை நன்கு விளக்குகிறது.

வாழச்செய்யும் காவிரி வாழ்த்தவும் பயன்படுதல்

காவிரியின் இத்தகைய வளத்தையும் பெருமை யையும் நினைவிற்கொண்டே பண்டைக்காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களும் பெரியோர்களும்

அரசர்களையும் மக்களையும் வாழ்த்தும்போது, ‘காவிரி மணலினும் பலவாக வாழிய’, என்றும், ‘கல்லும் காவிரியும் உள்ளவரையிலும் வாழிய’ என்றும் வாழ்த்து வதை மரபாகக் கொண்டிருந்தனர். சோழன் மாவளத் தான் என்ற அரசனைத் தாமப்பல் கண்ணனார் என்ற புலவர், ‘காவிரியின் எக்கரிட்ட மணலினும் சிறக்க நின் ஆயுள்,’ என்று வாழ்த்தியுள்ளார். இங்ஙனமாகக் காவிரியின் நீர் சோழரை வளவராக்கவும், சோழ நாட்டை வளநாடாக்கவும் பயன்பட்டதோடமையாது, அதன் மணல் அவரையும் அவர் நாட்டு மக்களையும் வாழ்த்தவும் பயன்பட்டது என்றால், காவிரியின் பெரு மையை என்னென்று எடுத்தியம்புவது!

7. வறுமையில் உயர்வு

புலியூர் கிழார் சொக்கலிங்கனுர்

மதுரை மாவட்டத்தைச் சார்ந்ததும், திருமுருகன் கோயில் கொண்டிருப்பதுமான பழநிமலை இன்றுஞ் சிறப்புடன் விளங்கி வருகிறது. இப் பழநிமலைத் தொடர்களுள் முதிரம் எனும் பகுதியினை முன்னளில் ஒரு சிறந்த தமிழ் மன்னன் ஆண்டு வந்தான்.

அவன் ஆட்சி செய்து வந்த நாளிலே, முதிரம் கலைவளஞ் செறிந்து விளங்கியது. மூங்கில், சுர புன்னை, ஆசினி, பலா முதலிய மரங்கள் முதிரமலைச் சாரலின்கண் எம்மருங்கும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

பலாப் பழத்தைப் பிய்த்துத் தின்றுகொண் டிருந்தது ஓர் ஆண் குரங்கு; அப் பழச் சுவையில் இனிமையைக் கண்டது. தானுண்டதைப் போலவே, தன்னினமும் உண்டு களிக்கவேண்டும் என்ற நல் லெண்ணம், அதற்குத் தோன்றியது. உடனே, அங்கிருந்தபடியே பெண் குரங்கைக் கையசைத்து அழைத்தது. இவ்வகையான, பல இனிய காட்சிகளே எம்மருங்கும் முதிரத்திற் காணப்பட்டன. அக்காட்சி யைத் தமிழ்ப் புலவர் ஒருவர் தாம் பாடிய பாடலுள் இனிமையாக வருணித்திருக்கிருர்.

இவ்வகை வளன் நிறைந்த முதிரத்தின் அரசனுக விளங்கியவன் **குமணன்** என்பான் ஆவன். குமணன் வரையாது வழங்கும் வள்ளல்; வறுமையிலே வாடித் துயருற்ற புலவர்க்கு வாரி வாரி வழங்கிப் புகழ் பெற்றவன்.

'மழை வறட்சியால் உயிர்கள் உண்ணும் நீரும் அற்று வருந்தும் நாளில், கங்கை நீர் பெருகி வந்தால் எவ்வளவு ஆனந்தம் கொள்வார்களோ, அதேபோன்று

வறுமையால் வாடும் புலவர் பலரும், குமணனிடம் வந்தடைந்ததும் பெருஞ் செல்வராகிவிடுவார் ' என்று இக்குமணனின் சிறப்பைப் பாடுகின்ருர் பழந்தமிழ்ச் சான்ருேருள் ஒருவரான பெருஞ்சித்திரனுர் என்பவர்.

இப் பெருஞ்சித்திரனுர் பழந்தமிழ் நாட்டிலே பண்பு மிக்க பெருங்குடியிலே தோன்றியவர். தமிழ் மொழியை முற்றக் கற்று மூதறிவாளராய் விளங்கியவர். இல்வாழ்க்கைத் துணைவியுடன் வாழ்ந்தவர். மனைவியுடன் மக்களும் நிரம்பிப் பெரிய குடும்பமாக இவர் இல்லம் விளங்கிற்று.

கற்ற கல்வியும் அறிவுத் திண்மையும் புலவர் பெருஞ் சித்திரனுரை வளமுடன் வாழவைத்து விடவில்லை. அதற்கு மாருக ஆருத் துயர் தரும் வறுமைக் கடலில் சிக்கி வழி தவறிய மாலுமிபோல உளம் நொந்தார்.

என் செய்வது ? பரிசில் வாழ்வை மேற்கொள்வது ஒன்றே குடும்பத்தை மீண்டும் பசியின்றி இருக்கச் செய்யும் வழி எனக் கருதினுர். வீட்டைவிட்டுப் புறப்பட்டுக் காடும் மலையும் கடந்து நடந்தார். இறுதியில், அந்நாளில் புலவர் போற்றும் புரவலன் எனத் திகழ்ந்த தகடூர்க்கு இறைவனுன அதியமான் நெடுமான் அஞ்சியை அடைந்தார்.

அதியமான் வந்த புலவருடன் முறையாக நடந்து கொள்ளவில்லை. ஒளவைக்கு அருநெல்லிக்கனி தரும் அளவிற்கு, ஈகை உள்ளங்கொண்டவன் அதியமான். இருந்தும் ஏனே புலவர் தகுதிக்குத் தக்கவாறு அவரை உபசரித்துப் பரிசில் தாராது இருந்துவிட்டான். சில பொருள்கள் மட்டும் ஏவலர் வழி அனுப்பினுன்.

புலவர் உள்ளம் வெதும்பியது. வறுமைக்கண் நிமிர்வு அவரிடம் பிறந்தது. அஞ்சி அவ்வாறு

செய்தனனே என உளம் வருந்தினர். பொருளைப் பெற்று வறுமை துடைத்து வாழ்வதினும், தம் அறிவாற்றலின் சீர்மையை நிலை நிறுத்துவதே முதன்மை எனக் கருதினர். அளவற்ற செல்வமும் ஆண்மையும் உள்ளவனேனும், அறிவுச் செல்வம் பொருட்செல்வத் திலும் சாலச் சிறந்ததெனும் தகைமையை உணராது, தம்மை யாரோ இரவலன் எனக் கருதி, இறுமாந்து நடந்த அஞ்சியின் செயலைப் புலவர் பெருஞ்சித்திரனர் வெறுத்தார்; கண்டித்து உரைக்கவும் தொடங்கி விட்டார்.

“குன்றும் மலையும் பல பல கடந்து வந்தேன். பரிசில் பெற்றுச் செல்வதற்கென இவனை அடைந் தேன். வந்த எனக்கு விருப்புடன் சில பொருட்களைத் தந்து, ‘இவற்றைக்கொண்டு இவ்வாறு செல்க’ என்று கூறிவிடுமாறு செய்தான். என்னை என்னென எண்ணினன் இக்காவலன்? என்னைப் பாராமலே, என் தகுதியை உணராமலே தந்த இப்பொருட்கு என் சொல்வது? யான் என்ன, ஒரு வாணிகப் பரிசிலனு? பரிசில் பெறுவதை வாணிகமாக்கி வாழ்பவனு? அவ் வாறு, பொருள் ஒன்றே கருதி வரும் யாசகன் அல்லன் யான். அருளோடு என்னைப் பேணி, என் புலமைச் செவ்வியை அறிந்து போற்றவேண்டும். அவ்வாறு பாராட்டித் தரும் பரிசில், சிறிதளவேயாயினும் என் தகுதியை உணர்ந்து கொடுக்கப்பட்டதாயின். அதுவே சிறப்புடைத்து,” என, தம் பெருமித நிலை தோன்ற இடித்துக் கூறிவிட்டு, அவ்விடம்விட்டு நீங்கினர் புலவர்.

வறுமை போக்க, வளர் பொருள் பெறவென்றே வந்தும், அங்கும் தம் பெருமித நிலை கெட அப்பொருள் வருவதாயின் அதனை வெறுத்து ஒதுக்கிச் செல்கின்ற பெருஞ்சித்திரனரின் உள்ளம், பழந்தமிழ்ச் சான் ரேரின் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அதன் பின்னர், வெளிமான் என்ற மன்னனின் வள்ளன்மையைக் கேள்வியுற்று அவன்பாற் சென்று பொருள் பெறலாம் என, அவனை நாடிச் சென்றார் புலவர். இக்காலத்தைப்போன்று விரைந்து செல்ல அக்காலத்தில் வசதிகள் ஏதுங் கிடையா. அதனால், நடந்து நடந்து பல நாட்கள் கடந்து வெளிமான் அரண்மனையை அண்மினார்.

அங்கும், அவர்க்கொரு பேரிடி காத்திருந்தது. வெளிமான் உடல் நலம் மிகவும் கெட்டுச் சாவுடன் போராடிக்கொண்டிருந்தான். அன்றோ, அன்று அடுத்த நாளோ அவன் உயிர் உடற்கூட்டைவிட்டு அகன்று விடும் என எண்ணும் நிலையிலிருந்தான். அஃதறியாத புலவர், தம் வருகையைக் கூறி, ஏவலாளர்வழி வெளிமானுக்குச் செய்தியனுப்பினார்.

வெளிமான் பெருந்தன்மையின் உருவமாக விளங்கியவன், தண்தமிழ் வல்ல சான்றோர், தன் வாயிற்கடையில் வந்துள்ளனர் என்ற சேதி கேட்டு, மகிழ்ந்தான். அவரை அழைத்து வரச் செய்து அன்போடு உரையாடினான். அருகே நின்றிருந்த தம்பியாம் இளவெளிமானை விளித்து, "இப்புலவர் பெருமான் வேண்டுவன அனைத்தும் நல்கி இவரை மகிழ்விக்க," என ஆணையிட்டான். அவர்தம் தமிழ் விருந்திலே திளைத்து மகிழ்ந்தான். பெருஞ்சித்திரனாரின் உள்ளம், இன்பமும் துன்பமும் கலந்த வேதனையை அனுபவித்தது.

வெளிமானின் அத்தகையதோர் உடல் நலத்தினும், அவன் அவர்பாற் காட்டிய அளவற்ற அன்பும் மதிப்பும் அவர் உள்ளத்தை உருக்கியது. ஆனால், அத்தகைய பேரருள் நிரம்பிய வெளிமான் நொடிக்கு நொடி உலகை விட்டுப் போய்கொண்டே யிருக்கின்றனனே, என எண்ணி அரற்றினார். புலவோர் புகழ் பாட, நாட்டவர் ஏங்க, வெளிமானின் உயிரும்

போய்விட்டது. சுற்றமும் பிறரும் வருந்திய வருத்தத்தினும், புலவர் பெருஞ்சித்திரனாரின் துயரே கட்டுக் கடங்காததாயிருந்தது.

வெளிமானுக்குப் பின், அவன் இளவல் இளவெளிமான் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தான். அண்ணன் ஈகையிற் சிறந்தவன்; தம்பியோ ஈகையை வெறுப்பவன்; வெளிமானின் ஆணைப்படி பெருஞ்சித்திரனார்க்குப் பெரும் பொருள் தர மனம் ஒருப்படவில்லை.

இளவெளிமானின் அந்நிலை உணராத பெருஞ்சித்திரனார், சில நாட் கழிந்ததும் அவனிடம் சென்றார். அவனும், புலவர் வறுமையெலாம் கேட்டபின், 'ஏதோ நாமும் கொடுத்தோம்' எனச் சிறிது பொருள் தந்து நின்றான். அதனை ஏற்க மனமில்லாதவராக நம் புலவர் உளம் நைந்து வருந்தியுரைத்த சொற்கள் பெரிதும் உள்ளமுருக்குவனவாகும்.

"வறியவர்க்குக் கோடை மழைபோல உதவும் வெளிமான், கோடை நாளில் அருஞ்சுரத்திடை அல்லலுற்று வருபவர்க்கு நிழல் தரும் மரமாய் விளங்கினான். அவனை நாடி யான் வந்தேன். ஆனால், அறம் அறியாத கூற்றமோ அவன் உயிரைப் பிரித்துவிட்டது.

"யானையைத் தன் இரையென அடித்த புலி அது தப்பினும் சுண்டெலியை நாடிச் சென்று தின்னாது. அதுபோன்றதே எம்போற் புலவர் நிலையும். வெளிமானின் வள்ளன்மையை நாடி வந்த எமக்கு, எம் தகுதிக்குக் குறைந்த இப்பரிசில் வேண்டுவதின்று. இதனை யாம் விரும்போம்; ஆற்று நீர்போல விரைந்து சென்று பெரும் பொருள் கொணர்வோம்; காண்பாயாக!" எனக் கூறி வெளியேறினார். எனினும், தம் இல்லத்தில் நிலவிய ஆற்றாத வறுமை அவரை வருத்தவே முதிரத்தின் தலைவனான குமணனை நோக்கிச் சென்றார்.

குமணன் புலவர்பால் பெருமதிப்புடையவன் என முன்னரே கண்டோம். அவன் பெருஞ்சித்திரனுரை அன்போடு வரவேற்று அருளோடு உபசரித்தான். புலவரின் அளவற்ற புலமை அவனைப் பெரிதும் இன்புறுத்தியது. அப்படியே சில நாட்கள் கழிந்தன. மன்னனின் வரவேற்பிலும் உபசரிப்பிலும் தாம் மகிழ்ந்து களித்திருக்க அங்கே தம் ஊரில் துயரப்படும் தம் வீட்டினர் நிலையை எண்ணினுர் புலவர். குமண னிடம் கூறித் தமக்குப் பொருள் உதவி, விரைந்து விடுக்க வேண்டினுர்.

குமணன் மகிழ்வுடன் பெரும் பொருள் தந்தான். அத்துடன் அவர் ஊர்ந்து செல்வதற்கு ஒரு களிறும் அளித்தான்.

இவ்வாறு குமணனிடம் பெற்ற யானையுடன் வந்த புலவர் இளவெளிமானுக்கு அறிவு புகட்ட எண்ணினுர். தம் யானையை—குமணன் தந்த பரிசிலை—இளவெளி மானின் காவல் மரத்திலே பிணித்து, 'என் தகுதி யறிந்து நீ பரிசில் நல்கவில்லை. இதோ இந்த யானை உனக்கு எம் பரிசில்,' எனப் பெருமிதத்துடன் கூறிச் சென்ருர் புலவர்.

இவ்வாறு, தம் வறுமையினும் தம் நிலைகெட வரும் பொருளை விரும்பாது செம்மாந்து திகழ்ந்த தமிழ்ச் சான்ருேர் பலர் ஆவர்.

அறிவுச் செல்வம் பிற செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்தது; சிறந்தது. அதைப் பெற்ருரே உண்மைச் செல்வர்கள். அவர், பிறர் அனைவரிலும் சிறந்தோர்; அவரைப் போற்றுவது பொருட்செல்வர் கடன். அஃதன்றித் தம் செல்வச்செருக்கால் நிலைதவறி நடப்பா ராயின் இடித்துக்கூறி அறிவு பெறச் செய்து தம் உயர்வை நிலைநாட்டினர் பழந்தமிழ்ச் சான்ருேர்.

8. புலவர் செய்த சோதனை

புலவர் கி. வா. ஜகந்நாதனுர் (கலைமகள் ஆசிரியர்)

"கொங்கு நாட்டிலிருந்து ஒரு புலவர் வந்திருக்கிறுர்; ஆணூரில் உள்ள சர்க்கரை என்ற வள்ளலின் ஆத்தான வித்துவானும்," என்று அறிவித்தான் காவலன்.

"புலவரே! அவரை நான் அல்லவா எதிர் கொண்டு அழைக்க வேண்டும்?" என்று சொல்லிய படியே அந்தச் செல்வர் தம்முடைய வீட்டு வாசலுக்கே வந்துவிட்டார்.

புலவரும் உபகாரியும் சந்தித்தார்கள். இருவரும் மாளிகையின் உள்ளே சென்ருர்கள். செல்வர் புலவருக்கு உபசாரம் செய்து அமரச் செய்தார். இருவரும் உரையாடத் தொடங்கினர்.

தொண்டை நாட்டில் உள்ள செங்குன்றூர் என்ற ஊரில் வாழ்ந்து வந்த எல்லப்பர் என்னும் வள்ளல் அச்செல்வர். புலவர்களின் பெருமையை அறிந்து பாராட்டிப் பரிசளிக்கும் பெருந்தகை. தமிழ் நயந் தேரும் சதுரர். அவருடைய புகழ் தமிழ்நாடெங்கும் பரவியிருந்தது. வேறு ஊர்களில் உள்ள புலவர்கள் அவ்வப்போது அவரைத் தேடிக்கொண்டு வருவார்கள். அவருடன் பேசிப் பொழுதுபோக்குவதிலேயே இன்பம் காண்பார்கள். அவர் அளிக்கும் பரிசைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியுடன் ஊர் செல்வார்கள்.

எப்போது பார்த்தாலும் புலவர்களைப் பராமரிப்பதும், தான தருமம் செய்வதுமாகப் பொழுதுபோக்கும் எல்லப்பரைப் புலவர்கள் சும்மா விட்டு வைப்பார்களா? நன்றியறிவு மீதூரக் கவி பாடி அவர் புகழை

வளர்த்தார்கள். அவர்கள் பாடிய பாடல்கள் தமிழ் நாடெங்கணும் உலவிச் செங்குன்றூர் எல்லப்பருடைய வள்ளன்மையைத் தெரிவித்தன.

"ஆலமரம் இருக்கும் இடத்தில் பறவைகளைப் பார்க்கலாம். திருமால் இருக்கும் இடத்தில் திருமகளைக் காணலாம். எல்லப்பன் இருக்கும் இடத்தில் இரவலரைக் காணலாம்," என்று ஒரு புலவர் பாடினார்.

"ஆல்எங்கே அங்கே அரும்பறவை ; ஆல்துயிலும்
மால்எங்கே அங்கே மலர்மடந்தை—சோலைதொறும்
செங்கே தகைமணக்கும் செங்குன்றை எல்லன்எங்கே
*அங்கே இரவலர்எல் லாம்."**

எல்லப்பரைப் போலவே தமிழருமை அறிந்து புலவரைப் போற்றிப் புகழ் பெற்றவராக விளங்கினர் ஆணூர்ச் சர்க்கரை என்ற உபகாரி. கொங்கு நாட்டில் மாடுகளுக்குப் பெயர் போன பழைய கோட்டை என்ற ஊர் இருக்கிறது. அதற்கு அருகில் இருப்பது ஆணூர். அவ்வூரில் இருந்தவர் சர்க்கரை. ஆணூர்ச் சர்க்கரையின் ஆதரவில் பல புலவர் தமிழ் வளர்த்தனர். அவர்களில் ஒருவரே தொண்டை நாட்டுக்குச் சென்று அங்குள்ள தமிழ்ப் பெரு மக்களைக் கண்டு வரலாம் என்று புறப்பட்டார். தமிழ்நாடு முழுவதும் போற்றிப் புகழும் எல்லப்பரைக் காண்பதையே முக்கியமான காரியமாக வைத்துக் கொண்டார். ஆணூர்ச் சர்க்கரையைப் போன்ற தருமவானை எங்கும் காணமுடியாது என்பது அவர் கருத்து. சர்க்கரையின் தமிழ் ஆசை ஒருபுறம் இருக்க, அவருடைய நற்குணங்களைப் பார்த்து வியப்பவர் பலர். அவருடைய பொறுமையை வேறு எவரிடமும் காண்பது அரிது. உடல் வலியும் உளவலியும் ஒருங்கே அமைந்த அவ்வுபகாரியின் பொறுமை புலவர் பாராட்டுக்கு உரியதாயிற்று.

**மால்—விஷ்ணு. கேதகை—தாழம்பூ*

"நம்முடைய சர்க்கரையைப் போல இனிப்பவர் யாரும் இல்லே. அவருடைய பொறுமைக்குப் பூமியும் நிகர் இல்லே," என்ற எண்ணத்தில் ஊறிய புலவர், செங்குன்றூர் எல்லப்பரிடத்தில் உள்ள பொறுமை யையும் சோதிக்க எண்ணினுர்.

புலவரும் எல்லப்பரும் பேசிக்கொண்டிருந்தனர். இரண்டு மூன்று நாள் புலவரைத் தங்கச்செய்து அளவளாவினுர் எல்லப்பர். பிறகு புலவர் விடைபெற்றுக் கொள்ளும்போது அவ்வுபகாரி பரிசில் வழங்கினுர். புலவர் அதைத் தம் இடக் கையை நீட்டி வாங்கினுர். அப்போது அருகில் இருந்தவர் திடுக்கிட்டனர். "கொங்குப் புலவருக்கு மரியாதை தெரியவில்லேயே! இடக் கைக்கும் வலக் கைக்கும் வித்தியாசம் தெரியாத இந்த முருட்டு மனிதர் தமிழ்ப் புலவரென்று சொல்லிக் கொள்ளும் தகுதி யில்லாதவர்," என்று சிலர் எண்ணினர்.

எல்லப்பருக்கும் புலவர் செயல் தவருகப்பட்டது. அவர் கண்கள் சிவந்தன. "இடக்கையால் வாங்குவது தான் கொங்கு நாட்டார் வழக்கமோ? என்று படபடப் புடன் கேட்டார். புலவர் யோசனே சிறிது மின்றிப் புன் முறுவல் பூத்தபடி உடனே விடை கூறினுர். "வலக் கை ஆனூர்ச் சர்க்கரையின் அன்புப் பரிசிலேப்பெறும் தனி உரிமையை உடையது. அவர் முன் நீட்டுங் கையைப் பிறர் முன் நீட்டுவதில்லே என்ற விரதம் உடையவன் நான். புலவர் பரிசில் பெறுவது முக்கியமே ஒழிய வலக்கையில்தான் பெறவேண்டும் என்ற வரையறை தொண்டை நாட்டுச் சான்ருேருக்கு இருக்க நியாயம் இல்லேயே! ஆனூர்ச் சர்க்கரை, புலவர் தவறு செய்தாலும் பொறுக்கும் இயல் புடையவர். அவரிடத்தில் பழகியவர்களுக்கு இடக்கை யென்றும் வலக்கையென்றும் தெரிவதில்லே. தாய் அணேப்பில் உள்ள குழந்தையைப் போல நாங்கள் ஆகிவிடுகிருேம்."

உபகாரி ஒருவாறு அமைதி பெற்ருர். விடை பெற்றுக்கொண்டு சென்ருர் புலவர். அவரை வழிவிடச் சென்ருர் எல்லப்பருடைய ஆத்தானப் புலவர்.

" திருமகளைப் பத்தியுடன் பீடத்தில் எழுந்தருளச் செய்யவேண்டும். அழுக்கிடத்தில் அமரச் செய்யக் கூடாது. உபகாரி தரும் பரிசு இலக்குமியைப் போன்றது. வலக்கையால் வாங்குவதற்குரியது," என்று தொண்டை நாட்டுப் புலவர் சொன்னுர். அவருக்குக் கொங்குப் புலவர் செயல் சகிக்கவில்லை. அதனுல் மனம் புண்பட்டிருந்தது. காரமாகப் பேசிவிட வேண்டுமென்றே அவருடன் வழிவிட வந்தார்.

அவர் பேச்சைக் கேட்ட கொங்குப் புலவர், "மோதிரம் இடக் கையில் அணிவதில்லையா ? இரு கையாலும் வாரி வழங்குவதும், ஆசையோடு இரு கையாலும் அதைப் பெறுவதும் நீங்கள் பார்த்த தில்லையா? அப்போது இடக்கை ஏற்பதில்லையோ? என் கைக்கா பரிசில் தந்தார் ? என் நாவன்மைக்கல்லவா பரிசில் கிடைத்தது ? அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல் என்ற நான்கும் இன்றித் தருமம் செய்ய வேண்டுமென்று திருக்குறள் சொல்கிறதே. உங்கள் தலைவர் தமிழருமை அறிந்தவரே. ஆனுலும், வெகுளியை விலக்கவில்லை. அவர் எங்கள் சர்க்கரை யிடம் பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டும்," என்று சொல்லிவிட்டு அவர் தம் ஊருக்குச் சென்று விட்டார்.

2

தொண்டை நாட்டுப் புலவரின் மனத்தில் ஆனூர்ப் புலவரின் செயலும் சொல்லும் உறுத்திக் கொண்டே இருந்தன. 'மரியாதையற்ற காரியத்தைச் செய்துவிட்டுக் கோபம் வரக்கூடாதென்று சொல்வது முட்டாள்தனம் அல்லவா '? என்று எண்ணினுர்.

எப்படியாவது அந்தப் புலவரையும், அவருக்கு அவ்வளவு இறுமாப்பு உண்டாகும்படி செய்த சர்க்கரை யையும் அவமதிக்கவேண்டும் என்ற நினைப்பு அவருக்கு உண்டாகிவிட்டது.

புலவர் கொங்கு நாட்டை நோக்கிப் புறப்பட்டார். ஆனூருக்குப் போய்ச் சேர்ந்தபோது, முன்பு அறிந் திருந்த புலவர் அவரை வரவேற்றார். சர்க்கரையின் முன் அழைத்துச் சென்றார். இன்னுரையும் புன்னகையுங் கொண்டு சர்க்கரை புலவரை வரவேற்றார். விருந்து அருந்தச் செய்தார்.

தொண்டை நாட்டுப் புலவருக்குச் சர்க்கரையைச் சோதிக்கவேண்டும் என்ற நோக்கம் மேலிட்டது. அவ் விடத்துப் புலவரிடம் பேசிக்கொண்டிருக்கையில், "உங்கள் தலைவர் பொறுமை நிறைந்தவர் என்பதை நான் எப்படி அறிவது ?" என்று கேட்டார்.

"எப்படி வேண்டுமானாலும் அறியலாம். புலவர் எது செய்தாலும் சிறப்பாக நினைப்பவர் அவர்; நயத் தக்க நாகரிகம் உணர்ந்தவர்" என்றார்.

அன்று சிறந்த விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. தொண்டை நாட்டுப் புலவரும் கொங்கு நாட்டுப் புலவரும் சர்க்கரையும் வேறு சிலரும் அமர்ந்து விருந் துண்ணலாயினர். புலவரை உபசரிக்கும் பேற்றைத் தாமும் பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் சர்க்கரை யின் மனைவியும் தாயும் உணவு பரிமாறினர். தொண்டை நாட்டுப் புலவருக்கு உணவின்மேல் மனம் செல்லவில்லை. சர்க்கரையைச் சோதிக்க என்ன வழி என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார். அப்போது, சர்க்கரையின் அன்னை ஏதோ ஒன்றைப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று புலவர் வெறி பிடித்தவரைப் போல எழுந்தார். சர்க்கரையின் அன்னை குனிந்து பரிமாறு கையில் சட்டென்று அவள் முதுகின்மேல் ஏறி

அமர்ந்தார். விருந்துண்பவர் யாவரும் பிரமிப்படைந்தனர். அன்னையோ சர்க்கரையின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினுள். அவ்வள்ளல் புன்முறுவல் பூத்தார். "என்னை அன்போடு பத்து மாதம் சுமந்தாயே. இந்தத் தமிழ்க் குழந்தையை ஒரு நிமிடம் சுமப்பதில் வருத்தம் என்ன ?" என்று சாந்தமாகச் சொன்னுர்.

அடுத்த கணத்தில் புலவர் கீழே குதித்தார். சர்க்கரையின் முன்னுலே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். "நான் செய்த பிழையைப் பொறுக்க வேண்டும். உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லை. நீங்கள் கர்ணனென்று சொன்னுர்கள். உங்களைத் தருமபுத்திரரென்றே நான் எண்ணுகிறேன்," என்று விம்மி விம்மி உருகிச் சொன்னுர்.

கொங்குப் புலவர், "புலவரே, சர்க்கரையைக் குழந்தையாகப் பெற்ற அன்னைக்கு இன்று மற்ருெரு குழந்தை கிடைத்தது ஆச்சரியம்; அந்தக் குழந்தை அன்னைக்கு முன்னே அழுது நிற்பது அதைவிட ஆச்சரியம்!", என்று உணர்ச்சிப் பூரிப்பிலே பேசினுர். புலவர் செய்த பைத்தியக்காரச் செயலைவிட வள்ளலின் உயர் குணத்தையே அங்குள்ளவர்களின் உள்ளங்கள் எண்ணி உருகின.

தொண்டை நாட்டுப் புலவர் சர்க்கரையின் பொறுமையை இப்போது அறிந்துகொண்டார். தமிழ்ப் புலவர்களிடம் அவருக்குள்ள அன்புக்கு எல்லை காண முடியாதென்பதை நேராகவே கண்டு தெளிந்தார். பின்னும் சில நாட்கள் ஆனூரில் தங்கினுர். அப்பால் சர்க்கரை தந்த பரிசில்களைப் பெற்று ஊருக்குத் திரும்பினுர்.

3

அவர் தம் ஊரைவிட்டுப் புறப்படும்போது ஆத்திரத்தில் தம் உடன் இருந்தவர்களிடம் தம்முடைய

எண்ணத்தை வெளியிட்டிருந்தார். சர்க்கரையைச் சோதிக்கச் செல்வதாகச் சொல்லியிருந்தார். இந்தச் செய்தி எல்லப்பர் காதுக்கும் எட்டியது. ஆகவே, புலவர்களும் எல்லப்பரும் அவருடைய வருகையை எதிர்நோக்கியிருந்தார்கள்.

புலவர் வந்தார். "போன காரியம் என்ன ஆயிற்று?", என்று நண்பர்கள் கேட்டார்கள். அவர் களோடு பேச அவருக்கு மனம் இல்லை. நேரே வேகமாக எல்லப்பரிடம் சென்றார்.

"பல காலமாக உங்களைப் போன்ற உபகாரி உலகத்திலேயே இல்லையென்று எண்ணிக்கொண் டிருந்தோம். உங்களையே பாடினேம். உங்களுக்கு இணையாக யாரும் இருக்கமாட்டார்களா என்று ஆராய்ந்தோம். யாரும் இல்லையென்ற முடிவுக்கு வந் திருந்தோம். இப்போது ஒருவரைக் கண்டேன். எனக்கு ஒரு தாயையும் அண்ணனையும் கண்டுகொண்டேன்," என்று அவர் பேசினர்; பாராட்டினர்; போய் வந்த கதையைச் சொன்னர். அவர் உள்ளத்திலே ஏற்பட்ட உவகை ஒரு தமிழ்ப் பாடலாக உருவெடுத்தது.

செங்குன்றை எல்லாநின் செங்கைக் கொடையதனக்(கு)
எங்கெங்கும் தேடி இணைகாணேம்—கொங்கதனில்
சர்க்கரையைப் பாடலாம்; தண்டமிழ்க்கொன் றீயாத
எக்கரையாம் பாடோம் இனி.

அதைக் கேட்ட எல்லப்பருக்கும் சர்க்கரையின் புகழ் இனித்தது. புலவர் செய்த சோதனையில் வென்ற சர்க்கரையின் புகழைக் கொங்கு மண்டலத்தோடு தொண்டை மண்டலமும் பிற மண்டலங்களும் பாராட்டின.

9. வேதநாயகம் பிள்ளை

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

தமிழ் நாட்டிலே தோன்றிய நல்லியற் கவிஞருள் ஒருவர் வேதநாயகர். அவர், நகைச்சுவை நிரம்பிய நூல்களால் தமிழ் மொழியை அழகு செய்தவர்; இசைத் தமிழின் பெருமையைக் கீர்த்தனங்களால் நாட்டியவர்; தமிழில் நாவல் என்னும் நவீனக் கதை இயற்றுவார்க்கு நல்வழி காட்டியவர்.

அத்தகைய வித்தகர் திரிசிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள குளத்தூரிலே பிறந்தார். அவர் பிறந்த குலமும், பெற்ற நலமும் ஒரு சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். "கொங்குராய கோத்திரம் அதனில், வந்தவதரித்த செந்தமிழ்க் குரிசில்," என்று அவரைப் பாராட்டினார் மகா வித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

இளமையிலேயே வேதநாயகரிடம் விளங்கிய ஆங்கிலப் பயிற்சியையும், ஆன்ற பண்பினையும் அறிந்த அரசியலார் அவரை ஜில்லாக் கோர்ட்டில் மொழி பெயர்ப்பாளராக அமைத்தனர். அப்பணியில் அவர் காட்டிய திறமை துரைத்தனத்தாரது கருத்தைக் கவர்ந்தது; அதன் பயனாகத் தரங்கம்பாடியில் முனிசீபாக நியமிக்கப்பெற்றார். அப்பணியை ஏற்று நீதி பரிபாலனம் செய்யுங்கால் உற்றார் என்றும், மற்றார் என்றும் அவர் உணர்ந்ததில்லை; கீழோர் என்றும், மேலோர் என்றும் கருதியதில்லை; இச்சகம் பேசும் கொச்சை மக்களுக்கு இடம் கொடுத்ததில்லை; வழக்கின் தன்மையை உள்ளவாறுணர்ந்து தீர்ப்புச் செய்வதே அவர் வழக்கம். இத்தன்மை வாய்ந்த வேதநாயகரை நீதிமான் என்று எல்லோரும் புகழ்வாராயினர்.

தரங்கம்பாடியிலிருந்து வேதநாயகர் சீகாழிக்கு முனிசீபாக மாற்றப்பட்டார். அப்போது, 'நற்றுமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்' மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அங்குப்போந்து சில காலம் தங்கி இருந்தார். உணர்ச்சியொத்த அறிஞர் இருவரும் சில நாளில் சிறந்த நண்பர் ஆயினர். அவ்வூர்ப் பெரியோர் விரும்பியவண்ணம் மகாவித்துவான், சீகாழிக் கோவை என்னும் பிரபந்தம் இயற்றினர். அக்கோவை, சீகாழிச் சிவன் கோயிலில் உள்ள வலம்புரி மண்டபத்தில் வாசித்து அரங்கேற்றப்பட்டது. வேதநாயகர், நாள்தோறும் வந்து கேட்டு இன்புற்று அக்கோவையின் நயங்களையும், பிள்ளையவர்களின் புலமைத் திறத்தையும் பாராட்டிப் பல கவிகள் பாடினர்.

நன்னெறியில் நாட்டம் உடைய வேதநாயகர், அவ்வப்போது தம் மனத்தில் அரும்பிய கருத்துக்களைப் பாட்டாகப் பாடி வைத்திருந்தார்; அப்பாடல்களை மகாவித்துவானிடம் படித்துக் காட்டி அவர் அளித்த சிறப்புப்பாயிரத்தோடு நீதிநூல் என்னும் பெயரால் வெளியிட்டார். அந்நூலில் வேதநாயகர் பரோபகாரம் முதலிய அறங்களைப் பாராட்டுகின்றார்; பஞ்சமா பாதகங்களைக் கடிந்துரைக்கின்றார். பரிதானம் பெறுவோரையும், பற்றுள்ளம் உடையோரையும் பரிகசிக்கின்றார். நல்லரசின் தன்மையும், வல்லரசின் தன்மையும் அவர் நீதி நூலில் விளக்கிக் காட்டும் பான்மை நன்கு அறியத்தக்கதாகும். "நன்னெறி வழுவாத மன்னர்க்கு நாடெல்லாம் அரண்மனை; மன்னுயிர் எல்லாம் அவர் நற்படை; அன்னர் மனமெல்லாம் அவர் வீற்றிருக்கும் அரியாசனம். ஆனல், கொடுங்கோல் மன்னர்க்குக் குடிகளே பகைவர்; அவர் அடி வைக்கும் இடமெல்லாம் படுகுழி; மாளிகையே மயானம்", என்னும் பொருள்பட வேதநாயகர் பாடியுள்ளார்.

சீகாழியில் வாழ்ந்த காலத்தில் வேதநாயகர் இசைப்பாட்டிலே விருப்பம் உற்ருர். தென்ஞட்டு இசைத்தமிழின் வரலாற்றில் சிறந்ததோர் இடம்பெற்று விளங்குவது சீகாழிப் பதியாகும். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர்" பிறந்த ஊர் சீகாழியே. கம்பர் அருளிய இராமாயணத்தை அழகிய கீர்த்தனங்களாகப் பாடி அழியாப் புகழ் பெற்ற அருணசலக் கவிராயர் வாழ்ந்ததும் அப்பதியே. தில்லை மன்றத்தில் திருநடம் புரியும் இறைவனைத் தெள்ளிய பாட்டாற் போற்றிய முத்துத் தாண்டவரை ஈன்றதும் அவ்வூரே. இத்தகைய சீகாழியின் மருங்கேயமைந்த ஊர்களும் இசை மணம் வாய்த்தனவாகும். "பண்ணேடு இசைபாடும் அடியார்க்கு இம்மையின்பமும், மறுமை இன்பமும் தரும் மணிகண்டன் மருவும் இடம்," என்று திருஞான சம்பந்தர், போற்றிப் புகழ்ந்த புள்ளிருக்குவேளூர் சீகாழிக்கு அண்மையில் அமைந்துள்ளது. இன்னும் நற்றமிழ்ப் பாடல்களை ஒற்றறுத்துப் பாடும்வண்ணம் திருஞான சம்பந்தருக்கு ஈசன் பொற்ருளம் ஈந்தருளிய கோலாக்காவும், சீகாழியை அடுத்துள்ள சிவப்பதியாகும்.

இத்தகைய சீகாழியிலிருந்து மாயூரத்திற்கு முனிசீபாக மாற்றப்பட்டார் வேதநாயகர். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல இசைப்பாட்டில் ஆசையுற்றிருந்த வேதநாயகருக்கு மாயூரத்தில் சிறந்த இசைவாணர் பழக்கம் ஏற்பட்டது. 'நந்தனர் கீர்த்தனம்' பாடிப் புகழ்பெற்ற கோபாலகிருஷ்ண பாரதியார் அப்போது அவ்வூரில் இருந்தார். அவர் பாடிய கீர்த்தனம் வேதநாயகர் உள்ளத்தைக் கவர்ந்தது. இசைப்பாட்டில் ஈடுபட்ட இருவரும் நாளடைவில் நண்பராயினர்.

மாயூரத்தில் வேதநாயகர் நீதிபதியாக இருந்தபோது வல் வழக்குகள் நீதிமன்றத்திலே வரக்கண்டு மனம் வருந்தினர். அவ்வழக்குகளின் தன்மைக்கு அவரே ஒரு சான்று காட்டியுள்ளார். "கரமிலான் ஒரு

வன் வாதியைப் பிடித்தான்; காலிலான் அவனை உதைத்தான்; வாயிலான் அவனைக் கடித்தான்; இப்படிப் பிடித்து, உதைத்து, கடித்தவர்கள் மீது வாதி வழக்குத் தொடுத்தான். அவனுக்காக விறு விறுப்புடன் வாதாடி வம்பு செய்தார்கள் வக்கீல்கள். இவ்வாறு,

"தொண்டை கிழித்துக்கொண்டு
சண்டை செய்யும் வக்கீல்கள்
அண்டையிலே இருந்து நம்
மண்டையை உடைத்தால்—
ஆண்டவனை நினைப்ப தெப்போது நெஞ்சே
ஐயன் பதத்தை நினைப்ப தெப்போது நெஞ்சே"

என்று அவர் பாடினார்.

தெய்வ சாட்சியாக நீதி பரிபாலனம் செய்து வேதநாயகர் அடைந்த பெரும்புகழைக் கண்டு பொறாமை கொண்ட சிறியோர் சிலர்; மேலதிகாரிகளிடம் கோளும் பொய்யும் சொல்லிக் குழப்பம் விளைவித்தார்கள். அன்னார் சிறுமையை ஒரு பாட்டாகப் பாடி ஆண்டவனிடம் முறையிட்டார் வேதநாயகர். "நல்லவர்களெல்லாம் நாட்டை விட்டு அகன்றார்; ஞான சூனியரெல்லாம் நமக்கு அதிபர் என்றார்; ஆகாத காலம் இது; அசடர் தலையெடுத்தார்; பூவிற்ற கடையிலே புல்விற்கத் தொடங்கிவிட்டார்; என்ன வந்தாலும் மனமே ஐயன் இருக்கையில் என்ன விசனமே," என்னும் கீர்த்தனம் பாடிக் கவலையற்றிருந்தார். இறுதியில் அறம் வென்றது; அழுக்காறு வேரற்று வீழ்ந்தது.

அப்பொழுது தஞ்சை நாட்டில் கடும் பஞ்சம் வந்துற்றது. அதன் கொடுமையைக் கண்ட வேதநாயகர் நெஞ்சுருகிப் பாடினார். "ஐயோ! மண்ணில் அநேகர் என் கண் முன்னே மாய்ந்தார்; எண்ணிறந்தவர் சருகு போல் காய்ந்தார்; கண்ணிருண்டு களைத்து உடல் ஓய்ந்தார்; ஆண்டவனே உன்னையன்றி யாரே

துணையாவார்,'' என்று முறையிட்டார்; ஒல்லும் வகையால் பசியின் கொடுமையைத் தணிப்பதற்குத் தம் செல்வத்தையும், செல்வாக்கையும் செலவிட்டு மாயூர நகரின் பல பாகங்களில் கஞ்சிச் சாலைகள் அமைத்தார். அங்கு வார்த்த கஞ்சியைப் பருகி மனங் குளிர்ந்து அவரை வாயார வாழ்த்திய ஏழை மாந்தர் பல்லாயிரவர். அவ்வறப் பணியைக் கண் குளிரக் கண்ட கோபால கிருஷ்ண பாரதியார், வேதநாயகரை வியந்து, நீயே புருஷமேரு' எனத் தொடங்கும் கீர்த்தனம் பாடினார். பாரதியார் இயற்றிய கீர்த்தனங்களுள் இதுவொன்றே நரஸ்துதி என்றால் வேதநாயகர் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ ?

அக்காலத்தில் மாயூரத்துக்கு அண்மையிலுள்ள திருவாவடுதுறை ஆதீனத்தில் சுப்பிரமணிய தேசிகர் என்னும் சீலர் தலைவராக விளங்கினார். கற்றவரும், பொருள் அற்றவரும் அவர் ஆதரவைப் நிரம்பப் பெற்றனர். கலையின் கோயிலாகவும், கருணையின் நிலையமாகவும் திகழ்ந்த தேசிக மூர்த்தியிடம் வேதநாயகர் மிகவும் ஈடுபட்டார்.

"ஏனென்று கேட்பவர் இல்லாத் தமிழை இனிதளிக்க
நானென்று கங்கணம் கட்டிக்கொண்டாய் இந்த நானிலத்தே"

என்று அப்பெரியாரைப் பாராட்டினார்.

பஞ்ச காலத்தில் அத்தேசிக மூர்த்தி பசித்தோர் முகம் பார்த்துப் பரிவுடன் உணவளித்தார். இவ்வாறு வருந்தி வந்தவர் அரும்பசி தீர்த்து, 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் வாசகத்தை மெய்ப்பித்த பெரியாரை வேதநாயகர் மனமாரப் போற்றினார்.

கிறிஸ்துவ மதத்தில் வேதநாயகர் சிறந்த பற்றுடையவர் ஆயினும், தெய்வத்தின் பெயரால் சமயவாதிகள் சண்டையிட்டுக்கொள்ளுதல் தவறு என்பது

அவரது கொள்கை. பாரத நாட்டிலுள்ள பல சமய வாதிகளும் சமரச உணர்ச்சியோடு பணி செய்தல் வேண்டும் என்பது அவர் ஆசை. இக்கருத்துக் கொண்டு அவர் பாடிய கீர்த்தனங்கள் பலவாகும். அவற்றைத் தொகுத்துச் 'சர்வ சமய சமரச கீர்த்தனம்' என்னும் பெயரால் வெளியிட்டார்.

பிற சமயத்தாருடன் வேதநாயகர் வேற்றுமை யின்றிப் பழகினுர். சைவ சமயத்தைப் போற்றி வளர்ப் பதற்காகத் தோன்றியவரும் திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவானும் ஆகிய மீனுட்சிசுந்தரம்பிள்ளை வேத நாயகரின் ஆருயிர் நண்பர். வேதநாயகரைப் பாட்டுடைத் தலைவனுக அமைத்து அம்மகா வித்து வான் ஒரு கோவை பாடினுர். குளத்தூர் வேதநாயகர் மீது பாடப்பட்ட கோவையாதலால் அது, 'குளத்தூர்க் கோவை' என்று வழங்குகின்றது. அக்கோவையில் 'தன்னேரிலாத தமிழ் வேதநாயகன்' என்றும், 'நூல் ஆய நோற்ற மதிவேத நாயகன்' என்றும் அவர் பெருமையை மகாவித்துவான் பாடியுள்ளார்.

தமிழ் நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வமுடையவர் வேதநாயகர். நல்ல எண் ணங்கள் இளமையிலே நங்கையர் மனத்திற் பதிதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. அக்கருத்துக் கொண்டு எழுந்தது, 'பெண்மதி மாலை' என்னும் நூல். வேதநாயகர் தம் பெண் குழந்தைகள் படிப்ப தற்காக அதனை எழுதினுர் என்று தெரிகின்றது. பிறந்த மனையிலும், புகுந்த மனையிலும் பெண்கள் சோம்பலின்றி வேலை செய்தல் வேண்டும் என்றும், வாழ்க்கைப்பட்ட பெண் இல்லாள் என்றும் சொல்லப் படுவதால் அவளே வீட்டுக்கு அதிபதி என்றும், இல்ல றம் நடத்தும் பெண்கள் நாள்தோறும் அறம் செய்தல் வேண்டுமென்றும், மாதா, பிதா, குரு, தெய்வம் இவர் களிடம் அன்பும், பணிவும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும் என்றும் பெண்மதி மாலை கூறுகின்றது.

பெண்களுக்குக் கல்வி இன்றியமையாதது என்பதைப் பல கட்டுரைகளாலும் எடுத்துரைத்தார் வேதநாயகர். பெண் கல்வி, பெண்மானம் முதலிய கட்டுரைகள் பெண்மதி மாலையிற் சேர்க்கப்பட்டுள்ளன. பெண்களை மரியாதையாக நடத்த வேண்டும் என்பதற்குள்ள நியாயங்களைப் பெண்மானம் என்னும் வியாசம் விளக்குகின்றது.

வேதநாயகர் வசன நூல்களும் சில இயற்றினார். அவற்றுள் தலைசிறந்தது, 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் கற்பனைக் கதையேயாகும். அதுவே தமிழில் எழுந்த முதல் நவீனக் கதை (நாவல்) என்று சொல்லப்படுகின்றது. பிரதாபன் கதை நகைச்சுவை நிரம்பியது. படிப்போர் மனத்தைப் பற்றி இழுத்துச் செல்லும் பண்புடையது: மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது; நல்ல பழக்கங்கள் பரவ வழி காட்டுவது; கதாநாயகனாகிய பிரதாபனது கள்ளங்கபடமற்ற உள்ளம், நம் கருத்தை அள்ளுகின்றது. அவன் தாயாகிய சுந்தரமும், மனையாளாகிய ஞானம்பாளும் மதிநலம் வாய்ந்த நங்கையர் குலத்திற்கு அணிகலன்களாக விளங்குகின்றார்கள். சுருங்கச் சொல்லின் அந்நவீனம் கல்லார்க்கும், கற்றவர்க்கும் களிப்பருளும் கதையாகும். அக்கதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

பதினைந்து ஆண்டுகள் வேதநாயகர் முனிசீபாக வேலை பார்த்தார்; அவ்வேலையின் கடுமையால் உடல் தளர்ந்தார்; அரசியலார் அனுமதி பெற்று வேலையினின்று விலகினார்; தமிழ்க் கலைகளிலே பொழுது போக்கினார்; மாயூரம் நகரசபைத் தலைவராக அமர்ந்து நற்பணிகள் பல செய்தார்; 'ஞானசுந்தரி' என்னும் நாவலும் இயற்றி வெளியிட்டார்; கடைசியாகச் "சத்திய வேத கீர்த்தனை" என்னும் இசைப்பாட்டியற்றி அறுபத்தைந்தாம் வயதில் ஆண்டவன் அருளிலே கலந்தார்.

---

10. உக்கிரப் பெருவழுதி

நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்

இறையனர் களவிய லுரையின் பாயிரப் பகுதியில், முச்சங்க வரலாறு கூறிவருமிடத்தே, கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மர் என்றும், அவருள்ளிட்டு, நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்றும், நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்னும் இத் தொடக்கத்தன அவர்களால் பாடப்பட்டன என்றும், அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்றும், அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றி யாண்டு என்றும், அவர்களைச் சங்கம் இரீஇயினர், கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத் திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத்தொன் பதின்மர் என்றும், அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டியர் என்றும், அவர் சங்கமிருந்து தமிழாராய்ந் தது உத்தர மதுரை என்றும் கூறப்பட்டுள்ளன. 'நாற்பத்தொன்பதின்மர் என்ப' என்றூற்போல, ஒவ் வொன்றும் 'என்ப' என்னும் வாய்பாட்டால் முடிக்கப் பெற்றுள்ளது.

இதன்கண், உக்கிரப் பெருவழுதி கடைச் சங்கத் திறுதியில் இருந்தானுக அறுதியிட்டுரைக்கப்படுதலின், தமிழிலக்கிய ஆராய்ச்சியில் இவன் பெயர் ஒருதலை யாகக் குறிக்கற்பாலதொன்ருகும். இவன் கடைச் சங் கத்தின் இறுதியில் இருந்தவன் என்னவே, சங்கச் செய்யுட்களைப் பாடிய புலவருள்ளும், அவரால் பாடப் பட்ட அரசர், குறுநில மன்னர் முதலாயினுருள்ளும் பெரும்பாலார் இவனுக்கு முற்காலத்திலும், சிலர் நிகழ் காலத்திலும் விளங்கினர் என்பது போதரும். ஈண்டு

இவ்வாறாய இவனது காலத்தின் பின்மையைக் குறித் தற்குப் பிற சான்றுகளும் உளவோ என ஆராய்தல் தக்கது. இவ்வேந்தன் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய அகநானூறு என்னும் நெடுந் தொகையைத் தொகுப் பித்தவன் என்று தெரிதலின், அதிலுள்ள பாட்டுக்கள் அனைத்தும் பாடப்பெற்ற பின்னர் இவன் வாழ்ந்திருந் தனன் என்பது ஒருதலை. எனவே, இவனும், இவனோடு ஒத்த காலத்தினரான **சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி** என்னும் அரசர்களும் **ஐயூர் மூலங்கிழார், உலோச்சனார், பாண்டரங்கண்ணனார்** முதலிய புலவர்களும் விளங்கிய காலம் கி. பி. இரண் டாம் நூற்றாண்டின் கடைப்பகுதி என்று கொள் ளுதல் பொருத்தமாகும். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன். இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் முதலிய அரசர்களும். நக்கீரனார், மருதனிள நாகனார், கூடலூர் கிழார், மாங்குடி கிழார் முதலிய புலவர்களும் சிறிது முன்னாக, கி. பி. இரண் டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தனராதல் வேண்டும். ஔவையார் உக்கிரப் பெருவழுதியையும் அவனுடன் ஒருங்கிருந்த மாவெண்கோ, பெருநற் கிள்ளி என்னும் சேர, சோழ மன்னர்களையும் பாடியுள்ள ராதலின், அவரும் அவர்கள் காலத்திருந்தவராவர். ஆயின், அவர் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடியிருப்பதுடன் தாம் பரணர் காலத்தில் இருந்தமை யைக் குறிப்பிடுதலானும், அவர் நீண்ட வாழ்நாள் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்றுண்மையானும், அவரது காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் கடைப் பகுதி தொடங்கி இரண்டாம் நூற்றாண்டின் கடைப் பகுதிகாறும் ஆகும் என்னலாம்.

இனி, அகநானூற்றைத் தொகுப்பித்தோன் உக்கிரப் பெருவழுதியாக, அதனைத் தொகுத்தவர் உப்பூரி குடி கிழார் மகனார் உருத்திரசன்மர் எனப்படுதலானும்,

இறையனுர் களவியலுரையும் அவராற் கேட்கப்பட்ட தென்பது வரலாறு ஆதலானும், திருக்குறள் மாண்பை யும், திருவள்ளுவர் பெருமையையும் கிளந்தெடுத் துரைக்கும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களில் உக்கிரப்பெருவழுதி பாடியதும் ஒன்ருகவிருத்தலானும், களவியலுரையின் தோற்றத்தோடும், திருக்குறள் அரங்கேற்றத்தோடும், அவ்வேந்தர்க்கு இயைபுண்மை புலனுகின்றது. திருவள்ளுவ மாலைச் செய்யுட்கள் பற்றிய கொள்கையில் இக்காலத்தே சிலர் மாறுபட்ட கருத்தினராகின்றனர். களவியலுரை உருத்திரசன் மராற் கேட்கப்பட்டது பற்றியும், திருக்குறள் அரங் கேறியது பற்றியும் வழங்கும் கதைகளை அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. திருவள்ளுவ மாலையின் தொடக்கத்திலுள்ள இரு செய்யுட்களையும், அவை பற்றிய கதைகளையும் கழித்துவிட்டு, 'முப்பால்' பாண்டியன் அவைக் களத்தே அரங்கேற்றப்பெற்ற தென்றும், அப்பொழுது உடனிருந்து கேட்ட புலவர் பலரும் அதனைப் பாராட்டினரென்றும் கொள்வதில் இழுக்கொன்றுமில்லை. திருவள்ளுவ மாலையில் வரும் 'வைவைத்த கூர்வேல் வழுதி', 'தாதவிழ் தார்மாற', 'வாளார் நெடுமாற' என்னும் தொடர்கள் அவை பாண்டியன் முன்னர்ப் பாடப்பட்டன என்பதற்குச் சான்ருகும். 'குலபதி நாயனுர்' என்ருற்போலும் சில பெயர்கள் எழுதுவோரால் திரிபுற்றிருத்தல் கூடும். கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் சிறிது முற்பட்ட காலத்தே விளங்கினமை புலப்படினும், உக்கிரப் பெரு வழுதி ஆட்சியெய்திய காலம் வரை அவர்கள் வாழ்ந் திருந்து, திருக்குறள் அரங்கேறிய ஞான்று அதனைப் புகழ்ந்துள்ளனர் என்று கோடல் பொருத்தமேயாகும். மாறுபட்ட கருத்தினர் கூறும் வேறு சில ஏதுக்கள் இக்கொள்கையை மாற்றும் வலியுடையனவல்ல.

இனி, உக்கிரப் பெருவழுதி என்னும் பெயர், 'கானப் பேரெயில் கடந்த' என்னும் அடைமொழியுடன்

சேர்த்தும் வழங்கப்படுகின்றது. கானப்பேர் என்பது தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினுன்கனுள் ஒன்று; இப்பொழுது காளையார் கோயில் என வழங்கப்பெறுவது. கடைச் சங்க நாளில் இஃதொரு பெரிய அரணுகவும், வேங்கை மார்பன் என்பானுக்குரியதாகவும் இருந்தது. இவ் வரசன் அவனை வென்று அதனைக் கைப்பற்றிய சிறப்புப் பற்றியே 'கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெரு வழுதி' என வழங்கப் பெற்றனன். இவ்வேந்தனது அவ் வெற்றியை ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவர் ஒரு செய்யுளில் (புறம்-21) வியந்து பாராட்டியுள்ளார். அதில், அவ்வரணனது மிக ஆழமாகிய அகழியையும், வானுற நிவந்த மதிலையும், மரங்கள் மிக அடர்ந்த மாவற் காட்டினையும் உடையதாய், அணுகுதற்கரிய சிற்றரண்களாற் சூழப்பட்டிருந்தது என்றும், அதனைக் கொல்லன் தீயில் மாட்டிய இரும்புண்ட நீரினும் மீட்டற் கரிதென்று கருதி வேங்கை மார்பன் இரங்குமாறு, இவன் வென்று பற்றினன் என்றும் கூறப்பட்டுள்ளன. பாடுவார் அறிவின் எல்லையைக் கடந்த புகழமைந்தவன் என்றும், புலவராற் பாடப்படும் போர்த் துறைகளை முடித்த வெற்றியுடையவன் என்றும் இவன் புகழப் பட்டுளான்.

இனி, இவனுக்கு முன் விளங்கிய தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் முதலா யினோர், சேர, சோழ மன்னர்களோடு பகைமை பூண்டு போர் புரிந்தாராக இவ்வரசனே அவர்களோடு நண்பு பூண்டிருந்தனன். இவனும், கோமான் மாவெண் கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி யும் ஒருங்கிருந்தபொழுது ஔவையார் இவர்களை வாழ்த்திய செய்யுளொன்று புறநானூற்றில் உள்ளது. அதில் இம்மூவர்க்கும் அந்தண ரோம்பும் முத்தீ உவமையாகக் கூறப்பெற்றுளது. உலக முழு தாளும் செல்வமும் ஓரிடத்தே நிற்பதன்றாகலின்,

வரைந்த நாளெல்லாம் இன்பந் துய்த்தும், அறம் புரிந்தும் வாழவேண்டும் என்றும், 'வாழச் செய்த நல் வினையல்லது ஆழுங்காலைத் துணைபிறிதில்லை' என்று அறிவுறுத்தலும், வானத்து மீனினும் மழைத் துளி யினும் பல காலம் அவர்கள் வாழவேண்டுமென்று வாழ்த்துதலும் அமைந்துள்ளன.

இங்ஙனம் புலவர் பாடும் புகழுடையனுய இவ் வேந்தன் புலமையினுலும் சிறந்தா னுவன் என்பது முற்கூறிய வரலாறுகளானே போதரும். இவன் பாடிய செய்யுட்கள் அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் உள்ளன.

"நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான் முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—நூன் முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி"

என்னும் திருவள்ளுவ மாலைச் செய்யுள், தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பாலும், திருக்குறள் மேலும் இவ்வரசர் பெருந்தகைக்குள்ள எல்லையில்லா மதிப்பைத் தெள்ளிதிற் புலப்படுத்தா நிற்கும்.

---

11. இலங்கைத் தீவில் ஏழுநாள்

வித்துவான் சா. சுந்தரனுர்

1957-செப்டம்பர்த் திங்கள் 22 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7-15 மணிக்கு இந்தோ சிலோன் விரைவுப் புகைவண்டியில் எங்கள் இன்பச் செலவுக் குழு, (சென்னை, திருப்பவுல் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்) சென்னையை விட்டுப் புறப்பட்டது. குழுவினர் எண்ணிக்கை 39.

23-9-57 பகல் 1-மணியளவில் எங்கள் புகைவண்டி தனுக்கோடியை அடுத்த 'மண்டபம்' என்னுமிடம் சென்று சேர்ந்தது. மண்டபத்தில் நாங்கள் அனைவரும் இறங்கிச் சுகாதார அலுவலரின் ஆய்வுப் பார்வை பெற்றேம். பிறகு மாலை 3 மணியளவில் தனுக்கோடி முனையில் அமைந்த கப்பல் துறையை அடைந்தோம்; கப்பலில் ஏறினேம். அங்குள்ள அலுவலர்கள் எங்கள் அனுமதிமுறி, இசைவுமுறி முதலியவைகளை ஆய்ந்து பார்த்துக் கப்பலில் அமருமிடத்திற்குச் செல்ல விட்டனர். பெரும் படகு என்று சொல்லக்கூடியவாறு அளவில் சிறியதாயிருப்பினும் கப்பலுக்குள்ள எல்லா அமைப்புக்களையும் அது பெற்றிருந்தது. மாலை 5 மணியளவில் புறப்பட்ட அச்சிறு கப்பல் அன்னம்போல் ஊர்ந்து சென்று 20 கல் தொலைவுள்ள கடற் பகுதியை இரண்டு மணி நேரத்தில் கடந்தது.

23-9-57 திங்கள் இரவு 9 மணிக்கு இலங்கைத் தீவில் (தலைமன்னர் துறையில்) இறங்கிய நாங்கள் 30-9-57 திங்கட்கிழமை இரவு மணி 8-30-க்கு இலங்கைத் தீவினின்றும் திரும்பிவிட்டோம். ஆக நாங்கள் இலங்கையில் கழித்த நாட்கள் ஏழாகும். அவ்வேழு நாட்கள் இலங்கைத் தீவைக் காணுவதற்குப் போதா.

நிற்க, எங்கள் இலங்கைச் செலவிற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மோட்டார் வண்டி கொழும்பு நகரத்திலிருந்து வந்து தலைமன்னரில் காத்திருந்தது. நாற்பத்தைவர் பொதுவாக அமரக்கூடிய வசதி யுடையது அவ்வண்டி. நாங்கள் முப்பத்தொன்பதின் மரே யாதலின் வசதியாக இடம் கிடைத்தது. அன்று இரவே புறப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கி எங்கள் வண்டி செல்லலாயிற்று. தலைமன்னருக்கும் யாழ்ப் பாண நகருக்கும் இடைப்பட்ட தொலைவு 120 கல். நிலவு இல்லாத இரவுக் காலமாதலின் வழிக்காட்சி நன்கு புலனாகவில்லை. காலை 6 மணிக்கெல்லாம் யாழ்ப் பாண நகரையடைந்தோம்.

யாழ்ப்பாணம் இலங்கைத் தீவின் வடபகுதிக்குத் தலைநகராகும். தமிழர்களே அப்பகுதியின் குடிமக்களிற் பெரும்பான்மையினர். ஆயினும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாழ்க்கைப் போக்குப்பற்றி நாங்கள் ஏதும் அறிய முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் நாங்கள் தங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் திரு. யோவான் கல்லூரியாகும். காலையில் நீராடல் முதலிய கடமைகளை முடித்துக்கொண்டு அவரவர் தனிப்பட்ட முறையில் நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம். சென்னை நகரத்திலிருந்து சென்ற எங்களுக்கு யாழ்ப் பாண நகரம் எவ்வகையிலும் வியப்பூட்டக் கூடியதா யில்லை. யாழ்ப்பாண நகரம் மாத்திரமேயன்றி இலங் கைத் தீவின் வேறு எந்த நகரமும் சென்னை நகரத்தை விஞ்சக்கூடியதன்று (கட்டிட வகையில்) என்பதைப் பின்னர்க் கண்டோம்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கி னோம். காணத்தக்க புதுமையொன்றும் தென்பட வில்லையே என்று சலிப்புடன் சென்றுகொண்டிருக் கையில் கறிக்காய் கடைச் சூழல் சிறிது கண்ணைக் கவர்ந்தது. மூன்றடி நீளமுள்ள முருங்கைக்காய், ஆறடி நீளப் புடலங்காய், ஓரடி நீள வெண்டைக்காய்,

தேங்காய் அளவுள்ள கத்தரிக்காய் ஆகியவை ஓரளவு எங்கள் கண்களுக்கு விருந்துக் காட்சி நல்கின. தாக மெடுத்தவர்கள் தண்ணீர் அருந்தக் குழாயை நாடிச் சென்றனர். எங்குச் செல்லினும் நன்னீர் இல்லை. கிட்டத்தட்ட அனுராதபுரம் வரையிலும் நல்ல உண்ணீர் கிடைத்தலரிதாகவே இருந்தது. அனுராத புரத்தைக் கடந்த பிறகுதான் உண்ணீரும் சிறந்த தாகக் கிடைத்தது. உள்ள நீர்மையும் சிறந்து மலரத் தொடங்கிற்று-

மாலை 3 மணிக்குப் புறப்பட்டு இலங்கைத் தீவின் வடமுனையைக் காணச் சென்ரேம். இடையே கழிந்த முப்பது கல் தொலைவும் பனஞ்சாலைக் காட்சியன்றி வேறு பசுமைக் காட்சி புகையிலைத் தோட்டக் காட்சி யாகும். இலங்கைத் தீவின் வடமுனையீதென்பதன்றிக் குறிப்பிடத்தக்க அமைப்பேதும் அப்பகுதியில் இல்லை. யாழ்ப்பாணத்தின் வடபகுதி திருநெல்வேலி மாவட் டத்தின் தென் பகுதியைப் போலுள்ளது. அதிலும் குறிப்பாகத் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர்க் கிடைப்பட்ட பகுதி போன்றதென்று சொல்ல வேண்டும். ஓரளவு செம்மை கலந்த மணற்பரப்பு; பனங்காடு.

25-9-57 புதன்கிழமை வைகறையில் யாழ்ப்பாண நகரைவிட்டு அனுராதபுரத்தை நோக்கிச் செல்லலா னேம். காலைச் சிற்றுண்டிக்குக் ‘ கிளிநொச்சி’ என்னு மிடத்தில் சென்று நின்ரேம். கிளிநொச்சி நெடுஞ் சாலையிடையே அமைந்த ஒரு சிற்றூர். அது சோழ நாட்டுச் சிற்றூர் ஒன்றை நினைப்பூட்டக்கூடியதா யிருந்தது. கிளிநொச்சியை விட்டுப் புறப்பட்டுப் பகல் 12 மணியளவில் அனுராதபுரத்தை அடைந்தோம். அனுராதபுரம் ஒரு காலத்தில் இலங்கைத் தீவுக்குத் தலைநகரமாயிருந்தது. இப்பொழுது பாழடைந்த அரண் மனையின் சின்னங்கள் நகரின் ஒருபுறத்தே காணப்படு கின்றனவாம்.

அனுராதபுரம் சென்று சேர்ந்ததுமே இலங்கைத் தீவின் சமய ஆதிக்கம் புலப்படலாயிற்று. பார்க்குமிட மெங்கும் புத்தமதச் சின்னங்கள் காட்சி வழங்கு கின்றன. புத்தரின் நினைவுச் சின்னம் 'தகோபா' என்று சொல்லப்படுகின்றது. புத்தரின் பல்லோ, நகமோ, எலும்போ வைக்கப்பட்டுள்ள இடமே 'தகோபா' என்னும் பெயரால் குறிக்கப்படுகின்றது. இத்தகைய தகோபாக்கள் பெரியவும் சிறியவுமாக அனுராதபுரத்தில் பலவுள்ளன. அதன் அமைப்பு, தாச்சுமகால் கட்டிடத்தின் மேல் விதானம் போலுள் ளது. தகோபாக்களை ஒட்டி அமைந்த புத்தப்பள்ளி களில் புத்தருடைய பல்வகை நிலைகளையும் விளக்கும் அழகிய ஓவியங்களும், சிலைகளும் இடம்பெற்றுள்ளன.

அனுராதபுரத்தில் அரைப்பகலையும், ஓரிரவையும் கழித்தோம். அதுவரையில் எங்கள் இன்பச் செலவு இன்பச் செலவாக இல்லை. 'பொலனருவா' என்னு மிடம் எங்கள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தது. காலச் சுருக்கங் கருதி அது கைவிடப்பட்டது. அனு ராதபுர மக்களிற் சிலர் நாங்கள் பொலனருவாவைக் காணுமற் செல்லுவது பெருங் குறையென்று கூறினர். ஆயினும் அஃது இயலவில்லை.

26—9—57 வியாழக்கிழமை வைகறையில் அனுராதபுரத்தைவிட்டுக் கண்டியை இலக்காக வைத்துப் புறப்பட்டோம். அனுராதபுரத்தைத் தாண்டத் தொடங்கியதும் அனைவர்க்கும் புத்துணர்ச்சி தோன்ற லாயிற்று. பத்துக் கணக்கான கல் தொலைவு பசுங் காட்டினூடே எங்கள் மோட்டார் வண்டி செல்ல லாயிற்று. காலைச் சிற்றுண்டி வேளைக்குச் 'சிகிரியா மலை' என்னும் வரலாற்றுத் தொடர்புடைய பெருங் குன்றமொன்றை அடைந்தோம். பசுங் காட்டுப் பகுதிக் கிடையில் அமைந்த அப்பெருங்குன்றம் அரியதோர் காட்சியாகத் திகழ்கிறது.

குன்றின் உச்சியை அடைவதற்குச் செங்குத்தான இரும்பு ஏணிப் படிகள் சிறிது தொலைவு அமைக்கப்பட்டுள்ளன. அதன்மேல் பாறை சிறிதளவு செதுக்கப்பட்டு இரும்புக் கைப்பிடி வேலியமைந்த நெறி வகுக்கப்பட்டுள்ளது. குன்றத்தின் உச்சியை அடைவதற்கிடையில் சிலவிடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட பாறைகளில் 'அஜந்தா'க் குகை ஓவியப் பாணியில் சில ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஓவியங்கள் வண்ணச் சிறப்பாலும், வடிவ ஒப்பனையாலும் கண்டு மகிழத்தக்கனவாகவுள்ளன.

சிகிரியா மலைக்குச் சில கல் தொலைவில் 'தம்புலாக் குகை'க் கோயில்கள் அமைந்துள்ளன. ஒரு சிறு மலையின் அடிப்பகுதியைக் குடைந்து கோயிலாக்கியுள்ளனர். அக்கோயில் ஐந்து பகுதியாக அமைந்துள்ளது. ஒவ்வொன்றிலும் புத்த பிரானின் பல்வேறு நிலைகளைக் குறிக்கும் உருவச் சிலைகளும், புத்த சமய அடியவர் பலரின் உருவச் சிலைகளும் வண்ணக் கோலத்தில் அமைந்துள்ளன. சிலைகளின் முகபாவம் ஊன்றி உணர்ந்து இன்புறத்தக்கதாகக் காணப்படுகின்றது. புத்தரின் உருவச் சிலைகளுள் ஒன்று நாற்பத்தேழு அடி நீளமுள்ளது. அதைவிட இரண்டோர் அடி குறைவான ஒரு சிலையும் உள்ளது. இரண்டும் அரங்கநாதப் பெருமாளைப்போல் திருப்பள்ளிக் கோலத்தில் காட்சியளிக்கின்றன.

தம்புலாக் குகையைத் தாண்டியவுடன் காட்டுப் பகுதிகளுக்கு மாருகச் சோலைச் சூழல்கள் எதிர்ப்படலாயின. பசுமைக் காட்சி பெருகலாயிற்று. தென்னை வாழை கமுகஞ்சோலைகள், இரப்பர்த் தோட்டங்கள் ஆகியவைகளும் அவற்றிடையே அமைந்த சிற்றூர்களுமாக வழி கடந்துகொண்டேயிருந்தது. பகல் 12 மணியளவில் 'மாத்தளை' என்னும் ஊருக்கிடையே சென்று எங்கள் மோட்டார் நின்றது. சாலையோரத்திலமைந்த வீடொன்றில் வாழ்ந்துவரும் தமிழ்க் குடும்ப

மொன்று எங்களைக் கண்டவுடன் முகமலர்ந்து வரவேற்க முன்வந்தது. எங்கள் குழுவைச் சேர்ந்த ஆசிரிய மகளிர் அக்குடும்ப மகளிரால் முகமன் செய்யப்பெற்றனர். மாத்தளையில் ஒரு சிறு பாறையின் மேல் புத்தர்க்குச் சிறு கோயிலொன்றமைந்துள்ளது. புத்தருடைய அறிவுரைகள் நூல் வடிவில் எழுதப்பட்ட இடம் அஃதென்று சொல்லக் கேட்டோம்.

மாத்தளையைத் தாண்டியதும் பெருஞ்சோலைகளும், நீர்நிலைகளும் எதிர்ப்படலாயின. அதுவரை இலங்கைத் தீவில் ஆற்றைக் காணாத எங்கள் கண்முன் ஆறொன்று குறுக்கிட்டது. 'மாவலி கங்கை' என்னும் ஆறு அஃதென அறிந்தோம். கண்டியை நெருங்க நெருங்க வெயிலின் வெம்மையே சிறிதும் தோற்றாத அளவுக்குப் பசுஞ் சோலைச் சூழல் பரப்பினை யாங்கள் காணலாயினோம். பசுஞ் சோலைச் சாலைக்கிடையே ஆங்காங்குப் பொறிக்கப்பெற்றிருந்த தமிழ் அறிவிப்புக்கள் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கலாயின. 'படு முடக்கு—கவனமாய்ச் செல்லுக.' 'மரண அபாயம்.' 'நெடுஞ்சாலை குறிக்கிடுகின்றது ; நிதானி.' என்பன போன்றவை அவற்றுள் சிலவாகும்.

சோலையை ஊடுருவிக்கொண்டு சாலை செல்லலாயிற்று. சாலையில்தான் எத்தனை விசித்திர வளைவுகள் ! சாலையின் போக்கே சுவையூட்டக்கூடியதாயிருந்தது. பகல் 1-30 மணியளவில் சோலையைத் துளைத்துக்கொண்டு செல்லும் சாலையைத் தொடர்ந்து கண்டி நகரம் புக்கு உணவு நாடிக் கடைவீதியொன்றில் நின்றோம். உணவு கொண்டதும் கண்டியில் அமைந்த மாபெருஞ் சோலையைக் காணச் சென்றோம். 'பேர்தேனியோ பூந்தோட்டம்' என்பது அச்சோலையின் பெயர். அச்சோலையில் அமைந்த வண்ண மலர்ச் செடிகளும், வானுற வோங்கி வளர்ந்த விந்தையான பல்வகை மரங்களும் கண்ணையும் கருத்தையும் கவரலாயின. அச்சோலை முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு

ஒரு முழுநாள்கூடப் போதாது. எங்களுக்கிருந்த நேரம் இரண்டு மணியளவேயாகும். ஆதலின் ஒரு பகுதியே எங்களால் பார்க்க முடிந்தது. அச்சோலையின் பரப்பளவு 150 ஏக்கர். அச்சோலையின் மூன்று பக்கங் களைத் தழுவிக் கொண்டு செல்லும் 'மாவலி கங்கை யாறு' அச்சோலைக்குத் தனிப்பெருஞ் சிறப்பினைத் தருகிறது. அவ்வாற்றைக் கடப்பதற்கு ஊஞ்சற்பாலம் ஓரிடத்தில் அமைக்கப்பட்டு அதனில் தொங்கு பூந் தோட்டம் வளர்த்துள்ளனர். அவ்வூஞ்சற் பாலத்தின் மூலம் ஆற்றைக் கடந்து மறுபுறஞ் சென்றோம். எங்களிற் சிலர் மாவலி கங்கையாற்றிற் குளித்துக் களித்தனர்.

அச்சோலையின்கண் மரஞ்செடி கொடிகள் காட் டில் இயற்கையாக வளர்ந்து கிடப்பனபோல் அத் துணைச் செழுமையாகவுள்ளன. அவை நிரை நிரை யாகவும் பலவகை வடிவ அமைப்பிலும் ஒழுங்கு செய் யப்பட்டிருக்கும் காட்சி ஒப்பரிய காட்சியாகும். எங்கள் இன்பச் செலவில் கழித்த நேரம் போதாதென்று எண்ணக்கூடியவாறு உணர்ச்சியூட்டத் தொடங்கிய முதலிடம் அதுவேயாகும். அதிலிருந்து படிப்படியாக அவ்வுணர்ச்சி பெருகலாயிற்று. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தமது, 'எனது இலங்கைச் செலவு' என்னும் நூலில், 'கண்டி கண்டின்புறத்தக்க இடங் களுள் ஒன்று,' என்று குறிப்பிட்டுள்ளார். ஆம்; அஃ துண்மையே. கண்டி நகர் முழுவதுமே கண்ணுக்கு விருந்தாகக்கூடிய கவின் காட்சி வழங்குகிறது. நகரின் எப்பகுதியும் சோலையின் சூழலாகவே விளங்குகிறது. ஆயினும் நாங்கள் ஓரளவுக்காவது கண்டோம் என்று சொல்லக்கூடிய இடம் 'பெர்தேனியா பூந்தோட்டம்' ஒன்றேயாகும். பூந்தோட்டத்தினின்று திரும்பியபின் அவரவர் விருப்பத்திற்கிசைய நகரைச் சுற்றிப்பார்க்கச் சென்றோம்.

27—9—57 வெள்ளிக்கிழமை காலே கண்டியை விட்டுப் புறப்படலானேம். கண்டி நகரத்தைக் கடப்ப தன்முன் காலேயில் சிலவிடங்களேக் கண்டோம். பெர்தேனியா பூந்தோட்டத்திற்கு அடுத்தபடியாகக் கண்டியில் நாங்கள் கண்ட அரிய காட்சி ஓர் ஏரியின் காட்சியாகும். இருபுறம் செழித்து வளர்ந்த சோலேயாலும் ஒருபுறம் ஒழுங்குறவமைந்த சாலேயாலும் வளேக்கப்பட்டுள்ளது அவ்வேரி. ஏரிக்கரைச் சோலேகளுக்கிடையே வீடுகளும் காணப்படுகின்றன. அக்காட்சி பம்பாய், மலபார் குன்றுப் பகுதியை நினேப்பூட்டியது. ஏரியைக் காண்பதன் முன் புத்த பெருமானது பல் வைக்கப்பட்டுள்ள புனிதக் கோயிலொன்றைக் கண்டோம்.

முற்பகல் 10 மணியளவில் எங்கள் மோட்டார் கண்டி நகரத்தைக் கடக்கலாயிற்று. கண்டி நகர் தொட்டு கொழும்பு நகர் முகவாயில் வரை நாங்கள் சென்ற செலவே 'இன்பச் செலவு' என்னும் தொடரைப் பொருளுடைய தாக்கிற்று. கண்டி நகர்க்கும் கொழும்பு நகர்க்கும் இடைப்பட்ட தொலேவு ஏறக்குறைய எழுபத்தைந்து கல் அளவாகும். இவ்வளவு தொலேவும் இயற்கையன்னேயின் திருவோலக்கக் காட்சி தெவிட்டாத விருந்தாகவுள்ளது. காவிய உலகத்திற் புகுந்தாற் போன்றதோர் உணர்ச்சி சிலருக்குத் தெளிவாகவும் சிலருக்கு விளக்கமின்றியும் ஆனுல், விம்மிதம் தரும் வகையில் அனேவருக்கும் உண்டாயிற்று. இவ்விடைவழிச் செலவொன்றிற்காகவே நாம் இன்பச் செலவு மேற்கொள்ளுவது சாலப் பொருந்துவதாம் என்றனேவரும் எண்ணலாயினர். பம்பாய்ச் செலவில் பூனு நகருக்கும் பம்பாய்க்கும் இடைப்பட்ட வழிச்செலவு ஒருவாறு இதை நிகர்க்குமெனலாம். அவ்வழிக் காட்சி கவிஞர்களாலன்றி ஏனேயோரால் தெளிவுற விளக்கலாகாச் சீரிய காட்சியாகும். "எந்தப் பக்கத்தையும் மறைக்கும் வரைகள் ;

அங்குப் பாடித் திரிந்து வரும் நதிகள்," எனப் பாரதியார் கூறிய கற்பனைக் காட்சியை நாங்கள் கண்ணெதிரே கண்டோம். பசுமலைப் பரப்பு—அப்பரப்பில் அணி அணியாகச் செறிந்து வளர்ந்த மரவகைகள், செடிகொடிகள், இடையிடையே அருவிகள், சுனைகள், அம்மலையின் அமைப்பில்தான் எத்தனை விதங்கள், சீறிப்பாயும் சிங்கங்கள், சேர்ந்து மேயும் ஆடுமாடுகள், யானைத் தொகுதிகள், அரண்மனைகள், ஆலயங்கள் போன்ற பற்பல காட்சிகளைத் தோற்றுவிக்கும் பாறைகள் அம்மலைப் பரப்பின் பல பகுதிகளில் விந்தையாக அமைந்துள்ளன. கண்டியிலிருந்து 'நூரேலியா. என்னும் இடம்வரை மேல்நோக்கி வட்டமாகச் சாலை வளைந்தும் நெளிந்தும் செல்லுகிறது. வட்டமாகச் செல்வதால் எதிர்ப்புறக் கீழ்ப்பகுதியில் கடந்த சாலை எங்கள் கண் முன்னே நன்கு தோற்றுகிறது. அது பசுங்காட்டினூடே சால மிகப் பெரிய பாம்பொன்று நெளிந்து வளைந்து படுத்திருப்பது போன்று காட்சி தருகிறது.

இத்தகு சாலைக்கிடையே ஆங்காங்குச் சிற்றூர்களும், சிறு நகரங்களும் பல அமைந்துள்ளன. மலைப் பகுதியில் அமைந்த ஊர்கள் பெரும்பாலும் தூய்மையும் நன்னீரும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சில இடங்களில் இரண்டு மோட்டார் வண்டிகள் எதிரெதிர் எளிதில் கடக்க இயலாதவாறு சாலை குறுக்கமாகவுள்ளது. அத்தகைய இடங்களில் ஏதேனும் ஒரு வண்டி பின் செல்லவேண்டி நேரும். முன்னதாகத் தெரிந்திருந்தால் சாலையோரத்தில் உட்புறமாக ஒதுங்கிக்கொள்ளும். மோட்டார் சாரதி சிறிது அயர்ந்தால் உயிர்க்கிறுதி பயக்கக்கூடிய இடையூறு நேர்வது திண்ணம். இவ்வகையில் இச்சாலைச் செலவு காட்சியின்பத்திற்கு நிகரான கடும்பேரச்சமும் தரக்கூடியதாகவுள்ளது. படுமுடக்கான ஓரிடத்தை எங்கள் மோட்டார் கடந்தபோது எதிர்த் திசையில் ஒரு சிறு

மோட்டார் எச்சரிக்கையின்றிச் சாலையில் எதிர்ப் பட்டது. எங்கள் வண்டி மலையோரத்திலும் எதிர்வண்டி பன்னூறடிப் பள்ளத்தாக்கின் ஓரத்திலுமாக எதிர்ப் பட்டன. மோதியிருந்தால் அச்சிறு மோட்டார் சுக்கு நூறுகப் பாதாளம் போன்ற பள்ளத்தாக்கில் தூக்கி யெறியப்பட்டிருக்கும்; எங்களில் சிலருக்கும் இறுதி நேர்ந்திருக்கும். ஆனுல், எங்கள் சாரதியின் திறமை யால் அவ்விபத்துத் தவிர்க்கப்பட்டது. அனைவரும், மெய்சிலிர்க்க ஆண்டவனருளை வாழ்த்தலானேம். இது நிகழ்ந்தது மறுநாள் ‘ஆட்டன்’ நகரத்தருகில்.

மாலை 3 மணியளவில் ஐரோப்பாவின் ஒரு சிறு கூறெனத் தக்க மாண்பு வாய்ந்த ‘நூரேலியா’ என்னும் மலையுச்சி நகரத்தை அடைந்தோம். நூரேலியா சிறு நகரமாயினும் செப்பமுறவமைந் துள்ளது. சிறந்த குதிரைப் பந்தய வெளி ஒன்று ஆங்கண் உள்ளது. நூரேலியாவில் முன்னைய இடங்களைக் காட்டிலும் தரத்தில் உயர்ந்த உணவு கிடைத்தது.

நூரேலியாவில் அமைந்த பூந்தோட்டம் காணச் சென்றேம். செழித்து அடர்ந்து இயற்கைக் காடு போன்று எழில் பெற்றிலங்குகின்றது அப்பூந் தோட்டம். ஆனுல், கண்டி நகரத்துப் பூந்தோட்டம் போன்று அத்துணை ஒப்பனை உடையதாயில்லை. நூரேலியாவை அடுத்த பகுதிதான் சீதம்மா சிறை யிருந்த இடமென்று எங்கள் மோட்டார் வழி நடத்து வோர் கூறினர்.

அந்திமயங்கும் நேரத்தில் நூரேலியாவை விட்டுத் தாண்டலானேம். அன்று இரவு நாங்கள் சென்று சேரவேண்டிய இடம் ‘ஆட்டன்’ என்னும் நகரம். அவ்விடம் இன்னும் முப்பது கல் தொலைவுக்கு மேலிருந்தது. இதுவரை மலைப்பகுதியின் பகற் காட்சி யைக் கண்டு களித்த எங்களுக்கு இரவுக் காட்சியைக்

காணக்கூடிய செவ்வி கிடைக்கலாயிற்று. மாலையில் ஓரிடத்தில் தேநீர் அருந்தி விட்டு எங்கள் செலவைத் தொடர்ந்தோம். நிலவு இல்லாத இரவுக் காலம், ஒரு பக்கம் பயங்கரப் பள்ளம்; மறுபக்கம் மலைப்பாறை. இவ்வாருன அச்சாலையில் இரவுப் பொழுதிலும் 15 கல் தொலைவுக்குக் குறையாத வேகத்தில் எங்கள் மோட்டார் வண்டி சென்றுகொண்டிருந்தது. மலைமேல் ஆங்காங்குத் தேயிலைத் தோட்டச் சூழலைச் சார்ந்த ஊர்கள் உள்ளன. அவை ஒன்றன்பின் ஒன்ருக விளக் கொளி காட்டி விந்தை யூட்டிக்கொண்டிருந்தன.

இரவு 9 மணியளவில் மலையிறக்கு முகத்தில் அமைந்த ஆட்டன் நகரம் சென்று சேர்ந்தோம். ஆங் கமைந்த ஆட்டன் மாநிலக் கல்லூரி ஆசிரியக் குழுவினரால் வரவேற்கப் பட்டோம். சிங்களவர், தமிழர் என்னும் ஈரினத்து ஆடவரும் மகளிருமாகிய ஆசிரியக் குழுவினர் தாமே உணவு பரிமாறி எங்களை உபசரித்த தகைமை எங்கள் உள்ளத்தை நெகிழ் வித்தது. எங்கள் இன்பச் செலவில் இலங்கைத் தீவின் மக்களோடு தொடர்பு கொள்ளக் கிடைத்த முதல் வாய்ப்பு இதுவேயாகும். இரவுப் பொழுதை ஒரு தேயிலைத் தோட்ட முதல்வரின் மாளிகையில் கழித் தோம். கம்பளிப் போர்வை தேவைப்படுமளவிற்குக் குளிர் இருந்தது. நூரேலியாவில் தாங்க முடியாத குளிராயிருக்குமென ஊகித்துக் கொண்டோம்.

அடுத்த நாள் 28—9—57 சனிக்கிழமை காலை ஆட்டன் நகரத்தை விட்டுப் புறப்பட்டோம். பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு நகரத்தை அடைந்தோம். மலைப்பகுதியை விட்டுத் தரைப்பகுதிச் சாலையில் இருபது கல் தொலைவு சென்று கொழும்பு நகரத்தை அடைந்தோம். கொழும்பு நகரம் செல்லும் வரையில் பசுமைக் காட்சி தொடர்ந்துள்ளது.

கொழும்பு நகரத்தை அடைந்தவுடன் எங்கள் இன்பச் செலவு முற்றுப் பெற்றுவிட்டதென்றே

கூறலாம். ஏனெனில், கொழும்பு நகரத்தில் காணத்தக்க வியத்தகு காட்சியொன்றுமில்லே. கடற்கரைச் சிறப்பில்லாதது, கடைத்தெரு சென்னேயிலுள்ள (Moore Market) மூரங்காடி நீண்டமைந்தாற்போன்றுள்ளது. கொழும்பு நகரத்தில் மூன்று விதமான ஊர்திகள் நகருக்கிடையில் செல்லுகின்றன. அவை மின்சாரக் கம்பியின் தொடர்பால் ஓடும் மோட்டார், (இது 'திராலி பஸ்' என்று சொல்லப்படுகின்றது.) சென்னேயிலிருந்து எடுபட்டது போன்ற திராம் வண்டி, சாதாரண மோட்டார், பஸ் ஆகியவையாகும்.

கொழும்பு நகரத்தில் நாங்கள் தங்கியிருந்த பகுதி 'கொட்டாஞ்சேனே' என்பது. இப்பகுதி, தமிழர்களே மிகுதியாக வாழக்கூடிய இடமாதலின் எங்கட்கு அயல் நாட்டில் இருப்பதாகவே தோன்றவில்லே. அன்றியும், இலங்கைத் தீவு முழுமையும் தமிழ் பேசிக்கொண்டே செல்லக்கூடியவாறு எங்கும் தமிழ் பரவியுள்ளது.

கொழும்பு நகரத்தில் கழித்த நாட்கள் இரண்டரை. இவற்றில் ஒன்றரை நாட்கள் கடைகட்கு விடுமுறை நாளாகும். அவ்வொன்றரை நாட்களும் நகரின் சில பகுதிகளேச் சுற்றிக் கண்டோம். சாலேகள் சென்னே யைக் காட்டிலும் தூய்மையாகவுள்ளன. மோட்டார், பஸ் முதலியவற்றில் பொறுப்பாளராக (கண்டக்டர்) வுள்ள புத்தமதத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் மிக அன்பாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ளுகின்றனர்.

30—9—57 திங்கட்கிழமை முழு நாளும் மலிவுப் பொருட்கள் வாங்குவதிலேயே கழிந்தது. கொழும்பு நகரத்தில் உணவு, சிற்றுண்டி முதலியவை இலங்கை யின் ஏனேய பகுதிகளேக் காட்டிலும் தரத்தில் சிறந்துள்ளன. சென்னே உணவுக்கு நிகரான உணவும் சில பகுதிகளில் கிடைக்கின்றது. ஆனல், காஃபி எங்குமே சிறந்ததாகக் கிடைக்கவில்லே.

கொட்டாஞ்சேனையில் நாங்கள் ஒரு கிறித்தவக் கோயிலைச் சார்ந்த கல்லூரியில் தங்கியிருந்தோம். அப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் எங்கட்கு ஒரு வேளைக் காலைச் சிற்றுண்டியளித்து அன்பு காட்டினார்கள்.

இலங்கைத் தீவிலுள்ள மக்களின் குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஆகியவற்றைக் காணும் வாய்ப்பு எங்குமே எங்களுக்குக் கிடைக்கவில்லை. சிங்களவ மக்களில் ஆடவர் வங்காளியர் போன்றுள்ளனர்; மகளிர் மலையாள மகளிர் போன்றுள்ளனர். ஆனால், மலையாள மகளிர் அளவு தூய்மை அவர்களிடம் தோன்றவில்லை. மகளிர் மேலாடையின்றிக் கஞ்சுகம் மாத்திரம் அணிந்துள்ளனர்.

கொழும்புநகர் முதன்மைப் புகைவண்டி நிலையம் சென்னையிலுள்ள முதன்மை நிலையத்தை ஏறக்குறைய ஒத்ததாகவுள்ளது. அறிவிப்புக்கள் தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் உள்ளன.

30—9—57 திங்கள் 8-30 மணிக்குக் கொழும்பு முதன்மைப் புகைவண்டி நிலையத்தில் புகைவண்டி ஏறி 1—10—57 செவ்வாய் இரவு 8 மணியளவில் மதுரை வந்து சேர்ந்தோம்.

2–10–57 புதன்கிழமை முழுதும் மதுரை நகரைச் சுற்றிக் கண்டு அன்று இரவு 8-30 மணிக்குப் புகைவண்டியேறி 3–10–57 வியாழன் காலை மணி ஏழுக்கு நலத்துடன் சென்னை எழும்பூரை அடைந்தோம்.

12. வீட்டிற் கலை

ஓவியக் கலைஞர்

திருவாட்டியார், சி. பெரியநாயகி அம்மையார்

கலை என்பது என்ன என்ற கேள்விக்கு எங்கும் விடை கிடைப்பது அரிதாயிருக்கிறது. கலை காணும் இடங்களிற் கருத்துக்கிசைவு காணப்படும்; கண்டோரைக் கவரும், உள்ளத்தில் உண்டாகும் கற்பனையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்திக் கவரச் செய்வதே கலை. அது அழகிய கதையிலே இருக்கலாம்; கவிதையிலே இருக்கலாம்; அல்லது ஓவியத்திலே, நாட்டியத்திலே, பேச்சிலே சாதாரண வாழ்க்கையிலே பரிணமிக்கலாம்.

சாதாரண வாழ்க்கையில் அல்லது வீட்டில் இந்தக் கலையைக் காண முடியுமா? ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வீட்டில்தான் வாழ்கிறான். ஆனால், எல்லா வீட்டிலும் கலை பரிணமிப்பதில்லை. கலை என்பது எங்கும் தோன்றுவதில்லை. இயற்கையில் கலை இருக்கிறது. ஏனென்றால், அது இறைவன் என்னும் கலைஞனின் படைப்பு. கலைஞன் எங்கிருக்கிறானோ அங்குத்தான் கலை உண்டு. ஆகவே, வீட்டிலே கலையுள்ளம் படைத்த ஒருவர் இருந்து உணர்ச்சியை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்தும் நிலையில் வாழ்ந்தால்தான் கலையைக் காணலாம். மனிதன் இறைவனாகிய கலைஞனால் படைக்கப்பட்டவன். அவன் கலையுள்ளம் படைத்தவனாகவே இருக்கவேண்டும். எல்லாருக்கும் கலையைப் பெருக்க வழியுண்டு. ஆனால் சோம்பல், சோர்வு என்னும் துர்ப்பழக்கங்கள் மக்களின் உள்ளத்தில் இக்கலை உணர்ச்சியை அவித்து விடுகின்றன. ஆகையால்தான் கலை சில வீடுகளில் மிளிர்கின்றது; சில வீடுகளில் காணப்படுவது இல்லை.

வீட்டின் அமைப்பிலே கலையை எங்தெந்த நிலையில் காணலாம் என்றால், வீட்டினுடைய உயரத்திலோ, அன்றிப் பருமையிலோ அன்று. கம்பீரமான தோற்றத்திலே கவர்ச்சிகரமான அமைப்பிலே கலையைக் காணலாம். அது பெரும்பாலும், கட்டுபவனுடைய கலை உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது.

வீட்டினுள் காணப்படும் கலைக்கு வீட்டுத் தலைவன் அல்லது தலைவிதான் பொறுப்பாளி. சிறப்பாகத் தலைவிதான் பொறுப்பாளி என்று கூடச் சொல்லலாம். முதலாவதாக வீட்டிலே அறைகளைச் சரியான முறையில் தெரிந்தெடுப்பதிலே கலை இருக்கிறது. சிலர் வசதியான முறையில் தேர்ந்தெடுத்திருக்கலாம், அதுவும் அவசியம். ஆனால், கலை அதில் இருக்க முடியாது. தேவையைப் பூர்த்தி செய்வதோடு, எந்த அழகுணர்ச்சியுடன் தேர்ந்து கொண்டாரோ அந்த உணர்ச்சி எதிரொலி ஆகும் முறையில் அறைகள் அமைத்தல் வேண்டும். ஒருத்தி தன் நெற்றியிலே பொட்டிட்டுக் கொள்கிறாள்; அதிலே எப்பொழுதும் கலை இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. மேல் நாட்டு உடை அணிந்த பெண்ணின் நெற்றியில் உள்ள திலகம் அழகை வெளிப்படுத்துவதில்லை. கரிய கூந்தல் தவழ்ந்தாடும் அழகிய நெற்றியிலே நம் நாட்டு உடைக்கு ஏற்பக் குங்குமத்தைத் தரித்துக் கொள்ளும் போது அங்கே கலையைக் காணலாம். அதுபோலத் தான் கலையழகு தோன்றும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறைகளிலே தேவையான பொருட்களை அமைப்பது.

சில வீடுகளிலே அழகிய வர்ணம் பூசப்பட்ட சுவர் விலையுயர்ந்த கம்பளம் விரித்த தரை, அழகிய சாமான்கள், விலையுயர்ந்த பொருட்களின் குவியல்கள் இவற்றைக் காணலாம். ஆனால், அங்கு வெண்மாவு கொண்டு கோலம் இடப்பட்ட முற்றத்தில் பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்ட ஒரு திண்ணையில் காணப்படும் கலை சில நேரம் காணப்படுவதில்லை. காரணம்,

அங்கேயும் பொருட்கள் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலோ, செல்வத்தின் பெருமிதத்தை வெளிக்குக் காட்டவேண்டிய அளவிலோ சாமான்கள் நிரப்பப்பட்டிருப்பதுதான். சாமான்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தில், முறையிலே ஆயினும், அழகு உணர்ச்சி தோன்றக்கூடிய வகையில், தேவைக்கு அவசியமான பொருட்களை இடத்திற்கு அமைந்தாற் போல வைப்பதுதான் கலை.

சாமான்களை இடத்திற்கேற்ப அமைப்பதில் கலை மிளிர்கின்றது என்றால், சாமான்களை பொறுக்கி எடுப்பதிலும் கலை காணப்படவேண்டும். விலை மலிவு என்ற காரணத்தைக் கொண்டோ, பெருமைக்காகவோ பொருளை வாங்கி நிரப்பினல் கலையைக் காண முடியாது. நம் அறையின் அமைப்பு என்ன ? அந்த அமைப்பிற்கேற்ப இப்பொருள் பொருந்துமா ? பொருந்துவதோடன்றி அழகு காணப்படுமா ? என்று உன்னிப் பார்த்துப் பயனுள்ள பொருட்களை வாங்குவதில் கலை இருக்கிறது என்று சொல்லலாம்.

உதாரணமாக, வீடு ஒரு நடுத்தரமான வீடு; போதுமான அறைகள்; வீட்டிலுள்ளவர்கள் படித்த நாகரிக வாழ்க்கையிலுள்ளவர்களுடன் பழகுகின்றவர்கள் என வைத்துக் கொள்ளுவோம். அவர்களுக்குத் தங்கள் நண்பர் வந்தால் அவர்களுடன் உட்கார்ந்து அளவளாவ ஒரு நல்ல அறை வேண்டும். அங்கே உட்காருவதற்கு ஒரு அழகான கட்டிலை வைத் திருந்தால் அது கலையன்று. தங்கள் தகுதிக்கு ஏற்ப சில நாற்காலிகள், அவற்ருேடு பொருந்தும் ஒரு சிறிய வட்ட மேசை, மேசையின் மீது விரிப்பு, அழகிய பூக்களைத் தாங்கி நிற்கும் ஒரு சிறிய செம்பு இவைகளை அமைக்கும் முறையில் அமைப்பதிலே கலை காணப்படுகிறது.

பல நிறப் பூக்களை எடுத்து, செம்பிலே தண்ணீர் விட்டு வைத்துவிட்டால் கலை அங்கே காணப்படு

வதில்லை. செம்பின் தோற்றம், பூக்களின் தோற்றம் இரண்டிற்கும் பொருத்தம் காணப்பட வேண்டும். ஒடுங்கி நீண்ட பூச்செம்பில் பருத்துத் திரட்சியாகக் காணப்படும் மலர்களைக் குட்டையான தண்டுகளுடன் வைத்தால் பொருந்தி நிற்கமாட்டா. அதுபோலவே, பருத்து விரிந்த செம்பில் நீண்ட தண்டுகளையுடைய மெல்லிய அல்லி போன்ற மலர்களை விட்டு வைத்தல் பொருந்தாது. நிறங்களையும் பார்த்தே அமைத்தல் வேண்டும். ஆகவே, கலை என்பது பொருட்கள் ஒன்றோடொன்று பொருந்தும் நிலையிலேதான் காணப்படும். மாலை என்றால், மதியமும், மலர்களும் தென்றலும் எவ்வாறு பொருந்தி வருகின்றனவோ, அமாவாசை என்றால், நள்ளிரவு, இடியின் முழக்கம், மின்னலின் பிளவு இவை எவ்வாறு பொருந்தி நிற்கின்றனவோ அவ்வாறு அறையின் தேர்வு, அமைப்பு, சாமான்கள், சாமான்களின் தேர்வு முதலியவை பொருந்தி இருக்க வேண்டும்.

நண்பர்களுடன் கூடிப் பேசும் அறையைத் தவிர வேறு பல அறைகள் தனித்தனி உபயோகத்திற்காக விட்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்தந்த அறையில் கலை எவ்வாறு பொலியும் என்று பார்க்கலாம். வீட்டிலே வாசிப்பு அறை ஒன்று இருக்கிறது. அதிலே கண்ணைக் கவரும் நூல்கள் நிரம்ப உள; அழகிய விளக்கும் உண்டு; மேலே மின்சாரக் காற்றாடியும் உண்டு. இவ்வளவு பொருட்கள் இருந்து விட்டால் கலை உண்டு என்று சொல்ல முடியுமா? அதுதான் இல்லை.

அந்த அறையினுட் செல்லும் ஒருவருக்கு உட்கார்ந்து புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்னும் உணர்ச்சி உண்டாகும் நிலையில் அந்த அறையில் பொருட்களை அமைத்து இருக்கவேண்டும்.

விளக்கு வாசிப்பதற்குப் போதுமான ஒளியை உடையதாக இருக்கவேண்டும். நடுவிலே அழகிய

மேசை, சுற்றிலும் நாற்காலிகள் வேண்டும். விரிப்புக் களோ, பூச்செம்புகளோ அத்தனை அவசியமில்லை. இங்கேயும் கலையைக் காணவேண்டும். எங்கே என்றால் அலமாரியிலே, அலமாரிகளை அமைத்திருக்கும் நிலையிலே, அதில் நூல்களை ஒழுங்காக, அழகாக, முறை தவறாமல் அடுக்கியிருக்கும் தகுதியிலே கலையைக் காணலாம். வீடு சிறியதாக இருக்குமானால், அதையே அலுவலக வேலைகளைச் செய்யும் ஓர் இடமாகவும் கொள்ளலாம். கலையழகு அதனால் குன்றி விடுவதில்லை. வைத்திருக்கும் முறை சரியானதாக இருக்கவேண்டும்.

படுக்கையறை ஒவ்வொரு வீட்டிற்கும் இன்றியமையாதது. நல்ல காற்றோட்டமான அறைகளே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இங்கே கட்டில் உபயோகிக்கப்படுமானால், அதனடியில் பெட்டியோ, மற்றச் சாமான்களோ வைக்கக்கூடாது. ஒரு சிறிய டிரெஸ்ஸிங் டேபிள், வார்டுரோப், அவசியமானால் உட்கார்ந்து வாசிக்க ஒரு சாய்வு நாற்காலி, அதற்கென ஒரு மேஜை விளக்கு—இவ்வளவு பொருட்கள் இருந்தால் சௌகரியம். ஆனால், அங்கேயும் அவைகளை உபயோகிக்கும் முறையில் கலையைக் காணலாம். படுக்கை விரிப்பிலே, தலையணை உறையிலே, கொசு வலையிலே கலையுள்ளம் தையலில் பரிணமிப்பதைக் காணலாம்.

பின்னர்ச் சாப்பாட்டு அறைக்குச் செல்லுவோம். அங்கே அவசியமான பொருள்கள் அவரவர் வழக்கத்திற்கேற்ப மாறுபடலாம். கலை வேண்டுமானால் ஒரு முறையை அனுசரிக்க வேண்டும். ஒன்று மேனாட்டு முறை; அல்லாவிட்டால் தமிழ்நாட்டு முறை.

உண்கலங்கள் அநேகமாக உபயோகத்திற்கேற்றாற் போல் ஒரேவிதமான வேலைப்பாடுள்ளதாக இருக்கவேண்டும். அவைகளைச் சுத்தம்செய்து அடுக்கி

வைத்திருக்கிற முறையில் கலை கமழ வேண்டும். பால், மோர், தயிர், பழம், சர்க்கரை, வெண்ணெய் முதலிய பொருட்களை ஓர் அலமாரியிலே, உள்ளே எறும்பு செல்லாதபடி கால்களிலே தண்ணீர் ஊற்ற வசதி யுடைய நிலையிலே, அமைத்து வைப்பது வெறும் பயன் மட்டுமல்ல; கலையுமேதான். செல்வர்கள் ரெபரிஜ ரேட்டரை அதற்குப் பதில் வைத்துக் கொள்ளலாம்.

சமையல் அறைக்குச் சென்றால் அங்கேதான் கலை முழுவதுமாகப் பிரதிபலிக்க வேண்டும். ஏழையின் குடிசையானாலும் சரி, அங்கே பொருட்களை வைக்கும் முறையில் கலையைக் காணவேண்டும். நடுத்தரமான வீட்டிலே சமையலறையில் கலையைக் காண முடியு மென்றால் எப்படியிருக்கவேண்டும்? ஏனைய அறைகளை விடச் சமையலறை சற்றுப் பெரியதாக இருந்தால் நல்லது. அடுப்புக்கள், அதற்கு மேலே புகைப்போக்கி, அடிப்பகுதியிலே மழைக் காலத்தில் மட்டும் விறகு களைக் காயவைத்துக் கொள்ளப் போதுமான இடம் இவை வேண்டும். ஆனால் தரையிலே அடுப்புக்களை அமைத்துவிட்டால் இந்த வசதி ஏற்படாது.

அவ்வறையிலே பொருட்களை அமைத்திருக்கும் முறை உட்சென்றவுடன் அறை விசாலமானது என்று காட்ட வேண்டும். ஆனால், வேலை செய்பவர்களுக்கு அலைச்சல் அதிகம் இருக்கக்கூடாது.

அடுப்பின் பக்கத்திலே சிமட்டியாலான ஒரு மேசை போன்ற உயரமான திண்ணை தினமும் கழுவி விடக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்; சமைய லறையின் ஒரு மூலையிலேயே ஒரு சிறிய தண்ணீர்க் குழாய், அதன் நீர் உள்ளே தெறித்து விழாத நிலையில் ஒரு சிறிய தொட்டி இவைகளை வைத்திருப்பது மிகவும் நல்லது. அம்மி, மாவாட்டும் உரல் இவ்வளவையும் சமையலறையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய அளவில் அறை பெரிதாக இருப்பது நல்லது. ஒரு

பெண்ணின் கலைத்திறன், கலையுணர்ச்சி முழுவதும் அவள் சமையலறையில்தான் விளங்க வேண்டும்.

சமையலறையில் மட்டுமல்ல; அதனை அடுத்துள்ள பொருள்களைச் சேகரித்து வைக்கும் அறையை மிகவும் சுத்தமாக வைத்திருப்பதிலும், பொருட்களை வைத்திருப்பதிலும், பொருட்களை வைத்திருக்கும் பாண்டங்களை அடுக்கி வைத்திருக்கும் எளிய முறையிலும் கலை இருக்கத்தான் செய்கிறது. பொருட்களை வைக்கும் பாண்டங்கள் கூடியமட்டும் ஒரே வகை சாமான்களாயும் ஒரே விதமான வேலைப்பாடுள்ளவைகளாகவும் அமைந்திருந்தால், அதில் ஒரு தனிக் கலை காணப்படும்.

வீட்டைச் சுற்றியுள்ள பாகங்களுக்குச் சென்றால், அங்கேதான் கலை தனது உன்னத நிலையில் விளங்க வேண்டும். சுற்றுப்புற அமைப்பு பிறரைக் கவரக் கூடிய நிலையில் இருக்கும்பொழுது கலை அங்கே காணப்படுகிறது.

தோட்டத்தை எடுத்துக் கொள்ளுவோம். பூந் தோட்டம் அமைப்பதிலும் கலையைக் காணலாம். வீட்டின் முன்பக்கம் பூந்தோட்டம்; பின்பக்கம் கறிக் காய்த் தோட்டம் என அமைக்கவேண்டும். தோட்டம் என்றால் செடிகளை நட்டுப் பயிராக்குதல் என்று கொள்ள முடியாது. அவைகளை வரிசைப்படுத்தி, முறைப்படுத்தி அமைப்பதில்தான் கலை இருக்கிறது. தரையில் வைக்க வேண்டிய செடிகளைத் தொட்டி களில் நட்டு வைத்தலில் தனிக் கலை காணப்படுகிறது. மேலும் பாத்திகளின் இரு கரைகளிலும் குட்டையான —வெட்டிவிடக்கூடிய—செடிகளை வைத்து அவைகளை அழகாக வெட்டிவிடுவதில் கலை காணப்படுகின்றது. பின்னிப்பின்னி அடர்ந்து வளர்ந்து ஒழுங்கற்று நிற்கும் செடிகளை எவ்வளவு அழகான முறையில் வெட்டி வளர்க்கிறார்கள் என்பதை, திருவனந்தபுரம், பங்களூர்,

நீலகிரி, கோடைக்கானல், கொழும்பு, தில்லி போன்ற இடங்களில் சென்று பார்த்தால் நன்கு தெரியும்.

இவ்வாறு வீட்டின் பல பகுதிகளையும் பலவிதமாக வைத்திருப்பதால் என்ன விதமான கலையைக் காண்கிறோம்? அங்கே கவிதையிலே காணும் கலை, சிற்பத்திலே காணும் கலை, சித்திரத்திலே காணும்கலை ஆகிய பல கலைகளைக் காண்கிறோம். வீட்டை அமைக்கும் முறையில் கலையுள்ளத்தின் கற்பனைத் திறன் காணப்படுகிறது. இலக்கியத்திலே கவிதையிலே காணப்படும் கவிதையின் தோற்றமும் வீட்டின் பொருட்களை அமைக்கும் முறையிலே காணப்படும் கலையின் தோற்றமும் ஒன்றே.

சித்திரக் கலையை நம் வீட்டிலே அழகுபடுத்துவதற்காக உபயோகிக்கும் படங்கள், விரிப்புக்கள், தொங்கல்கள் முதலியவைகளிற் காண்கிறோம். சித்திரத் தையல்கள் வீட்டின் அழகை மேம்படுத்துகின்றன. ஆனால், அவைகளை உருவாக்கும் நிலையில் முழுச் சித்திரக் கலை காணப்படுகின்றது. இயற்கையின் அழகைச் செயற்கை வாயிலாகக் காட்டுவதே ஒரு கலையன்றோ?

அடுத்தாற்போல, சிற்பக் கலையை எங்குக் காண்கிறோம் என்றால், அதை வீட்டைச் சுற்றியுள்ள தோட்டங்களிலே செடிகளை நாம் வெட்டியமைக்கின்ற நிலையிலே காண்கிறோம். தோட்டத்திலே சிற்பக் கலையை மட்டும் காண்கிறோம் என்று சொல்லுவது சரியன்று; அங்கே கற்பனைக்கு இடமுண்டு; ஓவியக் கலைக்கு இடமுண்டு. ஆகவேதான் வீட்டிலே கலை; வீட்டின் அமைப்பிலே கலை; பொருட்களிலே கலை; பொருட்களை அமைக்கின்ற முறையிலே கலை; அகத்திலே கலை; புறத்திலே கலை; எங்கும் கலை என்று கூறுகிறோம்.

---

13. பாரிசு—சித்திரக் கலை

திருவாட்டியார், மேரி மாசில்லாமணி அம்மையார்,
எம்.ஏ., எல்.டி.

பாரிசு நகருக்குச் சென்று நாங்கள் இரண்டு மூன்று நாட்களைக் கழித்தவுடன், அங்குள்ள காட்சிச் சாலையாகிய இலாலூவர் என்னுமிடத்தைக் கண்டு கொள்ளும்படி நண்பரிற் பலர் எங்களைத் தூண்டினர். நாங்களிருந்த திரு. மைக்கேல் தெருவிலிருந்து ஒரு பஸ் ஏறி ஐந்தாறு விநாடியில் செயின் நதியைக் கடக்கக் கட்டியிருந்த ஓரகன்ற பாலத்தைப் போய் அடைந்தோம்.

வண்டி திரும்பிப் பாலத்தைக் கடந்தபோது, எல்லையில்லாத மகிழ்ச்சி என் மனத்தில் பொங்கியது. அப் பாலம் இந்திரலோகத்துச் சிற்பியான மயனிழைத்தது தானோவெனத் தோன்றும். அப்பாலத்தின் நான்கு மூலைகளிலும் பெரிய பெரிய சிற்ப உருவங்கள் பல வேலைப்பாடுகளுடன் துலங்குகின்றன. அப்பாலத்தின் மீது நாம் ஏறிச் செல்கையில் இராச அரண்மனைக்குச் செல்லுகிறோம் என்ற எண்ணமுண்டாகிறது. பாலத்தைக் கடந்தவுடன் பிரம்மாண்டமான நீண்ட கட்டிடம் ஒன்று நம் கவனத்தை இழுக்கிறது. அக்கட்டிடத்தின் நடுவே அகன்றதோர் பாதையும், அப்பாதைக்கு இரு புறத்திலும் இரு சிறு பாதைகளுமிருக்கின்றன. நடுவே யுள்ள பாதை வழியாய் வெகு சிரமத்துடன் பஸ் செல்லுகிறது. அப்புறமும் இப்புறமும் வாகனங்கள் காற்று வேகமாய் ஓடிக்கொண்டிருக்கின்றன. நமது பஸ் கருங்கல் பாவப்பெற்ற ஒரு பெரிய முற்றவெளியில் நம்மைக் கொண்டு போய் விடுகிறது. அவ்விடமே இலாலூவர்.

இலாலூவர், முற்காலத்தில் பிரெஞ்சு அரசருடைய அரண்மனையாயிருந்தது. நான்கு புறத்திலும்

கட்டிடமாக அமையப்பெற்று, நடுவில் அகன்றதும், அழகிய பூச்செடிகளால் அலங்கரிக்கப்பெற்றதுமான ஒரு பெரிய முற்றத்தை நாம் முதல் முறை காணும் போது உலகத்திலேயே ஜனநெருக்கம் வாய்ந்த இப்பெரிய பாரிசுப் பட்டணத்தில் இவ்வளவு அகன்ற இடமொன்று மக்கள் யாவருக்கும் எத்துணை மகிழ்ச்சி தருகிறது என்ற எண்ணம் நமக்கு வருகிறது. 17 ஆம் நூற்ருண்டில் அரச அரண்மனையாயிருந்த இவ்விடத்தை 14 ஆம் உலூயி மன்னன் விட்டுவிட்டு வெர்செய் என்ற இடத்தில் அரண்மனை கட்டி அங்கு வசிக்க ஆரம்பித்துவிட்டான்.

பிரான்சில் நடந்த பெரிய புரட்சிக்குப்பின் இலாலூவர் ஒரு பொருட்காட்சிச் சாலையாய் மாறி விட்டது. பின் நெப்போலியன் என்னும் அரசனும் இதைப் புதுப்பித்துக் கட்டினுன். இக்கட்டிடத்தின் மேல் N என்னும் எழுத்திருந்ததைக் கண்டு நெப்போலியன் என்ற அரசனுடன் இக் கட்டிடம் சம்பந்தப்பட்டது என்றறிந்து கொண்டோம். உலகத்தின் பல பகுதிகளிலிருந்து கலையிரசிகர்களான எண்ணற்ற மக்கள் இலாலூவரில் வந்து குழுமுகின்றனர். புராதன சிற்பாசிரியர்களால் செதுக்கப்பெற்ற உலகப் பேர்போன உருவங்களும் மேல் நாட்டைச் சேர்ந்த பல்வேறு கொள்கைகளை மேற்கொண்ட சித்திரக் குழுவினர் தீட்டிய மூலப் படங்களும் சேமிக்கப் பெற்றுக் காண்பவர் கண்களுக்கு விருந்தளிக்கும்படி செய்திருப்பதை இங்குக் காண்கிருேம். சித்திரப் படங்கள் செதுக்கப்பெற்ற உருவங்கள் இவைகளைத் தவிர, பழைய காலத்திற்குரிய அநேக பொருட்களையும் இங்குக் கண்டு களிக்கலாம்.

நூற்றுக்கணக்காய்த் தொங்கும் வர்ணப் படங்களைச் சித்திர நுட்பத்துடன் அறிய விரும்புவோர், மீண்டும் மீண்டும் அங்குச் சென்று அவைகளை யிரசித்தல் வேண்டும். நாங்கள் இலாலூவருக்குப்

பன்முறை சென்று வர்ணப் படங்களைக் கண்டு களித்தோம். எனினும், முதல் முறையாக நாங்கள் கண்ட அந்த அனுபவத்தையே இங்குக் கூறுகிறேன். மேலும், கணக்கு வழக்கற்றுத் தோன்றுகிற படங்களைக் குறித்தெல்லாம் கூற முன்வாராது, என் மனத்தைக் கொள்ளை கொண்டு இப்பொழுதும் என் மனத்தைவிட்டு அகலாது நிற்கும் சிற்சில படங்களையும் உருவங்களையும் பற்றியே கூற விரும்புகிறேன்.

இலாலூவர் போயடைந்து, உள்ளே செல்லும் வாசல் வழியாகச் சென்று முதலாவது நாங்கள் உரோம, கிரேக்கச் சிற்பங்களைக் கொண்ட அறைகளைப் பார்வையிட்டோம். தலைமுதல் இடுப்புவரை செதுக்கப்பட்ட அநேக சிற்பங்களைக் கண்டோம். கிரேக்க சிற்பங்கள் இயற்கையைக் காட்டிலும் அழகுபடுத்திச் செதுக்கப்பட்டிருப்பதையும், உரோமச் சிற்பங்கள் உள்ளதை உள்ளவாறு காட்டுவதையுங் கண்டோம்.

‘சாமத்திரேசு வெற்றி’ என்னும் சிற்பமொன்றைக் கண்டோம். கிரேக்கச் சிற்ப முறையில் செதுக்கப் பெற்ற இப் பெண் உருவம் இரு சிறகுகளை விரித்தபடி காணப்படுகிறது. இதன் சிற்ப அழகுகள் பாராட்டுதற்குரியன. உலகப் பேர்போன இவ்வுருவம், கி.மு 4 ஆம் நூற்றுண்டின் இறுதியில் ‘சலாமீசு’ என்ற இடத்தில் ‘தெமித்திரியசு’ என்னும் அரசன், பகைவன்மீது வெற்றி பெற்றதைக் காட்டுகிறதென்றும், 1863 ஆம் ஆண்டிலே, ‘சாமத்திரேசு’ என்னும் தீவில் இவ்வுருவம் கண்டெடுக்கப்பட்டதென்று மறிந்து கொண்டோம். தலையற்றுக் காணப்படும் இவ்வுருவம் அணிந்திருக்கும் ஆடை, உடல் வடிவை அழகாயெடுத்துக்காட்டும் அச்சிறப்பை, சிலையைச் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் யாவரும் மிகவும் பாராட்டினோம்.

மீண்டும் எத்தனையோ அறைகளில் எத்தனையோ உருவங்களைக் கண்டோம். கூட்டமாக மக்கள் நின்று,

வாய் புதைத்து வார்த்தையற்று எதையோ பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு நாங்களும் அக்கூட்டத்தில் போய்ச் சேர்ந்துகொண்டோம். அக்கூட்டத்தின் நடுவிலிருந்த உருவச்சிலையே நான் கண்ட சிலை களுக்குளெல்லாம் சிற்ப அழகு, வாய்ந்ததாகத் தோன்றியது. வீனசுத் தேவதையின் உருவம். சுருள் சுருளாயிருந்த தலைமுடியை, உள்ளதுபோலமைத்த அழகும், சாந்த நிலையில் தோன்றிய அம்முகத்தில் ஒழுகிய சோபையும், சாய்ந்த கழுத்து காட்டிய மென்மையும் இன்னும் என் கண்முன் படம்போல் தோன்றுகின்றன. இடையில் கட்டியதும் நன்ருய் உடலில் படிந்து தொங்கியதுமான ஒரு துணியைத் தவிர, அவ்வுருவம் உடல்மேல் ஒன்றும் அணிந்திருக்க வில்லை. இவ்வுருவத்திற்கு இரு கைகளையும் காணும். இது கி. மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கர் சிற்பமாயிருக்குமென்று ஊகிக்கப்படுகிறது. ஏனெனில் அக்காலத்திலே, இத்தகைய சிற்பங்கள் பூரண நிலை யடைந்து முதல்தரமான சிற்பங்கள் வெளிவந்தன. உலகப் பிரசித்திபெற்ற இச்சிற்பத்தைச் செதுக்கிய ஆசிரியன் யாரென நமக்குத் தெரிய வரவில்லை. 1820 ஆம் ஆண்டில் இச்சிற்பம் 'மைலோ' என்ற தீவில் கண்டெடுக்கப்பட்டு, 18 ஆம் லூயி அரசனுக் குப் பரிசாக அளிக்கப்பட்டது.

இதன்பின், எகிப்து, அசீரியா, சிரியா, பாபி லோனியா முதலிய இடங்களுடன் சம்பந்தப்பட்ட அரிய பொருட்கள், கிழியில் தீட்டிய படங்கள் முதலியவை அடங்கிய எத்தனையோ அறைகளை ஒன்றன்பின் ஒன்ருய்க் கடந்து சென்ருேம். எண் ணற்ற சித்திரங்கள், சிற்பங்கள், இவற்றை அடுக் கடுக்காய்ப் பார்த்துக்கொண்டே சென்ருல் அவைகள் எவ்வளவு அழகாயிருந்தாலும், நாம் சிறிது களைப் படைகிருேம். ஆகவே நாங்களும் சிறிது களைப் படைந்தோமெனினும், மெதுவாய் நடந்து முதல்

மாடியை அடைந்தோம். அங்கு மிகவும் நீண்டதும் இருபுறத்திலும் பெரிய பெரிய படங்களைக் கொண்டது மான ஓர் அழகிய அறை காணப்பட்டது.

நாங்கள் கண்ட அவ்வழகிய அறையில் நூற்றுக் கணக்கான மக்கள் இருபுறமும் நடந்து சென்று படங் களின் அழகைப் பருகிக்கொண்டும், பாராட்டிப் பேசிக் கொண்டுமிருந்தனர். 840 அடி நீளமுள்ள அந்த அறையின் இருபுறத்திலும் வர்ணப் படங்கள் அழ காகத் தொங்கவிடப்பட்டிருந்தன. அவைகளை அணி செய்த சட்டங்களும், நம் கலையுணர்வைத் திருப்தி செய்கின்றன. இங்கிருக்கிற படங்களெல்லாம், இத் தாலிய, சுபானிய சித்திரக்காரராலேயே பெரும்பாலும் தீட்டப்பெற்றவை. இப்படங்களைப்பற்றி நன்கு அறிந்த பலர், "இவை வெனிசு சித்திரப் பகுப்பு; இவை பிளாரன்டைன் பகுப்பு; இவை அம்பிரியன்; இவை லம்பார்ட்," என்று சுட்டிக்காட்டி, ஒவ்வொரு பகுப்புக்கு முள்ள தனி இயல்புகளைக் கூறிக்கொண்டிருந்தார்கள். சித்திரப் படங்களைக் குறித்து அதிகம் அறியாத நான் தலையை ஆட்டிக்கொண்டிருந்தேனேயன்றி, என் தலையில் எல்லாம் புகுந்ததென்று சொல்ல முடியாது.

என்றாலும் நாங்கள் பார்த்துக்கொண்டே செல் கையில், இத்தாலிய சித்திரக்காரராகிய இலியனுடோ டாவின்சி என்பாருடைய படங்களைக் கண்டபோது எங்கள் உள்ளம் பரவசமடைந்தது. இவர் பெயரை நான் முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். இவருடைய படங்களின் அச்சுக்களைப் பார்த்துமிருக்கிறேன். இவரால் தீட்டப்பெற்றதும் உலக பிரசித்திபெற்றது மான கிறிஸ்து பெருமானின் இராப் போசனப் படத்தை அநேகர் அறிவர். ஆகவே, அவர் தீட்டிய படங்கள் சிலவற்றைக் கண்டு சில விஞடி மெய்மறந்து நின்றோம். பின் அவ்வறையின் நடுவிடத்தையடைந் தோம். சித்திரக் கலையில் உலகப் பிரசித்திபெற்ற ஆறு பெரிய படங்களை அவ்விடத்தில் வைத்திருக்

கிறார்கள். அந்த ஆறு படங்களையும் பார்த்தபோது, சித்திரக்கலையறியாத என் மனத்திலும் ஓர் உன்னதக் கிளர்ச்சி உண்டாயிற்று. அப்படங்களுள் என் உள்ளத்தை ஆனந்தத் தாண்டவத்தில் நிரப்பியது மோனலீசா படமே. இலாலூவர் என்னுமிடத்தை நினைக்கையில் அப்படமே என் அகக் கண் முன் வந்து தோன்றும். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே," என்று தமிழ் அடியார் ஒருவர் பாடுகிறார் அல்லவா? இலியானடோ டாவின்சி தீட்டிவைத்த மோனலீசா சித்திரத்தை வாயார வாழ்த்தி, ஆண்டவனது அருட்பெருக்கே அத்தகைய தெய்வக் கலையை அவனுக்களித்த தென்றறிந்து, "தீட்டுவித்தால் யாரொருவர் தீட்டாதாரே," என்று சொல்லிக்கொள்ளுகிறோம்.

இப்படத்தைத் தீட்டி முடிக்க நான்கு ஆண்டுகள் சென்றனவாம். இது இளமங்கையொருத்தியின் படம். இந்த நங்கையின் தலைமுதல் இடை வரையுமே தீட்டியிருக்கிறது. நங்கை தனது நேரான கூந்தலை விரித்துப் போட்டிருக்கிறாள். நீண்ட சட்டை போட்டு, தோளிலும் கைகளிலும் ஒரு துண்டைப் போர்த்திருக்கிறாள். இவள் உதடுகளிலும் கண்களிலும் தவழும் புன்னகையில் ஓர் அலாதி அழகிருக்கிறது. இலியானடோ டாவின்சி, வர்ணத்தைக் குழைத்துத் தூரியக் கோலினால், இந்தப்புன்னகையை எப்படித் தீட்டினானோ வென்று நாம் வியப்படைகிறோம். இந்நங்கை முகத்தே தோன்றும் இந்த விநோதப் புன்னகையைக் குறித்து எத்தனையோ ஆசிரியர்கள் புத்தகங்கள் எழுதியிருக்கின்றனர். முதல்தரமான ஆறு படங்களுள் இப்படம் நம் மனத்தை அதிகம் கவர்கிறது. ஏனைய படங்களுள் மூன்று திட்டியன் என்பவராலும், இரண்டு இராப்பேல் என்பவராலும் தீட்டப்பெற்றவை. அவைகளைக் குறித்தெல்லாம் கூற இடமில்லை. என் கண்கள் மீண்டும் மீண்டும், மோனலீசா மேல் சென்றது. அதிலேயே

என் கருத்தைச் செலுத்தினேன். மோனலீசாவைக் கண்ட என் கண்கள் வேறு சித்திரங்களைக் காண விரும்பவில்லை.

சிறிது நேரம் கழித்து அவ்விடம் விட்டுச் சென்று, பின்னும் சில அறைகளில் வெவ்வேறு நாட்டுச் சித்திரக்காரர் படங்களையும் கண்டோம். பிளமிசுப் பகுதியில் ஆங்கில அரசனுன முதல் சார்லசு படத்தைக் கண்டோம். அப்படத்தின் சித்திரக்காரன் 'வான் டைக்கு' என்பார். இளவரசர் தலையில் குல்லா அணிந்து கையில் கோலைப் பிடித்துக்கொண்டு, இடப் புறம் திரும்பி, சிறிது தலையை நிமிர்த்திப் பெருமிதப் பார்வையுடனிருந்தார். அருகிலிருந்த அவரது குதிரை தலையைக் கீழே தாழ்த்தி நிற்கிற பாவனையும் உள்ளதை உள்ளவாறு தீட்டியிருப்பது போலிருந்தது. அப்படத்தில் காணப்பட்ட வர்ணங்கள் ஒன்றுடனென்று பொருந்தி அழகு செய்த விதத்தைப் பாராட்டினேம்.

இலாலூவரில் 'கன்னியும் குழந்தையும்' என்ற தலைப்பில் எத்தனையோ சித்திரக்காரர்கள், விதவிதமாய்த் தங்கள் கருத்துக்கியைந்தவாறே படம் தீட்டியிருக்கிருர்கள், இந்தத் தலைப்பிலுள்ள படங்களை மாத்திரமே பார்த்துச் சில மணி நேரத்தைக் கழிக்கலாம். ஒவ்வோர் ஆசிரியனும் கன்னி, குழந்தை இவர்களின் முகபாவத்திலும் வர்ணச் சேர்க்கையிலும் சிறிது சிறிது மாறுபடுகிருன். காலத்தால் முற்பட்ட இப்படங்கள் உணர்ச்சியை முகத்தில் நன்கு காட்டாவிடினும், வர்ணங்களின் சேர்க்கையும் அபரிமிதமும் நம்மைத் திகைக்க வைக்கின்றன. 'கன்னியும் குழந்தையும்' என்ற அப்பகுதிப் படங்களை எங்கள் கண்கள் கண்டு அனுபவித்த மகிழ்ச்சியுடன் நாங்கள் வீடு சென்ருேம். அதற்குப் பின் நாங்கள் அங்குப் பன்முறை சென்ருேமெனினும் முதல் நாளடைந்த அப்பரவச நிலையை மீண்டும் அடையவில்லை.

14. ஞான ரதம்

(கற்பனைக் கட்டுரை)

சி. சுப்பிரமணியபாரதியார்

[பின் மாலைப் பொழுது திருவல்லிக்கேணி, வீரராகவ முதலி தெருவில் கடற் பாரிசத்தை நோக்கி யிருக்கும் ஓர் வீட்டு மேடையின்மீது சிரமபரிகாரத்தின் பொருட்டு ஓர் மஞ்சத்தின் மீது படுத்துக்கொண்டிருந் தேன். ஆனந்தகரமான கடற்காற்று, நான் படுத்திருந்த முன்னறையிலே நான்கு பக்கங்களிலிருந்தும் கண்ணாடிச் சாளரங்களின் மூலமாகவும், புறக்கதவு நிலைகளின் மூலமாகவும் வந்து நிரம்பியவண்ணமாக இருந்தது. அந்தக் காற்றும் பின் மாலையொளியும் கலந்ததனால் உண்டாகிய தெளிவும் இன்பமும் என்னால் கூற முடியாது. ஆஹா "! இப்போது போய் ஸ்நானம் செய்துவிட்டு நேர்த்தியான ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, கடற்கரையோரமாகத் தெற்கே அடையாற்றுக்குப் போய்—வழியெல்லாம் காளிதாசனுடைய சாகுந்தலத்தையேனும், ஓர் உபநிஷத்தையேனும் கொண்டுபோய்ப் படித்து இன்பமடைந்து கொண்டே திரும்பினால் நல்லது," என்ற சிந்தனையுண்டாயிற்று. ஆனால், என்னிடம் குதிரை வண்டி கிடையாது என்ற விஷயம் அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

" அடடா ! மிகுந்த செல்வமில்லாததனால், உலகத்தில் பலவிதமாகிய இழிவான இன்பங்கள் மட்டுமல்ல, உயர்ந்த இன்பங்கள்கூடப் பெறுவதற்குத் தடை ஏற்படுகிறதே !" என்றெண்ணினேன். அப்பொழுது, என் மனம், "மூடா, சகல மனிதர்களிடத்தும் ஈசன் ஞானம் என்பதோர் தெய்விக ரதத்தைக் கொடுத்திருக்கிறான். அது விரும்பிய திசைகளுக்கெல்லாம் போய்

விரும்பிய காட்சிகளையெல்லாம் பார்த்து வரக்கூடிய வல்லமை உடையது; அதைப் பயன்படுத்தி இன்ப மடையாமல் எந்த நிமிடத்திலும் உன்னைக் கீழே தள்ளித் தீங்கு செய்யக்கூடியதாகிய இழிந்த மரவண்டியிலே ஏன் விருப்பங் கொள்ளுகிறாய்," என்றது.

உடனே, ஞானரதத்தைக் கொண்டு தயார் செய்து வைக்கும்படி எனது சேவகனாகிய 'சங்கற்பனி'டம் கட்டளையிட்டேன். இரதம் வந்து நின்றது. அதில் ஏறிக்கொண்டேன். ஆனால் எனது ஞானரதம் மற்றவர்களுடையதைப் போல் அத்தனை தீவிரம் உடையதன்று; எளிதாகநெடுந்தூரம் கொண்டுபோகத் தக்கதும் அன்று; கொஞ்சம் நொண்டி. என்ன செய்யலாம்? இருப்பதைக் கொண்டுதானே காரியங்கழிக்க வேண்டும்? ஆகவே, அந்த இரதத்தின் மீது ஏறிக் கொண்டேன். அதிலேறி நான் கண்டு வந்த காட்சிகளும் அவற்றின் அற்புதங்களுமே இங்கு எழுதப்படுகின்றன.]

உபசாந்தி உலகம்

(கவலையற்ற பூமி)

எனது ஞானத் தேரை நோக்கி, "இந்தக் கணமே என்னைத் துக்கமில்லாத பூமி எங்கேனும் உளதாயின் அங்குக் கொண்டுபோ," என்று ஏவினேன். ஆஹா! இந்த இரதத்தை வைத்துக் கொண்டிருந்தும் இத்தனை நாள் எனக்குக் கவலையும், மன உளைச்சலும் இல்லாதிருக்க வழி தெரியாமற் போய்விட்டதே! எத்தனை நாள் எனது மனம் தூண்டிற் புழுவைப் போலத் துடித்துக்கொண்டிருக்க, அதை நிவிருத்தி செய்வதற்கு யாதோர் உபாயமும் அறியாமல் பரிதவித்திருக்கின்றேன். அம்மம்மா! இந்த உலகத்துக் கவலைகளை நினைக்கும்போதே நெஞ்சம் பகீரென்றது. அவற்றுக்குள்ள விஷ சக்தியை

என்னென்பேன்? ஒருவனது முகத்திலுள்ள அழகையும் குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகளே அழித்துவிடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், உடல் நிறம் மங்குதலும் உண்டாக்கிவிடுகின்றன. நெற்றியிலே வரிகளும் கன்னங்களிலே சுருக்கங்களும், இந்த நீசக் கவலைகளினாலேயே ஏற்படுகின்றன. எனது தொண்டையின் இனிய குரல் போய், கடூரமான கரகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும் தோளிலும் இருந்த வலிமை நீங்கிப் போய்விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுதலின்றி, மாசு நீரோடை போல மந்தம் அடைகிறது. கால்களில் தீவிரமில்லாமற் போய் விடுகின்றது. கவலைகள் என்ற விஷ ஜந்துக்கள் ஒருவனுடைய சரீரத்தை உள்ளூர அரித்துவிடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்குகின்றன. மறதியை அதிகப்படுத்தி விடுகின்றன. முக்கியமான செய்திகளெல்லாம் நல்ல சந்தர்ப்பத்திலே நினைவிற்கு வராமல் போய்விடுகின்றன. படித்த படிப்பெல்லாம் பாலைவனத்திலே பெய்த மழை போலப் பலனற்றுப் போய்விடுகிறது. அறிவிலே பிரகாசமில்லாமல் எப்போதும் மேகம் படர்ந்ததுபோலாய் விடுகிறது. யோசனை தட்டுகிறது. ஐயோ, இந்தக் கவலைகளாகிய சிறிய சிறிய விஷப் பூச்சிகளுக்குள்ள திறமை வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறும் மகா கொடூரமான—கண்ணுக்குத் தெரியாத நோய்ப் பூச்சிகளுக்குக்கூடக் கிடையாது.

"ஞானரதமே, நீ நம்மை இப்போது கவலையென்பதே இல்லாத உலகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்," என்று கட்டளையிட்டேன். அப்போது, மனம் வந்து இரதத்தைத் தடுத்துக் கொண்டது. "அது அத்தனை சுகமான உலகமன்று. கவலை இல்லாமல் இருந்தால் மட்டும் போதுமா? வேறு இன்பங்கள் அனுபவிக்கக் கூடிய இடம் ஏதேனும் தமக்குத் தோன்றவில்லையா? கவலையே இல்லாத இடத்தில் சுகமும் இராது என்று

எனக்குத் தோன்றுகிறது. மேலும், மேலும்,—என்னவோ இன்ன காரணமென்று சொல்ல முடியாது. ஆனுல், அங்குப் போவதில் எனக்குப் பிரியமில்லை,'' என்று மனம் கூறிற்று.

நான் கோபத்துடன், "சீச்சீ! பேதை மனமே, எனக்கு ஓயாமல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேதனைகளையும் உளைச்சல்களையும் கண்டு இரங்கி, நான் உன்னைச் சிறிது நேரமேனும் அமைதியுலகத்திற்குக் கொண்டுபோய் வைத்துத் திரும்பலாம் என்று உபதேசித்தேன். இதற்கு நீயே ஆட்சேபம் சொல்ல வருகிருயா ?'' என்று கண்டித்தேன்.

எனக்கு இந்த மனம் என்ற மோகினியிடத்தில் காதல் அதிகமுண்டு. ஆதியில் இந்த மோகம் எவ்வாறு உண்டாயிற்று என்பதை இங்கு விவரிக்க முடியாது. அது இரகசியம். ஆனுல், நாளேற நாளேற நான் வேறு இந்த மனம் வேறு என்ற துவைத சிந்தனையே பெரும்பாலும் மறந்துபோகும் வண்ணமாக எனக்கு இந்த மோகினியிடத்தில் பிரேமை மிகுந்து போய்விட்டது. இந்த மனம் படும் பாடுகளைக் கண்டு பொறுக்காமலேதான் நான் சாந்தியுலக தரிசனத்திலே விருப்பங் கொண்டேன். இப்போது மனம் அந்த யோசனையில் நிட்காரணமாக வெறுப்புக் கொள்வதைக் கண்டு எனக்குத் திகைப்பும், இரக்கமும், கோபமும் கலந்து பிறந்தன. எவ்வளவோ விதங்களில் மனத்தைச் சமாதானம் செய்ய முயன்றேன். மனம் பின்னும் கண்ணை மூடிக்கொண்டு ஒரேயடியாக மூடச்சாதனை சாதிக்கத் தொடங்கிற்று. எனக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. பிறகு ஒரே நிச்சயத்துடன், "மனமே, நான் இந்த விஷயத்தில் உன் பேச்சைக் கேட்கவேமாட்டேன். உன்னுடைய நன்மையைக் கருதியே நான் சொல்கிறேன்—ஞானரதமே, உடனே புறப்படு,'' என்றேன்.

அடுத்த நிமிடத்தில் உபசாந்தி பூமிக்கு வந்து சேர்ந்தோம், நெடிதோங்கி உயர்ந்த கோட்டைச் சுவர் வாயிலிலே போய் இரதம் நின்றுவிட்டது. நான் தூரத்திலிருந்தே அந்தக் கோட்டையைப் பார்க்க முடிந்ததாயினும், எனது ஞானத்தேர் போனவுடன் அந்த வாயிற் கதவுகள் தாமே திறந்துவிடும் என்று எண்ணினேன், அவ்வாறு திறக்கவில்லை. என்ன அதிசயம்! ஞானத் தேர்கூட நுழைய முடியாதபடி அத்தனை பரிசுத்தமானதா இந்த உலகம் என்று வியப் புற்றேன். எனது மனமோ முன்னைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிகமாக நடுங்கத் தொடங்கிற்று. அதற்கு என்னிடம் பேசக்கூட நா எழவில்லை. கோட்டைவாயி லுக்கு வெளியே ஒரு வாயிற் காப்பான் உருவின கத்தி யுடன் நின்று கொண்டிருந்தான். நெருப்பு நிறங் கொண்டதும், இமயமலையைக் கூட ஒரே வெட்டில் வெட்டிப் பொடிப் பொடியாகச் செய்துவிடுவோமென்று தோன்றியதுமாகிய அந்த வாளின்மீது 'விவேகம் என்று கண்ணைப் பறிக்கக்கூடிய சோதி எழுத்திலே எழுதப் பட்டிருந்தது. வாயில் காப்போன்:—"யார் அது? எங்கு வந்தாய்?" என்றான்.

நான் அவனுக்கு வந்தனம் கூறிவிட்டு, "உப சாந்தி உலகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பலாமென்ற எண்ணத்துடன் வந்தேன்," என்று சொன்னேன். அதைக் கேட்டு அவன் கடகடவென்று குலுங்கக் குலுங்க நகைக்கலாயினன்.

"ஏனையா சிரிக்கிறீர்?" என்று கேட்டேன். அவன் மறுமொழி கூறாமல் சிரித்துக் கொண்டிருந் தான்.

ஏழை மனமோ நிமிடத்துக்கு நிமிடம் அதிக திகி லுறுவதாயிற்று. எனக்கு மிகவும் திகைப்புண்டாய் விட்டது. எனவே, கோபத்துடன் வாயில் காப்போனை நோக்கி, "ஏனப்பா உள்ளே போகலாமா, கூடாதா?

ஒரே வார்த்தையில் சொல்லிவிடு; கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கிருயே?'', என்று கேட்டேன்.

அதற்கு வாயில் காப்போன், "உனக்கும் உபசாந் திக்கும் வெகுதூரம்,'' என்று தனது வாய்க்குள்ளேயே (ஆனல் எனது செவியிலே படும்படி) முணுமுணுத்து விட்டுப் பிறகு, "கோபங் கொள்ளாதே அப்பா; நீ உபசாந்தி உலகத்தை ஏதோ நாடகசாலை போலக் கருதிப் பார்த்துவிட்டுத் திரும்ப உத்தேசமிருப்பதாகக் கூறியது எனக்கு நகைப்பை உண்டாக்கிற்று. சாதா ரணமாக இவ்வுலகத்துக்கு வருபவர்கள் திரும்ப வெளியே போகும் வழக்கம் கிடையாது,'' என்று இரைந்து கூறினன்.

"அது சரி; உள்ளே நாங்கள் பிரவேசிக்கலாமா கூடாதா? தயவுசெய்து சொல்லும்.''

"நீ சாதாரணமாகப் பிரவேசிக்கலாம். இது சகல சீவர்களுக்கும் தாய்வீடு. இங்கு வரக்கூடாது என்று எந்தச் சீவனையும் தடுக்க எனக்கு அதிகாரமில்லை. ஆனல், வைராக்கியக் கோட்டையைக் கடந்து உள்ளே செல்லும் உரிமை உன்னுடன் வந்திருக்கும் மனம் என்ற பொய்ப் பொருளுக்குக் கிடையாது. அது உள்ளே போகுமானல், அக்கினி உலகத்திலே நுழைந்த பஞ்சுப் பொம்மைபோல நாசமடைந்து விடும்.'' என்ருன்.

மனம் ஆரம்பத்திலேயே உபசாந்தியுலகம் என்ற பெயரைக் கேட்டவுடன் நடுங்கத் தொடங்கியதற்கும், அது என்னை அங்குப் போகவேண்டாமென்று பிரார்த் தனைகள் செய்ததற்கும், கோட்டையருகே வந்தவுடன் தரும தேவதையின் முன் வந்து நிற்கும் கொடுங்கோல் அரசரைப் போல் நிலை மயங்கி அதற்கு அளவு கடந்த திகிலுண்டானதற்கும் காரணம் இன்னதென்பதை இப் போதுதான் அறிந்தேன். அப்பால் அந்த உலகத்திற்

புகவேண்டும் என்ற விருப்பம் எனக்கு நீங்கிப் போய் விட்டது. மனத்தினிடம் வைத்திருந்த மோகத்தால் அதைக் கொன்றுவிட்டு நான் இன்பமடைவதில் பிரியங் கொள்ளவில்லை.

"என்னை இப்போது என்ன செய்யச் சொல்லு கிறீர் ?" என்று வாயில் காப்போனிடம் கேட்டேன். அதற்கு அவன், "மானுடா, மனம் இறந்த பிறகுதான் உபசாந்தியுண்டு. அது இருக்கும் வரையில் கவலைகள் நீங்கி இருக்கலாம் என்ற எண்ணம் வீண். கவலை களாகிய அசுரர்களை இடைவிடாது பெற்றுத் தள்ளிக் கொண்டே இருக்கும் தாய் மனமேயாகும். உனக்கு அந்தப் பொய் அரக்கியிடம் இன்னும் பிரேமை தீர வில்லை. பக்குவம் வந்த பிறகு, நீ தானே இங்கு வந்து சேரலாம். இப்போது போய்வா," என்று சொன்னன். திடீரென்று அந்தக் கோட்டை, வாயில் காப்போன் எல்லாம் மறைந்து போய்விட்டது. அரைக்கணம் கண்ணிருட்சி உண்டாயிற்று. பிறகு கண்ணை விழித்துப் பார்த்தேன். மறுபடி வீரராகவ முதலி தெருவில், முன்னே கூறப்பட்ட வீட்டு மாடியில், தனியே கட்டிலில் நான் படுத்துக் கொண்டிருப்பதை யும், கடற் பாரிசத்தினின்று இனிய காற்று வீசிக் கொண்டிருப்பதையும் கண்டேன்.

"சரி, போனது போகட்டும். இந்த உபசாந்திப் பேறு நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் பாதக மில்லை. ஏழை மனத்தைக் கொன்றுவிட்டு நாம் மட்டும் தனியே இன்பமுற விரும்புவதும் நன்றிகெட்ட செய்கையாகுமல்லவா ? அதன் கவலைகளையும் உளைச் சல்களையும் பற்றி யோசித்தேனேயொழிய அதன் மூல மாக எனக்குக் கிடைத்திருக்கும் பெரிய பெரிய நன் மைகளைச் சிந்தித்தேனில்லை. எனக்கு உலக வாழ்க்கையே இந்த மனத்தினல் தானே எய்திற்று. இதை ஈசனென்றே சொல்லத் தகும். மேலும் எனக்கு அதையும். அதற்கு என்னையும் காட்டிலும்

உயிர்த்துணைவனாக யார் இருக்கிறார்கள்? அதற்குத் துரோகம் செய்யலாமா? எத்தனை கோடி கவலைகளிருப்பினும் பெரிதில்லை. மனம் செத்து நான் தனியே வாழ்வதாகிய உபசாந்தியுலகம் எத்தனை அரியதாயிருப்பினும், அது எனக்கு வேண்டாம்", என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

நான் இவ்வாறு ஆலோசிப்பதை அறிந்து கொண்ட மனம். "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுத் தன் நடுக்கமெல்லாம் தீர்ந்து ஆறுதலுடனிருந்தது. எனக்கும் மகிழ்ச்சி உண்டாயிற்று. எனது மன மோகினிக்கு ஓர் முத்தம் கொடுத்தேன்.

---

15. தையற்கலையின் தனிப்பேராற்றல்

தையற் கலை வல்லுநர் கே. பி. சுந்தரம், ஜி.ஸி.டி.

இயற்கையில் எல்லாப் பொருள்களும் எழிலுடையனவாகவே அமைந்துள்ளன. மலரும், நீல வானமும் மங்கையர் வதனமும் பேரெழில் நிலையங்களெனத் தக்கவையானாலும் எல்லாப் பொருள்களிலுமே ஊன்றி நோக்கும்போது ஒருவகை அழகு புலப்படுமெனக் கவி பாரதியார் கூறுகிறார். இயற்கைத் தோற்றங்களில் மக்களினமே மிக உயர்ந்த தோற்றமென்பது அனைவரும் ஒப்பமுடிந்த ஒருண்மையாகும்.

மைந்தரும் மகளிருமான மக்களின் தோற்றத்தில் இயற்கை அமைத்துள்ள அழகுதான் என்னே? முத்துப் பதித்தாற்போன்ற பல் வரிசையும், கருமணல் நெளிந்தமைத்தாற் போன்ற கூந்தற் கற்றையும். கொவ்வைக் கனியிதழும், கருவிழியும் காண்போருள்ளத்தைக் கவரும் கவின் பேரமைப்புக்களாகும். இவற்றின் மேலும் மக்களுடைய தோற்றத்தைக் கவர்ச்சியுடையதாகக் காட்டுவது அவரணியும் உடையென்பது அனுபவத்திற்காணும் உண்மையாகும்.

அவ்வுடைதானும் தையற் கலைஞரால் பலவகைப் புனைவுகளாக வெட்டித் தைத்துப் பொருத்தப்பட்டபோது அழகின் நுணுக்கத்தைத் தெள்ளத் தெளிய அள்ளி வீசுவதாக அமைகிறது. அழகுடையவர்களைப் பின்னும் பேரழகுடையவர்களாக ஆக்குவதோடு அழகில்லாதவர்களையும் அழகுடையவர்களாக ஆக்கும் ஆற்றல் தையற் கலைக்குண்டு.

அறிவு நுணுக்கம் வாய்ந்த தையற் கலைஞரால் அழகுற அமைக்கப்பட்ட உடையைத் தரித்து வீதி வழியே செல்லும் மங்கையரும் மைந்தரும் மக்களின் விழிக்கு விருந்துக் காட்சியாக விளங்குகின்றனர்.

காண்பவருள்ளத்தையெல்லாம் கவர்ந்து சிக்கவைக்கும் வசிய வலையாகிய உடையை அமைத்துத் தரும் தையற் கலை ஒப்பரிய கலையாகும்.

கவிஞர் மருதகாசியார் பாடுகின்றார் :

அழகுக்கு அணிசெய்யும் அரிய கலை ;
அறிவினால் வளர்ந்திடும் தையற்கலை.
விழிகளைக் கவர்ந்திடும் வசியவலை—இதன்
மேன்மைக்கு உலகினில் ஈடெதுவும் இல்லை.

(அழகுக்கு)

நாகரிகத்தைப் பற்றிக் கூறும்போது பழைய நாகரிகம் என்றும், புது நாகரிகம் என்றும் பலர் பேசுகிறார்கள். நாகரிகத்தின் அளவுகோலாக விளங்குவது எது? வேறு சிலவும் இருப்பினும் விளக்கமான முறையில் பிறர் கண்ணால் காணக்கூடியதாக உள்ளது. உடைத் தோற்றமேயன்றோ? இவ்வகையில் பழங் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ஒருவரையும் தையற் கலைஞர் தம் கைவினைத் திறத்தால் அமைத்துக் கொடுத்த ஒப்பனைமிக்க உடை புதுமையாளர்போல் தோன்றச் செய்து, நவநாகரிக சமுதாயத்தின் கூட்டத்தில் மதிப்புக்கு உரியவராக்குகிறது.

நாளும் நாளும் நனிவேகமுடன் வளர்ந்துவரும் தையற் கலை மக்களுள்ளத்திற்கு மகிழ்வூட்டும் பெருஞ் சாதனமாயுள்ளது. அதிலும் சிறப்பாக மங்கையர்க்குப் பேரின்பமூட்டும் அரிய சாதனமாகவுள்ளது. அணிகலன்களைக் காட்டிலும் நாகரிக மங்கையர் அதிகமாக விரும்புவது அழகுறத் தைக்கப்பட்ட உடைவகைகளையே என்பது மிகையுரையன்று. புது முறையில் தைக்கப்பட்ட ஜாக்கெட்டையோ, கவுனையோ, வேறு புது வகையான உடையையோ அணிந்து கொண்டபோது உணவும் தேவைப்படாத அளவு உள்ள நிறைவு பெறும் மங்கையர் பலருளரெனின் தையற்கலையின் மாண்புதான் என்னே?

எழுபது வயது கிழவனும் தையற்கலைஞன் தனது மதிநுட்பத்தால் அமைத்த உடையின் புனைவால் இருபது வயது குமரன்போல் தோற்றமளிப்பதைக் காணுகின்றோம். நாடக மேடை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இவ்வாறு கிழவராய் உள்ள வரைக் குமரராக்கிக் காட்டுவது மாத்திரமா? புல் தடுக்கி வீரர் என்று ஏளனம் செய்யக்கூடிய தளர்ச்சி நிலையிலுள்ள ஒருவரைப் புலியை எதிர்க்கும் மிடுக்கு நிறைந்த வீரர் போன்று கெம்பீரத் தோற்றமுடைய ராக்கிக் காட்டுவதும் தையற்கலையின் விசித்திர வேலைப்பாட்டினுல் இயல்வதாகும்.

மேலும் பாடுகிருர் கவிஞர் மருதகாசியார்:

பழமையில் புதுமையைக் காட்டுங்கலை ;
பாவையர்க்கு இன்ப மூட்டுங்கலை.
கிழவரைக் குமரராய்க் காட்டுங்கலை ;
கெம்பீரம் தந்திடும் இன்பக்கலை !

(அழகுக்கு)

16. செஸ்டர் பீல்டின் கடிதங்கள்

தமிழாக்கம்: பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரைப்பிள்ளை, எம்.ஏ., எல்.டி., விசாரத்து.

(1)

மதிப்பும் தகுதியும்

ஜூலை 24, 1739.

என் அருமைச் சிறுவ,

அண்மையில் நான் உன்னுடன் வந்திருந்தபோது, கடிதம் எழுதும் பழக்கத்தை நான் ஏன் விட்டுவிட்டேன் என்று நீ கேட்டாயல்லவா? அக்கேள்வி உண்மையில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியையே கொடுத்தது. என் கடிதங்கள் உன் விருப்பத்துக்குகந்தவையாயிருந்தன என்பதையும் அவற்றை நீ பொருட்படுத்தி வாசித்தாய் என்பதையும் அது காட்டுகிறது. அப்படியானால் நான் இனி அடிக்கடி கடிதம் எழுதுவது உறுதி.

நீ உன்னிப்பாகவும் விருப்பத்துடனும் வாசிப்பதனால், என் கடிதங்கள் உனக்கு மிகவும் பயனுடையவையாய் இருக்கும் என்பது உண்மை. ஆனால், நீ அங்ஙனம் படிக்காவிட்டால், அக்கடிதங்கள் என் உழைப்பையும், நேரத்தையும் வீணாக்க மட்டுமே உதவும். அதோடு நீ உன்னிப்பாகப் படிக்காவிட்டால், படித்த செய்திகள் உன் மனத்தில் நிலையாய்த் தங்க மாட்டா. நான் அவற்றின் மூலம் கருதும் பயனுமில்லாமற் போய்விடும்.

கவனமாக நீ படிக்காவிட்டால் படிக்காதிருப்பதே நல்லது; நீ படிக்காதிருப்பின் நான் முயற்சி எடுத்து எழுதாதிருப்பதும் நல்லதல்லவா? கடிதங்கள் புத்தகங்களைப்போல் மீண்டும் மீண்டும் படிக்கத்தக்கவையல்ல.

ஆனால், அக்காரணத்தினாலேயே அவை நன்கு மனத்தி லிருத்திப் படிக்க வேண்டுபவையாகும். ஏனெனில், அவற்றை ஒரு முறை படித்து என்றென்றைக்கும் பயன்படுமளவு நினைவில் பதிக்கவேண்டும்.

படிப்பு, விளையாட்டு ஆகிய உனது மற்ற வேலை களுக்குரிய நேரத்தில் நீ அவற்றை வாசிக்கவோ, அவற்றுக்கு விடை எழுத முனையவோ கூடாது. ஏனெனில், நீ அவற்றைப் படிக்கும்போது விளையாட் டைப்பற்றியோ, விளையாடும்போது படிப்பைப்பற்றியோ நினைக்கக்கூடாதல்லவா? அதுபோலக் கடிதம் வாசிக்கும்போதும், எழுதும்போதும், நீ வேறு எதுவும் செய்யக்கூடாது.

நீ கவனமில்லாது செய்யும் எந்த வேலையிலும் உன் நேரம் இரு மடங்கு வீண் செலவாகும். ஏனெனில் அப்போது செய்த வேலையை மீண்டும் செய்தாகவேண்டும். முதல் தடவை செய்ததைவிட மிகுதியான முயற்சியில்லாமல் இரண்டாம் தடவை ஒரு காரியத்தைச் செய்ய முடியாது.

வாழ்க்கையின் முதன்மையான செய்திகளுள் மதிப்பு என்பது ஒன்று. தக்க செயலைத் தக்க இடத்தில் செய்தவன் மூலமே அம்மதிப்பு ஏற்படும். பல செய்தி கள் ஓர் இடத்திலும் ஒரு சமயத்திலும் தகுதியுடை யவையாய் இருக்கும். ஆனால், வேறோரிடத்தில் அதுவே தகுதியிழந்து மதிப்பற்றதாகிவிடும். ஒவ் வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் விளை யாடுவது தகுதியுடையதாகவே எண்ணப்படும். ஆனால், கண்ட கண்ட இடத்திலும், காலத்திலும் பட்டம்பறக்க விட்டுக் கொண்டிருப்பதோ, திரு. மெய்ட்லண்டு (ஆசிரியர்) முன்னிலையில், 'நாயும் புலியும்' ஆடு வதோ தகுதியுடையதாக மாட்டாது.

பாடுவதும், ஆடுவதும் கேளிக்கைக் கூட்டங்களில் பொருத்தமானதே. ஆனால், வழிபாட்டிடத்திலோ,

பிரிவுக் கொண்டாட்டத்திலோ பாடியாடுபவன் பித்தனு கவே கொள்ளப்படுவான்.

தகுதியும் மதிப்பும் அறியாதவன் உலகத்தாரால் மதிக்கப்படமாட்டான். உன்னளவில் அவையில்லாமல் திரு. மெய்ட்லண்டு உன்னை மதிக்கமாட்டார் என்பது உறுதி. அவர் மதிக்காமல் நான் உன்னை மதிக்கப் போவதில்லை. எம் இருவர் மதிப்புமே உனக்கு உலக மதிப்புக்கு வழி காட்டும். ஆகவே, எல்லாச் செய்தி களிலும் அவர் கூறியவற்றைக் கருத்துடன் கேட்டு மனமார ஆராய்ந்து அதன்படி நடப்பாயாக.

உன் அன்புள்ள தந்தை,

....

(2)

பேச்சொழுங்கும் நடையொழுங்கும்

புதன்கிழமை

அன்பார்ந்த சிறுவ,

கழிந்த ஞாயிற்றுக்கிழமை திரு. போடன் இல்லத்தில் நீ பண்பு முறை வழுவாது நடந்து கொண்டதுபற்றி நான் எவ்வளவு மெச்சினுலும் தகும். இளமையிலேயே நன்னடத்தையில் ஆர்வங்காட்டும் உனக்குக் கூறும் நல்லுரைகள் வீண் போகா என்ற மன உறுதி மேலும் அவ்வழியில் உன்னை மேம்படுத்தப் பல செய்திகளைக் குறிப்பிடத் தூண்டுதலாயிருக்கிறது. ஆகவே, அம்முறையில் சில கூறுகின்றேன்.

மக்கட்குழாத்தினிடையே ஒருவனுக்கு நன் மதிப்பும் உயர்வும் தரக்கல்வியும் நற்குணமும் பெரு மிதமும் எவ்வளவு இன்றியமையாதவையோ அவ்வள வுக்கு நல்லொழுக்கமும் நற்குடி நாகரிகமும் பிறர் அன்புக்கும் பிறரிடை நல்வரவேற்புக்கும் இன்றியமை

யாதவை ஆகும். இவற்றுள் முன் கூறப்பட்ட கல்வி, பெருந்தன்மை முதலிய சிறப்புக்கள் பொதுப்படையாக எல்லாரும் எளிதில் பெறத்தக்க பேறுகள் அல்ல. எல்லாரும் அவற்றை மதிப்பிடுதற்கு உரியரும் அல்லர். ஆனால், நல்லொழுக்கம், நாகரிக நடை ஆகியவை யாவரும் கண்டறிந்து ஒழுகக்கூடியவை. யாவரும் எளிதில் கண்டு மதிப்பிடக்கூடியவையும்கூட. ஆகவே, பெறுதற்கெளிதானவையும், பயனுற் பெரிதானவையும் ஆன இக்குணங்களைப் பேணுதிருப்பது செல்வ மிருந்தும் பயன்படுத்தாத நிலையை ஒத்தது.

நல்லொழுங்கு எது என அறிவமைதி மட்டுமே காட்டவல்லது. ஏனெனில் ஓரிடத்தில் ஒரு மனித னிடம் ஒரு தருணத்தில் நல்லொழுங்காயிருப்பது வேறு ஒரு மனிதனிடம் வேறிடத்திலும் தறுவாயிலும் பொருந்தாதிருப்பதுண்டு. ஆயினும் எப்போதும் எல்லா இடத்தும் பொதுவாயமையும் சில அடிப்படைப் பண்புகள் உண்டு. எடுத்துக்காட்டாக எவரிடம் பேசும்போதும் அவர்களிடம் இணக்கத்தையோ மறுப்பையோ, தெரிவிக்கும்போது மொட்டையாக 'ஆம்,' 'இல்லை' என்று கூறுவதைவிட 'ஆம் ஐயா,' 'ஆம் அம்மா,' 'ஆம் அண்ணு,' 'ஆம் தம்பி' எனத் தக்க முன்னிலைத் தகுதி விளியுடன் சேர்த்துக் கூறுவதுதான் சிறப்புடையது. உரையாடுபவர் பிற நாட்டார் ஆனல், அல்லது உயர்வான பட்டங்களை யுடையவரானல் அல்லது பிற குழுவினர் ஆனல், அதற்கேற்ப அவரவர் தகுதிக்கேற்ற மதிப்புச் சொற்களையோ, அவருக்குரிய பட்டங்களையோ கையாளலாம்.

மேலும் உன்னிடம் பேசுபவர்களுக்குத் தக்க மறுமொழி கூருதிருப்பதும், முகத்தைத் திருப்பிக் கொண்டு மறுமொழி தருவதும், பேசாது வேறிடம் செல்வதும் தகாத செய்கைகள். ஏனெனில், அது அவர்களை நீ இழிவு படுத்துவதன் அறிகுறிகள் ஆகும்.

அதுபோலவே ஓரிடத்தில் சென்றவுடன் இருக்கைகளில் சிறந்த ஒன்றை நீ முந்திக் கைக்கொள்வதும் தவறு ஆகும். உணவு மேடையில் உனக்குக் கிடைத்தவற்றை முந்தி உட்கொள்ள முனைதலும் அவ்வாறே. எல்லார் நலத்தையும் பேணியபின் தன் நலம் நாடுதலே நல்ல ஒழுங்கு முறை ஆகும்.

பிறருடன் நயமும் இணக்கமும் காட்டப் பழகிய நற்பண்பாளர்கள் அந்நயத்தினையும் இணக்கத்தினையும் முயற்சியின்றி எளிமையுடன் கைக்கொள்வர். வலிந்து செய்வதாகவோ பிறருக்காகச் செய்வதாகவோ நடந்து கொள்ளமாட்டார். இவ்வெளிமையில் மக்கள் பண்பாட்டை மட்டுமின்றி, அப்பண்பாடு இயற்கையால் உண்டாகக் காரணமாக இருந்த உன் குடும்பத்தின் பண்பாட்டையும், நீ பழகும் தோழமைக் கூட்டுறவின் பண்பாட்டையும் பற்றி மதிப்புக் கொள்வர். ஆங்கிலேயர் வலிந்து மேற்கொள்ளும் இவ்விணக்கப் பண்பை, ஃபிரெஞ்சு மக்கள் பழக்கத்தால் தம் இயல்பாக்கிக் கொண்டு விட்டனர். அவர்களுக்கு அவர்கள் மொழி எவ்வளவு இயல்பானதோ, அவ்வளவு இந்நற்பண்பும் இயல்பாய்விட்டதாகத் தோற்றுகிறது. வெளிநாட்டாருடன் ஆங்கிலேயர் எளிதில் பழக முடியாததற்கும் ஃபிரெஞ்சு மக்கள் மிக எளிதில் நெருங்கிப் பழக முடிவதற்கும் இஃது ஒரு தலையான காரணம் ஆகும்.

வெட்கப்படத்தக்க செயலை நீ என்றும் செய்ய வேண்டா; ஆனால், நேர்மையான செயலைச் செய்வதற்கு நீ என்றும் நாணவும் செய்யாதே. ஆயினும், நய நாகரிகத்துடன் அந்நேர்மையான செயலைச் செய்யாவிட்டால் நாகரிகமில்லாமைக்காக நீ வெட்கப்பட வேண்டியதேயல்லவா? ஆகவே நேர்மையான செயலையும் நீ நய நாகரிகத்துடன் செய்வாயாக. பிறரிடம் கூடுமான போதெல்லாம் இணக்கமுடைய நயமான சொற்களை வழங்க ஒருவன் கூசுவானேன்?

உயர் பண்புடையவரிடம் இச்சொற்களை கூறுவதனுல் பிறர் நகைப்பரே என்று எண்ணுபவர் அப்பண்பாளர் உலகில் இடம் பெருது போவர். ஆங்கில இடைத்தர மக்கள் இங்ஙனம் உயர்ந்தோருடன் கூட்டுறவு கொள்ளும் வாய்ப்பின்றி ஒதுங்குபவர். ஆனுல், ஃபிரெஞ்சு மக்களில் பலர் தம்முடன் ஒத்தவருடன் எவ்வளவு எளிமையுடன் பழகுவார்களோ அதே எளிமையுடன் இவ்விணக்க மொழிகளின் உதவியால் அரசருடனும் பழகத் தயங்குவதில்லை.

முடிவாக, இணக்கமும் எளிமையும் நற்குடிப் பிறப்பின் சின்னங்கள். அவை உயர் பண்புடையவருடன் எளிதில் உறவாடத் துணை செய்து உன்னையும் உயர் பண்புடையவருட் சேர்க்கும். இணக்கமின்மையும் நல்லொழுங்கு பேணுமையும் பண்புடையுலகினின்றும் உன்னை ஒதுக்கிவிடும், தகுதியில்லா நாணயமோ பிறரது உள்ளார்ந்த நகைக்காளாக்கி மதிப்பிழக்கச் செய்யும். கல்வியில் முன்னேறி வரும் நீ கவி நடையிலும் பயின்றுவிட்டால், கற்றறிந்தார் குழுவிலும் இடம் பெற்று இரட்டிப்புச் சிறப்பும் பெறுவாய். ஆங்கில நாட்டுச் சிறுவர்களிடையே ஆண்டில் உன்னை ஒப்பவர்கள் தன்மையில் உன்னை ஒவ்வாத நிலையை அடைவாய்.

உனதன்புள்ள தந்தை,

....

(3)

ஒப்புரவும் மக்கட் கூச்சமும்

ஸ்பா, ஜூலை 25, 1741

தன் மதிப்புக் காத்தல், நல்லொழுக்கம் ஆகியவற்ருல் நன்மதியும், கல்வி, அறிவு, திறமை ஆகியவற்ருல் மேம்பாடும், ஒருவனுக்குக் கிடைக்குமாயினும்,

பண்பாட்டினுல் மட்டுமே நன்மக்கள் உறவு கிடைக்கும் என்று நான் பல தடவை உனக்கு வற்புறுத்திக் கூறி யிருக்கிறேன். இவற்றுள் பண்பாடு என்பது மிகச் சிறிய செய்திகளில் கவனஞ் செலுத்துவதால் மட்டுமே வருவதாகும். அவற்றை நூல்களிலோ, கல்லூரி களிலோ படிக்க முடியாது. உலக வாழ்க்கையிலிருந்து தான் கற்றுக் கொள்ளவேண்டும்.

கல்வி கற்க, மொழியறிவு வேண்டுவதுபோல, உலக வாழ்க்கையிலிருந்து இவற்றைக் கற்றுக்கொள்ள நுட்பங்களை ஆராய்ந்துணரும் கூரறிவும், கவனிப்பும், அவற்றைச் செயற்படுத்தும் நடைப்பழக்கமும் வேண் டும். இவையில்லாதவிடத்தில் சிறு காரியங்களும் மலையாகத் தோற்றும்.

வெளித் தோற்றத்தில் மிகச் சிறியதாகத் தோற்றும் திறமை காரியத்தில் மிக அரிதாகிவிடுவ துண்டு. அதுவே, பொது அவைகளிலும் நல்லோர் குழுவினும் ஏற்படும் அவைக் கூச்சம். இது நல்லோருடன் பழகாததனுலோ, பழகும்போது அவர் கள் நடை உடை தோற்ற இயக்கங்களைக் கூர்ந்து கவனிக்காததாலோ ஏற்படுவதாகும்-

தோற்றம், நடை, சொல், செயல் ஆகிய எல்லாத் துறைகளிலும் பண்புடைமை என்பது வெளிப் பார்வைக்கு மிக எளிமையாகவே காணப்படும். ஆயினும், கூர்ந்து கவனித்துப் பழகாவிட்டால் செயலில் அவை மிக மிக அரிதாகிவிடுகின்றன. இக் காரணத்தினுலேதான் வாழ்க்கையில் மிக உயர் வடைந்தபின்கூடப் பலரிடம் குறிப்பிடத்தக்க நடைக் கோட்டம், சொற்சோர்வு முதலிய ஒளிவு நெளிவுகள், நகையாடற்குரிய பழக்கங்கள் ஆகியவை காணப்படு கின்றன. ஒருவன், உயர்வடைந்தபின் இவை மக்களால் புறக்கணிக்கப்படலாம். ஆனுல், உயர்வடைய விரும்பு பவர்கட்கும் மக்கள் நேசத்தை அவாவுபவர்கட்கும் இவை தடைகளேயாகும். பலர் இத்தகைய நடை

நெளிவுகளாலும் குறைகளாலும் நகைப்புக்கும் இழிப்புக்கும் ஆளாகின்றனர்.

நான் மேற்குறிப்பிட்ட கோட்டங்கள் உன்னிடம் இல்லாமலிருக்க வேண்டுமானல் நீ நல்லோருடன் பழகுவதுடன் அவர்கள் நடை உடை தோற்றங்களை நன்கு கவனித்துப் பழக வேண்டும். நல்லோர் பழக்கம் பற்றிய கவலை உனக்கு ஏற்பட வேண்டா; அப்பழக்கத்தை உண்டுபண்ணுவது என் பொறுப்பு. ஆனல், அவர்கள் இயல்புகளை ஆராய்ந்துணர்ந்து அவற்றைப் பழக்கத்தில் கொண்டுவரும் பொறுப்பு உன்னுடையது. இவ்வகையில் இடையரு விழிப்புணர்வு வேண்டியதாகும். வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்குமே ஓரளவு இப்பண்பு வேண்டியதல்லவா?

போதிய விழிப்புணர்வு இன்மையாலும் தன்மறுப்பினுலும் பலர் தன்மதிப்பைக் கெடுக்கும் சிறு தவறுதல்களுக்கு ஆளாகின்றனர். அவர்கள் வாயிற்படியில் கால் தட்டி இடறுவர்; குடை முதலிய பொருள்களைப் பொது அவையில் தடாரென நழுவி விழச் செய்வர்; தம் இடமறியாது அமர்வர்; குடிநீர்க் கிண்ணம், உண்டித்தட்டு ஆகியவற்றைச் சட்டென எடுப்பர்; திடுமென வைப்பர். விரைந்துண்ணுவர்; வெப்பமிக்க நீரை எடுத்தும் குடித்தும் இடர்ப்படுவர். பொதுவாக எச்செயலினும் உலகுடனுெப்புரவு பேணுது தனிநிலை நின்று பலர் கவனத்துக்கும், கண்டனத்துக்கும், நாளடைவில் மதிப்புக் குறைவுக்கும் ஆளாவர்.

சிலர் எப்போதும் தும்மல், இருமல் ஆகியவற்றுக்கு ஆளாவர். சிலர் பெரு விரல்களை ஆட்டியும், பிற பொருள்களை உருட்டியும் கையைக் கடித்தும் துணி மணிகளைக் கடித்தும் பிறர் அருவருப்புக்கு ஆளாவார்கள். இன்னும் சிலர் கையை என் செய்வது, எங்கே வைப்பது என்றறியாமல் இங்கும் அங்கும் பரந்து பொருளற்ற செயல் செய்யவிடுவர். சிலர் இன்னதைத் தான் பார்ப்பது இயல்பு என்றறியாமல அங்கும்

இங்கும் விழித்துக் கண் பார்வையைப் பரப்புவர். இன்னும் சிலர் இச்சிறு செயல்கள் பற்றிய மனக் குழப்பத்தை மறைக்க ஒரே வழியில் அல்லது ஒரே இடத்தில் விழித்துக்கொண்டிருப்பர். இவையனைத்தும் சிறு குறைகள். சட்ட நூலார் தண்டனைக்குரியவை என்று கூறுபவையோ ஒழுக்க நூலார் கண்டிப் பவையோகூட அல்ல. ஆயினும், நன்மக்கள் மதிப் புக்கும் கூட்டுறவுக்கும் இவை தடைகள் ஆகும்.

செய்யக்கூடாதவை இவை என்ற இவ்வரையறை யால், செய்யத்தக்கவற்றை நீ அறிந்துகொள்ளலாம்.

தோற்ற நடைகளிலுள்ள இச்சோர்வுகளைப் போலவே, சொல்லிலும் சோர்வுகள் உண்டு. கொச்சை மொழி, தெளிவும் திருத்தமும் அற்ற ஒலிப்பு முறை, கீழான உரை வழக்குகள் உவமைகள் ஆகியவை அவற்றை வழங்குபவன் பழகும் மக்கள் தரத்தை விளக்கிவிடும்.

சூழ்நிலையை நன்கு கவனிக்கக் கூர்ந்த அறிவு மட்டுமன்று, பரந்த விரைந்த அறிவும் வேண்டும். இவை பெரிதும் பழக்கத்தால் வளர்ச்சியடைபவையே. கண்டவுடன் பொருளின் பண்பு முற்றிலும் அறிதல், பல பொருள்கள் அல்லது மக்கள் பண்புகளையும் கவனித்தல், கண்டது கொண்டு காணாதவற்றையும் உய்த்தறிதல் ஆகியவை கவனிப்பின் பல கூறுகள் ஆகும். இக் கவனிப்பும் முயற்சியற்றதாக இருத்தல் வேண்டும். வாழ்க்கையில் உயர்வடைய வேண்டும் என்ற குறிக்கோளில்லாதவனுக்கு 'முயற்சி இல்லா' இவ்வியற்கை முயற்சி எளிதில் அமையாது. ஆகவே, உயர் நோக்கம், அறிவு, பொறுமை ஆகியவற்றுடன் வாழ்க்கையாகிய ஏட்டைத் திட்பமுடன் கற்பாயாக.

வாழ்க. உனதன்புள்ள,

....

---

17. அன்னமும் சொன்னமும்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

திருநெல்வேலி ஜில்லாவில் வடகரையாதிக்கமென்னும் பெயருடைய சொக்கம்பட்டி ஜமீனில் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் பொன்னம்பலம் பிள்ளையென்பவர் தானாதிபதியாகிய இருந்து வந்தார். அவர் கூரிய அறிவும் தமிழ்ப் புலமையும் உடையவர்; சமயத்திற்கு ஏற்றபடி உபாயங்களை மேற்கொண்டு வேலைகளை நிறைவேற்றுபவர். அவர் காலத்தில் சமஸ்தானாதிபதியாக இருந்த பெரிய சாமிச் சின்னணஞ்சாத்தேவரென்பவர் தம் அமைச்சருடைய அறிவையும் பெருமையையும் நன்கு உணர்ந்து அவர்பால் நன்மதிப்பும் பேரன்பும் கொண்டிருந்தார். ஜமீன்தாருக்கும் அமைச்சருக்கும் அவ்வளவு நட்பும் மனவொற்றுமையும் இருப்பதைக் கண்டோர் யாவரும் வியந்தனர்.

அக்காலத்திலே சேற்றூரில் இருந்து வந்த ஜமீன்தாராகிய சிவப்பிரகாசத் திருவணாதத்துரையென்பவர் பொன்னம்பலம்பிள்ளையிடத்திலும் சின்னணஞ்சாத்தேவரிடத்திலும் பெருமதிப்பு வைத்திருந்தார். இப்பொழுது சிவகிரியென்னும் பெயரோடு வழங்கும் ஜமீன் அக்காலத்தில் தென்மலையென வழங்கி வந்தது. தென்மலையாருக்கும் சேற்றூராருக்கும் எப்பொழுதும் பகைமை உண்டு. தென்மலையார் மிக்க பலமுடையவராதலின் அவர்களால் சேற்றூராரே அதிகமான துன்பத்தை அடைந்து வந்தனர்.

இவ்வாறு தென்மலையாரால் தமக்கு அடிக்கடி இடையூறுகள் உண்டாவதுபற்றி மிகவும் வருந்திய சேற்றூர் ஜமீன்தார் பலமுடையாரொருவருடைய துணையைப் பெற்றால் அவ்விடையூறுகளினின்றும்

நீங்கலாமென்று எண்ணினர். வடகரையாருடைய ஆதரவு கிடைத்தால் இக்கருத்து நிறைவேறுமென்று நம்பி அதனைப் பெறுவதற்குரிய முயற்சியையும் செய்யத் தொடங்கினர்.

ஒருநாள் சேற்றூர் ஜமீன்தாரராகிய சிவப் பிரகாசத்திருவணுதத்துரை தம்முடைய பரிவாரங்களை அழைத்துக்கொண்டு தக்க காணிக்கைகளுடன் புறப்பட்டுச் சொக்கம்பட்டி வந்து சேர்ந்தார். அங்கே சமஸ்தானுதிபதியையும் அப்போது இளவரசுப் பட்டத்தில் இருந்த இராஜகோபாலத் தேவரையும் கண்டு பேசித்தம் குறைகளைக் கூறித் தமக்கு உதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். சமஸ்தானுதி பதி அங்ஙனமே செய்வதாக வாக்களித்தார்.

சேற்றூர் ஜமீன்தார் தமிழ்க் கல்வியிற் சிறந்தவர். வடகரை சமஸ்தானுதிபதி தமக்கு உதவி புரிவதாக வாக்களித்ததைக் கேட்டு அவர் உள்ளம் பூரித்தார். அந்த உவகை மிகுதியால் பின்வரும் செய்யுளை அவர் கூறினர்.

"கரைகாணு திருந்ததுன்பக் கடல்கடந்து வடகரையுங்
கண்டேன் கல்விக்
குரைகாணுந் துரைபெரிய சாமியைக்கண் டேன்மழைக்கா
ரோங்கக் கண்டேன்
நிரைகாணக் குன்றெடுத்த ராஜகோ பாலனையும் நேரே
கண்டேன்
வரைகாணும் படிபுயமும் பூரித்தேன் நிலைமைபெற்றேன்
வாழ்வுற் றேனே"

[மழைக்கார் - கருமேகம். நிரை - பசுக்கூட்டம். ராஜ கோபாலன்-இளவரசுப் பட்டத்தில் இருந்த இராஜகோபாலத் தேவர்.]

தம் படைகளை அவருக்கு உதவி புரிய அனுப்பு வதாக வடகரை சமஸ்தானுதிபதி சொல்லியிருந்தார்.

அதனைக்கேட்டுத் தைரியம் கொண்ட சேற்றூர் ஜமீன் தார் தம் ஊர் சென்று வடகரையிலிருந்து துணைப் படை வரும் வருமென்று காத்திருந்தனர். ஆனால், அப்படையோவரவில்லை. அதனால், திருவணுதத்துரை, சின்னணைஞ்சாத்தேவருக்கு மீட்டும் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டனர், தமிழ்ச் செய்யுட்களால் அவரைப்பாராட்டிப் பல கடிதங்கள் எழுதினர். ஒன்றும் பயனளிக்கவில்லை. தேவர் அவ்வாறு பராமுகமாக இருப்பதை உணர்ந்த சேற்றூர் ஜமீன்தார், 'பொன்னம் பலம் பிள்ளை மனம் வைத்தால் இந்தக்காரியம் எளிதிற் கைக்கூடும்' என்பதை அறிந்து நிகழ்ந்த வரலாறு களைத் தெரிவித்து அவருக்கு ஒரு நிருபம் எழுதியனுப் பினர்.

திருவணுதத்துரையினுடைய பணிவையும் அன் பையும் அறிந்த பொன்னம்பலம்பிள்ளை அவருக்கு உதவி செய்வது அவசியமென்று தம்முடைய ஜமீன் தாரிடம் உசிதமாகத் தெரிவித்தனர்: "துரையவர் களுக்கு இவர் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். ஒவ் வொரு கடிதத்திலும் இவர் எழுதியுள்ள தமிழ்ச் செய்யுட் களோ மிகவும் சுவையுடையன. துரையவர்கள் பராமுகமாக இருந்தும் இவர் கடிதம் எழுதச் சலிக்கவே இல்லை. இவ்வளவு மரியாதையுடன் சலிக்காமல் அடிக்கடி விண்ணப்பித்து வரும் இவருக்கு உதவி செய்தால் இந்தச் சமஸ்தானத்துக்கே பெருமை உண் டாகும்", என்று கூறினர்.

பொன்னம்பலம்பிள்ளை சொன்ன பிறகு சின்ன ணைஞ்சாத்தேவர் அசட்டையாக இருக்க முடியுமா? "பல வேலைகளிடையே இதை மறந்துவிட்டோம். உங்கள் அன்புக்கு உரியவராக இருக்கும் அவருக்கு உதவி செய்வதில் என்ன தடை இருக்கிறது? நீங்களே ஒரு படையுடன் சென்று அவருக்கு உதவி செய்து அவர் விருப்பத்தை நிறைவேற்றி வருக," என்று கூறித் துணைகளுடன் அனுப்பினர்.

அவ்வாறே, பொன்னம்பலம்பிள்ளை சேற்றூ ராருக்கு உதவியாகச் சென்று தென்மலையின்மேற் படையெடுத்து வென்றார். அதுமுதல் சேற்றூராருக்குத் தைரியம் உண்டாயிற்று. அந்த வெற்றியினால் சிவப் பிரகாசத் திருவணுதத்துரை, "எம் குடியைப் பாது காக்க வந்த தெய்வம் நீங்கள்," என்று பொன்னம் பலம் பிள்ளையைப் பாராட்டினார்.

"சேற்றூரரார் நெஞ்சந் திடப்பட்டார் தென்மலையார்
தோற்றோமென் றோடித் துயருற்றார்—மாற்றலர்கள்
தெண்டனிடுஞ் சின்னணைஞ்சான் சேனு பதிபொன்னன்
தண்டிகையைக் கண்டவுடன் றான்"

என்ற செய்யுளையும் கூறினர். புலமை மிக்கவர் இருவர் கூடினால் அவர்களுடைய மகிழ்ச்சியும் துக்கமும் செய்யுளாகவே வெளிப்படுகின்றன. சேற்றூர் ஜமீன் தாருடைய அன்பிலும் தமிழறிவிலும் பொன்னம்பலம் பிள்ளை மிகவும் ஈடுபட்டார். "தங்கள் சமஸ்தானாதி பதியவர்கள் இங்கே அடிக்கடி வருவது சாத்தியமன்று. தாங்கள் அக்குறையை நீக்க இங்கே வந்து சல்லாபம் செய்து போகவேண்டும்," என்று ஜமீன்தார் கேட்டுக் கொண்டார். பொன்னம்பலம் பிள்ளையும் அங்ஙனமே செய்வதாக வாக்களித்தார். அதுமுதல் அவ்விரு வருடைய நட்பும் வன்மை பெற்றது.

ஒருமுறை பொன்னம்பலம்பிள்ளை சேற்றூருக்கு வந்தார். அவர் வந்தபோது அரண்மனையில் ஜமீன் தார் உணவருந்திக்கொண்டிருந்தார். பொன்னம் பலம்பிள்ளை வந்திருப்பது தெரிந்தவுடன் அவர் தம் உணவையும் மறந்தார். அவ்வளவு பெரிய மதியூகி யைப் பாராமல் அரைக்கணம் காக்கவைப்பதுகூடப் பிழையென்பது அவர் எண்ணம். ஆதலின், உடனே எழுந்து அவசரமாகக் கையைக் கழுவிக்கொண்டு மிகவும் விரைவாக வந்து பொன்னப்பலம் பிள்ளையை வரவேற்றார்.

ஜமீன்தார் வந்த விரைவையும், அவர் வாயும் கையும் ஈரமாக இருத்தலையும் கண்ட பொன்னம்பலம் பிள்ளை அவருடைய அன்பின் மிகுதியையும் வேகத்தையும் உணர்ந்து மகிழ்ந்தார். அவசரமாகக் கை கழுவினராதலின் அக்கையில் ஒரு பருக்கை ஒட்டிக் கொண்டிருந்தது. உண்ணும்போது தம் வலக்கையிலே இருந்த மோதிரத்தை இடக்கையிலே அணிந்திருந்தனர். அதை மீண்டும் வலக்கையில் மாற்றி அணிந்துகொள்ளவில்லை.

அந்தக் கோலத்தைக் கண்டவுடன் பொன்னம்பலம் பிள்ளைக்குச் சிரிப்பு வந்தது. ஜமீன்தார் வரவேற்றபோது அவர் தம் நகைப்பை அடக்க முயன்றார். ஜமீன்தார். "ஏன் நகைக்கிறீர்கள் ?", என்று கேட்டார்.

"உங்களுடைய அன்பின் திறத்தைக் கண்டு நான் சந்தோஷிக்கிறேன். உங்களுக்கு ஒரு கையிலே அன்னமும் ஒரு கையிலே சொன்னமும் உள்ளன. வரும்போதே என்னைப் பாராட்டிக்கொண்டு வருகிறீர்கள். அவை உங்கள் அன்பின் பெருமையைக் காட்டுகின்றன," என்று சொல்லித் தொடர்ந்து,

"ஒருகையிலே யன்ன மொருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமான் றிருவாழ் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்".

என்னும் வெண்பாவையும் கூறினர்.

'ஒரு கை நிறையச் சோற்றையும் ஒரு கை நிறையப் பொன்னையும் ஏந்திக்கொண்டு அன்பான வார்த்தைகள் கூறி, யாசகருக்கு அவற்றைக் கொடுக்கும் குணமுடையவர் திருவணுதத்துரை' என்ற பொருள் தோன்றும்படி அந்தச் செய்யுள் அமைந்திருக்கிறது; ஆயினும், ஒரு கையிலே அன்னப்

பருக்கையும் ஒரு கையிலே பொன் மோதிரமும் கொண்ட கோலத்தையும் குறிப்பாக அது தெரிவிக்கின்றது.

ஜமீன்தார் செய்யுளைக் கேட்டார். "என்னை இப்போது பாராட்டக் காரணம் என்ன?", என்று அவர் பொன்னம்பலம் பிள்ளையை வினவினர். பிள்ளையினுடைய முகத்தையே மிகவும் விருப்பத்தோடு பார்த்து நின்ற அவருக்குத் தம் கையை நோக்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

"உங்கள் கைகளைப் பார்த்தேன்; உங்களுடைய வண்மையை அவை நினைப்பூட்டின. ஆதலின் இந்தச் செய்யுளைச் சொன்னேன்," என்று பொன்னம்பலம் பிள்ளை கூறினர். அப்போதுதான். ஜமீன்தார் தம் கைகளைப் பார்த்தார். வலக்கையிலுள்ள சோற்றுப் பருக்கையும் இடக்கையிலுள்ள மோதிரமும் அவர் கண்களிற் பட்டன. அவருக்கே சிரிப்புத் தாங்க முடியவில்லை. உடனே உள்ளே சென்று கையை நன்ருகச் சுத்தம் செய்து மோதிரத்தை வலக்கையில் அணிந்துகொண்டு வந்தார்.

பொன்னம்பலம் பிள்ளை, "நீங்கள் உங்கள் கைகளிலுள்ள பொருள்களை மாற்றிக்கொண்டாலும் நான் என்பாட்டிலுள்ள பொருளை மாற்றுவது அவசியமன்று," என்று கூறினர். அவர் கூறியது உண்மை தானே?

18. ஆசு கவி

பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்
எம்.ஏ., எம்.எல்., எம்.ஓ.எல்.

மனிதன் உலகினேப் பார்க்கின்ருன். எத்தனேயோ வகையான பொருள்கள் தோன்றுகின்றன. தயங்கு கின்ருன் அவன். தயங்குகிறவன் மூளே குழம்பு கின்றது. அவற்றை மலே என்றும், நீர் என்றும், மரம் என்றும் அவன் வகைசெய்ததும், அவனுக்குத் தெளிவு பிறக்கின்றது. அப்போது அவன் புன்னகை புரி கின்ருன். அவ்வகையுள் ஒன்ருன மரத்தினேயும்—பலா, வாழை என்று பலப்பல இனமாகப் பின்னர்ப் பாகுபாடு செய்கின்ருன். அவற்றையெல்லாம் தனது உடைமை யாகக் கொண்டு பேசுகின்ருன்; வேலேக்குப் பயன் படுத்துகின்ருன்; தனக்குப் புறம்பானவற்றை இப்படிப் பாகுபாடு செய்து களித்துத் திளேக்கின்ருன். அதன் பின் தன் அனுபவங்களேயும் இப்படிப் பாகுபாடு செய்து, தன்னேத் தான் அறிந்ததாகத் தலே நிமிர்ந்து நடக் கின்ருன். அது வரையில் தலேயை நெரித்துக்கொண்டு தரையை நோக்கியே பெருமூச்சு விட்டு மனமுடைந் தவனுக்குச் சிறிது இன்பம் பிறக்கின்றது. பின்பு அவன் உலகைக் கீழும் மேலும் உற்று நோக்கு கின்ருன்; நீலக் கடல், வெண்ணிலா, பல நிற வான வில்—இவற்றை அப்படியே கண்டு களிக்கின்ருன்; இந்த இன்பக் காட்சி ஒரு பாட்டனுபவம் ஆகின்றது. ஓர் அழகு விருந்தாகின்றது. ஆனல், பிறரொடு கூடி வாழ்வதன்ருே அவனுடைய இயல்பு! ஆதலின், அழகனுபவத்தினேப் பிறருக்கு அவன் வெளியிடு கின்ருன்; பாவலனுகின்ருன். கவி வெள்ளம் புரண் டோடுகிறது; பல வகையான பாட்டுக்கள் மிதந்தோடி வருகின்றன. இவற்றையும் இனம் இனமாகப்

பிரித்தால் மட்டுமே அவனுக்கு ஆறுதல் பிறக்கின்றது.

அவன் செய்யும் பாகுபாடு அந்த அந்த வேளைக்குத் தகுந்தபடி மாறி மாறியும் வரும். பூவே நோக்கமாக மரத்தினைப் பிரிக்கும்போது பூத்துக் காய்க்கும் மா முதலிய மரம், பூவாது காய்க்கும் கோளி மரம் என்று அவன் பிரிப்பான்; மரத்தின் வைரத்தை நோக்கிப் பிரிக்கும் போது உள் வைரமுள்ளவற்றை மரம் என்பான்; வெளி வைரமுள்ளவற்றைப் புல் என்பான். அப்படியே கவிகளை வெண்பா முதலியவாகப் பிரித்ததும் உண்டு; ஆசு, மதுரம், சித்திரம், அகலம் என்று பிரித்த காலமும் உண்டு.

அகலக்கவி: மனிதன் தான் கண்ட காட்சியின் பத்தில் திளைத்து நின்ற நிலையில், பாட்டு எழுகின்றது என்றோம். சிறு சிறு துளியாய்த் தேனைத் திரட்டித் தேன்கூடு கட்டும் தேனீப்போல, மனிதன் இந்த இன்பக் காட்சிகளை ஒரு கதையாகத் திரட்டிப் பெருங் காப்பியமும் சிறு காப்பியமுமாக விரித்துப் பாடினான். இப்படித்தான் அகலக்கவி வளர்ந்தது. காப்பியமாயின் அகலக்கவிகள் பல பாக்களாக வரும். அகலக்கவி ஒரு பாட்டானால் பல நூறு அடிகளில் வரும்.

சித்திரகவி: ஒரு வகையால் பார்க்கும்போது அகலமில்லாத கவிகளே இயற்கை என்னலாம். ஆனால், அந்த இயற்கையே செயற்கையிலும் செயற்கையாயிற்று. செயற்கையாகும் வகை என்னை? அது பாட்டனுபவத்தினை விட்டு, மேல் எழுந்த யாப்பினைக் கைப்பற்றிய வகையே ஆம். மேல் எழுந்த யாப்பினை எழுதிக் காட்டும்போது பல கோலமாக எழுதிக் காட்டலாகாதா என்று தோன்றியது. தேர் போலக் கோலமிட்டனர்; அந்தக் கோலத்தில் வரும் பல அறைகளிலும் பாட்டின் எழுத்துக்களை அடைத்தனர்; சக்கரம், இரட்டை நாகம், அட்டநாகம், முரசம், தாமரை, சிவலிங்கம் என்று பல பல கோலமிட்டுப் பாட்

டெழுதி அடைத்து வந்தனர். இவை எல்லாம் சித்திர கவி, இவற்றைக் கவி என்று பெயரிட்டழைப்பது பொருத்த மாகாமற்போகலாம். இவை உண்மைக் கவி அல்ல; சித்திரத்தில் எழுதும் கவியே.

இதற்கு மேலும் உள்ளூறப் போனல் உண்மைக் கவியைக் காணலாம். இங்கு இரண்டு வகையான கவிகள் தோன்றுகின்றன. ஒன்று கவியில் இனிமை எல்லாம் சொட்டச் சொட்ட வருவது; புலவன் விரும்பிய பொருள் பற்றித் தான் பெற்ற அனுபவத்தினை விளக்கிப் பாடுவது. **மதுர கவி** என்ற பெயர் இத் தகைய பாடலுக்கு வழங்குவதாயிற்று. மற்றொன்றே **ஆசு கவியாம்.** ஆசு என்றால் விரைவு என்பது பொருளாம். மதுரகவியிலும் வேறான நிலையை நோக்கும்போது பாட்டின் உண்மை இன்பம் இங்குக் குறிக்கோளாக அமையவில்லைபோலும்! எப்படியேனும் செய்யுளை நிரப்பி மிக விரைந்து பாடிவிட வேண்டும்! விரைந்து பாடுவது தமிழ்நாட்டில் அருமையில்லை. “காசு **கொடுங்களேன்—கனதனவான்களே,**” என மூச்சு விடாமல் பாடிக்கொண்டே போவான் தமிழ் நாட்டுப் பிச்சைக்காரன். “**மன்னவனே நானினித்தான் மஞ்சள் குளிப்பதெங்கே; பொன்னவனே நானினித் தான் பூவும் முடிப்பதெங்கே,**” என்றெல்லாம் தங்கு தடையின்றி ஒப்பாரி பாடுவாள் எழுத்து வாசனை அறியாத பெண்ணும். அது தமிழ்நாட்டுப் பாங்கு; தமிழின் பண்பு. மோனையும் எதுகையும், தமிழில் பேசு வோரை அறியாமலும் கரைபுரண்டோடும். “விழுந்த ஞாயிறு எழுவதன்முன் கவி பாடியது எழுநூறே,” என்று பழம் பாட்டின்படி நிமிடத்திற்கொரு கவிதை பாடினனும் கம்பன்.

“மூச்சுவிடு முன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிக்காள மேகமே உன்னுடைய
கள்ளக் கவியைநீ காட்டு”

என்றுனும் காளமேகத்தினைப் பார்த்து அவனை எதிர்த்த அதிமதுரகவி! இவ்வாறு பாடுவது வெள்ளைக் கவியாக முடியும் என்று பொருள் தோன்றுவது காண்க.

"இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்று லாயிரம்பாட் டாகாதா—சும்மா
இருந்தா லிருப்பேன் எழுந்தேனே யாயிற்
பெருந்தாரை மேகம் பிளாய்"

என்று காளமேகம் அப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டுப் பாடினுன்; காளமேகம் போலப் பொழிவதனைத் தன் பெயருக்கு ஏற்பப் பொருத்திப் பாடி ஆசுகவியின் சிறப்பினை விளக்கினுன். இந்தப் போராட்டத்தினை மதுரகவிக்கும் ஆசுகவிக்குமாக வைத்துப் படித்துத் தமிழ்நாடு இன்றுவரை ஆசை வைத்து வருகிறது.

அரிகண்டம் பாடுவது, எமகண்டம் பாடுவது என்றெல்லாம் கதைகள் வழங்கி வருகின்றன. கத்தி கட்டிப் பாடுவது தவறினுல், எதிரி, கயிற்றினை இழுத்ததும் தலை துண்டமாம்—இஃது அரிகண்டம். அடியே நெருப்பு, அதன் மேல் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறை, அதன் மேல் தொங்கும் உறியில், பாவலன் தன் கழுத்திலும், அரையிலும் கத்தி கட்டிக்கொண்டு நிற்றல், கத்தியைச் சங்கிலியில் கோத்து ஒவ்வொரு யானையும் தன் தன் துதிக்கையில் பிடித்திழுத்தல், கொடுத்த சமிக்கைபடி பாடாமற்போனுல் யானை இழுத்தல் புலவன் துண்டு துண்டாய் வெட்டுண்டு எண்ணெயிற் பொரிந்துவிடுதல்—இதுதான் எமகண்டம். கேட்டபடியெல்லாம் தவருமற் பாடவந்தான், இந்த எமகண்டத்திலும் காளமேகம்.

சங்க காலத்திலும் பாடல்களாக வருவன பல மிக விரைந்தே பாடப் பெற்றிருத்தல் வேண்டும். பூதப் பாண்டியன் தேவி, தான் உடன்கட்டை ஏறச்சென்ற தனைத் தடுத்தவர்களை எள்ளி நகையாடித் தீப்பாய்ந்த போது பாடிய பாட்டு, நெடுஞ்செழியன் முதலானோர்

செய்த சூள்கள் முதலியவற்றை உடனுக்குடன் விரைந்தன்றோ பாடியிருத்தல் வேண்டும். ஆனால், இவை எல்லாம் மதுரகவிகளாய்த் தனிச் செய்யுட் கோவைகளில் இடம் பெற்று விட்டன. ஆதலின், புலவன் தன் விருப்பப்படி பாடுவது மதுரகவி. பிறர் விரும்புவது போலப் பாடி முடிப்பது ஆசுகவி. போட்டி மனப்பான்மை எழும் இடம் இஃது என்னலாம். காள மேகனது எமகண்டம், போர் முழக்கமன்றோ?

இங்கு ஓர் ஐயம் பிறக்கிறது; அது, "கட்டுப் பாட்டில் கவி பிறக்குமா?" என்பது. தன்னுரிமையில் தன்னளவில், தன் விருப்பம்போல் பொங்கி வழிவது அன்றோ கவி? கட்டுப்பாடு பிறரிடுவதானால் வாய்க்குப் பூட்டு இட்டாற்போலத்தான். பாட்டேது வருவது? 'உளம் குளிர்ந்தபோதெல்லாம் உவந்து உவந்து உரைப்பேனே,' என்றார் சம்பந்தர். ஆனால், தானே தனக்கு இடும் கட்டுப்பாடுகள் உரிமையின் சிறப்பே யாம். "பிறரை வெல்லவேண்டும், புகழ் பெறவேண்டும். அல்லது உலகம் மகிழவேண்டும்", என்ற பெரு நோக்கால் பிறர் விரும்பியபடி எல்லாம் பாட வருகின்றவன் உரிமையின் செருக்கால் அன்றோ முன் வருகின்றான்? தன்னம்பிக்கை அவ்வளவு முற்றி முதிர்ந்து போகிறது. தன் திறமையின் வீறுப்பும் அவ்வாறு செம்மாக்கிறது.

வெள்ளம் பொங்கி ஓடுகிறது; போன வழியே போனால் கடலில் சென்று வீழ்ந்து அது வீணாய் அழியும். அதனை ஆறறிவு படைத்த மனிதன் அணை கட்டித் தேக்கி விடுகின்றான்; மின்சாரம் விளைவிக்கின்றான்; எந்திரம் சுற்றுகிறான். சிறு சிறு கால் வாயாக வயலுக்குப் பாய்ச்சுகிறான்; உணவு உண்கிறான்; நீரும் குடிக்கிறான். அவன் பெறாத இன்பம் யாது? கவி வெள்ளத்தினை இவ்வாறு அணை கட்டிச் சிறுசிறு கால்வாயாக ஓடவிட்டுப் பயன் கொள்ளத் தெரிந்த காளமேகம் போன்ற புலவரும் உண்டு.

காளமேகம் பாடத் தொடங்கினுல் எதுகை நயம், மோனே நயம், சொல் நயம், சுவை நயம் இவற்றுள் ஏதேனும் தயங்குகிறதா? அவன் கைப்பிள்ளையாக இவை அனைத்தும் அவனேடு தொடர்ந்து தொண்டு செய்கின்ற திறத்தினை என்னென்பது!

மாம்பழம் உண்கிறேம். ஓர் இன்பம் தோன்று கிறது; பின் 'நல்லது' என்கிறேம். 'நல்லது' என்று கூறும் நிலை கோடி முறை கூட விரைந்து வருமா? பாட்டனுபவம், மிக் விரைந்து வர முடியுமா? அதற்கு வேளை இல்லையா? நாழிகை இல்லையா? முற்றிப் பழுக்க வேண்டாவா? இத்தகையது மற்ருெரு கேள்வி. இரு வேறு நிலைகளைக் காணலாம். முயற்சி எல்லாம் வெளிப்படையாகத் தோன்றும் நிலை ஒன்று. முயற்சி, வெளியில் ஒரு சிறிதும் தோன்ருது உள்ளடக்கி அடி மனத்தே நிகழ, அனைத்தும் முற்றிப் பழுத்த நிலைமட்டும் மேலே தோன்றும் நிலை மற்ருென்று; படிப்படியாக மாறினுர் என்று சிலரைப் பற்றிப் பேசுகிறேம். திடீர் என மாறினுர் என சிலரைப் பற்றிப் பேசுகிறேம். ஆய்ந்தோய்ந்து கட்டுரை எழுதுவாரும் உண்டு. இன்று தந்தியில் கேட்ட செய்தியைப் பற்றி வெளியீட் டிதழ் வெளிவரும் நேரத்தில் இமைக்கு முன் கட்டுரை எழுதி வெளியிடுவதும் உண்டு. வெளியீட்டுலகில் நாம் காணும் காட்சி அன்றே? இந்தக் கட்டாயத் திலும் வெற்றி பெறும் எழுத்தாளர்கள் இல்லையா?

ஆசுகவிகளின் நிலை இது (இமைக்கு முன் கட்டுரை எழுதுவோர் நிலை) தான். என்றும் நிலைக்கப் பாடுபவர் அல்லர் அவர். இமைப்போதின் இன்பத் தினைப் பிழிந்தெடுத்து ஓடவிடாது விரைந்து தருபவர் அவர். அவர் உலகிற் பழகிப்பழகிப் பாட்டனுபவத்தில் தோய்ந்து திளைத்துத் தேக்கிக் கிடக்கின்றனர்; வேண்டும்போது அப்பேரூற்ரும் அனுபவம் ஆசுகவி யாகப் பீரிட்டெழுகிறது. துப்பாக்கியா, ஓலைச் சுருளா, பூசணைக்காயா, புராணமா—எது வேண்டுமாஞலும்,

எப்படி வேண்டுமானலும் பாடுகின்றுன் காளமேகம். இவற்றிடை எல்லாம் ஊறித் திளைத்து ஒற்றுமை வேற்றுமை கண்டு உள்ளத்திற்குள்ளேயே பாடித் திரிந்து பண்பட்டவன் அவன்.

சொற்பொழிவை முன்னரே திருத்தம் செய்து வந்து பேசுவதே முறை. ஆனல், பாராளுமன்றம் முதலிய சொற்போர்க் களங்களில் திடீர் என எதிரிகள் குத்தும் குத்தல்களுக்கு ஈடு கொடுப்பது எப்படி? சொல்லேருழவர் அல்லரோ அவ்வாறு ஈடு கொடுப்பவர். இத்தகைய நிலைகளில் மனிதனது முழு நிலையும் சோதனைக்கு உள்ளாகும். அந்நிலையில், அவனுடைய அனுபவத்தினை வெளியிடுகின்ற திறன் மிக மிகப் பழுத்திருத்தல் வேண்டும். தானே சாருக வடியும் நிலையை அப்போது காணலாம். மாணவன் தேர்தலுக்காக முயன்று படிக்கிருன். அங்கு முயற்சி வெளிப்படையாகத் தோன்றுகிறது. தினவுகெடச் சொல்லும் ஆசிரியர்களது முயற்சி வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. பண்டைய முயற்சியின் பயனுக அனைத்தும் ஊறி நிற்கின்றது; தொட்ட இடத்தில் எல்லாம் அறிவுத்தேன் கசிகின்றது. அப்படித்தான் ஆசுகவிகளின் நிலையும்! ஒரு நிலைக்கு எனப் பண்பட்டு நிற்பவர்கள் அல்லர் அவர்கள். ஏற்படும் எந்த நிலையையும் உள்ளூர உணர்ந்து பாடும் திறமையே அவர்கள் வடிவமாகப் பண்படுகின்றது.

ஒன்று முதல் பதினெட்டு வரை அடை இல்லாமல் சொன்னல், அவர்கள் நாவில் அது பாட்டாய் அடங்கும். பாதி வெண்பாவில் பத்தவதாரமும் ஒடுங்கும். செய்யுள் அமைதி அவர்களுடைய விளையாட்டு. அசைச்சீர் போனல் வெண்பாவில் இருப்பன பதினன்கு சீர்கள் என்பார்கள். பெயர் உணவு, கறி, பூண், படை, ஊர்தி, இடம் என்ற ஏழினையும், மூன்று கடவுளுக்குமாக மூன்று ஏழு பெயர்களை இரண்டேழு சீரில் சுருக்கிப் பாடுவார்கள். எத்தனையோ கருத்துக்களை

ஒரு பாவில் அடக்கமுடியும். உளறு படையாக எதிரிகள் கருதுவதைப் பொருள் பயக்கப் பாடுவார்.

குடத்தில் அடங்கும் கங்கை என்ருல், 'ம' என்ற ஓர் எழுத்தினைச் சேர்த்துச் சரிக்கட்டுவர்; "சடாமகுடத்தில் கங்கை அடங்கும்," என்பர். ஈயேற மலை குலுங்கும் என்பது உளறல்; அசோதை அடித்த புண்வாயில் ஈயேற மேரு மலையும் குலுங்கவில்லையா என்பது பாட்டு. கடலில் செந்தூள் எழுந்தது என்பது குழறு படை; செங்குங்குமக் குழம்பு பூசித் திருமாலுடன் பாற்கடலில் இருக்கும் திருமகள் தன்மகன் மன்மதன் எரிந்தது கேட்டு மார்பில் அடித்துக்கொண்டு அழுத போது செந்தூள் பறந்தது என்பது பாட்டு. பழங்கதைகளையும் இவ்வாறு பயன்படுத்தி எதிரிகளின் வாயை அடக்கும் வல்லமையைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? இஃது ஒரு பெரிய விருந்தன்ருே? அசதியாடுவதிலும் இப்படி அசதியாடுவது நல்லதன்ருே?

ஐம்புலன்களாலும் அறிவுக் கண்ணாலும் உலகை உண்பான்; புராணத்தை நுகர்வான்; கனவைத் துய்ப்பான்; கற்பனையை விழுங்குவான்; பாட்டாகத் தேக்கெறிய நிற்பான்; அவனே ஆசுகவி. அவனுக்குத் துப்பாக்கியும் தெரியும்; பழைய ஓலைச் சுருளும் தெரியும்; இரண்டிலும் ஆணிவரும்: எழுத்தாணி இரும்புச் சலாகை ஒன்று. இரண்டிலும் கருமருந்து வரும்: ஒன்று ஏட்டில் பூசும் மை; மற்ருென்று துப்பாக்கி மருந்து. காளமேகன் காலத்தில் துப்பாக்கி துருக்கர் வழிவந்த புது நாகரிகக் குறியாம். அதனையும் ஊன்றிப் பார்க்க அவன் மறக்கவில்லை. வானத்தில் வானவில்—புராணத்தில் விஷ்ணு—நன்ருகப் பெண்களும் மெல்லும் வெற்றிலை—இவற்றிடையே ஒப்புமை கொள்கிருன் காளமேகம். எதிரி கேட்டதும் பழைய அனுபவம் பாட்டாகப் பீரிட்டெழுந்து எதிரி வாயை மூடிவிடுகிறது. "ஒற்றுமை உண்டு" எனக் கனவிலும் கருத முடியாத பொருள்

களிடையேயும் ஒற்றுமை காண்கிற சமதர்சனப் பண்டிதன் அவன். பூசுணைக்காய்ப் பரமசிவன்—இந்த ஒற்றுமைக் காட்சி இவனது உலக அனுபவத்தில் பழுத்து வடியும் சாறு.

அரிச்சந்திர புராணம் பாடிய நல்லூர் வீரகவிராயர் ஓர் ஆசுகவி. ஆனல், அவருடைய ஆசுகவிகளைப் பார்க்க நாம் கொடுத்து வைக்கவில்லை. தனிப்பாடல் திரட்டில் ஆசுகவிகளைக் காணலாம். ஆசுகவி என்ற பட்டத்தைப் பெற்றவரைவிடச் சிறந்த மற்றொரு தமிழ்ப் புலவர் உளர். உலகிலேயே தலைசிறந்த ஆசுகவி இவரே எனலாம். இவர் ஏகாம்பர நாதருலா என்ற ஆசுகவியும் பாடியுள்ளார். ஆனல், அதற்கு ஒரு சிறப்பும் இல்லை. ஆசுகவியை உண்மையிற் கவி யாக்கிய பெருமை காளமேகத்திற்கே உண்டு. போட்டி மனப்பான்மையில் எதிர்த்தவர் வாயை அடக்கி வைப்பதில் தலைசிறந்தவராய், 'வசைபாடுவதில் காள மேகம்' எனப் புகழ் பெறுகிறார். இன்றும் தெரு வழக்கில் " கார சாரமாய்"ப் பேசுவது என்கிறார்களே அதுதானே எடுக்கிறது. அதுபோல இவருடைய ஆசுகவியும் பல பொய்ப் புலவர்களை வெருட்டி ஓட்டித் திருத்தியது; இன்னும் தூங்குகிறவர்களையும் தட்டி எழுப்பி இன்பச் சுவையூட்டுகிறது.

இவருடைய பெருமையை ஆசுகவிகளாம் இரட்டையர்களே புகழ்ந்துள்ளனர். சிவபெருமான் திரிபுரம் எரித்தபோது அவர் கொண்ட வில் "கவைக் குதவாது" எனப் பாடவந்தனர். நாணோ—(கயிறோ) நஞ்சது; நைந்தது—நஞ்சு உள்ளது. சாபம் (வில்லோ) கற்சாபம். கல் வில் வளையுமா? "பாணமோ" என்று தொடங்கினர் இரட்டையர். அதற்கு அப்படி இரு பொருள் கூறிக் குறை கூற முடியவில்லை. இரட்டையர் பாட்டை முடிக்காமலே போய்விட்டனர். காளமேகம் அங்கு வந்தார்; பாணமோ மண் தின்ற பாணமே என்று பாடினர். அதாவது துருப் பிடித்த பாணம்

என்றபடி. மண்ணை விழுங்கிய திருமாலல்லரோ பாணமாக வந்தார்? ஆகையால் புராணத்திற்கும் சரியாகப் போய்விட்டது. இந்தக் காலத்தறிவும் பழங் காலப் புராண அறிவும் ததும்பி ஒன்ருய்க் காளமேக மாய் உரு எடுத்திருந்ததாலேயே இவ்வாறு எளிதாகப் பாட முடிகிறது. இது கட்டுப்பாடா? வெள்ளைப் பாட்டா? உரிமை இன்பத்தின் போக்கு வீடு. பாம் பறியும் பாம்பின் கால்.'' இந்த உண்மையை உணர்ந்த ஆசுகவிகளாம் இரட்டையர்கள், காளமேகம் இறந்த தும் இதனைப் பாராட்டிப் புலம்புகின்றனர், கேளுங்கள் :

'' ஆசு கவியாம் அகில உலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தழலில் வேகுதே ஐயையோ
மண்தின்ற பாணம் என்ற வாய்''

ஆசுகவியின் உயர் எல்லையாம் கொடுமுடிமேல் ஏறி வீற்றிருக்கிருர் காளமேகம். அதற்கு மேலும் போவது எங்கே? அவர் பாடல்கள் அங்கு நம்மை இன்றும் கொண்டு போவதுதான் வியப்பு.

['ஆசுகவி'—என்னும் பாடத்திற்கு குறிப்பிடப்பட்ட காளமேகப் புலவர் பாடல்கள்]

ஒன்று முதல் பதினெட்டு வரை வரப்பாடியது

1. *ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு வேழெட்டு*
ஒன்பது பத்துப் பதினென் றுபன்னி
ரண்டுபதின் மூன்றுபதி னன்குபதி னைந்துபதி
னறுபதி னேழ்பதி னெட்டு.

பாதி வெண்பாவில் மாலவதாரம் பத்துஞ்சொன்னது

2. *மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்*
இச்சையிலுன் சென்ம மெடுக்கவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்.

மும்மூர்த்திகளின் உணவு முதலியன

3. சிறுவ னளைபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூற்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழம் பூவே கறி.

குடத்திலே கங்கை யடங்குமெனப் பாடியது

4. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வத்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்.

ஈயேற மலை குலுங்கப் பாடியது

5. வாரணங்க ளெட்டு மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னலடித்த
புண்வாயி லீமொய்த்த போது.

பாற்கடலிற் செந்தூளெழும்பப் பாடியது

6. சுத்தபாற் கடலி னடுவினிற் றூளி தோன்றிய
வதிசயமதுகேள்
மத்தகக் கரியை யுரித்தவன் மீது மதன்பொரு
தமிழ்ந்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள் விழுந்துநொந்
தயர்ந்தழு தேங்கிக்
கைத்தல மலரான் மார்புறப் புடைத்தா ளெழுந்தது
கலவையின் செந்தூள்.

துப்பாக்கியும் ஓலைச் சுருளும்

7. ஆணி வரையுறலா லானகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்தைத் தோய்ந்திடலால்-நீணிலத்தில்
செப்பார்க் குதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி யோலைச் சுருள்.

வானவில்லும் விட்டுணுவும் வெற்றிலையும்

8. நீரி லுளவா னிறம்பச்சை யாற்றிருவால்
பாரிற் பகைதீர்க்கும் பான்மையால்—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலாற் பாரீர் பெருவான
வில்விண்டு நேர் வெற்றிலை.

பூசுணைக்காயும் பரமசிவனும்

9. அடிநந்தி சேர்தலா லாகம் வெளுத்துக்
கொடியுமொரு பக்கத்திற் கொண்டு—வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத் தழும்பு பெற்றதனால்
பூசுணைக்கா யீசனெனப் போற்று.

சிவபெருமான் திரிபுர மெரித்தது

(காளமேகப் புலவரும் இரட்டையரும் பாடியது)

10. நாணென்று னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்
பாணந்தான் மண்தின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார் புரமெரித்த நேர்.

19. வளம் பெருக்கிய திட்டங்கள்*

பிற நாட்டாருக்கு அடிமைப்பட்டிருந்த இந்திய மக்களாகிய நாம் இரு பெரு நோக்கங்களோடு உரிமைப்போராட்டம் தொடங்கினேம். அவை யாவன: (1) பிற நாட்டார் ஆட்சியிலிருந்து விடு படுதல் (2) பொருளாதார சமூக உரிமையை வளர்த்து நாட்டின் வறுமை நிலையைப் போக்குதல். இரண்டாவது நோக்கமாகிய மக்கள் வறுமையைப் போக்கி வளம் பெருக்குதலென்பது இந்திய அரசியல் அமைப்பிலேயே இடம் பெற்றுள்ளது.

அடிப்படை உரிமைகளுக்கு மதிப்புக் கொடுத்து, மக்களாட்சி முறைப்படி நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு இந்தியக் குடியரசு ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தது. இத்திட்டங்களின் மூலம் நாட்டின் மூலப் பொருள்களை முறையாகவும், திறமையாகவும் பயன் படுத்தத் தொடங்கியது. ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே அதன் குறிக்கோளாயமைந்தது.

நாம் இப்பொழுது மூன்று திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். பெருந்தொகையினைப் பயன்படுத்தவிருக்கும் நான்காவது திட்ட முடிவில் பொருளாதார நிலை உயர்தவற்குரிய வழியமையும் என் எதிர்பார்க்கப் படுகின்றது. இங்நிலையில் மூன்று ஐந்தாண்டுத்திட்டங்களின் நல்விளைவுகளை நாம் அறிந்து கொள்ளுதல் நல்லதன்றோ!

---

* இந்தியப் பேரரசின் செய்தித்துறையினர் வெளியிட்ட சிறு வெளியீட்டிதழ் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

விவசாய வளர்ச்சி

நம்நாடு பெருமளவுக்கு விவசாய நாடென்றே கூறுதல் வேண்டும். தொழில்வளம் பெருக்க, வகுக்கப் படும் திட்ட மனைத்தும், விவசாய வளர்ச்சியின் அடிப் படைத் தேவைக்கு உதவுவதாக அமைதல் நன்று. எனவே, வெள்ளங்களால் அழிவு ஏற்படாமல் பாது காத்தல், நீர்ப்பாசனம், உரம் தயாரித்தல், தகுந்த விதைகளைத் தயாரித்தல்போன்றவைகளைத் கவனிக்கத் திட்டங்கள் உதவ வேண்டும். நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக விளைநிலப் பரப்பு பெருமளவு பெருகியுள்ளது. 1951 ஆம் ஆண்டு 5 கோடி ஏக்கர் பரப்பளவாக இருந்த விளை நிலம் 9 கோடி ஏக்கர் பரப்பளவாக உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தியும் அவ்வாறே 5 கோடி டன்னிலிருந்து 9 கோடிடன்னாக உயர்ந்துள் ளது. பருத்தி, கரும்பு எண்ணெய் வித்துக்கள் போன் றவைகளின் விளைச்சலும் பெருமளவு பெருகியுள்ளன.

தொழில் முன்னேற்றம்

தொழில் துறையில் தான் நாம் நன்கு கண்டுணரத் தக்க வகையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. முதல் பத்தாண்டுகளிலேயே உற்பத்தி இருமடங்காயிற்று. இப்பொழுது 1951-ஆம் ஆண்டு இருந்ததைப் போன்று மும் மடங்கு உற்பத்தியுள்ளது. தொழில் ஆலை களுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களான எஃகு இரும்பு, இரசாயனப் பொருள்கள் மின்சாரக் கருவிகள், மின்சக்தி உற்பத்தி ஆகியவைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மிக மிகக் குறிப்பிடத் தகுந்தன வாகும். எடுத்துக்காட்டாக 15 ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆண்டுக்கு, 10 லட்சம் டன் எஃகு இரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் இன்றோ அதனைப் போல் 8 மடங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. இதே போன்று முன்பு ஓர் ஆண்டுக்கு 4000 டன் உற்பத்தி செய்யப்பட்ட அலுமினியம், இன்று 70,000 டன்

உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறே நிலக் கரியின் உற்பத்தி இருமடங்கும், சிமெண்டு உற்பத்தி நான்கு மடங்கும் பெருகியுள்ளன.

தொழில் முன்னேற்றத்திற்குதவும் வண்ணம் மின் சக்தி உற்பத்தியும் பெருகியுள்ளது. திட்டங்களைத் தொடங்குவதற்கு முன்பாக ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி அளவு இப்பொழுது ஓராண்டில் இரு மடங்காக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. மின்சக்தி நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குகிறது என்பதுடன் கிராமங்களுக்கு ஒளியையும் தருகின்றது. ஐயாயிரம் மக்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு சிற்றூரிலும் தற்போது மின் விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன.

வளரும் தொழில்களுக்குப் போக்கு வரவு வசதி களும் வேண்டும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்ததைவிட இருமடங்குப் பொருள்களை இப் பொழுது இரயில் வண்டித் தொடர்கள் ஏற்றிச் செல் கின்றன. மோட்டார் லாரிகளும் இரயில்வேத் துறை யினருக்குத் துணைசெய்கின்றன. அவைகளும் மும் மடங்கு பெருகியுள்ளன.

கல்வியும் நலமும்

தொழில் முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சி யும் மட்டும் நாட்டுமக்களுக்கு நன்மைபயப்பன என்று கூறமுடியாது. மக்கள் கல்வியறிவு பெறுவதும் நலமாக வாழ்வதும் இன்றியமையாதனவாகும். கல்வித் துறையின் எல்லா நிலையிலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற தெனினும், கடந்த பதினைந்தாண்டுகளில் தொடக்கக் கல்வி மிகச் சிறந்த நிலையில் வளர்ந்துள்ளது. 6 வயது முதல் 11 வயது வரையுள்ள பள்ளி செல்லும் குழந்தை களில் 40 சதவீதத்தினரே 1951 ஆம் ஆண்டில் பள்ளி கட்குச் சென்று வந்தனர். ஆனல் தற்போது அவ் வயதினரில் 80 சதவீதத்தினர் பள்ளிக்குச்

செல்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் ஆறுவயது நிரம்பும் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்வர் என்று கூறலாம். உயர் கல்வி நிலையிலும் இதற்கேற்ற வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்பக்கல்வி மிகவும் சிறப்பிடம் பெற்றது. பொறியியற் கல்வித்துறையில் பட்டம் பெறுவோர் தொகை ஐந்து மடங்கு பெருகி யுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உடல்நலம் பேணும் வசதிகள் தற்போது நகரங்களில் மட்டுமின்றிச் சிற்றூர்களிலும் எளிதாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. கிராமங்களில் மருந்து வழங்கு இடங்களும், மருத்துவ மனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பெருந் தொகையினரான மக்கள் இறத்தலுக்குக் காரணமாயிருந்த சில தொத்து நோய்கள் அறவே யொழிக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக முன்பு ஆண்டு ஒன்றுக்கு ஏழு கோடியே ஐம்பது லட்சம் பேர் மலேரியா நோய்க்குட் பட்டனர். ஆனால் தற்போது 1964 ஆம் ஆண்டு அந்நோயுற்றோர் தொகை ஒரு லட்சத்துக்கும் குறைவே யாகும். நல்ல குடிநீர் அமைக்கும் ஏற்பாடு, உடல் நலம் பேணும் முறைகள் ஆகியவற்றைக் கிராமங்கள் தோறும் பரப்புவதால் தற்போது மக்களின் சராசரி வயது முப்பத்திரண்டிலிருந்து ஐம்பத் தொன்றாகி யுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நல்வாழ்க்கை

கடந்த பதினைந்தாண்டுகளில் கிராம மக்களின் வாழ்க்கை பெருமளவு மாறியுள்ளது. 1951 ஆம் ஆண்டுக்கு முன்பு ஆண்டுக்கு ஒரு லட்சம் சைக்கிள்கள் உற்பத்திசெய்யப்பட்டன. ஆனால் இன்றோ ஆண்டு ஒன்றுக்கு 20 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராம மக்கள் பலராலும் பயன் படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் எல்லாக் கிராமங் களிலும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன.

மின்சக்திப் பெருக்கத்தின் விளைவாக வீடுகளில் மின் விளக்குகள் உள்ளன. உலகச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் அறிவதற்கும் கிராமமக்களுக்கு நல்ல பொழுதுபோக்காகவும் வானொலிகள் உதவுகின்றன. 1951 ஆம் ஆண்டில் ஏழு லட்சம் வானொலிப் பெட்டிகளே நாட்டில் இருந்தன. ஆனால் இன்றோ நாற்பத்து மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட வானொலிப் பெட்டிகள் உள்ளன. இவ்வாறு நாடு வளம் பெற்றுச் சிறப்பாக வளர்ந்துள்ளது.

நாட்டின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், வளம் பெருக்கவும் அடுத்த பத்தாண்டுகள் நாம் பெருமுயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும். கிராம மக்களின் பொருள் வருவாயைப் பெருக்குதல், உணவு உற்பத்தியைப் பெருக்குதல், விவசாயத்திற்குதவும் பொருள்களைப் பெருமளவு உற்பத்தி செய்தல் ஆகியவை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பொது நோக்கங்களாகும். எனவே இரசாயன உரம், விவசாயக் கருவிகள், டீசெல் எண்ணெய்ப் பொறிகள் ஆகியவற்றைப் பெருமளவு உற்பத்தி செய்தலே இந்நோக்கங்கள் நிறைவேறுவதற்கு உதவுவதாகும்.

இத்தனை செயல்களையும் நிறைவேற்ற முடியுமா ? உறுதியாக நிறைவேற்ற முடியுமென்பது மக்கள் உள்ள உறுதியிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. இரண்டாம் உலகப் போர், நாட்டுப் பிரிவினை ஆகிய பெருஞ் சிக்கல்களுக்குள் இடர்ப்பட்டும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை முறையாக நிறைவேற்றிய கடந்த கால அனுபவம் நமக்கு மேலும் மனவலிமையைத் தருகின்றது. இவ்வலிமை தொடர்ந்து பணியாற்றத் தூண்டுகின்றது. நாட்டின் வளம் பெருக்கும் திட்டங்களில் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய பங்கேற்று நன்குழைப்பதன் மூலம் மக்கள் வாழ்க்கையைச் சிறப்புடைய தாக்கலாம் என்பது உறுதியேயாகும்.

20. தேசிய சேமிப்புத் திட்டம்

தற்காலத்தைப் போன்று பண்டைக் காலத்தில் நாணயங்கள் மக்கள் வாழ்க்கையில் பயன்படுத்தப் படவில்லை. அதற்குப் பதிலாக மக்கள் பொருள்களையே பயன்படுத்தினர். தம்மிடம் மிகுதியாகவுள்ள பொருள் களைக் கொடுத்து, மாற்றாகத் தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றனர். இம்முறைக்குப் பண்டமாற்று முறையென்று பெயர். நாளாக நாளாக ஒருவர்க் கொருவர் கொடுத்து வாங்கக்கூடிய பொருள்களின் எண்ணிக்கை பெருகியது; வாணிபம் வளர்ச்சியுற்றது. இந்நிலையில் பண்டமாற்று முறை யைத் தவிர்த்து நாணயங்களை வழங்கும் முறை யொன்றை அரசினர் ஏற்படுத்தினர். நாணயங்களைப் பயன்படுத்தத் தொடங்கியதும் நன்மைகள் பல ஏற்பட்டன. நாணயம் ஒரு பொது அளவாகப் பயன் பட்டது. எனவே, நம்மிடமுள்ள பொருளை விற்று நாணயம் பெற்ற பின்பு நமக்குத் தேவையான பல்வேறு பொருளை எளிதாக வாங்க உதவிற்று. ஒருவர் உழைப் புக்கு ஈடாகவும் நாணயத்தை வழங்க முடிந்தது. இவ்வாறு நமக்குக் கிடைத்த நாணயத்தை நாம் நன் முறையில் பயன்படுத்துதல் வேண்டும்.

பொருளை நாம் நமக்குத் தேவையானவைகளை வாங்கப் பயன்படுத்துகின்றோம். அதற்கு மேலும் நம்மிடம் பொருள் இருக்குமானால் நம் வாழ்க்கையை இன்பமானதாகவும், மகிழ்ச்சியானதாகவுமாக்கப்பயன் படுத்துகின்றோம். இவ்வாறு அடிப்படை வாழ்க்கைத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதோடமையாது பலர் வீண்செலவுக்குப் பெரும் பொருளைப் பயன்படுத்துவர். அவர்தம் வாழ்க்கையில் எதிர்பாராத உடல் நலக் குறைவும், அதனால் மிகத் தேவையான பொருட் செலவும் ஏற்படின் அவ்வேளையில் தம்கையில் பொருள்

இல்லாது கடன்படுவர். பிறரிடம் 'பல்லெல்லாம் தெரியக் காட்டி' இரத்தல் மிகவும் துன்பந் தரும் செயலன்றோ? இத்துன்பத்தைப் போக்க, வராமல் தடுக்க ஒரேயொரு வழிதான் உண்டு. அதுதான் பொருளைச் சேமித்து வைக்கும் பழக்கமாகும்.

சேமித்து வைப்பதென்பது நல்லதொரு பழக்க மாகும். மழைக் காலத்தில் வெளியே சென்று உணவு தேடமுடியாதென்ற உணர்வை இயல்பாகவே பெற்றுள்ள எறும்பினங்களும் உணவு சேமித்து வைப்பதைக் காண்கின்றோமன்றோ! எனவே நாமும் முதுமைப் பருவத்தில் பயன்படுத்துவதற்கும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுக்கும் சேமித்து வைத்தல் வேண்டும். அவ்வாறு சேமித்துவைப்பதை நாம் நம் வீட்டிலேயே வைத்திருப்பதும் சிறந்ததன்று. ஏனெனில் அப்பணம் யாதொரு பயனுமின்றி வறிதே கிடக்கின்றது. அதனையே அஞ்சலகச் சேமிப்பு பாங்குகளில் போட்டு வைத்தால் தேவையானபோது நமக்குக் கிடைப்பதுடன் நாட்டுக்கும் பயனுடையதாகின்றது. நமக்குக் கிடைக்கும் வருவாயில் சிறிது சிறிதாகச் சேமித்து வைப்பதற்குதவும் வண்ணம் அரசியலார் சேமிப்புத் திட்டங்கள் பல வகுத்துள்ளனர். அத்திட்டங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்வோம்.

1. பன்னிரண்டாண்டு நாட்டுப் பாதுகாப்புச் சேமிப்புத் திட்டம்

இச் சேமிப்புக்குரிய சான்றிதழ்கள் அரசினரால் வழங்கப்படும். இச்சான்றிதழ்களை எல்லா அஞ்சலகங்களிலும் பெறலாம். மிகக் குறைந்த தொகையான ரூபாய் ஐந்திலிருந்து இச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு $6\frac{1}{4}$ சதவீதம் தனிவட்டியும், $4\frac{3}{4}$ சதவீதம் தொடர் வட்டியும் கிடைக்கும். இவ்வட்டியின் படி பத்து ரூபாய்க்குப் பன்னிரண்டாண்டு முடிவில்

பதினேழரை ரூபாய் கிடைக்கும். பதினெட்டு வயது நிரம்பாத சிறுவனும் சிறுமியும் கூட இச்சான்றிதழ்களை வாங்கிச் சேமிக்கத் தொடங்கலாம்.

2. சேமிப்புத் தபால் தலைகள்

பெற்றோர்கள் தமக்குக் கொடுக்கின்ற தொகையில் ஒரு சிறிய பகுதியைச் சிறுவர் சேமித்து வைக்க விரும்புதல் கூடும். 25 பைசா, 50 பைசா, ஒரு ரூபாய் ஆகிய வீதங்களில் அவை அஞ்சலகங்களில் கொடுக்கப்படுகின்றன. கண்கவர் வண்ணமுள்ள சேமிப்பு அட்டைகளில் இவைகளை ஒட்டி வைக்கலாம். இவ்வட்டைகள் விலையின்றிக் கொடுக்கப்படுகின்றன. அட்டைகள் ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய் மதிப்புப் பெற்றவுடன் அவைகளைத் தேசிய சேமிப்புச் சான்றிதழாகவோ, பரிசுப் பத்திரங்களாகவோ மாற்றிக் கொள்ளலாம், அல்லது அஞ்சலகத்தில் சேமிப்பு நிதிக் கணக்காக மாற்றலாம்.

3. நன்கொடைப் பத்திரங்கள்

திருமணம், பிறந்தநாள் போன்ற நன்னாட்களில் நண்பர்கட்குப் பரிசு வழங்க அஞ்சலகங்களில் நன்கொடைப் பத்திரங்கள் விற்கின்றார்கள். பரிசு வழங்குவதற்கேற்ற முறையில் அவை அழகான உறைகளில் உள்ளன. பரிசு பெறும் நண்பர்கள் அதே மதிப்புடைய தேசிய பாதுகாப்புச் சான்றிதழ்களாக அவற்றை மாற்றிக் கொள்ளலாம். பரிசு கொடுப்பவரும் வாங்குபவரும் சேமிப்புத் திட்டத்தில் பங்கெடுத்து நாட்டுக்கு உதவுகின்றனர்.

4. வளரும் நிதி சேமிப்பு

ஒவ்வொரு மாதமும் சிறிதளவு பணம் சேமிக்க விரும்புவோருக்குத் தகுந்த சிறு சேமிப்புத் திட்ட

மொன்றுள்ளது. ஒவ்வொரு மாதமும் சிறு தொகையாக ஐந்து ஆண்டுகட்கோ, பத்து ஆண்டுகட்கோ, பதினைந்து ஆண்டுகட்கோ சேமித்து வரலாம். எடுத்துக் காட்டாக, மாதம் ஐந்து ரூபாய் சேமிக்கும் ஒருவர் ஐந்தாவது ஆண்டின் இறுதியில் ரூ. 325 பெறுதல் கூடும். அத்தொகையில் ரூ. 25 வட்டியாகும். வளரும் நிதி சேமிப்புத் திட்டத்தின் நற்பயன் வருமாறு: (1) பத்து ஆண்டுக் கணக்கானால் ஆண்டுக்கு 4·13 சதவீத வட்டியுடனும், பதினைந்து ஆண்டுக் கணக்கானால் ஆண்டுக்கு 5·16 சதவீத வட்டியுடனும், பணம் திரும்பக் கிடைக்கிறது. (2) கணக்கு ஆரம்பித்து ஓர் ஆண்டு முடிந்ததும் இருப்புத் தொகையில் பாதி வரையில் பணத்தைத் திரும்பப் பெறலாம். பத்து ஆண்டுக் கணக்கானால் இரண்டு தடவைகளும், பதினைந்து ஆண்டுக் கணக்கானல் மூன்று தடவைகளும் பணம் வாங்குதல் அநுமதிக்கப் படுகின்றது. இவ்வாறு வாங்கிய பணத்தை, பணம் வாங்கியிருந்த காலத்துக்கு, ஆண்டுக்கு 6 சதவீத வட்டியுடன் திரும்பச் செலுத்தி விடலாம்.

5. அஞ்சலகச் சேமிப்பு பாங்கு

சிறியவர்கட்கும் பெரியவர்கட்கும் அஞ்சலகச் சேமிப்பு பாங்கு மிகச் சிறந்த தொன்றாகும். மிகக் குறைவான தொகையான இரண்டு ரூபாயில் கணக்குத் தொடங்கலாம். ஒவ்வொரு தடவையும் ஒரு ரூபாய் கூடச் சேமிப்பாக அனுப்பலாம். சேமிப்புக் கணக்கில் குறைந்தது ஐந்து ரூபாயாவது இருக்கவேண்டும். சேமிப்பு நிதி சேர்ப்பவருக்குக் கணக்குப்பதிவுப் புத்தகம் ஒன்று வழங்கப்படும். சேமிப்பதும், பணம் பெறுவதும் அதில் பதிவு செய்யப்படும், சேமிப்பு மனப்பான்மை பெறுவதற்கு இந்நிதி பெருமளவு உதவுகின்றது என்பது உறுதி; மேலும் அரசினர் நடத்தும் பாங்கு ஆகையால் பணம் மிகவும் பாதுகாப்பாகவுள்ளது.

6. பரிசுப் பத்திரங்கள்

எல்லா அஞ்சலகங்களிலும் இப்பரிசுப் பத்திரங்களை வாங்கலாம். ஐந்து ரூபாய், நூறு ரூபாய் என இருவகைப் பத்திரங்கள் உள்ளன. பரிசுப் பத்திரங்களை வாங்குபவர்கள் பரிசு பெற வாய்ப்புண்டு. பரிசுப் பத்திரங்களின் எண்களைக் குலுக்கியெடுத்துப் பரிசு வழங்குவார்கள். ஐந்து ரூபாய்ப் பரிசுப் பத்திரத்திற்கு முதற் பரிசு ரூ. 15,000 வழங்கப்படும். நூறு ரூபாய்ப் பத்திரத்திற்கு முதற் பரிசு ரூ. 50,000 ஆகும். பரிசு பெற வாய்ப்பில்லாமற் போயினும், தொகை குறித்த அளவு வட்டியுடன் ஐந்தாண்டு முடிவில் கிடைக்கும்.

மேற்கண்டவற்றுள் ஏதேனும் ஒரு திட்டத்தில் சேர்ந்து சேமித்து வைப்பது தனியொருவருக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பதாகும். எவ்வளவு சேமிப்புச் செய்கின்றோம் என்பதன்று, சேமிப்பு மனப்பான்மையே பெரிதென்று கொள்ள வேண்டும். சிறுகச் சிறுகச் சேர்க்க அது பெருந்தொகையாக நமக்குக் கிடைக்கும். பல துளிப் பெரு வெள்ளமன்றோ! எனவே, சிறு வயது முதலே நாம் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வோமாக!

21. அன்பு வழி

(சிலப்பதிகாரப் பகுதியைத் தழுவியமைந்த சிறு நாடகம்)

வித்துவான் சா. சுந்தரனார்

[கதைத் தொடர்பு: பூம்புகார் நகரத்துச் செல்வக் குடியிற்றோன்றியவள் கண்ணகி. கோவலனென்னும் செல்வமகனை மணந்து சிறிது காலம் இன்ப அன்பு செறிந்த வாழ்வு வாழ்ந்தாள். பின்னர், கோவலன் மாதவி என்னும் கலைச்செல்வியை நாடி, கண்ணகியை மறந்தான். ஆண்டுகள் பல சென்ற பின் மாதவியின் பால் வெறுப்புக் கொண்டு வறிய நிலையில் கண்ணகியை அடைந்தான்.

சிலம்பு விற்றுப் பொருளீட்டும் பொருட்டுக் கண்ணகியுடன் மதுரை சார்ந்தான். தீவினைப் பயனால் கள்வனென்று குற்றம் சுமத்தப்பட்டுப் பாண்டிய மன்னனால் கொலையுண்டான். தன் ஆருயிர்க் கணவன் அடாப்பழியேற்றுக் கொல்லப்பட்டதறிந்த மெல்லியல் நங்கை கண்ணகி சீற்றமுற்றெழுந்தாள். அரசன் முன் சென்று தன் கணவன் குற்றமற்றவனென்பதை மெய்ப்பித்தாள். தன் பழி நாணிப் பாண்டியன் உயிர் துறந்தான். அவன் தேவியும் உடனுயிர் விட்டாள்.

அதன் பின்னரும் கண்ணகியின் சீற்றமடங்கவில்லை. தன் கற்புத் தீயால் மதுரையை அழித்தாள்; வெறிகொண்டாள் போன்று மேற்றிசை நோக்கி ஓடினாள். பதினான்காம் நாள் சேர நாட்டுக் குன்றமொன்றையடைந்தாள். அதன் உச்சியில் ஏறி நின்றாள். விண்ணக விமானமொன்று வந்தது. அதில் கோவலன் ஒளியுருவம் காணப்பட்டது. கண்ணகியின் ஆவி, ஒளிவடிவில் அவ்விமானமூர்ந்து தேவருலகமடைந்தது.

காடுறை வேடுவர் நிகழ்ச்சிகளைத் தம் கண்ணுற் கண்டனர். சேர வேந்தன் செங்குட்டுவன் இன்பப் பொழுது போக்காக அவ்விடம் வந்தபோது அவனிடம் செய்தி கூறினர். மன்னன் தன் மனைவியின் கருத்துப் படி கண்ணகி தேவிக்குக் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்ய எண்ணினான். தமிழரை இகழ்ந்து பேசிய ஆரியவரசர் சிலரையடக்க முன்னமே வடநாடு செல்லக் கருதியிருந்தான். ஆகவே, கண்ணகி சிலைக்கு இமயத்தினின்று கற்கொணர முடிவு செய் தான். அவ்வாறே வடநாடு சென்று தமிழரை இகழ்ந்த ஆரிய மன்னரைப் போரில் வென்று, அவர் தலையில் கண்ணகி சிலைக்கான கல்லைச் சுமத்தித் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவந்தான். கண்ணகிக்குக் கோயிலெடுத்தான்; சிலையமைத்தான்; பூசையும் விழாவும் பொலிவுறப் பன்னாள் நடத்திவரலாயினான்.

இந்நிலையில், மதுரை சென்ற கோவலன் கொலை யுண்டதும், பாண்டியனும் அவன் தேவியும் இறந்ததும், மதுரை யழிந்ததுமாகிய செய்திகளைக் கேட்டுக் கோவலன் தந்தையும், கண்ணகி தந்தையும் வாழ்வு துறந்தனர்; தாயர் இறந்தனர். கோவலன் காதலி மாதவி, தன் மகளுடன் துறவு பூண்டாள். மதுரையில் கண்ணகி கோவலரை அடைக்கலமாக ஏற்றுப் போற்றிய மாதரி இறந்தாள்.

இவர்கள் நிலை இங்ஙனமாக, கண்ணகியிடம் அன்பால் பிணிப்புண்டிருந்த காவிரிப்பூம்பட்டின மகளிர் தேவந்தி, கண்ணகியின் செவிலித்தாய், கண் ணகியின் தலைமைத் தோழி ஆகியோர் கண்ணகியைத் தேடிக்கொண்டு மதுரை சார்ந்தனர். மாதரி இல்லம் சென்று, மாதரி மகள் ஐயை என்பாளை உடனழைத் துக்கொண்டனர். கண்ணகி சென்ற வழி கேட்டறிந்து சேர நாடடைந்தனர். கண்ணகி விண்ணுலகம் சென்ற நெடுவேள் குன்றம் நண்ணினர்; செய்தியறிந் தனர். வஞ்சி நகரத்தில் செங்குட்டுவன் கண்ணகிக்குக்

கோயிலெடுத்து விழா நடத்தும் திறம் கேட்டு ஆங்குற்றனர்.]

காட்சி 1

இடம்: *வஞ்சிமாநகர்—அரண்மனே*

காலம்: *காலே.*

உறுப்பினர்: சேரன்செங்குட்டுவன், தேவி வேண்மாள்.

செங்குட்டுவன்: (தேவி வேண்மாளே நோக்கி) வேண்மாள், கண்ணகி தேவிக்குக் கோயிலெடுத்துத் தெய்வப்படிமம் நிறுவிய நாள் முதல் என் வாழ்க்கையிலேயே ஒரு புதுமை காணப்படுகிறது. என் வாழ்நாளில் நான் கொண்டாடிய வெற்றி விழாக்களுக்குக் கணக்கில்லே. ஆயினும் அப்போதெல்லாம் நான் கண்டறியாத ஒரு புதுமைப் பேரின்பவுணர்ச்சி இப்பொழுது என்னுள்ளத்தே தோன்றி என்னேக் களிப்பிக்கின்றது. இவ்வின்பத்துக்கு நிகரான இன்பத்தை நான் வேறு எதிலும் கண்டதில்லே. இன்று விழாவின் இறுதி நாள். இதுவரை அயல் நாடுகளிலிருந்து வந்து விழாக் கண்டு சென்ற மன்னர்கள் போக, மகத மன்னன், மாளுவ வேந்தன், இலங்கையரசன் கயவாகு ஆகியோர் இன்று விழாக் காண வந்துள்ளனர். சென்ற ஒரு திங்களாக நமது வஞ்சிமாநகரம் இந்திரருலகம் போன்று எழில் பெற்று விளங்குகின்றது. மக்கள் ஆடுநரும் பாடுநருமாகிப் பொன்னுலக மக்கள் போன்று இன்ப வாரியில் திளேத்து இறும்பூதெய்துகின்றனர். நமது விருந்தினர் மாளிகையோ வென்ருல் அரசர் பெருமக்களால் மங்கலம் பெற்றுத் திகழ்கின்றது.

வேண்மாள்: பெரும, என்னினத்து மங்கையர்க்கு இவ்விழாவினுல் தனியொரு பெருமை வாய்த்துள்ளது. மங்கையொருத்திக்குச் செய்யும் சிறப்பிதனேயெண்ணிப் பெண் குலமே விம்மிதமுறுகின்றது. அடியாள் உள்ளமும் திங்களொன்ருகத் தெய்விக அமைதி

பெற்றுச் சிறந்துள்ளது. விழாவின் இறுதி நாளாகிய இன்று காலைமுதல் மாலைவரை கண்ணகி கோட்டத்திலேயே தங்கியிருக்க விரும்புகின்றேன்.

செங்குட்டுவன் : இனியாய், அங்ஙனமே ஆகுக. கண்ணகி கோட்டத் தலைவி நீயே ஆவாய். உன்னுடைய விருப்பத்தினால்தானே கண்ணகி கோயில் உருவாயிற்று. ஆதலின், இதன் பொருட்டு நான் உனக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

வேண்மாள் : தலைவ, நன்றி எனக்குக் கூறுவானேன். தங்கள் உள்ளம் கருதியதை என் வாய் நவின்றது. இதுவரையில் நம் வாழ்க்கையில் எந்தக் கொள்கையிலும் நம்மிடையே வேறுபாடு தோன்றியதில்லையே ! அங்ஙனமாக இக்கொள்கையில் மாத்திரம் நான் தனியுரிமை பாராட்டுவது எங்ஙனம் பொருந்தும் ?

செங்குட்டுவன் : நல்லது அன்பே, நம்மிருவர் கருத்தும் ஒருமித்தமையுமாறு அருள்புரிந்த செஞ்சடை வானவனும் சிவபெருமானருளை வாழ்த்துவோமாக. என்றுமிதுபோல் நம்மிருவர் கருத்தும் ஒன்றுபட்டிருக்கத் துணை செய்யுமாறு வேண்டி அவனடியைப் போற்றுவோமாக. விரைவில் நீராடிக் கண்ணகி கோட்டம் செல்வோம்.

காட்சி 2

இடம் : கண்ணகி கோட்டம்.

நேரம் : காலை.

உறுப்பினர் : செங்குட்டுவன், வேண்மாள், மாடல மறையவன், அரட்டன் செட்டியின் இரட்டை மகளிர், தேவந்தி, கண்ணகியின் செவிலி, கண்ணகியின் தலைமைத் தோழி. ஐயை, அயல் நாட்டரசர்கள், நகரமாந்தர், அரச பரிவாரத்தினர்.

[செங்குட்டுவன் வருகை கண்டு]

அனைவரும் : வாழ்க வஞ்சியர் கோன் ! வளர்க அவன் புகழ் !

[செங்குட்டுவனும் தேவி வேண்மாளும் வந்து கோயில் முற்றத்திலிடப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்தல்.]

செங்குட்டுவன் : சிற்றரசர்கள் தாம் தாம் செலுத்த வேண்டிய திறைப் பொருள்களைக் கொண்டு வந்து செலுத்தலாம்.

[சிற்றரசர்கள் திறையளக்க அரசியல் அலுவலாளர் அவற்றைக் கணக்கெழுதிக் கொள்கின்றனர். அந்நேரத்தில் மகளிர் நால்வர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு கண்ணகி சிலைக்கு நேரே வந்து நின்று கண்ணீர் வடித்துப் புலம்புகின்றனர். செங்குட்டுவன் ஒன்றுந் தோன்றாமல் திகைக்கின்றான். அந்நிலையில் வந்த மகளிர் நால்வரும் முறையே பேசலுற்றனர்.]

தேவந்தி : வஞ்சியர் வேந்தே, மக்களே, தென்றமிழ் நாட்டு முடியுடை வேந்தர் மூவர் இலச்சினையும் பெற்றுத்திகழும் இமயமலையிற் பிறந்து, கங்கை நீராடி, இவ்விடத்துக் கோயிலின்கண் சிலைவடிவாயமைந்த தெய்வக் கண்ணகிக்குத் தோழி நான் கண்டீர் ! சோழ நாட்டு மங்கைக்குத் தோழி நான் கண்டீர் !

செவிலித்தாய் : தன் காதற் கணவன் மாதவியென்னும் மங்கையை நாடித் தன்னைப் புறக்கணித்தும் அவனை வெறுக்காமல், அவன் வந்தழைத்தபோது அவன் கைப் பற்றிக் கொடிய காட்டு வழியெல்லாம் பின்தொடர்ந்து வந்த கற்பரசி கண்ணகிக்குச் செவிலி யான் கண்டீர் ! பூம்புகார் நகரத்துப் பொற்புடைச் செல்விக்குச் செவிலி யான் கண்டீர் !

தலைமைத் தோழி : தன்னைப் பெற்ற தாய்க்கும் ஒரு சொல் சொல்லாமல், தன்னை எடுத்து வளர்த்த

என்தாய்க்கும் ஒரு சொல் சொல்லாமல், தன்னை நீங்காமல் நிழல்போல் தொடர்ந்திருந்த எனக்குமோர் சொல் சொல்லாமல், கற்புக் கடமையை மேற்கொண்டு கணவனைப் பின் தொடர்ந்து வந்த கண்ணகிக்கு உயிர்த்தோழி யான் கண்டீர்! பூம்புகார்ச் செல்விக்கு உயிர்த்தோழி யான் கண்டீர்!

[செங்குட்டுவன் வியப்புக் குறி முகத்தில் தோன்ற மெய் சிலிர்த்து நோக்குகின்றான். ஐயை ஒருபுறமாக ஒதுங்கி நிற்கிறாள், மூவரும் கண்ணகியின் தெய்வச் சிலையை நோக்கி ஒருவர்பின் ஒருவராக அரற்றலாயினர்.]

தேவந்தி: தோழி, நீ உன் கணவனுக்குத் தீங்கு நேர்ந்ததாகக் கனாக் கண்டு என்னிடம் உரைத்தாய். என் பேதைமையால் நான் அது பற்றிச் சிந்தியாதிருந் தேன். உன்னைப் பிரிந்தேன். நீ அயல் நாடு போந்து உன் கணவனை இழந்து துன்புற்றாய். ஐயோ! உங்களை அடைக்கலமாகப் பெற்றுப் போற்றிய தாய் மாதரி உயிர் துறந்த செய்தி அறிவாயோ! அந்த மாமி உயிர் துறந்த செய்தி அறிவாயோ!

செவிலித் தாய்: அம்மா கண்ணகி, உன் காதற் கணவன், கீழ்மகன் ஒருவன் தீதுரையால் கொலை யுண்டதும், கொலை செய்வித்த மன்னன் பிழை யுணர்ந்து மாண்டதும் கேட்டு, வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு உன் காதலன் தந்தையாம் மாசாத் துவான் துறவு பூண்டதை அறிவாயோ! உன் தந்தை யாம் மாநாய்கன் துறவு பூண்டதை அறிவாயோ!

தலைமைத் தோழி: கற்பரசியே, உன் கணவன் கோவலன் கொலையுண்டதைக் கேட்டதும் மனம் பதைத்த மாதவி அலறினாள்; அறிவு மயங்கினாள்; அழுது புரண்டாள். கோவலன் இறப்புக்குத் தானே காரணமென்பதையும் ஊரார் பழிப்பதையும் உணர்ந் தாள், வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டாள்; துறவி

யானுள். அறிவாயோ தோழீ இதனை நீ! மணி மேகலையும் துறவியானுளே தெரியுமா தோழீ!

தேவந்தி: (மீட்டும் அரற்றல்) உங்களை அடைக் கலமாகப் பெற்றுக் காத்து உங்கள் அவலநிலைக் காற்ருது உயிர்விட்ட இடைக்குல மங்கை மாதரித் தாயின் மகள் ஐயை, உன்னைக் காணும் விருப்பினுல் உன்னிருப்பிடம் தேடி இதோ வந்து நிற்கிருளே, அவளை நீ வந்து காணமாட்டாயோ தோழீ! மாமி மகள் ஐயையை நீ வந்து காணமாட்டாயோ தோழீ!

[வானத்தில் மின்னற் கொடி போன்று கண்ணகி யின் தெய்வவுருத் தோன்றுதல்; அனைவரும் கண்டு வியந்து போற்றுதல்.]

செங்குட்டுவன்: "என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்! பொற்சிலம்பும் பொற்பார் மேகலையும் வளைக்கையும் பொன்தோடு முடைய மின்னற் கொடி யொன்று விண்ணகத்தே தோன்றியுள்ளதே!

மாடல மறைதயவன்: பத்தினித் தெய்வத்தின் உருவமே இது.

செங்குட்டுவன்: ஆ! ஆ! என்னே விந்தை! பத்தினித் தெய்வத்தின் பண்பார் வடிவம் பரவசமூட்டு கிறதே! போற்றி! போற்றி! மண்ணக மாந்தர்க் கணியாக வாழ்ந்து விண்ணகத்தார்க்கு விருந்தாகிய பூம்புகார்ச் செல்வியே போற்றி! போற்றி!!

[அனைவரும் கைகூப்பிக் கண்ணகியின் உருவத்தை வணங்குகின்றனர்]

கண்ணகியின் தெய்வக் குரல்: அன்புளஞ் சிறந்த ஆருயிர்த் தோழிகாள்! பெருந்தகை வேந்தே! தென்னவன் குற்றமற்றவன்; தேவருலகத்து நல் விருந்தாக அவன் வாழ்கிருன். என் தெய்வப் பிறப்பிற்கு அவனே காரணனுதலால் நான் அவன் மகளாவேன்

செங்கோட்டுக் குன்றத்தில் எந்நாளும் நான் நீங்காது நின்று விளையாடுவேன். தோழிமீர், நீவிர் எல்லீரும் அங்கு வம்மின்.

செங்குட்டுவனும் மற்றுள்ளோரும்: போற்றி! போற்றி! தேவி கண்ணகி போற்றி!

கண்ணகியின் தோழியர்: வாழ்க வஞ்சி வேந்தன்! வளர்க அவன் புகழ்! பத்தினி மகளுக்குக் கோயிலெடுத்துச் சிறப்பித்த செங்குட்டுவன் புகழ் என்றென்றும் நின்று நிலவுக!

[கண்ணகியின் தெய்வ உருவத்தைக் கண்ட மகிழ்ச்சியால் அனைவரும் ஆடல் பாடல்களில் ஈடுபட்டனர்.]

மகளிர் கூட்டம் கண்ணகியைப் போற்றுதல்:

“தென்னவன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்!
செங்கோல் வளைய வுயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்ப விந்நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்;
பாண்டியன் தன் மகளைப் பாடுதும் வம்மெல்லாம்!”

பாண்டியனை வாழ்த்தல்:

“தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணிநீர்
கொல்ல வுயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ!
வாழியரோ வாழி வருபுனல்நீர் வையை
சூழு மதுரையார் கோமான்றன் றொல்குலமே.”

வஞ்சியர் கோமானை வாழ்த்தல்:

“மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிமே லேற்றினான் வாழியரோ!
வாழியரோ வாழி வருபுனல்நீர் ஆன்பொருநை
சூழ்தரும் வஞ்சியர் கோமான்றன் றொல்குலமே.”

காவிரி நாடனை வாழ்த்தல் :

“ வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர் கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை ?
ஓங்கரணங் காத்த வுரவோனுயர் விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார் நகரம் பாடேலோ ரம்மானை.”

கண்ணகியின் தெய்வக் குரல்: அன்புவழித் தொடர்ந்த ஆருயிர்த் தோழிகாள், நான் தெய்வத்தன் மை பெற்றுச் சிறந்துள்ளேன். ஆதலின் என்பொருட்டு நீங்கள் கவலவேண்டா. என் அன்புள்ளம் எஞ் ஞான்றும் உங்களை மறவாது. நீங்கள் நலம் பலவும் பெற்றுச் சிறந்திடுகவென்று வாழ்த்துகின்றேன்.

செங்குட்டுவன் : பூம்புகார்ச் செல்வியே, கற்புத் தெய்வமே, எளியேன் உன் வாழ்த்துதல் வேண்டி நிற்கின்றேன்.

கண்ணகியின் தெய்வக் குரல் : ‘செஞ்சடை வானவன் அருளில் தோன்றிய வஞ்சியர் வேந்தே,’ நின் கொற்றம் சிறக்க ! பேரியாற்று மணலினும் மிகப் பல நாள் நீ இம்மண்ணுலகில் மாண்புற வாழ்க !

செங்குட்டுவன் : தேவி கண்ணகி, நின் செம் மலர்ச் சீறடி போற்றி ! ஏனைய வேந்தருக்குக் கிட்டாத ஏற்றம் எளியேனுக்குக் கிட்டுமாறு என் நாடு போந்த ஏந்திழை யணங்கே போற்றி ! போற்றி !

அனைவரும் : போற்றி ! போற்றி ! பூம்புகார்ச் செல்வியின் பொன்னடி போற்றி !!!

செங்குட்டுவன் : (தேவந்தியை நோக்கி) அம்மா ! மாதவியுடனெருங்கு கூறிய மணிமேகலை யார் ? யாதவள் துறத்தற்கேது ? விளம்புக.

தேவந்தி: கோமகன் கொற்றம் குறைவின் றேங்குக ! சிப்பியிற்றேன்றும் முத்துப் போலக்

கணிகையர் குலத்தில் தோன்றியவள் மாதவி. தன் காதலன் கோவலன் இறந்த செய்தி கேட்டதும் அவள் வாழ்வை வெறுத்துத் துறவு பூண்டாள். கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்த மகள் மணிமேகலையாவாள். முறையால் அவள் கண்ணகிக்கும் மகளாதலின், "கற்பினுல் அற்புதம் விளைத்த காரிகை மகளை ஈன வாழ்க்கையிற் புகவிடேன்," என்று மாதவி மணிமேகலையையும் துறவு பூணச் செய்தாள். அழகி னுருவாக விளங்கிய மணிமேகலை துறவு பூண்ட செய்தி யறிந்து புகார் நகர மன்னனும் மக்களும் பெறற்கரிய மாமணியைப் பெருங்கடலுள் இழந்தாரைப்போன்று ஆருத் துயரமுற்றனர். அவ்வவலத்தை யெண்ணி யரற்றினேம் கண்டாய்.

[தேவந்தி இவ்வாறு கூறிக் கொண்டே வரும் போது, அவள் கூந்தல் அவிழ்ந்து குலைந்தது; புருவம் துடிக்கலாயிற்று; மொழி தடுமாறிற்று; புன்முறுவல் அரும்பிற்று. மாடலமறையவன் ஏதோ தெய்வம் அவள்மேல் ஆவேசித்துள்ளது என்று கூற அனைவரும் பயபக்தியுடன் அமைதியுற்றனர்.]

தெய்வமுற்ற தேவந்தி வாய்மொழி: வஞ்சியர் கோமானே, மங்கல நல்விழாக் காணும் மாண்புறு மக்களே, இங்கு நும்மிடையே அரட்டன் செட்டியின் இரட்டை மகளிரும், ஆடகமாடக் கோயிலருச்சகன் சேடக் குடும்பியின் மகளும் உள்ளனர். (மாடலனை நோக்கி) மாடல மறையோய், பாசண்டச் சாத்தன் யான்; முன்னொருகால் யான் உன்னிடம் புனிதநீர்க் கமண்டலமொன்று தந்துள்ளேன். அக்கமண்டல நீரை மேற்கூறிய மகளிர் மூவர்மீதும் தெளிப்பாயாக! தெளிப்பின், அவர்தம் பழம் பிறப்பின் நினைவு வரப் பெறுவர். பின்னர் அவர் உரைப்பன கேண்மின்.

செங்குட்டுவன்: வியப்பூட்டும் செய்தியிதுகேட்டு விம்மிதமுறுகின்றதென்னுள்ளம். விளக்கம் தருக. வணக்கம்.

மாடலமறையவன்: மன்னு வாழ்க! கேளிது செய்தி. கெடுக நின்றீயது! புகார் நகரத்தில் மாலதி யென்னும் பார்ப்பினியொருத்தி மாற்ருள் குழவிக்குப் பாலூட்டப் பால் விக்கி அக்குழந்தை இறந்தது. இறந்த குழந்தையை எடுத்துத் தோள்மீதிட்டுச் சென்று பாசண்டச் சாத்தன் முன் மாலதி பாடுகிடந்தாள். சாத்தன் இறந்த குழந்தையினுடலிற் புகுந்து வளர்ந்து தேவந்தியென்னும் இப் பார்ப்பனியை மணந்து எட்டாண்டுகள் அவளுடன் இல்லறம் நடத்தினுன். பின்னர் தேவந்திக்குத் தன் தெய்வவுருக்காட்டி, 'என் கோயில் வருக' என்று சொல்லி மறைந்தான். மங்கலா தேவி கோயில் சென்றிருந்தபோது. அக் கோயில் அருச்சகன் என்முன் தோன்றி இக்கமண்டல நீரை என் கைக்கொடுத்து அவன் சிறப்புரைத்து மறைந் தான். அவன் சாத்தன் என்னும் தெய்வமென்பதை இப்போது உணர்ந்தேன். அச்சாத்தனே, இத்தேவந் தியின் மேல் ஆவேசமுற்று வந்துள்ளான். அவன் கூறியவாறே கமண்டல நீரை அம்மகளிர் மூவர்மீதும் தெளிப்போம்.

[சாத்தத் தெய்வம் கூறிய சிறுமியர் மூவரும் அரசன் முன் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் மீது மாடலமறையவன் தன் கைக் கமண்டல நீரைத் . தெளித்தான். தெளித்தவுடன் மூவரும் வேற்றுலகிற் புகுந்தாற் போன்ற நிலையராயினர். முதியவர் நிலையில் மூவரும் ஒருவர்பின் ஒருவராய் முறையே அரற்றலாயினர்.]

இரட்டையரில் ஒருத்தி: கண்மணி, உன் அறிவையும் அழகையும் வியந்து போற்றிய கணவன் உன்னைக் கைவிட்டுச் சென்ருன். அது குறித்து கவலையே உருவாய் வருந்திக் கிடந்தேன் நான். என்னை நீ கருதினுயல்லை. உன் கணவன் வந்தழைத்த போது அறிந்தோரில்லா அயல் நாடதனுக்கு அன்பே பற்றுக் கோடாகச் சென்று கடுந்துயரைடைந்தாய்.

என் ஆருயிரணையாய், என் பெருந்துயர் தணிக்க ஒரு முறை நீ என் முன் வாராயோ !

இரட்டையரில் மற்றொருத்தி: என் செல்வனே, நின்னுடைப் பிரிவால் என் துணை நாடித் தன் துயர் தோன்ருத் தகையுடன் வாழ்ந்தாள் பொற்கொடி நங்கை. அத்தகு நங்கை அன்புடன் தொடர நள்ளிரவதனில் நகர்தனை நீங்கிப் பெருந்துயரடைந்தாய். உனக்கு நேர்ந்த கொடுமை யெண்ணிக் குலைகின்றதென்னுள்ளம். என் அரும் பெறல் மகனே, வாராயோ என் கண் முன் !

அருச்சகன் மகள்: வையைத் துறையில் மாதர் தம்மொடு குரவையாடி அரவணைப் பிரானைப் பரவிய போது நெஞ்சந் திடுக்கிடுஞ் செய்தி கேட்டேன். மனை திரும்பி வந்தேன்; உன்னைக் காணேன்; கலங்கினேன். எளியேனடைக்கலமாகி எம் மனையைப் புனிதப் படுத்திய எம்பெருமானே, நீ யாங்கொளித்தாய்! ஒரு முறை என் முன்தோன்றி என் மனக்கவலை தீராயோ ?

செங்குட்டுவன்: (மாடலமறையவன் முக நோக்கல்.)

மாடலன்: வேந்தே, வாழ்க. இச்சிறுமியர் மூலம் பேசிய மங்கையர் மூவரும் முறையே கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், கண்ணகி கோவலர்க்கு அடைக்கலந் தந்த இடைக்குல மடந்தை மாதரியுமாவர் என்றறிந்தோம் அல்லவா ? இம்மூவரும் கண்ணகியின் மீது அன்பு மிகவுடையர். மேலுலகடையும் அறம் புரிந்திலாமையால் தங்கள் அன்புவழி ஆருயிர் தொடர, கண்ணகி வந்தடைந்த வஞ்சி நகரத்துப் பிறப்பெய்தினர். இவர்களுள் மாதரி திருமாலை வழிபட்ட புண்ணியப் பயனால் திருமாலருச்சருகன் மகளாகத் தோன்றினள் கண்டாய்! அன்பின் வழியே அவர

வர்க்குப் பிறப்பு வாய்க்குமென்பது நூன் முடிபு. நீ செய்தவம் பெரிதுடைமையயாதலின், கற்பறஞ் சிறந்து கடவுளுருவமெய்திய கண்ணகியையும், அன்புவழி ஆருயிர் செல்லுந் தகைமையையும், கண் கூடாகக் காணும் பேறு பெற்ருய். உன் சார்புடைமை யால் ஏனையோரும் அவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றனர்.

செங்குட்டுவன்: மாடலமறையவ! வணக்கம், அன்பு வழிப்பிணிப்புண்டு புகார்ச் செல்வியே கண்ணகி. தன் கணவனைப் பின் தொடர்ந்தாள். கோப்பெருந் தேவி தன் கணவன்மீதுள்ள அன்பினல் அவனுயிரைத் தொடர்ந்தாள். கண்ணகி கோவலன் தாய்மார் கண்ணகிமீதுள்ள அன்பினல் கண்ணகி புகுந்த வஞ்சி நகரத்தில் வந்து பிறந்தனர். தேவந்தி, செவிலித் தாய், தலைமைத் தோழி, ஐயை என்பவர் அன்பு ஈர்க்க அதன் வழியே கடத்தற்கரிய நிலப்பகுதியெல்லாம் கடந்து ஈண்டு வந்தனர். அன்பு வழியே ஆருயிர் இயங்கும் பான்மையை இந்நிகழ்ச்சிகள் தெள்ளிதின் விளக்குதலை நான் நன்குணர்ந்தேன்.

மாடலன்: வேந்தே, நீ சாந்தி பெறுக! அன்பே எல்லாவற்றினும் ஆற்றல் மிக்கது என்பதில் ஐயமு முண்டோ! நீ உன் மனைவிபால் கொண்டுள்ள 'அன்பு வழி' யால்தானே இத் தெய்வக் கோயில் உருப் பெற்றது. ஆதலின், எஞ்சிய உன் வாழ்நாளெல்லாம் அன்பு நெறி போற்றி மன்பதை காத்திடுக. (செங் குட்டுவன் புன்முறுவல் செய்கிருன்.)

செங்குட்டுவன்: மறையவ வணக்கம், வணக் கம்; என்னுள்ளத்திலும் நீர் கூறியவாறே எஞ்சிய வாழ் நாளையெல்லாம் அமைதி வாழ்விலேயே — கண்ணகி வழிபாட்டிலேயே கழிக்க வேண்டுமென்னும் எண்ணம் தோன்றியுள்ளது. தேவி வேண்மாள் எண்ணமும் அதுவே கண்டீர்! தென்றமிழ் நாட்டு

முடியுடை வேந்தர் மூவருள் ஏனையோர்க்குக் கிடைக் காத பெருமை எனக்குக் கிடைக்க நேர்ந்த வாய்ப்பிது, என் குல முன்னோர் செய்த நல்வினைப் பயனே யென்றெண்ணுகிறேன். இக்கண்ணகி தேவியார் முடியுடை வேந்தர் மூவர் தொடர்புடையவராகவும் அவர்க்குக் கோயிலெடுக்கும் பெரும்பேறு நமக்கு வாய்த்தது நினைதொறும், நினைதொறும் நெஞ்சு மகிழ் தற்குரிய செய்தியாகும். இப்பேறு நமக்கு வாய்ப் பதற்குக் காரணமாயிருந்தவள் தேவி வேண்மாளா தலின் அவளுக்கு என்னுள்ளம் நன்றியுணர்ச்சி காட்டு கிறது. இவ்வாண்டுக்குரிய திறைப் பொருளும் இறைப் பொருளும் கண்ணகி தேவியார் கோயிற் பூசை விழாச் செலவுக்குரிய மூலப் பொருளாக ஒதுக்கப்படும். தேவந்தி யம்மையாரை இக்கோயில் அருச்சகியாகத் தொண்டாற்றுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அனைவரும் கோயிலை வலம் வருவோம்.

[செங்குட்டுவன் அனைவரும் தன்னைப் புடை சூழக் கோவிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான்.]

[சிறையினின்றும் விடுதலை பெற்ற ஆரிய மன்னரும், குடகரும் கொங்கரும் மாளுவ வேந் தனும் கடல்சூழிலங்கைக் கயவாகு மன்னனும் கண்ணகி திருவுருவின் முன்னிலையில் வந்து கை கூப்பி நின்று]

தேவி கண்ணகி நின் திருவடி போற்றி! அருள் நனி கூர்ந்து வரம் ஒன்றெங்களுக்கருளத் திருவுளங் கொளல் வேண்டும். இமயவரம்பன் செங்குட்டுவ வேந்தன் கோயில் எடுத்து நடத்திய விழாவில் நீ தோன்றி விளங்கியமை போல, எங்கள் நாட்டில் நாங்கள் உனக்குக் கோயிலெடுத்து நடத்தும் விழா விலும் நீ விளங்கித் தோன்றுதல் வேண்டும். போற்றி! போற்றி! உன் பொன்னடி போற்றி!

அசரீரி: 'தந்தேன் வரம்;' நலம் விளைக.

செங்குட்டுவனும் ஏனைய அரசரும்: ஆ! ஆ! தெய்விக நிகழ்ச்சியிருந்தவாறென்னே! தெவிட்டாத இன்ப அனுபவமிதனை வெளியிடச் சொற்கள் கிடைத்திலவே!

அனைவரும் சேர்ந்து:

போற்றி! போற்றி!! பூம்புகார்ச் செல்வியே போற்றி!!!

கற்புத் தெய்வமே போற்றி! கண்ணகி தேவியே,
போற்றி! போற்றி!! போற்றி!!!

குறிப்புரை

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

இப்பாடல் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்துள்ளது. மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்தார். அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்குச் சிலகாலம் அமைச்சராயிருந்தார். திருப் பெருந்துறையில் இறைவனருள் பெற்றுத் துறவு பூண்டார். இவர் காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டு என்றும், 9 ஆம் நூற்றுண்டு என்றும் இரண்டு கொள்கைகள் உள்ளன.

மாணிக்கவாசகர் தமக்கு நேர்ந்த அனுபவங்களைக் குறித்து அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுதியே திருவாசகம் ஆகும். இந்நூல் ஓதுவதற்கு மிகவும் உருக்கமாக இருக்கும். ‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்தும் கும் உருகார்’ என்பது பழமொழி. இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாவதாய் விளங்குகிறது.

வான் முதல் எல்லாமுமாயிருக்கின்ற இறைவனை எங்ஙனம் வாழ்த்துவது என்கின்றூர். வளி—காற்று; ஊன்—உடல், ஆகுபெயர். யான் எனது என்னும் நினைவிலே; நின்றுயை—நின்ற உன்னை.

2. மொழி வாழ்த்து

இப்பாடலை இயற்றியவர் வாணிதாசனுர். இவர் பாரதிதாசனுரின் பரம்பரையைச் சேர்ந்த கவிஞர் ஆவர். இவர் புதுவைக்கு அருகில் வசிப்பவர்; எளிமையும், இனிமையும், ஆழமும் உள்ள கவிதைகளை இயற்றுவதில் வல்லவர். இவருடைய கவிதைகள் சீர்திருத்தக் கருத்துக்கள் உடையனவாகக் காணப்படும்.

1. தமிழின் சிறப்புக்களாக வாணிதாசனார் கூறுவன யாவை?

3. நாட்டு வாழ்த்து

இப்பாடலைப் பாடியவர் நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளையாவர். இவர் பிறந்தது மோகனூர்; வாழ்வது நாமக்கல். இவருடைய பெற்றோர் வேங்கடராம பிள்ளை, அம்மணி அம்மாள் என்பவராவர். இவர் சிறு வயதிலேயே கவிபாடும் திறமையும், ஓவியம் தீட்டும் ஆற்றலும் பெற்றிருந்தார். இப்போது இவர் சென்னை மேல்சபை உறுப்பினராகத் திகழ்கிறார். இவர் 1888-ஆம் ஆண்டு பிறந்தவர்.

மலைக்கள்ளன், சங்கொலி, மாமன் மகள், அவளும் அவனும் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

II. அறவுரை

1. திருக்குறள்

திரு+குறள் - திருக்குறள். குறள் வெண்பாக்களால் ஆகிய நூலாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. 'திரு' என்பது சிறப்பைக் குறிக்கும் அடைமொழியாகும். இந்நூல் அறத்துப் பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற முப்பால்களையும், 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டது. இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

ஆங்கிலம், இலத்தீன் போன்ற உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளமையாலும், குறட்பாக்களையும், குறட் கருத்துக்களையும், பிற்காலப் புலவர்கள் தம் நூல்களில் எடுத்தாளுவதாலும் "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்", "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி," என்ற பழமொழிகள் வழங்குவதாலும் இந்நூலின் பெருமையை அறியலாம்.

இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் பிறந்தவர். சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவரைப் பற்றிய வேறு வரலாறு ஒன்றும் தெரிந்திலது.

1. வேண்டுதல்-(எப்பொருளையும்) விரும்புதல். யாதும் எப்போதும். இடும்பை-துன்பம். 2. பசும்புற்றலை. பசுமை+புல்+தலை. விசும்பு-வானம். துளி-மழை. 3. இருமை-பிறப்பு வீடு. வகை-கூறுபாடுகள்(தன்மைகள்). பிறங்கிற்று-உயர்ந்தது 4. ஒல்லும்-இயலும். ஒவாது-ஒழியாது. 5. அறத்து ஆறு-அறவழி. 6. பெருந்தக்க-மேம்பட்ட. திண்மை-கலங்காத நிலைமை. 7. நிறை-கற்பு. 8. மன்உயிர்-நிலை பெற்ற உயிர். 9. சார்பு-துணை, மறத்திற்கும்-தீமையை நீக்குவதற்கும். 10. இல் இருந்து-மனைவியோடு இல்லில் இருந்து. விருந்து-விருந்தினர், புதியவர். (நம் வீட்டிற்கு வரும் உறவினர் நண்பர் அல்லாத புதியவரே விருந்தினர் எனப்படுவர். இவர் முன்னமே அறிந்தவராகவும், அறியாதவராகவும் இருக்கலாம்) வேளாண்மை-உதவி. 11. ஒரீஇ-நீங்கி. 12. பொதிந்து-பாதுகாத்து. 13. ஏதம் - துன்பம். படுபாக்கு - வருதல். அழுக்காறு-பொறாமை. 14. அஃகாமை-சுருங்காமை. வெஃகாமை-விரும்பாமை. செல்வத்திற்கியாதெனின் - குற்றியலிகரம். 18. பொன்றுது-அழியாது. 22. மழித்தல்-மொட்டையடித்தல். நீட்டல்-சடையாக்கல். 24. நோய் எல்லாம்-துன்பங்கள் எல்லாம். நோய் செய்தார்-பிறிதோருயிர்க்குத் துன்பம் செய்தவர். பிற உயிர்க்குத் துன்பம் செய்தலாகாது. 25. நெருநல்-நேற்று. பெருமை-மிகுதி. 27. நன்று-நன்மை. அன்று-தீமை. நல்லவாக் காண்பவர்-மகிழ்பவர். 29. எவ்வது-எவ்வாறு. உறைவது-ஒழுகுகிறதோ- அவ்வது-அவ்வாறு, 31. ஆற்றுக்கடை-செய்யா விடில். 32. இட்டிதாயினும்-சிறிதாயிற்றுயினும். அகலாக்கடை-பெருகாதாயின் 35. தேற்றம்-கலங்காமை. 36. பற்று - செல்வம். அற்ற கண்ணும்-அழிந்த போதும். 37. பொச்சாப்பு - சோர்வு. 38. பைங்கூழ்-பசுமை+கூழ்-பசுமையான பயிர். கூழ்-ஆகு பெயர். 40. பொறை-சுமை (பாரம்). கண்ணோட்டம்-தாட்சணியம். நண்பர், உறவினர் என்பதற்காக ஒரு நீதி

யும், பகைவர், அறியாதார் (நொதுமலர்) என்பதற்காக ஒரு நீதியும் காட்டாமலிருத்தல். 45. நோதக்க - வெறுக்கத் தக்கவற்றை. கிழமை-உரிமை. 47. நோன்மை-தவம். சால்பு-சான்றாண்மை. (பல குணங்களும் நிறைந்திருக்கும் தன்மை). 49. இரவு-யாசித்தல். கரவு-மறைத்தல். 50. கயவர்-கீழ்மக்கள். மேவன-விரும்புவன. கயவரைத் தேவரோடு ஒப்பிட்டது கயவரைப் புகழ்வது போலப் பழித்த வாறும். இஃது வஞ்சப் புகழ்ச்சியணியாகும். புகழ்வது போலப் பழித்தலும், பழிப்பதுபோலப் புகழ்தலும் வஞ்சப் புகழ்ச்சியணியாம்.

1. பொருளைச் சேர்த்து வைக்கும் இடம் எது?
2. பிறர்க்கு இன்னா செய்யக்கூடாது ஏன்?
3. அறிவாவது யாது?
4. சுற்றத்தாரிடம் உள்ள குணம் யாது?
5. பேஎய் கண்டன்ன துடைத்து—எது?
6. ஒருவற்கு ஊதியமாவது யாது?
7. கயவர் தேவரனையர்—எவ்வாறு?
8. கயவர் அறைபறையன்னர்—ஏன்?
9. திருக்குறள்—குறிப்பு வரைக.

---

2. ஏலாதி

ஏலாதி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். ஏலத்தை முதலாக வுடையது என்று பொருள்படும். ஏலத்தோடு ஆறு அல்லது ஏழு மருந்துப் பொருள்களைச் சேர்த்து உடற்பிணியைப் போக்கும் மருந்து போன்று, ஒவ்வொரு செய்யுளிலும் ஆறு அல்லது ஏழு கருத்துக்களைக் கூறி மக்களின் அறியாமையைப் போக்கும் நூல் ஏலாதியாகும். ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு பொருள்களை மருந்துக்குச் சேர்ப்பதுண்டு.

இந்நூலை இயற்றியவர் கணிமேதையார் என்பவராவர்.

1. வனப்பு-அழகு ; ஈடு-பெருமை ; புடை - பக்கம் 2. களியான்-தற்பெருமையில்லாதவன் ; களிப்பாரை-கள் உண்பவரை ; ஒளியான் - (உள்ளதை) ஒளித்து இல்லை யென்னுதவன்; உலையான்-ஒழுக்கம் கெடாதவன்; எள்ளான்-இகழாதவன் ; மண் ஆண்டு கொள்வான் - இவ்வுலகு ஆள்வான். 3. சாதல்-(நண்பர் பொருட்டு) இறத்தல் ; புணர்வு உவத்தல்-கூடிமகிழ்தல் ;

பிரிவில் நோதல். பிரியும்பொழுது வருந்துதல் ; கவறல்-கவலைப்படுதல் ; கவறல்-தொழிற் பெயர், கவல்-பகுதி 4. மாண்டு- (ஒழுக்கத்தால்) மாட்சிமைப்பட்டு ; மதி-அறிவு ; வன்கண்மை-(பகைவர்க்கு) அஞ்சாமை ; ஆண்டு அமைந்த-பயின்று நிரம்பிய ; பூண்டு அமைந்த-தகுதி பொருந்திய ; 5. சிதை-கீழ்மை ; செற்றம்-பகைமை ; சீறு-கோபம் ; இயல்பு உரையான் - தன்னைப் புகழாதவன் ; ஈனம்-(பிறருடைய) இழிவு ; நசையவர்-(தன்னை) விரும்பி வந்தவர்.

1. ' கல்வி அழகே அழகு ' என்பதனைக் கணிமேதாவி யார் எவ்வாறு கூறுகின்றார் ?
2. மண் ஆண்டு கொள்வான்-யார் ?
3. அன்பர்க்குரிய ஆறு குணங்கள் யாவை ?
4. தூதுவர்க்குப் புகழ் தருவன யாவை ?
5. விண்ணோரும் நயந்து நாடுபவர் யாவர் ?

---

3. சிறுபஞ்ச மூலம்

மருந்தாகப் பயன்படும் ஐந்து சிறிய வேர் என்பது பொருள். சிறுவழுதுணை வேர், நெருஞ்சில்வேர், சிறுமல்லிவேர், பெருமல்லி வேர், கண்டங்கத்தரி வேர் என்னும் ஐந்தும் சிறுபஞ்ச மூலம் எனப்படுவன. உடல் நோயைப் போக்கும் மருந்து போன்று, ஒவ்வொரு செய்யுளிலுமுள்ள ஐந்து கருத்துக்கள் அறியாமை நோயைப் போக்குவனவாம். இந்நூலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைச் சேர்ந்ததே.

இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவராவர்.

1. கண்ணேட்டம் - கருணை செய்தல். செல்லாமை-இரத்தற்குச் செல்லாதிருத்தல். இத்துணை என்றுரைத்தல்-இத்தனை, இன்ன கருத்து எனத் துணிந்து கூறுதல். வாட்டான்-கொடுங் கோன்மையால் வருத்த மாட்டான். செல்லாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். கேட்டார்-வினையாலணையும் பெயர். 2. நல்ல-பிறர்செய்த நன்மைகள். தீய-பிறர்செய்த தீமைகள். ஒல்லை-விரைவு.

ஊற்றங்கோல்-ஊன்றுகோல். மாயம்-வஞ்சனை. மானத்தான் ஆயின்-மானங் காத்தற் பொருட்டாயின். அழிதல்-உயிர் விடுதல். நல்ல, தீய-பலவின் பாற் பெயர்கள். 3. சினை-முட்டை. நீள்கோடு-நீண்ட கொம்புகள். வலம்படா மானிற்கு-வலிமை பெருத கவரிமானிற்கு. நெண்டு-நண்டு. பார்ப்பு-குஞ்சு. நன்றுஅல் வசை-நல்லதல்லாத பழிச்சொல். 4. எல்லாமறிந்தவனும், ஏதும் அறியாதவனும், கல்வியே இல்லாதவனும் குற்றமே இல்லாதவனும் எல்லாம் கற்றவனும் உலகத்தில் இல்லை என்பதே இந்தப் பாட்டின் கருத்தாகும். அடங்க-முழுமையும். கணன்-கணம்-தொகுதி.

1. கண், கால், பண், நாடு ஆகிய இவற்றிற்கு வனப்புத் தருவன எவை ?
2. அறிவுடையார் செயல்கள் யாவை ?
3. எவ்வெவற்றிற்கு எவை யெவை கூற்றமாய் அமைவன ?
4. 'எல்லாம் அறிந்தவன் இல்லை' — என்பதனைக் காரியாசான் எவ்வாறு கூறுகின்ருர் ?

4. நான்மணிக்கடிகை

நான்கு+மணி+கடிகை நான் மணிக்கடிகை நான்கு வகைப்பட்ட மணிகளால் செய்யப்பெற்ற ஒருவகை அணிகலனுக்கு நான்மணிக்கடிகை என்பது பெயர். அதுபோலவே, இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலிலும் நந்நான்கு கருத்துக்கள் அமைந்திருத்தலின் இந்நூ லுக்கும் நான்மணிக்கடிகை என்று பெயர் உண்டாயிற்று. இந்நூலில் 104 வெண்பாக்கள்

உள்ளன. இந்நூல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களைச் சேர்ந்தது.

இந்நூலை இயற்றியவர் விளம்பி நாகனார். இவரது இயற்பெயர் நாகனார் என்பது. இவர் விளம்பி என்னும் ஊரைச் சேர்ந்தவர் ஆதலின் விளம்பி நாகனார் என அழைக்கப்பெற்றார். இவரது சமயம் வைணவம். இவர் கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவர்.

1. கெழி இன்மை-நட்புரிமை இல்லாமை. கேடு-வறுமை, நிகழ்ச்சி - வரவு. ஆக்கம் - வளர்ச்சி. புகழ்ச்சியால்-பலரும் புகழும்படி ஒழுகுதலால். போற்றாதார்-பகைவர். 2. நல்லார்-கற்றார் கற்றார். எங்குச் சென்றாலும் சிறப்பைப் பெறுவர். 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பது மூதுரை. அல்லா-மேலோர் அல்லாத கடைகள்-கீழ் மக்கள். கீழ் மக்கள் எவ்வூரையும் நிரந்தரமாகக் கொள்ளார் ஆதலின் அவருக்கும் எல்லாவூரும் சொந்த ஊராகும். 3. வளம்-பொருள் வருவாய். இலா-(இலாத. ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். தமர்-உறவினர் கையகத்து-இடத்தில். 4. போகம்-இன்ப வாழ்க்கை.

1. யார் யாருக்கு எல்லாவூரும் தம்மூராகும்?
2. யார் யாருக்கு எவை எவை குற்றம் என்று நான் மணிக்கடிகை கூறுகிறது?

III. தொடர் நிலைச் செய்யுள்

1. மணிமேகலை

விழாவறை காதை

மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவதால் இந்நூல் 'மணிமேகலை' எனப் பெயர் பெற்றது. மணிமேகலை என்பவள், கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவளாவாள். இந்நூல் 'விழாவறை காதை' முதலாகப் 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை' ஈறாக முப்பது காதைகளைச் கொண்டது. இந்நூல் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும்.

(ஐம்பெருங்காப்பியங்கள் : சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.)

இந்நூலை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றினார். இவர் திருச்சியை அடுத்துள்ள சீத்தலையில் பிறந்தவர்; கூல (தானிய) வாணிகம் செய்தவர்; பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்; கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவரது இயற்பெயர் சாத்தனார் என்பது. இவர் சீத்தலையிற் பிறந்தவர் ஆதலின் சீத்தலைச் சாத்தனார் எனப் பெயர் வந்தது. புலவர்கள் பாடிவரும் பாக்களில் குற்றம் கண்டபோது பொறாமல் மனம் வருந்தித் தம் தலையில் எழுத்தாணியால் குத்திக்கொண்டு, சீழ்ப்பிடித்த தலையை யுடையவராய் இருந்தமையால் சீத்தலைச்சாத்தனார் எனப் பெயர் வந்தது எனவும் சிலர் கூறுவர்,

விழாவறை காதை : காவிரி புகும் பட்டினத்தில் இந்திர விழா நடக்கவிருக்கும் செய்தியை முரசறைவோன் முரசறைந்து அறிவிக்கும் செய்தியினைக் கூறும் பகுதி விழாவறை காதையாகும். இக்காதை மணிமேலையிலுள்ள முதற் காதையாகும்.

ஆயிரங்கண்ணோன்-இந்திரன். கால்கொள்க-தொடங்குக. உரி - தோல். முதுமை+ஊர் - மூதூர் - பண்புத்தொகை. தொல் நிலை - பழமை. பூரண கும்பம்-நிறை குடம். பொலம் - பொன். தூணத்து - தூண்களில். தாமம் - மாலை. நாற்றுமின் - தொங்க விடுங்கள். மன்றம் - ஊருக்குப் பொதுவாய் எல்லாரும் கூடும் மரத்தின் அடி. கதலிகை - துகில். காழ் - காம்பு. விலோதம் - கொடி. (கயிற்றில் கட்டும் கொடி, கதலிகை. கம்பைப் புதைத்து அதன் நுனியில் கட்டும் கொடி, விலோதம்.) நுதல்விழி நாட்டம் - நெற்றியில் இமைத்தலில்லாத கண். இறையோன் - கடவுள், (சிவன்). புண்ணியம்-நன்மை. பட்டி மண்டபம் - கலைகளை ஆராய்வதற்கும், வாது புரிதற்கும் உள்ள மண்டபம். செற்றம் - சினம். கலாம் - சிறு சண்டை. துருத்தி - ஆற்றிடைக் குறை. ஓர் ஆறு

இரண்டாகப் பிரிந்து, பின் ஒன்ருகச் சேருமாயின் அவ்விரு பிரிவுகளுக்கிடையேயுள்ள நிலப் பகுதி ஆற்றிடைக் குறை யாகும்.

1. முரசறைவோன், முரசு அறைந்து தெரிவித்த செய்தி களைத் தொகுத்து வரைக.

2. பெருங்கதை

பெருங்கதை என்னும் இந்நூல் கொங்குவேளிர் என்பவரால் இயற்றப்பட்டது. இது பெருங்காப்பிய வகையைச் சேர்ந்தது. உதயணன் கதையைக் கூறுவது. இந்நூல் சொற்சுவை, பொருட்சுவைகளிற் சிறந்தது. தெள்ளிய, இனிய நல்ல நடை வாய்ந்தது. உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் ஆகிய ஆறு காண்டங் களைக் கொண்டது.

உதயணன் தேவியர் இருவரும் தங்கள் தோழியர் பந்தடித்தலைக் காண்கின்ற கதைப் பகுதி பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பந்துகளைச் செய்த முறை, பெண்கள் பந்தாடியமை பற்றிய செய்திகள் நன்கு கூறப்பட்டுள்ளன.

1. கொடிபுரை - கொடிபோன்ற. 2. தெரியல் - மாலை. 3. மகதவன் - மகத நாட்டுத் தலைவனுகிய தருசகன் 4. விராய் மலர் - ஒருவகை மலர். 5. வீரப்போர்த் தொடக்கத்தில் தம் தலைவரை வணங்குதல் இயல்பு. இதுவும் விளையாட்டுப் போராதலால் இவள் பதுமாவதியை வணங்கிஞள். 7. அணங்கு - தெய்வப் பெண். 8. கிடை - நெட்டி. பூளை - பஞ்சு. உலண்டு - உலண்டு நூல். உலண்டு என்று ஒருவகைப் புழு உண்டு. அந்தப் புழுவிலிருந்து ஒருவகையான அழகிய பட்டு எடுக்கப்படும். அப்பட்டுநூல் பந்து செய்யப் பயன் படுத்தப்பட்டுள்ளது. 10. வலந்து - சுற்றி. 14. குத்தல் - சிறப்பாகத் தைத்தல். 15. நொய்ம்மை - மென்மை (கனமின்மை). 18. தண்வளி எறியினும் - சிறுகாற்றடிப்பினும். 23. ‘கண்ணிமையாமல் எண்ணுமின்’ என்று அங்குள்ளாரை

நோக்கி இராசனை கூறினள். 25. பாடகம் - ஒரு வகைக் காலணி. 26. சூடகம் - முன் கையில் அணியும் ஓர் அணி. 29. பாயிரமின்றி - பந்தடித்தற்குரிய முன்னுரைகளைப் பேசாமல். 31. அவந்திகை - வாசவதத்தை. 37. நிழல் - ஒளி. 38. கண்ணி - மாலை. 40. வேய் - மூங்கில். 43. அம்பணைத் தோளி - அழகிய மூங்கில் போன்ற தோளையுடையவள். 46 கோணம்- தென்கிழக்கு முதலிய திக்கு. இதனை மூலையெனவும் கூறுவர். 47. கடிது - விரைவு. 51. வாக்குற - திருத்தமுற. 54. எற்றியும் - அடித்தும். 60. குறளி - குறுகிய உருவமுடையவள். 62. ஏலாது - பொருந்தாது. சேலம் - ஆடை. 63. கருவிக் கோல் - பந்தடிக்குங் கோல். 66. பத்தி - வரிசை. 71. கவர்ச்சி- பல வழியாகச் செல்லும்படியாகப் (போக்குதல்). 72. முரிய - வளைய. 75. பாம்பொழுக்கு - பாம்பு செல்வது போன்று வளைந்து செல்லுதல். 76. காம்பு - மூங்கில். 80. கார் - கார் காலம். 81. அசைஇ - நடந்து. 83. உலாவியும் - நடித்தும். 85. திரிபு - திரிந்தும்.

1. மென்மையான பல்வகைப் பந்துகள் எவ்வாறு செய்யப்பட்டன?
2. இராசனை எவ்வாறு பந்தடித்தாள்?
3. காஞ்சனமாலை பந்தடித்தமை பற்றி எட்டு வரிகள் எழுதுக.
4. அயிராபதி என்னும் கூனி எவ்வாறு பந்தடித்தாள்?
5. விசுவலேகை பந்தடித்த சிறப்பு பற்றி எழுதுக.
6. ஆரியை பந்தடித்த விதம் யாது?

---

3. வில்லி பாரதம்

இந்நூலை இயற்றியவர் வில்லிப்புத்தூராழ்வார். தமிழ்ப் புலமை மிகுந்தவர். வடமொழி கற்றவர். இவருடைய கவி களில் அழகுகள் பல உள்ளன. இப்பாடல்கள் சொல் நயம், பொருள் நயம் ஓசை நயம் மிகுந்தவை.

இந்நூல் ஆதி பருவம் முதல் பதினெட்டுப் பருவங்களை யுடையது. பாடப் பகுதி கன்ன பருவத்தில் உள்ளது.

1. அத்தவெற்பு - (கதிரவன்) மறையும் மலை. ஆதவன் - கதிரவன். வேதியன் - மறையவன். 2. தரங்கம் - அலை. தளர்ந்தவர் - வறுமையுற்றவர். கவனம் - கதி. துரகதம் - குதிரை. 3. நவில்க-கூறுக. 4. அகத்ததோ புறத்ததோ-உள்ளேயிருக்கின்றதோ வெளியே யிருக்கின்றதோ. நயக்கும் - விரும்பும். ஓவிலாது - குறைவிலாது. 5. கரங்குவித்து - கைகூப்பி (வணங்கி). இறைஞ்சலர் - பகைவர். எழிலியேறு - இடியேறு. அம்பின் வாய் அம்பால் - அம்பு தைத்த இடத்துச் செந்நீரால். அங்கை - உள்ளங்கை. அவுணன் - அசுரன். 6. மல்லல் - வளம், தொடையல் - மாலை. சூரன் - கதிரவன். மதலை - மகன். உற்பவம் - பிறப்பு. ஏழெழு பிறப்பு - எழுமை ஏழு பிறப்பு. 8. புணரி - கடல். கார் - கரிய. பஞ்ச ஆயுதம் - திருமாலின் ஐந்து படைகள். கரா - முதலை. குஞ்சர ராசன் - கஜேந்திரன். 9. கனக நாண்மலர்-பொன்னுலான புதுமலர். தனஞ்சயன்-அருச்சுனன். 10. மாமகம் - பெரிய வேள்வி. அநிலயோகம் - மூச்சடக்கி யோகம் செய்தல். போகம் - இன்பம். 11. கிரி - மலை. பவ்வம் - கடல். கோலம் - வடிவம். கதை, வாள், சங்கு, நேமி கோதண்டம் - ஐந்து படைகள். வாரிசாதம் - பாரிசாதம். இம்மை - இப்பிறப்பு. 12. தருமன் மகன் - உதிட்டிரன். தோழன் - துரியோதனன். செஞ்சோற்றுக் கடன் - உண்ட வீட்டுக்குத் தீங்கு நினையாத கடமை, தேவர்கோ - இந்திரன். மருது - மருதமரம். 13. தைவந்து - தடவி. ஊன்பெற்ற பகழி - பகைவரைக் குத்திக் குத்தி ஊன் தோய்ந்த அம்பு. 14. எல்லி - கதிரவன். புறவினில் - காட்டில். ஆனிரை - பசுக்கூட்டம். விளவு - விளாமரம். கடவுள் நாதன் - இந்திரன். அரவவாளி - (நாகாஸ்திரம்) பாம்புப் பகழி. தொடாத - ஏவாத. 15. உகரவாளி - அசுவசேனன் என்னும் பாம்புப் பகழி. சதியாமல் - கொல்லாமல். கோவியர் - இடைச்சியர். 16. அஞ்சரீகம் - அம்பின் பெயர். இலக்கமாக - குறியாக. ஆசுகம் - வாளி, அம்பு. குளித்தது - அழுந்தியது.

1. கண்ணன் கன்னன்பால் விரும்பிய பொருள் யாது?
2. புண்ணிய மனைத்தும் கேட்டவனிடம் கன்னன் என்ன பதில் கூறினன்?
3. கண்ணன் அளித்த வரம் யாது?

4. நாரணனைக் கண்ட கன்னன் மகிழ்ச்சியாற் கூறியவற்றை 20 வரிகளில் எழுதுக.

5. நாரணனின் தோற்றத்தை வருணிக்க.

6. கண்ணன் கன்னனிடம் கூறிய உண்மைகள் யாவை?

---

4. பெரிய புராணம்

பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் சுவாமிகள் பாடியருளினர், இது ஒரு தனித் தமிழ்க் காப்பியம். தில்லை நடராசப் பெருமானால் "உலகெலாம்" எனும் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு இந்நூல் பாடப்பட்டது. இறையன்பின் பெருமையும், இலக்கிய நயமும், காவியச் சுவையும் அமைந்த சிறப்பான நூல். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் இது பன்னிரண்டாம் திருமுறையாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டத் திருவந்தாதி, தேவாரம் முதலிய பாடல்களின் துணைகொண்டு எழுந்த நூல்.

அப்பூதியடிகள் என்னும் அந்தணர் திருநாவுக்கரசரிடம் அளவிலா அன்பு கொண்டவர். அவருடைய அடியார் அன்பினையும், அவர் பொருட்டு அப்பர் சுவாமிகள் செய்தருளிய அற்புத நிகழ்ச்சியினையும் இப்பகுதி கூறுகின்றது.

1. தம்பிரான் - இறைவன் அவரறியா முன்னே காண்தகு காதல் கூரக் கலந்த அன்பினர் — அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரைக் காணாத பொழுதே அவர் பால் அன்பு கொண்டவர் - எல்லையில் தவம் - அளவற்ற தவம். 2. காய்ந்தார் - அகற்றினர், மேதி - எருமை. 3. வடிவு - மேனி, தம்பிரான் - தலைவர். 4. உறுவேனில் - மிகுந்த வேனில் - உரிச்சொற்றொடர், 5. மந்த மாருதம் - தென்றல் காற்று, சந்தம் - அழகு, மருங்கு - பக்கம், 6. சாலை - அறச்சாலை, 7. துன்றிய - பொருந்திய, சேய்த்தன்று - தொலைவிலன்று, நணித்து - அருகிலுள்ளது, 8. தமர் - அடியவர் 9. கழல் - தானியாகு பெயர், வந்தருளிற்று - எழுந்தருளியது-

10. ஆறு - கங்கை, கோது - குற்றம் ; என் கொல் - கொல் அசை நிலை. 11. நிலையழிந்த - தடுமாறிய, உறைப்பு - வலிமை ; 12. உடையவர் - அடிமையாகக் கொண்ட சிவபெருமான், நயந்த - விரும்பிய, வெம்மை மொழி - சுடுசொல், 13. கல்+ மிதப்பு - கன்மிதப்பு, அங்கணர் - அம்+கணர் 'கணர்' - தொகுத்தல் விகாரம். (14) பிற துறை - சைவமல்லாத பிற சமயத் துறை, தெருளும்-தெளிந்த, சிறுமையேன் - இழிந் தவன் (15) கரகமலம் - கைகளாகிய தாமரை - உருவகம், உரோம புளகம் - மயிர் சிலிர்த்தல், சரணகமலம் - திருவடித் தாமரை - உருவகம் (16) அற்றவர்கள் - வறியவர்கள், முற்ற களிகூர - முழுவதும் மகிழ்ச்சி மிக ; (17) பூசனைகள் அமர் வித்து - வழிபாடுகளைப் பொருந்துமாறு செய்து, திருநீற்றுக் காப்பு . திருநீற்றினை நெற்றியிலும் உடலிலும் அணிதல் நேர்ந்தார் - உடன்பட்டார் (18) சேயவர் - புதல்வர், மேய பொருந்திய, பொற் குருத்து - பொன்போன்ற குருத்து (19) ஒல்லை - விரைவு ஒல்லையில் விரைந்து - ஒரு பொருட் பன் மொழி, மல்லல்-வளப்பம், ஈர்தல் - அறுத்தல், வாள் அரா - ஒளியுடைய பாம்பு, (20) பை அரா - படத்தையுடைய பாம்பு, பாந்தள்-பாம்பு (21) தாழ்க்கை - காலந் தாழ்த்தல் அறையேன் - கூறேன். (22) எரிவிடம் - தீயைப் போல் எரியும் விடம், தெரிவுற - தெரியும்படி, எயிறு - பல், பரிகலம் - உண்கலம், (23) துளங்குதல் - மனம் நடுக்குறுதல், சூழ் வார் - ஆராயலானுர். (24) பெய்து - இட்டு, புடை - பக்கம், விறல் - வலிமை, வெற்றி, அற இது - இது முற்றிலும் (25) அருந்தவர் - அரிய தவத்தையுடைய திருநாவுக்கரசர் ; சாத்தி - அணிந்து, போழ்தில் - பொழுதில் (26) பூதி - திரு நீறு. உரையார் - முற்றெச்சம் ; (27) செவ்விய - நேர்மை யான, தடுமாற்றம் - கலக்கம், விதிர்ப்பு - உடல் நடுக்கம், (28) என்னே வருவது - ஏனே இங்ஙனம் நிகழ்வது, சீலம் - ஒழுக்கம், பரிவு - மனவருத்தம், (29) கேளா - கேட்டு, செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் ; பா இசை - பரவும் இசை, பதிகம் - 'ஒன்று கொலாம்' ஒன்று துவங்கும் பதிகம், பாற்றுவித்தார்-போக்கினுர், (30) சே உகைத்தவர்- எருதை ஊர்தியாகக் கொண்டவர், புனித - தூய்மையான

(31) நீவி - மெழுகி, வான்சுதை போக்கி - விளங்குகின்ற வெண் கோலமிட்டு, கதலி - வாழை, ஈர்வாய் - அறுத்த பக்கம். *(32)* மருங்கிருந்து - அருகிலமர்ந்து, இல்லம் மாதர் - அப்பூதியடிகளின் மனைவியர் ; கொந்து - கொத்து என்பதன் மெலித்தல் விகாரம், அம் தமிழ் ஆளியார் - அழகிய தமிழை ஆள்பவராகிய திருநாவுக்கரசர். *(33)* மேதகு - மேன்மை பொருந்திய நாவின் மன்னர் நாவுக்கரசர், *(34)* பூதி - அருட் செல்வம்.

(1) பெரிய புராணம், சேக்கிழார் சுவாமிகள்—சிறு குறிப்பு வரைக.

(2) அப்பூதியடிகளார் அமைத்த தண்ணீர்ப் பந்தலின் சிறப்பினை எழுதுக.

(3) திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தலில் இருந்தவர்களைக் கேட்ட வினாக்களையும், அவர்கள் அளித்த விடைகளையும் எழுதுக.

(4) நாவுக்கரசரை அறிந்த அப்பூதியடிகளாருக்குற்ற மகிழ்ச்சியையும், மெய்ப்பாடுகளையும் விளக்குக.

(5) அப்பூதியடிகளாரது இல்லத்தில் திருநாவுக்கரசர் செய்த அற்புதச் செயலைக் குறித்து இருபது வரிகளில் எழுதுக.

(6) அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரிடத்துக் கொண்ட அன்பின் பெருக்கம் எவ்வெவ்வாறு புலப்படுகிறது?

(7) கீழ் வரும் உவமைகளைப் பொருளொடு பொருத்தி விளக்குக.

(அ) அருளுடையார் உளமனைய

(ஆ) அற்றவர்கள் அருநிதியம் பெற்றார் போல்.

---

5. பாஞ்சாலி சபதம்

பாஞ்சால நாட்டு அரசன் மகள் பாஞ்சாலி. இவள் பாண்டவர்களின் மனைவியாவாள். இவள் செய்த சபத மொழிகளைக் கூறும் நூலாதலின், இந்நூல் பாஞ்சாலி சபதம் எனப் பெயர் பெற்றது. இந்நூலை அமரகவி சி. சுப்பிரமணிய

பாரதியார் இயற்றினர். இவர் எட்டையபுரத்தில் பிறந்தவர். பெற்ருேர் சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள் என்பவராவர். இவர் 1882ஆம் ஆண்டு பிறந்தார்; 1921 ஆம் ஆண்டு மறைந்தார். இவர் இளமையிலேயே கவிபாடும் திறமை பெற்றிருந்தமையால், 'பாரதி' என்ற பட்டப் பெயரையும் பெற்ருர். தம் புதுமைக் கவிகள் மூலம் நாட்டு மக்கள் உள்ளத்தில் சுதந்திரக் கனலை மூட்டினர்.

இவர் கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, குயில் பாட்டு முதலிய வேறு நூல்களையும் இயற்றியுள்ளார். பல உரை நடை நூல்களையும் யாத்துள்ளார்.

[தரும புத்திரர் நடத்திய இராசசூய யாகத்தைக் கண்டு பொருமை கொண்ட துரியோதனன் கூறுவது இப்பகுதி]

இலகு - விளங்குகின்ற. வெதுப்பின - வருத்தியவை.

விப்பிரர் - அந்தணர். இரட்டையர் - நகுல சகாதேவர்.

1. துரியோதனன், சகுனியிடம் கூறிய மொழிகளைத் தொகுத்து வரைக.
2. துரியோதனன், தன் தந்தையிடம் கூறும்படி சகுனியிடம் கூறியவை யாவை?

IV. பல்சுவை

1. வருணனை

1. அந்திவானம்

மாலைக் காலத்தில் வானத்தில் தோன்றும் காட்சிகளை வருணித்துக் கூறுவது. பரிதி - சூரியன்.

1. மாலை நேரத்தில் வானத்தில் கண்ட காட்சிகளை ஆசிரியர் எங்ஙனம் வருணிக்கின்ருர்?

2. அந்திப்பொழுது

மாலை நேரத்தை வருணிப்பது

1. மாலைக்காலத்தில் பறவைகள் செய்யும் செயல்களாக ஆசிரியர் கூறுவன யாவை?

2. சீட்டுக்கவிகள்

புலவர் ஒருவர் தம்மையறியாத வள்ளல் ஒருவருக்குத் தம் பெருமை, கல்வியறிவு முதலியவற்றையும் தாம் வேண்டுவதையும் செய்யுள் வடிவிலமைந்த கடிதமாக வரைந்தனுப்புவது சீட்டுக்கவியாகும். இதனை இக்காலத்து எழுதும் அறிமுகக் கடிதங்களுக்கு ஒப்பிடலாம்.

துழாய் - துளசி. தார் - மாலை. சமைத்த - இயற்றிய தூக்கு - பாட்டு. பராவி - போற்றி,

பாரதியார் இதில் தம்மைப்பற்றிச் சிறப்பித்துக் கூறிக் கொள்வது தற்பெருமையாகாதோவெனின், ஆகாது; ஏன் எனின், "மன்னுடை மன்றத் தோலை தூக்கினும், தன்னுடையாற்றல் உணராரிடையினும், தன்னைப் புகழ்தலுந் தகும் புலவோர்க்கே," என்ற இலக்கணம் இருப்பதால் என்க.

1. *பாரதியார், வேங்கடேசரெட்ட சிங்கனுக்கு எழுதியனுப்பிய சீட்டுக்கவிகளிலுள்ள கருத்துக்கள் யாவை?*

3. சிலேடைக் கவிகள்

இரு பொருள் தரும்படி பாடுவது சிலேடையாகும். இச்சிலேடை இருவகைப்படும். 1. செம்மொழிச் சிலேடை. 2, பிரிமொழிச் சிலேடை. சொல் இருந்தவாறே (பிரிக்காமலே) பல பொருள் தருவது செம்மொழிச் சிலேடை; சொற்களைப் பிரித்துக் கொண்டு கூட்டுவதன் மூலம் பல பொருள்களைத் தருவது பிரிமொழிச் சிலேடை ஆகும்.

நும் பாடப் பகுதியிலுள்ள பாடல்களைப் பாடியவர் காளமேகப் புலவர் ஆவர். காளமேகம் என்றால் கார் காலத்து மேகம் என்பது பொருள். கார்காலத்து மேகம் விடாது பெரு மழை பொழிவதைப்போன்று, இவர் கவிதை, மழை பொழிவாராதலின் இப்பெயர் பெற்றார்.

1. வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை :—செக்கோல - சிவந்த வைக்கோல். வாரிக்களத்தடிக்கும் - வைக்கோல் வயலி

விருந்து எடுக்கப்பட்டு நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும். வந்து பின்பு கோட்டைபுகும் - பின்பு புரியாகத் திரிக்கப்பட்டு நெற் கோட்டையைச் சூழ்ந்திருக்கும். போரில் சிறந்து பொலிவாகும் - பெரிய குவியல் குவியல்களாகக் குவிக்கப் பட்டு விளங்கும். யானை - பெரிய யானை யுத்த களத்தில் எதிரிகளைத் தாக்கிக் கொல்லும்; யுத்தம் முடிந்த பின் கோட்டைக்கு வந்து சேரும்; போர் செய்வதில் மற்றப் படைகளைவிடச் சிறந்து விளங்கும்.

2. பாம்பும் எள்ளும் :—முகங்காட்டும் - பாம்பு தன் முகத்தைத் தூக்கிக் காட்டும். எண்ணெய் நம் முகத்தைக் காட்டும். மண்டை பற்றில் - பாம்பு தலையில் தீண்டுமானல் - எண்ணெயைத் தலையில் ஊற்றித் தேய்த்தால். பரபரெனும் - பரபரென்று உணர்ச்சியுண்டாகும்; குளிர்ச்சியுண்டாகும். பிள்நாக்கு - (பாம்பு) பிளவு பட்ட நாக்கு; (எள்) பிண்ணுக்கு.

3. பாம்பும் வாழைப்பழமும் :—மீளாது - விடம் திரும் பாது (மரணத்தைத் தரும்). வாழைப்பழம் - நஞ்சிருக்கும் - நைந்து கனிவாய் இருக்கும். நாதர் முடிமேல் இருக்கும் - பஞ்சாமிர்தமாகக் கலந்து சிவபெருமான் முடிமேலிருக்கும். வெஞ்சினத்தில் - மிகுந்த கோபமுண்டாக்கும் பசிவேளையில். மீளாது - வயிற்றினுள் செல்லுமே தவிர வெளியே துப்பப்படு வதில்லை.

மேலே கண்ட மூன்று பாடலும் செம்மொழிச் சிலே டைக்கு உதாரணமாம்.

4. ஆடும் கதவும் :—செய்யுள் - வயலில். கிடைமறிக்கும் - மந்தையாகக் கிடக்கும். சேர் பலகை இட்டுமுட்டும் பல+கை; பல கைகள் சேர்ந்து தடுக்கப்படும்போது தலையினுல் முட்டும். ஐயமற - திண்ணமாக. மேற்று ஆள் - மேல் வந்த ஆட்களை, அடர்க்கும் - தாக்கும். கதவு—செய் - வீட்டில். உட்கிடை - உள்ளிடத்தில். மறிக்கும் - தடுத்து மூடியிருக்கும். சேர் பலகை இட்டு முட்டும் - பலகைகள் சேர்த்துச் செய்யப்பட்டு மூடும் தன்மையதாகும். ஐயமற - திண்ணமாக மூடுவதற்கு. மேல் தாள் - அதன் மேல் தாழ்ப்பாள். அடர்க்குமே - பிணிப்பாகத் தடுக்குமே. இது பிரிமொழிச் சிலேடையாகும்.

4. சிற்றிலக்கியம்

1. அழகரந்தாதி

அழகர்+அந்தாதி - அழகரந்தாதி. திருமாலிருஞ் சோலை மலையில் கோயில் கொண்டருளிய திருமாலின் பெயர் அழகர் என்பதாகும். அவ்வழகரைப்பற்றிப் பாடப்பெற்ற அந்தாதி ஆதலின் அழகரந்தாதி எனப் பெயர் பெற்றது. ஒரு செய்யுளின் இறுதியிலுள்ள, எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த செய்யுளின் முதலாக வருமாறு பாடுவது அந்தாதியாகும். (அந்தம் - முடிவு). (ஆதி - முதல்). இந்நூல் இயற்றியவர் பிள்ளைப்பெருமாளையங்காராவர். இவர் சோழ நாட்டிலுள்ள திருமங்கை என்னும் ஊரில் பிறந்தவர். இவர் திருவரங்கத்தந்தாதி முதலிய வேறு நூல்களும் இயற்றியுள்ளார். இவர் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராவர்.

1. தத்தை - கிளி. அலங்காரன் - திருமால். முன்னூற்றுவரை - முன்+நூற்றுவரை - முன் - முன்பு - நூற்றுவர் - துரியோதனன் முதலியோர். அழித்து+அத்தை. அத்தை - குந்தி தேவி. மைந்தர் - குந்தியின் புதல்வர்களாகிய தருமன் முதலிய பாண்டவர் ஐவர். அடிநாள் - ஆதிகாலம். என் உழி - என்னிடத்து. தத்தை - துன்பம். கழித்தத்தை - கழித்ததை, நீக்கியருளியதை.

2. காலமலைக்கும் - கால்+அம்+அலைக்கும். கால்-காற்று. அம் - நீர். கால் அம் அலைக்கும் - ஊழிக்காற்றால் கடல் நீர் பொங்கி மேல் வரப் பெற்ற. உதிரம் - இரத்தம், கால - வெளிப்பட. மலைக் குமைந்தாய் - (மல்லைக் குமைந்தாய்) மல்லர்களை அழித்தவனே. பஞ்சு+ஆர்+கால்+அமலைக்கும் - பஞ்சார் காலமலைக்கும். பஞ்சுஆர்கால் - செம்பஞ்சுக்குழம்பு பூசப்பெற்ற அடி (பாதம்). அமலைக்கும் - குற்றம் இல்லாதவளான திருமகளுக்கும். காயம் - உடல். மலைக்கும் - போர் செய்யும்.

1. திருமால், தமக்கு ஆட்பட்டோர்க்குச் செய்த நன்மைகள் யாவை?

2. ஆசிரியர் தம்மைக் காத்தருளும்படி திருமாலிடம் எங்ஙனம் வேண்டுகின்முர் ?

2. மீனுட்சியம்மை குறம்

மதுரையிலிருக்கும் இறைவியின் பெயர் மீனுட்சியம்மை. அவர்மீது பாடப்பெற்ற நூல் ஆதலின் இந்நூலுக்கு மீனுட்சியம்மை குறம் எனப் பெயர் உண்டாயிற்று. குறம் என்பது குறத்தி ஒருத்தி குறி சொல்வதைப்போன்று பாடப் பெறுவதாகும். இது தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்ருகும்.

இந்நூலைப் பாடியவர் குமரகுருபரர். இவர் பாண்டிய நாட்டிலுள்ள சீவைகுண்டம் என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய பெற்ருேர் சண்முகசிகாமணிக் கவிராயர், சிவகாமசுந்தரியம்மை என்பவராவர். இவர் சுமார் 180 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்.

இவரியற்றிய வேறு நூல்கள் மதுரைக் கலம்பகம், நீதி நெறி விளக்கம், மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலியவைகளாகும்.

2. கன்னமதம் - காதுப் பகுதியிலிருந்து ஒழுகும் ம்தநீர் அறல் - கருமணல். குடுமி - உச்சி.

1. பொதிய மலையின் சிறப்புக்களாகக் குமரகுருபரர் கூறுவன யாவை ?

5. வழிபாட்டுப் பாடல்கள்

1. 'மக்களுக்கு உறுப்புக்கள் அமைந்திருப்பது இறைவனை வணங்குவதற்கே' என்னும் கருத்தைக் கூறும் பாடலாகும். இது தேவாரப் பாடலாகும். தேவாரம் என்பதை, தே+வாரம் எனப் பிரித்து, இறைவன்மீது பாடப்பட்ட இசைப் பாடல் என்றும், தே+ஆரம் எனப் பிரித்து, இறைவனுக்கு அணிவித்த பாமாலையாகிய பூமாலை என்றும் பொருள் கொள்க. தேவாரத்தைப் பாடியவர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவராவர். நும் பாடப்

பகுதியிலுள்ள இப்பாடலைப் பாடியவர் திருநாவுக்கரசர் ஆவர். இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்.

2. இப்பாடலைப் பாடியவர் நம்மாழ்வார். இவர் வைணவ மதத்தைச் சேர்ந்த பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர். இப்பாடல் 'திருமாலின் பாதத்தைத் தொழுவதே மக்களின் கடமையாகும்' என்ற கருத்தைக் கூறுவது.

3. இப்பாடலைப் பாடியவர் சி. சுப்பிரமணிய பாரதியார். இவரைப்பற்றிய செய்திகளை முன்னர்க் காண்க.

இப்பாடலில், "எல்லாக் குணங்களும் நிறைந்தவனும், எக்குணமும் இல்லாதவனுமாகிய இறைவனிடம், அறிவில் தெளிவும். நெஞ்சில் உறுதியும், ஐம்பொறிகளை அடக்கி ஆளும் ஆற்றலும், இறைவன் அருளைப் பெறுவதில் நோக்கமும் அருளும்படி ஆசிரியர் வேண்டுகிறார்.

4. இப்பாடலை நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை பாடினார். இவர் இப்பாடலில் ஒரு நாளைக்கு ஒரு தரமாவது இறைவனை எண்ண வேண்டும் என்று கூறுகின்றார்.

1. திருநாவுக்கரசர் நெடுங்காலத்தை எங்ஙனம் கழித்த தாகக் கூறுகின்றார்?
2. நம்மாழ்வார் தம் மனத்திடம் கூறுவது யாது?
3. பாரதி இறைவனிடம் வேண்டுவது யாது?
4. நாமக்கல் கவிஞர் மக்களைப் பார்த்துக் கூறுபவைகளை எடுத்தெழுதுக.

உரைநடைப் பகுதி

1. நல்ல நூல்

'முகநக'- 'அன்பின்றி முகத்தில் மட்டும் மகிழ்ச்சி காட்டி, நட்பது நட்பாகாது. அன்போடு அகமும் முகமும் மலர நட்பதே நட்பாகும்' என்பது பொருள்.

'நகுதல்'-'நட்பு சிரித்துப் பேசி மகிழ்வதற்காக மட்டுமல்ல தவறு கண்டவிடத்து, அத்தவற்றினைக் கூழித் திருத்துவதற்கே, என்பது பொருள்.

'நவில்தொறும்'-'கற்குந்தோறும்' நூலில் புதுப்புது நயம் தோன்றுவதைப்போல, பண்புடையாளரிடம் பழகும்போ தெல்லாம் புதுப்புது இன்பம் தோன்றும்' என்பது பொருள்.

1. மு. வரதராசனுர் கூறும் மூவகை நட்புகளேயும் விளக்குக.
2. சிறந்த நட்பைப்பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
3. இரஸ்கின் என்ற ஆங்கில ஆசிரியர் நூல்களே எங்ஙனம் வகைப்படுத்துகின்ருர்? அஃது திருக்குறளோடு பொருந்துமாற்றை விளக்குக.
4. 'கல்வியினூங்கில்லே சிற்றுயிர்க்குற்றதுணே' என்று குமரகுருபரர் கூறக் காரணமென்ன?
5. சான்ருேரின் நட்பை, அவர்களியற்றிய நூல்களின் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மு. வ. எங்ஙனம் விளக்குகின்ருர்?

2. திருவள்ளுவரும் திருக்குறளும்

1. உலகம், நாடு-இவற்றைப்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?
2. "வள்ளுவன் தன்னே உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"-இவ்வரியின் பொருள் யாது? இவ்வாறு பாடக் காரணம் என்ன?

3. பழந்தமிழ் வேந்தர்

என்னிழல்-"என்குடை நிழலில் வாழும் மக்கள், சென்று தங்குவதற்குரிய வேறு நல்ல குடைநிழல் அகப்படாமல், எம்மரசன் மிகவும் கொடியவன் என்று கண்ணீர் சிந்திக் குடி மக்களால் பழித்துக் கூறப்படும் கொடுங்கோல் அரசனுக ஆவேனுக."

கொடியது-"கொடியதைச் செய்ய எண்ணிய கொடுங் கோல் அரசனேப்போல, பாலேவன மணல் சூரியனுடைய மிகுந்த கோபத்தோடு துன்புறுத்துகின்றது."

திருமாவளவன்-“திருமாவளவன் பகைவரை நோக்கிச் செலுத்திய வேலைவிடக் கொடியது இக்கானம்: அவனது செங்கோலைவிடக் குளிர்ந்தன என் தலைவியின் தோள்கள்”

மழைவளம்-“அரசருக்கு, மழை தன் வளப்பத்தைத் தாராமல் மறைத்தால் மிகப் பெரிய அச்சம் உண்டாகும். தம் கீழ் வாழும் உயிர்கள் துன்பமடைந்தாலும் பெரும் அச்சம் தோன்றும். குடி மக்களைப் பாதுகாக்கும் தொழிலை மேற்கொண்டும், கொடுங்கோல் நிகழ்ந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சி மக்கள் கூட்டத்தைக் காக்கும் நல்ல அரச குடியில் பிறப்பது துன்பமேயன்றி விரும்பி ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையது அன்று.” அரசனுடைய செங்கோலைப் பொறுத்தது மழை பொழிதலும், உயிர்கள் துன்புறாமல் இருத்தலும். ஆதலால்தான், “மழைவளங் கரப்பின் வான்பேரச்சம், பிழையுயிர் எய்தின் பெரும் பேரச்சம்,” என்று கூறப்பட்டது. “மழை பெய்யாமல் இருந்தாலும், வருவாய் குறைந்தாலும், இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகள் மாறினாலும் (சூரியன் கிழக்கில் உதிக்காது மேற்கில் உதித்தல் போன்றவை) இவ்வுலக மக்கள் அரசரைப் பழிப்பர்,” என்பது செங்குட்டுவன் கூற்று.

1. ஒருவர் செய்யும் சபத மொழிகளால் அவர் விரும்புவனவற்றையும் வெறுப்பனவற்றையும் அறியலாம்—எங்ஙனம்?
2. கவிஞர்கள் உவமைகளில் வைத்துச் சிறப்பிக்கும் முறையால் செங்கோலைச் சிறப்பித்தனர் என்பதற்குச் சான்றுகள் தருக.
3. “மக்களை ஆளும் தொழிலை மேற்கொண்ட அரச வாழ்க்கை துன்பத்தைத் தருவதே,” என்பதைச் செங்குட்டுவன் எங்ஙனம் அறிவித்தான்?
4. செங்குட்டுவன் செங்கோல் வேந்தன் என்பதை விளக்கச் சான்று தருக.
5. பழந் தமிழ் அரசர்களும் செங்கோலும்—இப் பொருளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. கம்பராமாயணச் சிறப்பு

இம்பர்-"இவ்வுலகத்திலுள்ள செல்வங்கள் அனைத்தையும் பெற்று ஆண்டாலும், தேவலோகத்திலுள்ள கற்பகத்தருவின் நிழலில் இருந்தாலும், அவைகளெல்லாம் கம்பநாடன் இயற்றிய இராம கதையிலுள்ள (கம்பராமாயணம்) கவிதைகளைப்போன்று, கற்பவர்க்கு மனமகிழ்ச்சியை அளியா."

1. இந்திர பதவியைவிடக் கம்ப ராமாயணம் இன்பத்தை அளிக்கக் கூடியது என்பது எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
2. மலையாளநாடு, தெலுங்குநாடு முதலியவற்றில் கம்ப ராமாயணத்தை ஏங்ஙனம் சிறப்பிக்கின்றனர்?
3. கம்பரைக் 'கவிச் சக்கரவர்த்தி' என்றும், 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்றும் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

5. சங்ககால மதுரை நகரம்

1. மதுரையின் அகழி, மதில், வாயில் ஆகியவற்றின் சிறப்பை வரைக.
2. மதுரை நகர அமைப்பினை வரைக.
3. மதுரை நகரின் நால்வகைப் படைகளைப்பற்றி நீவிர் அறிந்தன யாவை?
4. மதுரை நகரில் இரவும், காலையும் நிகழும் நிகழ்ச்சிகளை விளக்கி வரைக.
5. அறங்கூறவையம், அந்திக்கடை, அறக்கூழ்ச் சாலை— சிறு குறிப்பு வரைக.

6. காவிரியும் இலக்கியமும்

வாழி அவன்'-"சோழவரசனுடைய வளநாட்டைக் குழந்தையை வளர்க்கும் தாயைப்போன்று, ஊழிக்காலம் முடியும் வரையிலும் வளர்க்கும் பேருதவியிலிருந்து என்றும் நீங்காதிருப்பாய் காவேரி,"

கோள்நிலை'-"சூரியன் சந்திரன் முதலியவை தம் நிலையி லிருந்து மாறிக் கோடை நீட்டித்தாலும், தன் நிலையிலிருந்து மாறுத தண்டமிழ்ப் பாவை காவேரி."

'தண்ணீரும்'-"தண்ணீர் என்று சிறப்பித்துக் கூறப்படுவது காவிரியின் தண்ணீரையே ஆகும். அரசன் என்று சொல்லப் படுபவன் சோழ அரசனேயாவன் நாடு என்று சொல்லப் படுவது சோழ நாடே யாகும்."

1. 'காவிரி சோழர்களுக்குரிய ஆறே' என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும்?
2. பொருநராற்றுப்படையில் காவிரியின் வற்ருத வளம் எங்ஙனம் பாராட்டப்படுகின்றது?
3. சாத்தனுரும், இளங்கோவடிகளும் காவிரியாற்றைப் பற்றிக் கூறுவன யாவை?
4. காவிரி நாடு, நெல்வளமும் பொன்வளமும் பொருந் திய நாடு என்று கூறுவது பொருந்துவது யாங்ஙனம்?
5. காவிரியாறு, பிறரை வாழ்த்தவும் பயன்படும்— எங்ஙனம்?

7. வறுமையில் உயர்வு

1. முதிர மலையிற் காணப்படும் இனிய காட்சி யாது?
2. குமணனைப் பற்றிப் பெருஞ்சித்திரனுர் கூறுவது யாது?
3. பெருஞ்சித்திரனுர், தம்மைப் பாராமலே பரிசில் அளித்த அஞ்சியை எங்ஙனம் இடித்துரைத்தார்?
4. பெருஞ்சித்திரனுர், இளவெளிமானிடம் கூறிய மொழிகளை எடுத்தெழுதுக.
5. பண்டைப் புலவர்கள் வறுமையிலும் தம் உயர்வைப் போற்றினர் என்பதற்குச் சான்றுகள் தருக.
6. காவல்மரம், முதிரம்—சிறு குறிப்பு வரைக.

8. புலவர் செய்த சோதனை

1. எல்லப்பரின் இயல்புகளை எடுத்தெழுதுக.
2. எல்லப்பரை ஒரு புலவர் எங்ஙனம் பாடிப் பாராட்டுகின்றார் ?
3. "இடக்கையால் வாங்குவதுதான் கொங்குநாட்டார் வழக்கமோ?"—இடஞ் சுட்டுக. இவ்வாறு கேட்ட எல்லப்பருக்குக் கொங்குநாட்டுப் புலவர் அளித்த மாற்றம் யாது ?
4. தொண்டை நாட்டுப் புலவரிடம் கொங்குப் புலவர் கூறியவை யாவை ?
5. தொண்டை நாட்டுப் புலவர் சர்க்கரையின் பொறுமையை எங்ஙனம் சோதித்து அறிந்தார் ?

9. வேதநாயகம் பிள்ளை

1. வேதநாயகம் பிள்ளையை நீதிமான் என்று யாவரும் புகழக் காரணம் என்ன ?
2. "நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல,"—இத்தொடரை விளக்குக.
3. வேதநாயகர் இயற்றிய நீதி நூலிற் காணப்படும் கருத்துக்கள் யாவை ?
4. வேதநாயகர் வக்கீல்களைப் பற்றியும், மேலதிகாரிகளைப் பற்றியும் கூறுபவை யாவை ?
5. 'வேதநாயகரின் இயல்புகள்'—இப்பொருளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

10. உக்கிரப் பெருவழுதி

"நான்மறையோன் பிரமதேவன், திருவள்ளுவராகத் தன் உடலை மறைத்து இவ்வுலகில் தோன்றி, நான்கு வேதங்களின் உண்மைப் பொருள்களை இவ்வுலகத்திற்குக் கொண்டு வந்து, அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருளாகத் திருவாய் மலர்ந்த திருக்குறளை, என் தலையானது தொழக்கடவது ;

வாய் வாழ்த்தக்கடவது; மனம் நினைக்கக்கடவது; காதுகள் கேட்கக்கடவன."

1. இறையனார் களவியல் உரைப் பாயிரத்தில், கடைச் சங்கத்தைப்பற்றிக் கூறப்படுவன யாவை?
2. உக்கிரப் பெருவழுதி வாழ்ந்த காலத்தை ஆய்க.
3. உக்கிரப் பெருவழுதி, காணப்பேரெயிலை வென்றதை ஐயூர் மூலங்கிழார் எங்ஙனம் பாராட்டுகின்றார்?
4. உக்கிரப் பெருவழுதி, சேர சோழ மன்னர்களோடு நட்புக் கொண்டிருந்தனன் என்பதைச் சான்றுகளோடு விளக்குக.
5. உக்கிரப் பெருவழுதி பாடிய திருவள்ளுவமாலைச் செய்யுளின் கருத்து யாது? அதனால் நீவிர் அறிவது என்ன?

11. இலங்கைத் தீவில் ஏழுநாள்

1. இலங்கையில் பார்க்கவேண்டிய இடங்கள் யாவை?
2. பெர்தேனியா பூந்தோட்டத்தைப் பற்றி நீவிர் அறிந்தவைகளை வரைக.
3. கண்டிக்கும் கொழும்புக்கும் இடையிலுள்ள இயற்கைக் காட்சிகளை விளக்குக.
4. தகோபா, சிகிரியா, தம்புலா—இவைகளைப் பற்றி நீவிர் அறிந்தவை யாவை?
5. நீவிர் சென்று வந்த ஓர் இன்பச் செலவைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. வீட்டிற் கலை

1. கலை என்பது என்ன? அதனை எங்கெங்கே காணலாம்?
2. வீட்டுச் சாமான்களை எவ்வாறு பொறுக்கி எடுக்க வேண்டும்?
3. பூச்செம்பிலும், அதில் வைக்கப்பெறும் பூங்கொத்திலும் கலையைக் காண்பது எங்ஙனம்?
4. வாசிப்பு அறையில் எவ்வாறு கலையைக் காணலாம்?

5. படுக்கையறை எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்?
6. சமையலறை எத்தகையதாய் இருந்தால் அதில் கலை மிளிரும்?
7. தோட்டம் அமைப்பது எவ்வாறு?

13. பாரிசு சித்திரக்கலை

1. இலாலூவரின் சிறப்புக்கள் யாவை?
2. கிரேக்க உரோமச் சிற்பங்கள் எத்தகையன?
3. சாமத்திரேசு வெற்றிச் சிற்பத்தின் வடிவையும் வரலாற்றையும் விவரி.
4. வீனசு சிற்பத்தின் அழகை விவரி. அதன் வரலாறு என்ன?
5. இலியனுடோ டாவின்சி எதனுல் உலகப் பிரசித்தி பெற்ருர்? இலாலூவரிலுள்ள அவருடைய மோனு லீசா படத்தின் சிறப்பை விளக்குக.
6. முதல் சார்லசு படம் எவ்வாறு அமைந்திருந்தது?
7. 'கன்னியும் குழந்தையும்'—இத்தலைப்பில் அமைந்துள்ள சித்திரங்களைப்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை?

14. ஞானரதம்

1. குதிரை வண்டி வேண்டுமென விரும்பிய பாரதியாருக்கு அவர்து அகமனம் கூறியது என்ன?
2. கவலை என்னும் விஷப் பூச்சியின் சக்தியென்ன?
3. உபசாந்திக் கோட்டை வாயில் காப்போனுக்கும், பாரதியாருக்கும் நடந்த பேச்சினை உரையாடலாக எழுதுக.

15. தையற்கலையின் தனிப்பேராற்றல்

1. தையற்கலையின் ஆற்றல் யாது?
2. பெண்களிடைத் தையற்கலை எத்தகைய மாண்பு உடையதாகின்றது?

3. தையற்கலையின் விசித்திர வேலைப்பாட்டினால் வேறு என்னென்ன சிறப்புக்கள் விளைகின்றன ?

16. செஸ்டர் பீல்டின் கடிதங்கள்

1. மதிப்பும் தகுதியும் ஒருவனுக்கு எவ்வாறு ஏற்படுகின்றன ?
2. செல்வமிருந்தும் பயன்படுத்தாத நிலையை ஒத்தது எது ?
3. நன்மக்களின் மதிப்பிற்கும், கூட்டுறவுக்கும் தடைகளாய் இருக்கும் குற்றங்கள் யாவை ?
4. நல்லோருடன் பழகுவதால் எத்தகைய கோட்டங்கள் இராவென ஆசிரியர் கூறுகின்றார்.

17. அன்னமும் சொன்னமும்

1. பொன்னம்பலம்பிள்ளை, சிவப்பிரகாசத் திருவணுதத் துரைக்கு எங்ஙனம் உதவினர் ?
2. தனக்கு உதவி புரிந்த பொன்னம்பலம் பிள்ளையைத் திருவணுதத் துரை எங்ஙனம் பாராட்டினர் ?
3. பொன்னம்பலம்பிள்ளை திருவணுதத் துரையைப் பார்க்க வந்தபோது நிகழ்ந்ததை விளக்கி வரைக.

18. ஆசுகவி

1. மனிதன் தான் கண்ட காட்சியில் திளைத்திருக்கும் போது பாட்டு எழும் என்பதை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகின்றார் ?
2. அகலக்கவி, சித்திரகவி, மதுரகவி, ஆசுகவி, அரிகண்டம், எமகண்டம்—இவைகளை விளக்குக.
3. "கட்டுப்பாட்டில் கவி பிறக்குமா ?"—இக்கூற்றை ஆராய்க.
4. ஆசுகவிகளின் நிலையைப்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?
5. ஆசுகவிகளின் திறமையைப்பற்றி ஆசிரியர் கூறுவன யாவை ?

('ஆசுகவி' என்னும் பாடத்திற் குறிப்பிடப்பட்ட
காளமேகப் புலவர் பாடல்களின் கருத்துரை)

1. இப்பாடலின் பொருள் வெளிப்படை.

2. இவ்வெண்பாவின் கீழ்ப்பாதியில் என் விருப்பப்படி உன் பிறப்புக்களை எடுத்துப் பேசலாமா? மீன் அவதாரம் எடுத்தவனே, ஆமை அவதாரம் எடுத்தவனே, பன்றிவடி வெடுத்தவனே, நரசிங்க அவதாரம் எடுத்தவனே, வாமன அவதாரம் எடுத்தவனே, பரசுராமனே, தசரத ராமனே. இனி நீ கலியுகத்தில் குதிரையாய் அவதரிப்பாய்.

3. அரி, அயன், அரன் என்பவற்கு முறையே சிறு பயற்றின் சுண்டலும், வெண்ணெயும், சிறுத்தொண்டரிட்ட பிள்ளை ஊனும் கறியாகும்; செந்நெல்லும், பூமியும், விடமும் உணவாகும்; தண்டாயுதமும், சக்கரமும், மானும் கைகளில் தரிக்கப்படும். பூணூலும், கவுத்துவமணியும், பாம்பும் மார்பில் அணியப்படும். அன்னமும், கருடனும், காளையும் வாகனமாகும். தாமரைப்பூவும், கடலும், மலையும் இருப் பிடங்களாகும்.

4. கங்கைவெள்ளமானது, ஆகாயத்தில் அடங்கி நில்லா மலும், இமயமலையில் அடங்காமலும், நிலம் தாங்காமலும், பெருக்கெடுத்து ஓடி வந்தாலும், உமாதேவியை இடப் பாகத்தில் வைத்த சிவபெருமானுடைய சடைமுடியில் அடங்கிவிடும்.

5. கண்ணபிரானை, இசைபாடும் வாயினையுடைய இடைச்சி பருத்த மத்தினல் அடித்ததால் உண்டாகிய புண்ணிடத்தே, ஈக்கள் நெருங்கித் தங்கியபோது, எட்டுத் திக்கு யானைகளும், மேரு மலையும், கடலும், பூமியும் ஆகிய எல்லாம் குலுங்கி வருத்தமுற்றன.

6. தூய்மையான பாற்கடலின் நடுவில் புழுதி தோன்றி யதற்குரிய வியப்பான காரணத்தைக் கேட்பாயாக: வலிய தலையையுடைய யானைத் தோலைப் போர்த்தவனுகிய சிவ பெருமான்மேல், மன்மதன் மலர் அம்பு விடுத்து, எரிக்கப்பட்டு இறந்துபோன செய்தியைக் கேட்டுத் திருமகள் கீழே விழுந்து

வருந்தி இளைப்புற்று அழுது, தனது பூப்போன்ற கைகளால் மார்பிலே படும்படி ஓங்கி அடித்தாள். அதனால் அவள் மார்பிற் பூசியிருந்த காய்ந்த சந்தனக் குழம்பின் செந்நிற மான துகள்கள் கிளம்பின.

7. துப்பாக்கியானது, ஆணியாலே செப்பஞ் செய்து அமைக்கப்படுதலாலும், குறிப்பிட்ட குறியின்மீது குண்டினைச் செலுத்துதலாலும், தன் தொழில் தோன்றும் பொருட்டுக் கருமையான வெடி மருந்து இடப்படுதலாலும்; ஓலைச் சுருளானது, எழுத்தாணியால் எழுதப்படுதலாலும், குறிப் பிட்ட கருத்தை தெரிவித்தலாலும், தன் எழுத்துக்கள் நன்கு விளங்கும்படியாகக் கருமையான மை தீட்டப்படுதலாலும் இவ்வுலகில் துப்பாக்கியானது ஓலைச் சுருளை ஒத்ததாகும்.

8. வானவில், மேகத்திலுள்ள நீரில் தோன்றுவது; பச்சை நிறத்தையும் உடையது; மழை பெய்வதற்கு மங்கலமான அடையாளமானது; உலகில் மழை பெய்யச் செய்வது; வறுமை நோயைத் தீர்ப்பது; மனிதர்கள் சம்பந்த மாய்ச் செய்யப்படும் பல முயற்சிகளையும் செய்விப்பது.

திருமால், பாற்கடலில் பள்ளி கொள்வர்; நீர்க்கே தெய்வ மாவர்; பச்சை நிறம் உடையவர்; திருமகளைத் தேவியாக உடையவர்; உலகிலுள்ள அசுரர்களையொழித்துப் பகை தீர்க்கும் திறமை உடையவர்; மக்களைச் சார்ந்த பல வினையையும் ஒழிப்பவர்.

வெற்றிலையானது, நீரில் நனைத்துப் பயன்படுத்தப்படுவது; பச்சை நிறம் உடையது; மங்கலப் பொருளாய் உள்ளது: உலகில் பகை தீர்த்துச் சமாதான அடையாளமாய் உள்ளது; மக்களைச் சார்ந்த பல நோயையும் நீக்குவது. ஆதலால், வானவில்லும், திருமாலும், வெற்றிலையும் சமம் என்று அறிக.

9. பூசணைக்காயானது, அடியிற் காம்பு உடையது; மேற்பாகம் முழுவதும் வெண்மை நிறம் உடையதாய், ஒரு பக்கத்தில் கொடி படரப்பெற்று, காயைக் கெடாது பேணும் பளபளப்பான சாம்பல் பூசப்பெற்று, தான் கிடக்கும் பொந்தின் அடையாளத்தைப் பெற்றுள்ளது; சிவபெருமான்,

திருவடியைக் காளை வாகனத்தில் வைத்திருப்பவர்; பூசிய திருநீற்றினால் திருமேனி வெளுக்கப்பெற்று, கொடிபோல்பவ ராகிய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவராய், பருத்த பாம்பை அணியாக அணிந்து, உமையம்மையின் வளையல் தழும்புத் திருமேனியில் பதியப்பெற்றவர். ஆதலின், பூசுணைக்காய் சிவபெருமானை ஒத்ததாம்.

10. பரமசிவனே, உமக்கு நல்ல வில் எதுவெனின் மேரு மலையென்னும் கல்லாகிய வில்லே; அம்பு யாதெனின் மண்ணுலகத்தை விழுங்கிய திருமாலாகிய அம்பே; வில்லின் கயிறு எவ்வாறு இருக்குமெனின் அது நைந்திருக்கும் (அல்லது பாம்பாயிருக்கும்). ஆகவே, நீ எதிரிகளுடைய திரிபுரத்தை அழித்தவிதம் எவ்வாறோ?

19. வளம் பெருக்கிய திட்டங்கள்

1. ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏன் வகுக்கப்பட்டன?
2. விவசாய வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டம் எவ்வாறு உதவியுள்ளது?
3. ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்பட்ட தொழில் முன்னேற்றத்தினை 20 வரிகளில் எழுதுக.
4. மக்கள் உடல் நலம் சிறக்க, ஐந்தாண்டுத் திட்டங்கள் எவ்விதம் உதவின?
5. ஐந்தாண்டுத் திட்டங்களால் மக்களின் நல்வாழ்க்கை எவ்விதம் சிறந்துள்ளது?

20. தேசிய சேமிப்புத் திட்டம்

1. பொருளைச் சேமித்து வைப்பதன் இன்றியமையாமையை விளக்குக.
2. நன்கொடைப் பத்திரங்கள் என்பவை யாவை? அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம்?
3. வளரும் நிதி சேமிப்பினை விளக்குக.
4. அஞ்சலகச் சேமிப்பு பாங்கின் சிறப்புக்கள் யாவை?

21. அன்பு வழி

1. கண்ணகியைத் தேடிப் புகார் நகரத்திலிருந்து வந்தவர் யாவர்? அவர்களோடு மதுரையில் வந்து சேர்ந்தவர் யார்?
2. கண்ணகி மின்னற்கொடிபோன்று வானத்தில் தோன்றியதைக் கண்ட செங்குட்டுவன் எங்ஙனம் வியந்தான்?
3. மகளிர் கண்ணகி, பாண்டியன், வஞ்சியர்கோமான், காவிரி நாடன் முதலியோரை எங்ஙனம் வாழ்த்தினர்?
4. "மணிமேகலை யார்? அவள் துறவு பூணக் காரணம் என்ன?" என்று கேட்ட செங்குட்டுவனுக்கு, தேவந்தி அளித்த மாற்றம் யாது?
5. இலங்கை முதலிய பிற நாட்டரசர்கள் கண்ணகியிடம் வேண்டிய வரம் யாது?
6. செங்குட்டுவன், வேண்மாள், மாடலன்—இவர்களைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
7. இந்நாடகத்தால் நீவிர் அறிந்த கருத்து யாது?
